பாலகுமாரன்



கடிகை

20 SEP 2008
5 OCT 2008
13 OCT 2008
12 NOV 2008
13 JAN 2009
2X FEB 2009
28 MAY 2009
15 JUN 2009
8 JUL 2009
2 JU 2009
30 JUL 2009
23 SEP 2009
24 NOV 2009
6 DEC 2009
7 FEB 2010
24 FEB 2010
9 MAR 2010
3 APR 2010
8 APR 2010
25 MAY 2010
28 ... 2010
9 SEP 2010
26 OCT 2010
13 DEC 2010
6 JAN 2011
27 FEB 2011
6 MAR 2011
06-08-2011
01-10-11

37683

கடிகை

பாலகுமாரன்

விசா பப்ளிகேஷன்ஸ்
புதிய எண்: 16, பழைய எண் 55,
வெங்கட் நாராயணா சாலை
தி.நகர், சென்னை–600 017.
☏: 24342899, 24327696
Fax: 91 - 44 - 24341559

5470117
சௌந்தூர், சென்னை 99

கடிகை

1

சுக்கிரனே உனக்கு நமஸ்காரம். உன் வெண்மையான ஒளி என்னை மயக்குகிறது. உன் வேகம் என்னை வியக்க வைக்கிறது. பூமியின் இந்தப் பகுதியில் இருட்டிலிருந்து வெகு சீக்கிரம் எழும்பி எங்களை மெல்ல தட்டி எழுப்பிக் கொண்டிருக்கிறாயே... கடமை தவறாத இந்தச் செயலுக்கு நான் நன்றி சொல்கிறேன்.

உன் முன்னே மொச்சைப் பயிர்களையும், வெண்தாமரையும் வெண்காந்தள் மலர்களையும் வைக்கிறேன். இதோ ஒரு வெள்ளை வஸ்திரம் உனக்காக சமர்ப்பிக்கிறேன். வைரத்தைப் போல் மின்னுகின்ற ஒளியை உடைய சுக்கிரா, கிரகங்களில் குருவுக்கு ஒப்பானவரே, சகல வித்தையையும் அறிந்தவரே, சம்போகத்தில் சிறந்தவரே, வல்லமையும், அதிகாரமும் கொடுப்பவரே, எங்களை மனம் குளிர்ந்து நீங்கள் ஆசிர்வதிக்க வேண்டும்.

வெள்ளிக்கிழமை சுக்கிர ஹோரையில் உங்களை நினைத்து நாங்கள் மிகப் பெரிய யாகம் செய்வோம். அங்கே மிகும் ஆகுதியை நீர் எடுத்துக் கொள்ள வேண்டும். எங்கள் சமர்ப்பணங்களையும், வணக்கத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். மனப்பூர்வமாய் ஆசிர்வதித்து எங்களுக்கு பலம் தரவேண்டும். சுக்கிரா... வெள்ளை நிற தேவதையே உங்களுக்கு எங்களின் மனம் கனிந்த வணக்கம்.

அந்த அந்தணர் கோட்டைக்கு நடுவேயுள்ள பெரிய மண் திடலில் நாற்பத்தைந்து ஆண்கள் ஒன்று கூடி கைகூப்பி, கிழக்குப் பார்த்து அந்த விடியல் வேளையில் சுக்கிர உதயத்தின் போது, சுக்கிரனை நோக்கி நின்று நமஸ்கரித்தார்கள். தீப்பந்தங்கள் அங்கங்கே நிறுத்தப்பட்டு மெல்லிய ஒளியை கொடுத்துக் கொண்டிருந்தன.

அவர்களே எழுதிக் கொண்ட அந்த சமஸ்கிருத ஸ்லோகம் முடிவு பெற்றதும், அமைதியாக எல்லோரும் கைகூப்பி நின்றிருந்தார்கள். குருவைப் போன்ற ஒரு முதியவர் மெல்ல கனைக்க கண்விழித்தார்கள்.

"சரி... நீங்கள் குளிக்கப் போகலாம்..." குடிசைகளின் முன்பு அமர்ந்திருந்த பெண்களைப் பார்த்து அவர் கட்டளை போல் அல்லாமல், வேண்டுகோள் போலும் அல்லாமல் அமைதியாகச் சொன்னார். ஒரேயொரு தீப்பந்தம் மட்டும் எரியவைத்து விட்டு வட்டமாக இருந்த அந்த அந்தணர் குடியிருப்பை விட்டு மீதியுள்ள தீப்பந்தங்களை எடுத்துக் கொண்டு பெண்கள் விலகி, உயரமாக எழுப்பப்பட்ட மண்சுவர் கோட்டை வாசல் வழியாக வெளியேறினார்கள்.

அங்கு எல்லோர் கையிலும் மூங்கில் கூடைகளும், குடங்களும் இருந்தன. அவர்கள் மெல்ல பாட்டு பாடியபடியே ஆற்றங்கரை நோக்கி நடக்கத் துவங்கினார்கள்.

பாட்டு இந்திரனைப் போற்றிப் புகழ்வதாக இருந்தது. வருணனை வணங்கிற்று. வாயுதேவனை நமஸ்கரித்தது. பூமியை பாராட்டிற்று. ஆடுமாடுகளை போற்றியது.

அவர்கள் தண்ணீரில் கால்வைத்து சிலிர்ப்பு தாங்காமல் கூச்சலிட்டார்கள். ஒருவரையொருவர் இறுக்கப் பிடித்துக் கொண்டார்கள். மெல்ல நெருங்கி நின்றார்கள். பிறகு மனம் துணிந்து தொபீர் தொபீரென்று ஆற்றில் விழுந்து இன்னும் உரக்க கூச்சலிட்டார்கள்.

பெண்களின் கூச்சல் மெல்லிய இசையாக அந்த கோட்டைக்குள் கேட்டது.

கைகூப்பி சுக்கிரனை நோக்கி வணங்கியவர்கள் மெல்ல அமர்ந்தார்கள். பூணூலை எடுத்து முன் பக்கம் போட்டுக் கொண்டார்கள்.

அச்சுதாய நமஹ, அநந்தாய நமஹ... கோவிந்தாய நமஹ... என்று நீர் எடுத்து உளுத்தம்பருப்பு அளவுக்கு மூன்று முறை விழுங்கினார்கள்.

தொண்டையில் நீர்பட்டு குளிர்ந்ததும், அமைதியாக உட்கார்ந்தார்கள். நாடிசுத்தி செய்தார்கள். பிராணாயாமம் செய்தார்கள். ஆழ்ந்து ஆழ்ந்து மையத்தை தொட முயற்சித்தார்கள். உறக்கம் போலும் ஒரு அமைதியை உணர்ந்தார்கள்.

உடம்பு தெள்ளத் தெளிவாக விழித்திருந்தது. ஆனால், மனம் உறங்கிக் கிடந்தது. மிக அமைதியாக எந்தச் சிந்தனையும் இல்லாமல் வெறுமே மல்லாந்து கிடந்தது.

தொலைவில் குளித்து முடித்து பெண்கள் வரும் சப்தம் கேட்டது. முதலில் மத்தியதர வயதுப்பெண் உள்ளே நுழைந்து, வாசலில் இருக்கும் மணியை ஒருமுறை ஒலித்துவிட்டு உள்ளே நுழைந்தாள். மெல்ல அவர்கள் மனம் விழித்தார்கள். விழித்துக் கொண்ட மனம் புலன்களை உற்சாகமூட்டி சுற்றுப்புறத்தை கவனிக்க வைத்தது.

காக்கையின் கரைதல், குயிலின் கூவல், மானின் அசைவு, புற்களின் வாசனை, பெண்களின் பேச்சு, நீரின் சப்தம், காற்றின் அசைவு, மண்ணின் குளுமை, உடம்பின் இருப்பு, உயிரின் சூடு, புத்தியின் குறுகுறுப்பு, ரத்தத்தின் ஓட்டம், ஹிருதயத்தின் சப்தம், நுரையீரலின் அசைவு எல்லாம் புரிந்து கொண்டார்கள். மெல்ல அவரவர் குறிக்கு மனம் செலுத்த குறி, தானாக விரைத்தது. போதும் என்று சொன்னதும் கட்டளையிட மெல்ல தாழ்ந்தது.

இதுவொரு பயிற்சி. காமம் என்பதை சரியான கடிவாளமிட்டு கட்டுக்குள் வைத்திருக்கும் பயிற்சி. சொடுக்கு நேரத்தில் நிமிரவும், எந்த இழப்பு இல்லாமல் சரியவும் உடம்புக்கு தெரிந்திருக்க வேண்டும். மூளையினுடைய மொத்த பலமும் காமம் என்கிற அம்சத்தில் ஆளுமை செய்ய வேண்டும். காமத்தை புரியாது தலைகால் தெரியாது அனுபவித்து விடக்கூடாது. ஆத்திரமாகப் பெண்ணை புணர்வது அபத்தம். மகாபாவம். எது உன்னை கவிழ்த்து விடுமோ, எது உன்னை மிதிக்குமோ, அதை மடக்கி வைத்திரு. அதற்கு கடிவாளமிட்டு அங்குசமிட்டு ஓரமாக உன் சொல்படி நடக்க வேண்டுமென்று பிரம்பால் அடித்து நிற்கவை. உன் கட்டளையின்றி, உன் உணர்வுகள் எதுவும் ஒரு நூலிழை கூட நகரக்கூடாது என்பதில் மிக உறுதியாக இரு. இப்படி இருப்பவனே புருஷன். அதுவே பௌருஷம். பௌருஷம் இல்லாதவன் வாழ்ந்து புண்ணியமே இல்லை. அவன் மரணமடைந்தவனுக்கு ஒப்பாவான் ஆசவம்.

அவர்கள் எல்லோருக்கும் பசித்தது. நடுநிசியில் எழுந்திருந்து தோய்த்த தயிரை சட்டியோடு எடுத்து வந்து, ஒரு முதியவள் வைக்க, இன்னொரு பெண்மணி தேன் குடத்தை எடுத்துவந்து அதில் அளவோடு கலந்தாள். அகப்பை விட்டுக் கலக்கினாள். இஞ்சியை மடமடவென்று தோலுரித்துச் சீவி, பெரிய பெரிய பட்டைகளாக நறுக்கி அதை இடித்தாள். இடித்து வைத்த சாற்றை சேர்த்துக் கலந்தாள். பல தானியங்கள் போட்டு அரைத்த மாவில் கூழ் போல செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூழில் தயிர் கலக்கப்பட்டது. மறுபடியும் அகப்பையால் கிளறப்பட்டது. சிறுசிறு சட்டிகளில் அவைகள் வார்க்கப்பட்டன. இளைஞர்களும், முதியவர்களும் வரிசையாய் வந்து அதை வாங்கிக் கொண்டார்கள்.

வேப்பந் துவையலை முதலில் விழுங்கினார்கள். அந்தக் கசப்பு போவதற்கு மடமடவென்று கஞ்சியை குடித்தார்கள். பிறகு, நாரத்தை இவைகளை நசுக்கி செய்யப்பட்ட துவையலை தொட்டுக் கொண்டு நிதானமாக சாப்பிட்டார்கள். கிட்டத்தட்ட

எல்லோருமே ஏப்பம் விட்டார்கள். சிலருக்கு ஆசனவாய் வழியாகவும் காற்று வெளியேறிற்று.

சூரியன் உதிக்கின்ற நேரம் தீப்பந்தத்திலிருந்து ஒரு விளக்குக்கு நெருப்பு மாற்றப்பட்டது. தீப்பந்தம் அணைக்கப்பட்டது. ஆண்கள் கூட்டம் கோட்டையை விட்டு மெல்ல பேசியபடியே ஆற்றங்கரைக்கு நடந்தது. சில இளைஞர்கள் வேகமாக கொம்பு சுற்றினார்கள். சில இளைஞர்களிடம் வளைந்த மூங்கில் விற்கள் இருந்தன. தோளில் அம்பாரத்துணி இருந்தது.

சேரதேசத்தில் வில் பயிற்சிக்குத்தான் முக்கிய இடம். பிறகு தான் கத்தியோ, கேடயமோ, ஈட்டியோ, மான்கொம்போ ஆயுதமாகப் பயன்படுத்துவார்கள். குறி பிசகாமல் அம்பெய்வதும், குதிரையில் ஓடிக் கொண்டே வில் வளைத்துத் தாக்குவதும், சரமாரியாக அம்பெய்வதும் அவர்களுக்கு தினசரி பயிற்சியில் முக்கிய அங்கமாக இருந்தன.

எங்கோ தூரத்தில் குரல் கேட்டது. சட்டென்று அத்தனை பேரும் வில்லை எடுத்து அம்பு தொடுக்கத் தயாரானார்கள். திடீரென்று இடப்புறமிருந்து, புதருக்கு நடுவேயிருந்து, பெரிய கேடயத்தோடு ஒரு வாலிபன் குதிரையில் அவர்களைத் தாண்டிப்போக, சகலரும் சரமாரியாக அவன் கேடயத்தைத் தாக்கினார்கள். ஒரு அம்பு அவன் தலையிலும் பட்டது. அவன் திரும்பி நின்று கோபமாகக் கத்தினான்.

அவன் கத்துவதைப் பார்த்து சிரித்தார்கள்.

யாருடைய அம்பு என்று அவன் கண்டுபிடித்துவிட்டு எய்தவனருகே வந்து பளீரென்று அறைந்தான்.

இது உருண்டை நுனி அம்பு. கூர் நுனியாக இருந்தால் என் மண்டை பொத்துப் போயிருக்கும். அடிபட்டு இறந்து போயிருந்தால் என் தாய் உன்னை மிதித்துக் கொன்றிருப்பாள். இனி ஒழுங்காக விளையாடு என்று எச்சரித்தான். அடித்தவனை

விலக்கி, பயந்தவனை ஒரு மத்திய வயதுள்ளவன் அணைத்துக் கொண்டான்.

"அப்படித்தானடா இருபது அம்பில் ஒரு அம்பு தவறாக விழும். இதற்குப் போய் பயந்தால், நீ குதிரையில் ஏறாதே. வேறு யாரேனும் ஏறுவார்கள்." என்று சீறினான்.

குதிரையில் வந்தவன் விலகிக்கொண்டு போக, மறுபடியும் அந்த விளையாட்டு தொடர்ந்தது.

இந்த முறை அடிபட்ட இளைஞனுக்கு கோபம் அதிகமிருந்தது. அவனுடைய உருண்டை வில் அம்பு, அந்தப் பிரம்புக் கேடயத்தை துளைத்துக் கொண்டு உள்ளே போய் நின்றது. எல்லோரும் கை தட்டிப் பாராட்டினார்கள்.

செம்மண் பரப்பில் பெரிய குழி வெட்டப் பட்டிருந்தது. ஒரு பனை அகலம், ஒரு பனை ஆழம், ஒரு பனை நீளம் கொண்ட குழிஅது. உள்ளுக்குள் இறங்கி எல்லா பக்கமும் கத்தியைச் சுழற்றி கத்தியை மண்ணில் சொருகி இழுத்தார்கள். அடுக்கி வைக்கப்பட்ட மண் மூட்டையின் மீது தோளால் இடித்து விழுந்தார்கள். ஒருவர் கையை ஒருவர் ஊன்றி கரணம் அடித்தார்கள். உள்ளே வெப்பம் அதிகமாக இருந்தது. வியர்வை பொங்கி வழிந்தது. சுற்றிலும் உள்ள செம்மண் நிறம் ஒரு கோபத்தைக் கிளறியது. மேலே நின்று கொண்டிருந்த முதியவர்கள் இன்னும் வேகம், இன்னும் வேகம் என்று பல்லைக் கடித்து உத்தரவிட்டார்கள். வீரர்கள் வெறி பிடித்தது போல் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டார்கள். கயிற்றில் கட்டப்பட்ட மணல் மூட்டைகள் முதுகிலும், முகத்திலும் வந்து மோதின. மணல் மூட்டையின் தாக்குதல்களை மார்பில் வாங்கிக் கொண்டார்கள். சிலருக்கு உதட்டிலும், கையிலும் சிராய்த்து உதிரம் பெருகிற்று. வியர்வை பொங்கிற்று. ஐய்... ய்ய்... என்று ஒரு பெரியவர் உரக்கக் குரல் கொடுக்க, சடேரென்று எல்லோரும் நின்றார்கள். மேலேறுங்கள் என்று உத்தரவிட சவுக்குக் கம்பில் கால் வைத்து மேலே வந்தார்கள். காயம் பட்டவர்களுக்கு குப்பியிலிருந்து மருந்து இடப்பட்டது.

அவர்கள் சளசளத்து பேசிக் கொண்டு ஆற்றங்கரை நோக்கி நடந்தார்கள். சிலர் செடிகளுக்குப் பின்னால் போய் உட்காரந்து கொண்டார்கள்.

"ஐயன் வயிறு வலிக்கிறது." யாரோ ஒருவன் குரல் கொடுத்தான்.

அந்த முதியவர் அருகே போய் பார்த்தார். அவனை தள்ளி உட்காரச் சொன்னார். அவன் மலத்தை உற்றுப் பார்த்தார். "பூச்சி இருக்கிறது. அத்திப்பழம், கொய்யாப்பழம் போன்று ஏதாவது சாப்பிட்டாயா. எந்தப் பழத்தையும் ஆராயாமல் உண்ணாதே. ஆற்றங்கரையில் நிறைய தண்ணீர் குடித்து விட்டு நூறு முறை குதி. சகலமும் சரியாகும்."

இன்னும் சிலபேர் அவ்வாறு அமர்ந்திருப்பது பார்த்து அவர்களையும் விசாரித்து விட்டு அவர்கள் மலத்தையும் உற்றுக் கவனித்து விட்டு நகர்ந்து போனார்.

அவருடைய ஒவ்வொரு செய்கையிலும் மிகமிகப் பிரியம் இருந்தது.

பானுகோபன் என்கிற அந்த முதியவருக்கு எண்பது வயதிருக்கும். ஆனால்... அறுபது வயது உடற்கட்டோடு இருந்தார். கண் பார்வை மிகத் தெளிவாக இருந்தது. மனிதர்கள் அருகே வர, அவர்கள் அதிர்விலிருந்து அவருக்குப் பல விஷயங்கள் தெரிந்தன. குறிப்பாய் மனிதர்கள் மேலிருந்து வரும் வாசனைகளை வைத்துக் கொண்டு. அவர்கள் மனோநிலையைச் சொல்லும் கெட்டிக்காரத்தனம் அவரிடமிருந்தது.

அந்தக் கோட்டைக் குழுவுக்கு அவர்தான் தலைவராக இருந்தார். அவரைத் தலைவர் என்று யாரும் சொல்லவில்லை. நான்தான் தலைவன் என்று அவரும் சொல்லவில்லை. மிக இயல்பாக, இயற்கையாக கூரை மீது பூத்த பூசணிபோல இயல்பாக தலைவரானார். வலது கால் வலிக்கிறது. தூங்க முடியவில்லை என்று ஒரு மத்திம வயது ஆள் வர, அவன் காலை எண்ணெய் போட்டு உருவிவிட்டார்.

"அடேய்... உனக்கு ரத்த ஓட்டம் சரியாக இல்லையடா. சற்று புளித்த மது அருந்து. ரத்த ஓட்டம் துரிதப்படும். அளவு மிக முக்கியம். அதிகம் சாப்பிட்டால் ஹிருதயம் அதிகம் வேலை செய்யும்படி ஆகிவிடும். ஒரேயொரு முறை ஒரு குவளை புளித்த கள் போதும்."

"ஆனால், எனக்கு மது சாப்பிடும் பழக்கம் இல்லையே."

அவன் அடிக்குரலில் கேட்டான்.

"அது மது இல்லை. மருந்து. புளித்த கள்ளை தூங்குவதற்காகவும், புணர்ச்சிக்காகவும் சாப்பிட்டால் அது மது. ரத்த ஓட்டத்திற்கு சாப்பிட்டால் மருந்து. பெண்பிள்ளைகள் மாத விலக்காகும்போது, தேன் கலந்து கள்ளைக் கொடுப்பதில்லையா. அதே போலத்தான் உனக்கும் கொடுக்கிறேன். ஒரேயொரு குவளையில் உன் கால்வலி சரியாகிவிடும். போ. போய் நீந்திக்குளி. எதிர் நீச்சல் போடு."

அவனை முதுகில் அறைந்து எழுப்பினார்.

அவன் இரண்டு கரணம் அடித்து ஆற்றில் குதித்தான்.

"ஐயா... எதிர்கரையில் இரண்டு மூன்று முதலைகள் இறங்குவதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருக்கின்றன."

ஒருவன் சுற்றிக் காட்டினான். பெரியவர் உற்றுக் கவனித்தார்.

"கேசவா போ. போய் எதிர்கரையில் ஏறி அந்த முதலைகளை இன்னும் உள்ளுக்குள் விரட்டி விட்டு வா."

கேசவன் நீண்ட கழியோடு நீந்திப் போனான். கரையிலுள்ள முதலைகள் அவனைப் பார்த்ததும் சரக்கென்று திரும்பின. இரண்டு அடி முதுகில் வைத்தான். முதலை துள்ளிக் கொண்டு பாய, அவன் பிளந்த வாயை அழுத்தி மூடினான். சட்டென்று விலகி அடுத்த பாய்ச்சலுக்கு தயாராக இருந்தான். முதலை வலி தாங்காமல் புரண்டது. மெல்ல பின்வாங்கியது. புதருக்குள் போனதும் மிக வேகமாக வெகு தொலைவில் அவை ஓடுவதை கவனித்தான். பிறகு நீரில் இறங்கி வந்தான்.

"இதுதான் கெட்டிக்காரத்தனம். பகைவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்கிற நிலையிலேயே அவர்களை நாம் அதட்டித் துரத்தி விடுவது நல்லது. அவர்கள் தாக்க வரும்வரை நாம் காத்திருப்பது மதியீனம். பகைவர்கள் சுற்றி இருக்கிறார்கள் என்ற உள்ளுணர்வு வளர்த்துக் கொள்வது நல்லது. அதுதான் நம்மை வாழ்விக்கும்" பானுகோபன் பேசினார்.

"ஐயன்."

"என்ன?"

ஒரு இளைஞன் கூவ அவனைப் பார்த்து பானுகோபன் திரும்பினார்.

"மீன்கள் நமக்கு பகைவர்களா... நண்பர்களா..."

"எதனால் கேட்கிறாய்."

"மீன்களும் கடிக்கின்றனவே. நான் கால்மாற்றி துள்ளிக் குதிக்க வேண்டியிருக்கிறதே" என்று சொல்ல எல்லோரும் ஒவென்று சிரித்தார்கள்.

"கால் மாற்றாதே கடிக்கட்டும். மீன்கள் உன்னை துன்புறுத்துவதற்காக கடிக்கவில்லை. அவை உன்னுடைய உடம்பிலுள்ள காயங்களின் பொருக்குகளை நீக்குகின்றன. மீன் வாய்வைத்த காயம் வெகு சீக்கிரம் ஆறும். மீன் கடிக்குக் கால் மாற்றாதே. வெறுமே காட்டிக் கொண்டிரு. மீன்கள் பொது மக்கள் போல, அவை அரசனை தொந்திரவு செய்யத்தான் செய்யும். எதிர்த்துப் பேசும். ஏதேனும் இறைஞ்சும், கொடு என்று பிடுங்கும். அரசன் மறுக்கலாமோ. அரசன் மக்களுக்குக் கொடுப்பது நல்லது. பொது மக்களின் பேச்சும், வருகையும் அரசனுக்கு மெல்லிய தொந்தரவாக இருக்கும். இருப்பினும் அதை அவன் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும். மறுதலிக்கக்கூடாது. ஏனெனில், ஒரு அரசனின் மனக்காயத்தை பொது மக்கள்தான் ஆற்றுகிறார்கள். அவர்களைப் பார்க்கும்போது, அவர்களின் கூச்சலை பார்க்கும்போது அரசன் சந்தோஷமாகிறான். மக்கள் மீன்களைப்

போன்றவர்கள். தோல் பொருக்குக்காக காத்திருப்பவர்கள். அவர்களுக்கு அது போதும்."

அவர் பேசுவதை அத்தனை பேரும் சூழ்ந்திருந்து கேட்டார்கள். ஒருவன் மெல்ல வந்து பானுகோபனின் கால் தொட்டான்.

"எத்தனை அழகாக சொல்கிறீர்கள். வாழ்நாள் முழுவதும் இந்த உவமை எனக்கு மறக்காது. உங்களிடம் உள்ள அற்புதத் திறமையே ஒவ்வொரு விஷயத்தையும் உவமையோடு பேசுவதுதான். பிரிக்கவே முடியாத, பிசிறேயில்லாத உவமைகள். உங்களிடமிருந்து எப்படி வருகின்றன. நீங்கள் எங்களின் தலைவராகக் கிடைத்தது பாக்கியம்."

"குளிப்பதைத் தொடரலாம்."

பானுகோபன் மெல்லிய சிரிப்போடு சொல்ல அவர்களும் துள்ளி குதித்துக் கொண்டு மறுபடியும் நீரில் குதித்தார்கள். வளைந்து வளைந்து நீராடினார்கள்.

"நகுலா இங்கு வா. ஏன் உனக்கு மார்புப்படம் அகலமாக இல்லை. இடுப்புப் பக்கம் ஏன் சதை இருக்கிறது. பிருஷ்டத்தை இவ்வளவு உருண்டையாக வைத்திருக்கிறாயே. எப்படி உன்னால் ஓட முடியும். அதிகம் சாப்பிடுகிறாய் நகுலா, கோலை கழுத்தில் போட்டு, இரண்டு கைகளையும் இரண்டு பக்கம் கோல்மீது போட்டு வலதும், இடதுமாக திரும்பு. இடுப்புத் தசை குறையும். கைகளின் கனத்தால் கழுத்துக்கோல் இறுக்கமாக தோளில் விழ மார்புப்படம் பெரிதாகும். மூச்சு சீராக விட்டுக் கொண்டே திரும்புதலைச் செய். ஒவ்வொரு அசைவும் மூச்சும் மிக இணையாக இருத்தல் அவசியம். மூச்சை கவனித்துக் கொண்டேயிரு. பிறகு, இடுப்புப்பயிற்சி செய்துவிட்டு குளிக்கலாம்."

"அடேய்... மேலேறு. உன் கால்களில் வலுவு குறைவாக இருக்கின்றன. அதிக தூரம் ஓடுவதால் உன் கால்கள் இளைத்து விட்டன என்று நினைக்கிறேன். ஓடுதல் மட்டும் பயிற்சி இல்லை. கால்களில் உரம் இருக்க வேண்டுமெனில், அடிக்கும்

போது தாங்க வேண்டுமெனில் நல்ல வலிவும் இருத்தல் அவசியம். நூறுமுறை உட்கார்ந்து எழுந்திரு."

"அடேய். உன்னுடைய விரைகள் பெரிதாக இருக்கின்றன. நீ தவறாக உட்காருகிறாய் அல்லது உனக்கு சரியாக கோமணம் கட்டத் தெரியவில்லை. அதன் மீது கவனம் வை. ஆல மொக்கை பஸ்பம் செய்து உனக்கு ஒரு லேகியம் தருகிறேன். உன் உடம்பிலுள்ள நீரை சற்று அது வற்றச் செய்யும். எண்ணெய் தேய்த்து விட்டு குளிப்பது என்பது முட்டாள்தனம். குளித்து நடுவே எழுந்து எண்ணெய் தேய்த்துக் கொள்ளுங்கள். முதலில் வாசனைப் பொடியால் உடம்பை சுத்தம் செய்யுங்கள். பிறகு நன்றாக அலசிக் குளிங்கள். பிறகு உடம்பு முழுவதும் எண்ணெய் தேய்த்து நன்றாக நீராடுங்கள். இப்பொழுது எண்ணெய் உடம்பு முழுவதும் பரவியிருக்கும். நீர்ப்பட்ட தோல் விரிவடைய எண்ணெய் உள்ளே இறங்கும். இப்பொழுது லேசாக ஏற்றித் துடைத்துக் கொண்டு வீடு நோக்கி நடந்து விடுங்கள். இது மழையும் கூதற்காற்றும் நிறைந்த தேசம். எண்ணெய் பசை உடம்பில் இருப்பது அவசியம். அறவே எண்ணெய் பசையை நீக்குகின்ற சோழ தேசத்து முட்டாள் தனத்தை இங்கு செய்ய வேண்டாம். எண்ணெய் இறங்கி... எண்ணெய் இறங்கி, தோல் மழுமழுப்பாகவும், அழகாகவும் இருப்பது நல்லது. ஏனெனில் நம்முடைய தோலும் சுவாசிக்கிறது. காற்றை உள்ளிழுத்து விடுகிறது. தோல் சுவாசம்தான் கண்களையும், செவிப்புலனையும், நாசியையும் கூர்மையாக வைக்க உதவுகிறது. தோலில் குறையுள்ளவர்களுக்கு நுகர்வதில், பார்ப்பதில், காது கேட்பதில் குறையிருக்கும்."

அவர் சிலருக்கு முதுகு தேய்த்து விட்டார். சிலருக்கு கைகள் உருவி விட்டார். அவரும் நீரில் இறங்கி நீந்தி விளையாடினார். சிறுவர்களை தோளில் நிற்க வைத்து நீரில் குதிக்கச் சொன்னார். மணல் மூட்டையில் இடித்தவன் தோள் வலிக்கிறது என்று சொல்ல, இலை ஒத்தடம் தருகிறேன் என்று சொன்னார். யாரையோ இலைகள் பறித்து வர உத்தரவிட்டார்.

அந்தக் கூட்டம் குளித்துவிட்டு மேலேறியது. சந்தன விழுதை வாழை மட்டையிலிருந்து எடுத்து நாமம் போல நெற்றியில் பூசிக் கொண்டது. உடம்பு முழுவதும் தடவிக் கொண்டது.

அவர்கள் மூன்று பேராக வரிசையானார்கள். பானுகோபன் ஆரம்பிக்க ருத்ரம் சொல்லத் துவங்கினார்கள். கையில் சொம்பு நீருடன், தோளில் முறுக்கிப் பிழிந்த துண்டுடன் நீர் சொட்டி அலையும் குடுமியுடன், உலர்ந்த வேட்டியுடன், இடுப்பில் இறுக்கிய தர்ப்பைக் கயிறுடன், ருத்ரம் சொல்லியபடியே கோட்டை நோக்கி நடந்து வந்தார்கள். கணீரென்ற குரலில் சிவனைத் துதித்துப் பாடியபடியே அவர்கள் நடந்து வருவது பார்ப்பதற்கு அந்த இளம் வெய்யிலில்அற்புதமாக இருந்தது. பெண்கள், அவர்கள் கோட்டை வாசலில் நிற்க மணியடித் தார்கள். குனிந்து கொண்டு ஆரத்தி சுற்றினார்கள். திருஷ்டி கழித்தார்கள். வயதானவர்கள், மத்திம வயதானவர்கள், இளை ஞர்கள், சிறுமிகள் எல்லாரும் விழுந்து வணங்கினார்கள். அங் குள்ள சிறுவர்களையும் எந்த பாரபட்சமுமில்லாமல் நமஸ்கரித் தார்கள்.

எங்களை வாழ்த்த வேண்டும் என்பதுபோல் கைகூப்பி நின்றார்கள். ஏனெனில்... வந்தவர்கள் அத்தனை பேரும் அந்தணர்கள். சேரதேசத்து முன் குடுமி அந்தணர்கள். எல்லாக் கலைகளிலும் வல்லவர்கள். இடையறாது இறைவன் புகழை பாடுபவர்கள். மந்திர தந்திர சாஸ்திரங்கள் தெரிந்தவர்கள். யாகம் செய்யும் திறமை பெற்றவர்கள். நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்தவர்கள். ஜோதிட சாஸ்திரம் தெரிந்தவர்கள். வைத்திய சாஸ்திரத்தில் நிபுணர்கள். அதுமட்டுமில்லை... அந்தணர்கள் எளிதில் ஏற்றுக் கொள்ளாத தனுர் வித்தையிலும், இந்த சேரதேசத்து அந்தணர்கள் மிகச் சிறப்பானவர்கள். எல்லா விதமான போர்க் கருவிகளையும் பயன்படுத்தத் தெரிந்தவர் கள். போர் செய்யும் முறை எப்படி என்று மற்றவர்களுக்கு சொல்லித் தருகிறவர்கள். அரசகுல க்ஷத்திரியர்களை வழி

நடத்துபவர்கள். காந்தளூர்ச்சாலை என்கிற இடத்தில் கடிகை (கல்லூரி) ஒன்றை அமைத்து, அங்கு பல தேசத்து வீரர்களுக்கு போர்ப்பயிற்சி சொல்லித் தருகிறவர்கள். அதை அற்புதமான பாடத் திட்டமாக மாற்றி ஐந்து வருடப் பயிற்சியில் மிகச் சாதாரணமான ஆளை, மிகச் சிறந்த தளபதியாக மாற்றக்கூடிய வல்லமை உடையவர்கள். எந்த எதிரிக்கும் அஞ்சாதவர்கள். தங்களுடைய கூட்டம் சிறக்க, எந்தத் தியாகத்திற்கும் தயாராக இருப்பவர்கள். கட்டுப்பாடு மிக்கவர்கள். தலைவனுக்கு அடங்கி நடப்பவர்கள். மிகவும் சந்தோஷமானவர்கள். மற்ற வரை சந்தோஷப்படுத்துபவர்கள். பெண்களின் மீது ஆர்வம் உள்ளவர்கள். பெண்களை ஆழமாக காதலிக்கிறவர்கள். அவர் களை ஆதரிக்கிறவர்கள். பெண்களுக்கு ஆபத்து என்றால் சகலமும் உதறி அந்த இடத்தில் கம்பீரமாக ஆபத்தை, உடைத்தெறியும் வேகத்தோடு வந்து நிற்பவர்கள். சேரதேசத்து அரசனாலும், பாண்டிய தேசத்து மன்னனாலும், சோழ தேசத்து சக்ரவர்த்தியாலும் வணங்கி போற்றப்பட்டவர்கள்.

வடக்கே கீழைச்சாளுக்கியம், மேலைச் சாளுக்கியம் வரை உள்ள சிற்றரசர்களுடைய அன்புக்குப் பாத்திரமானவர்கள். அவர்கள் எந்த சபையில் ஏறினாலும் அந்த சபை எழுந்து நின்று இவர்களுக்கு மரியாதை செய்து ஆசனம் தரும். இப்படியொரு அந்தணக்கூட்டம் பாரத தேசத்தில் வேறு எங்கும் இல்லை. பரசுராமர் க்ஷேத்திரம் என்கிற சேரதேசத்தில்தான் இருக்கிறது. இது பரசுராமருடைய ஆசிர்வாதம். அவர்மூலம் கற்றுக் கொடுக் கப்பட்ட வித்தை. ராமரால் அவமானப்படுத்தப்பட்ட பரசுராமர், உயிர்த்தியாகம் செய்து கொள்ளலாம் என்று நினைத்தபோது, நாரதர் அவர் முன்பு தோன்றி அவர் யார் என்பதை அவருக்கு உணர்த்தி, ஒழுக்கமுள்ளவன் எல்லாக் கலைகளிலும் சிறந்து தேறமுடியும். அப்படி ஒழுக்கமுள்ளவன் அடக்கமுள்ளவனாக வும் இருப்பின், அந்தக் கலைகள் பலருக்கும் பயன்படும். வேதங்களைக் காக்க, வேதங்களிலிருந்து சொல்லப்பட்ட கலைகளை காக்க வேண்டியது அவசியம். வீரமும், இறை நம்பிக்கையும், கருணையும்,கடமை செய்யும் ஆற்றலுமுள்ள

ஒரு கூட்டத்தை தயார் செய். வலிவு உள்ளவர்களை மட்டும் நம்பியிருப்பின் இந்த உலகம் வழி தெரியாது தவிக்கும். வலிமையுள்ளவர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. நல்லவர்கள் வலிமை உள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசியம். எனவே, நல்ல ஒரு குழுவைத் தேர்ந்தெடுத்து அந்தக் குழுவுக்கு வலிவூட்டு என்கிறபோது பரசுராமர் மெல்ல அந்த மேற்குக் கடற்கரை பகுதி முழுவதும் நடந்து, பள்ளத்தாக்கிலிருந்த அந்தணர் குழுவை கண்டு பிடித்து, அவர்களுக்கு தனக்குத் தெரிந்த வித்தையை கற்பிக்க அங்கேதான் காந்தளூர்சாலை கடிகை துவக்கப்பட்டது.

மேற்குக் கடற்கரை பரசுராமர் க்ஷேத்திரம். காந்தளூர்சாலை பரசுராமர் கால் வைத்து கற்றுக் கொடுத்த இடம். குரு பூமி. நடனம் முதற்கொண்டு, பாட்டு முதற்கொண்டு, கவிதை எழுதுதல் முதற்கொண்டு, ஜோசியம் வரை அறுபத்து நாலு கலைகளையும் அவர் அங்குள்ள அந்தணக் குழுவுக்குக் கற்பிக்க, அந்த அந்தணக்குழு பெருகிப் பெருகி வளர்ந்து கட்டுக்கோப்பாக இன்னும் இருக்கிறது.

உன்னுடைய சீடர்களுக்கு ஒற்றுமையையும் வலியுறுத்து. ஒருவேளை இவர்களுக்கு ஒற்றுமை குறைந்தால், மறுபடியும் எப்படியாவது ஒற்றுமையை ஏற்படுத்து. ஒற்றுமையின்றி இவர்கள் பிரிந்து சிதறினால், இந்த பாரத தேசத்திற்குள் அன்னியர்கள் நுழைவார்கள். இவர்கள் சிதறும் நேரமும், அன்னியர்கள் உள்ளே வரும் நேரமும் ஒன்றாக இருக்கும். எனவே, நல்லவர்கள் வல்லவர்களாக இருப்பது மட்டுமல்ல. ஒற்றுமையாக இருப்பதும் முக்கியம். அடக்கமாக இருப்பதும் முக்கியம். அடக்கமாக இருந்தால்தான் ஒற்றுமையாக இருக்க முடியும். அடக்கமில்லாத ஆரவாரம்தான் ஒற்றுமையின்மை யின் முதல்படி. பெரும் பிளவிற்கு வழி வகுக்கும். பிளவு எங்கிருக்கிறதோ அங்கு பெருச்சாளிகள் வந்து குடியேறும் என்று நாரதர் சொன்னதாகவும் ஒரு செவி வழிச் செய்தி உண்டு.

நாரதர் சொன்ன பிரிவு வந்துவிட்டதோ என்று தோன்று கிறது.

காந்தளூர்ச்சாலை நிர்வாகத்திலிருந்து இந்த நாற்பது குடும்பங்கள் பிரிந்து கோட்டை அமைத்துக் கொண்டார்கள். அவர்கள் கோட்டை அந்தணர்கள் என்று அழைக்கப்பட்டார் கள்.

இந்தப் பிரிவுக்கு என்ன காரணம்.

அடக்கமின்மைதான் காரணம்.

தானே ஆளவேண்டும் என்ற பேராசைதான் காரணம்.

பேராசைக்கு என்ன காரணம்.

தன் வலுவின் மீது தனக்கு சந்தேகம் வந்தது காரணம்.

அந்த அந்தணர் கூட்டம் உள்ளே நுழைந்ததும், பெண்கள் சமையலறைக்கு ஓடினார்கள். இன்னும் அடுப்பு கிளறப்பட்டு, புகைகள் உயர எழுந்தன. நல்ல வாசனையான உணவு தயாரிக் கப்படுவது எல்லாராலும் உணரப்பட்டது. ஆண்கள் உட் கார்ந்து மாத்யானம் செய்யத் துவங்கினார்கள். உச்சி நேரத்து சூரியனை வணங்கினார்கள். அந்தப் பகல் நேரத்தில் நான் எந்தப் பாவமும் செய்யாமலிருக்க அருள் புரிவாயாக. உன் தேஜஸ் என்னை வந்து அடையட்டும் என்று கேட்டார்கள். பிறகு மெல்ல குழுகுழுவாகப் பிரிந்து அன்றைய பாடங்களை படிக்கத் துவங்கினார்கள்.

ஒரு மண்டலம் ஜோசியம் கற்றுக் கொண்டவர்கள் நகர்ந்து போய், ஒரு மண்டலம் வைத்திய சாஸ்திரம் கற்றுக் கொள்ளத் துவங்கினார்கள். மனையடி சாஸ்திரம் கற்றுக் கொள்வதற்காக இன்னொரு குழு, வேறு ஒரு மூலைக்குப் போயிற்று. அன்று புதிதாக ஒரு மனை ஏற்படுத்த வேண்டுமென்று பூமியில் கோடுகள் போட்டு பூஜை செய்தது. ஈட்டியும், வாளும் தயாரித் துக் கொள்வதற்காகவும், கேடயங்கள் செய்வதற்காகவும் ஆறுபேர் தயாரானார்கள். உலோகம் சேகரிக்க எப்பொழுது கிளம்ப வேண்டும் என்று அவர்களுக்குள் விவாதித்துக் கொண

டிருந்தார்கள். சுடுமண் பொம்மைகள் செய்வது பற்றியும், சட்டிகள் செய்வது பற்றியும், மண்பாண்டங்கள், மரப்பாண்டங்கள் செய்வது பற்றியும் வேறொருவர் விளக்க அங்கு நான்குபேர் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

மிருகங்களின் லட்சணங்கள் என்று இன்னொரு இடத்தில் பாடம் நடந்து கொண்டிருந்தது. அவை அனைத்தையும் தெளிவுறக் கற்ற வயது முதிர்ந்த ஆண்கள் மேடையில் அமர்ந்து கொண்டார்கள். நடுவே மிகப்பெரிய அரசமரம் ஒன்று வளர்ந்திருந்தது. குளுமையான நிழல் கொடுத்தது. அதன் அடிக்கிளைகள் மீது தென்னை ஓலைகள் பின்னிப்போட்டு, ஒரு சிறிய தடுப்பும் இடப்பட்டிருந்தது. எனவே, சூரிய ஒளி உள்ளே வரவேயில்லை.

அவர்கள் அதற்குக்கீழே மெல்ல பேச ஆரம்பித்தார்கள்.

"நம்மிடம் இருப்பது நாற்பத்தைந்து குடும்பங்கள்தான். நூற்றி ஐம்பத்து நாலு மக்கள்தான். இவைகளில் அறுபத்து நாலு பேர் பெண்கள். தொண்ணூறு ஆண்கள். இது சரியான சதவிகிதம் என்றுதான் தோன்றுகிறது. ஆனாலும், நமது கூட்டம் இன்னும் பெருக வேண்டும் என்பது என்னுடைய எண்ணம். இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்."

எண்பது வயதான பானுகோபன் சொல்ல, அறுபது வயதுக் கிழவர் ஒருவர் மெல்ல பானுகோபனை நோக்கிச் சிரித்தார்.

"இதற்கு ஏதாவது பாடம் நடத்த வேண்டுமென்று விரும்புகிறீர்களா." என்று கண் சிமிட்ட, எல்லோரும் மெல்ல நாகரீகமாக சிரித்தார்கள்.

"அவசியம் ஏற்பட்டால் அதையும் செய்ய வேண்டும். நான் சொல்ல வந்தது, தங்குமிடம் பற்றி, மேலும் வீடுகள் கட்டுவது பற்றி... நமக்கென்று கடிகை ஆரம்பிக்க முடியுமா என்பது பற்றி..." என்று பானுகோபன் சொல்ல எல்லோரும் மௌனமாக இருந்தார்கள்.

"கடிகை ஆரம்பிக்கத்தான், கடிகையிலிருந்து பிரிந்தோம் என்று நினைக்கிறீர்களா."

வேறொருவர் கேட்க, பானுகோபன் அவர் பக்கம் வேகமாகத் திரும்பினார்.

"ஆமாம் என்றுதான் தோன்றுகிறது. நாம் இருந்த கடிகை நடைமுறைகள், நமக்குச் சற்று பிடிக்கவில்லை. கடிகை என்பது எவருடைய ஆளுமைக்கும் உட்படாமல், எவருடைய அரவணைப்புக்கும் ஆட்படாமல் மிக மிகச் சுதந்திரமாக இருக்க வேண்டும். இந்தக் கடிகையினுடைய பலம் தெரிந்து கொண்டு, இந்தப் பயிற்சி முறையை தெரிந்து கொண்டு, இங்கிருந்து பயிற்சி பெற்றவர்கள் மிகச் சிறப்பான போர் வீரர்களாக இருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டு சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் போட்டி போட்டுக் கொண்டு நமது கடிகையை ஆதரிக்கிறார்கள்."

"ஆதரிக்கிறார்கள் என்பதற்கு என்ன அர்த்தம்."

பானுகோபன் உரத்த குரலில் கேள்வி கேட்டு விட்டு நிறுத்தினார்.

எல்லோருக்கும் அது என்ன அர்த்தம் என்று புரிந்திருந்தது.

சோழ தேசத்து நெல்லும், கரும்புக் கட்டுகளும், துளிர் வெற்றிலையும், வெல்லப்பாகும், வெள்ளிப் பாத்திரங்களும், வேலும் வாளும் கிடைக்கும்.

மதுரையிலிருந்து முத்துமாலைகளும், தங்கக் கட்டிகளும், சாயம் தோய்த்த புடவைகளும், மூலிகைச் செடிகளும் கிடைக்கும். நமது சேர தேசமோ நமக்கு எது கொடுக்கவும் தயாராக இருக்கிறது. நம்முடைய பலத்தை நம்பித்தான் கடற்படை இருக்கிறது. வருடா வருடம் நூறு மாணவர்களை பயிற்றுவிக்க வேண்டுமென்று அன்புக் கட்டளையாக சொல்லப்பட்டு, எல்லா வரிகளிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டது. ஒரு நெல்கூட வரி கொடுக்காமல் வாழ்கிற ஒரே கூட்டம் நம்முடைய

கூட்டம். ஆனால், கடிகை இதற்கு ஆசைப்பட்டு விடக்கூடாது என்று சொன்னால் அது புரியவில்லை.

தேக்கு மரங்கள் வேண்டுமென்றும், தச்சர்கள் வேண்டுமென்றும் இன்னும் அரண்மனைபோல் தங்களுடைய வீடுகளைக் கட்டிக் கொள்ள வேண்டுமென்றும் இங்குள்ள ஆசிரியர்கள் ஆசைப்படுகிறார்கள்.

சேர மன்னனுடைய அரண்மனை போல தட்டோடும், அதற்கு மேல் வளைந்த ஓடுகளும் வேய்ந்து, கீழே உத்திரக் கட்டை கொடுத்து கருங்கல் தளம்போட்டு கருங்கல் தளத்தின் மீது கட்டில் போட்டு, கட்டில் மீது மெத்தை போட்டு, தாம்பூலம் மென்றபடி சாய்ந்திருக்க வேண்டும் என்ற உல்லாசம் அவர்களுக்கு வந்துவிட்டது. ஒரு ஆச்சார்யன் உல்லாசமாக இருக்கக் கூடாது. அது பேராபத்தைக் கொண்டு வந்து தரும். அதுமட்டுமில்லை, சாய்ந்து அமரும்போது சாய்வான எண்ணங்களும், நிமிர்ந்து நேராக எண்ணும்போது சரியான எண்ணங்களும் ஏற்படும்.

நான் மகா உபாத்யாயனாக தேர்ந்தெடுத்த கிருதபலி ஆச்சார்யனுக்கு சுகம் வந்துவிட்டது. தவறு அவர் மீதும் இல்லை. சேர்மானம். இடையறாத போகத்திற்கு ஆசைப்படும் அவர் மனைவி, அவரை சுகத்தில் தள்ளி, தன்னுடைய பலத்தை நிரூபிக்க முயற்சி செய்திருக்கிறார். தன்னுடைய விவகாரங்களில் பெண்களின் ஆலோசனையை அளவுக்கதிகமாக கேட்பவருக்கு நஷ்டங்கள் ஏற்படும். இதற்கு பெண்களை நான் இழிவாக எடைபோடுவதாக அர்த்தமாகாது. நமக்கு இருக்கின்ற இந்த வெளி உலக அனுபவங்கள் பெண்களுக்கு இல்லை. அரசின் சூட்சுமங்கள், அரசாங்க தந்திரங்கள் அவர்களுக்குத் தெரியாது. ஆசைப்படாமல் இருக்கும்போதுதான் அதிக மதிப்பு என்பதும் பெண்களுக்குப் புரியவில்லை.

மகா உபாத்யாயனோடு, சேர மன்னனின் அரண்மனைக்குப் போய் அந்த அரண்மனையை கண்டு வியந்து, சுவரெல்லாம்... பளிங்கு. தூணெல்லாம்... பளிங்கு. எல்லா இடத்திலும் முகம்

தெரிகிறது என்று பார்த்துவிட்டு, இவள் பேரழகை அங்குள்ளவர்கள் புகழ, தனக்கும் மிகப்பெரிய அரண்மனை வேண்டும். அதற்கு தன் பேரழகு உதவி செய்யும் என்று அந்த முட்டாள் நினைத்துக் கொண்டிருக்கிறாள். அவள் பேச்சை நமது மகா உபாத்யாயனும் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

"ஏன் கிருதபலியை இன்னும் உபாத்யாயன் என்று சொல்கிறீர்கள். அதுதான் நகர்ந்து வந்து விட்டோமோ..."

"இல்லை. அது நாம் வளர்த்த கடிகை. நம்முடைய சொத்து. அவர் செய்கின்ற அநியாயங்கள் தாங்காமல்தான் நாம் நகர்ந்து வந்தோமே தவிர, நம்மால் கடிகையை புறக்கணிக்க முடியாது. இப்போதும்கூட அந்தக் கடிகையின் கட்டிடத்திற்குள்ளே, உயர்ந்த கருங்கல் கோட்டைக்குள்ளே, நான் உட்கார்ந்து பேசிய நீண்ட தாழ்வாரங்களுக்குள்ளே சிலம்பமும், கத்திச் சண்டையும் பயின்ற அந்த திறந்தவெளி முற்றங்களுக்கு நடுவே உலவ வேண்டும் என்ற ஆசை உண்டு. ஒருமுறை வெளியேறிவிட்ட பிறகு எந்தக் காரணம் கொண்டும் மறுமுறை உள்ளே போவது நல்லதல்ல, என்னுடைய கவலை இந்தக் குழந்தைகளுக்கு அந்தக் கடிகை இல்லையென்று ஆகிவிட்டது. நாம் இந்தக் குழந்தைகளை என்ன செய்யப் போகிறோம். அந்தக் கடிகையில் உள்ளவர்களைவிட, மிகப்பலமாக இந்தக் குழந்தைகளுக்கு பாடம் சொல்லித்தர நமக்கு எவ்வளவு திராணி உண்டு." அங்கே அமர்ந்திருந்த பதினோரு முதியவர்களும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்னுடைய உள்மனது ஒரு விஷயம் சொல்கிறது."

வேறொரு கிழவர் மெல்லிய குரலில் பேசினார்.

"சொல்லும் தருமதாஸரே. நீர் சொல்லும் எந்த உள் உணர்வும் மிகச் சரியாகவே இருக்கிறது. எனவே தைரியமாகச் சொல்லுங்கள். விளக்கமாகச் சொல்லுங்கள்."

பானுகோபன் உற்சாகப்படுத்தினார்.

"காந்தளூர்சாலை கடிகை நம்மைத் தேடிவரும்."

ஒற்றை வாக்கியத்தில் அவர் பதில் அமைந்தது.

சகலரும் வேகமாக அவரை திரும்பிப் பார்த்தார்கள்.

"ஏனெனில் நம்முடைய முக்கியத்துவம் நம்மைவிட மகா உபாத்யாயரான கிருதபலிக்கு தெரியும். மிகக் குறிப்பாய் பானுகோபன் யார் என்றும், அவருடைய வலிமை என்ன என்றும் தெரியும். அவரைப் பகைத்துக் கொள்ள விரும்ப மாட்டார். நிதானமாக யோசித்து, மனைவியினால் தான் மனம் மாறியதை உணர்ந்து அவர் மறுபடியும் நம்மிடம் வந்து சமாதானம் பேச விரும்பலாம்."

"சமாதானம் பேச வரவேண்டாம் என்றல்லவா, சொல்லி விட்டு வந்திருக்கிறோம்."

இன்னொரு கிழவர் சொல்ல, முதலில் பேசிய தருமதாஸர் தலையசைத்தார்.

"இல்லை. நாம் சொன்னது தீர்மானமல்ல. ஒரு வேண்டு கோள். எங்களை தொந்தரவு செய்யாதே என்பது போல த்வனி உள்ள ஒரு வாக்கியம் அதை அவர் மதிக்க வேண்டிய அவசிய மில்லை. மறுபடியும் வந்து ஒன்றாகச் சேருங்கள், மகாஉபாத் யாயர் பதவியை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள் என்று பானுகோபருக்கு அந்தப் பதவியைக் கொடுக்க வரலாம்."

"அந்தப் பதவியை பானுகோபருக்குக் கொடுக்க, மகா உபாத்யாயரின் மனைவி விட்டு விடுவாளா. அந்த இடத்தை விட்டு காலி செய்ய வேண்டுமென்று சொன்னால், அவளுக்கு பிராணன் போய்விடும். மனைவிக்கு மட்டுமல்ல; மகளுக்கும், மகனுக்கும், மைத்துனிக்கும் கூட அவர் பயப்படுகிறார்."

"அவருடைய குடும்ப வாழ்க்கையினுடைய விவரங்கள் நமக்குத் தேவையில்லை. அவர் சமாதானத்திற்கு வருவாரா. வந்தால் நாம் என்ன செய்ய வேண்டும்."

பானுகோபர் கேட்க, எல்லோரும் மௌனமாக இருந்தார்கள்.

"இப்பொழுதே இதைப்பற்றி முடிவு செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை. இன்று மாலைகூட நாம் இதைப் பேசிக் கொள்ளலாம். இரவு உணவு முடித்து மெல்ல வெளியே உலவியபடி இதை விவாதிக்கலாம்." என்று பானுகோபன் மறுபடியும் சொன்னார்.

"இதைப்பற்றி நாம், மேல் கொட்டகை கிழவரிடம் பேசினால் என்ன."

தருமதாஸன் முணுமுணுப்பாய் பேசினார்.

"எதற்கு அவரை தொந்தரவு செய்ய வேண்டும். முற்றிலும் வாழ்க்கையிலிருந்து விலகி தனியாக ஒரு பரண் போட்டுக் கொண்டு, பரண் மீது கொட்டகை போட்டுக் கொண்டு தனியே இருந்து வருபவருக்கு நாம் ஏன் நம்முடைய பிரச்சினையை சேர்க்க வேண்டும். இவை எதுவும் காதில் விழக்கூடாது என்றல்லவா அவர் விலகி இருக்கிறார்."

"ஆனால், இப்படி சிக்கலான நேரத்தில் உதவியும் அவர் செய்வதுண்டே."

"இதில் சிக்கல் என்று யார் சொன்னது. நாம் தீர்த்துக் கொள்ள முடியாது போனால் அங்கு போகலாம். மற்றபடி, நாம் விவாதிப்பதற்கு என்ன விஷயங்கள் இருக்கின்றன. நம்முடைய வீட்டுப் பெண்களுக்கு, ஆயுதப்பயிற்சி அளிப்பது பற்றி நாம் பேசினோம். ஆனால், முடிவு செய்ய வில்லை. கொடுக்கலாம் என்றுதான் பலபேருடைய எண்ணம். பெண்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதால் என்ன தவறு வரும்."

"தாக்குதல் உடனே துவங்கிவிடும். பெண்கள் பயந்தவர் கள். மனதின் அடியிலிருந்து அந்த பயத்தை எடுக்கவே முடி யாது. ரத்த அணுக்களில் இந்த பயம் வைக்கப்பட்டிருக்கிறது. பயமற்ற போதுதான் போர் என்பது தற்காப்புக்காக உண்டான விஷயமாய் மாறும். பயமுள்ளவர்கள் தாக்கத் துவங்கி விடுவார் கள். அதே சமயம், மிகத் தவறாக எந்தக் காரணமுமின்றி, கெடுக்கத்தான் நெருங்கி வருகிறார்கள் என்று தாக்கிவிடக் கூடும்."

தருமதாஸர் சொன்னார். பலபேர் ஆமென்று தலை அசைத்தார்கள்.

"பத்மபாதரே நீர் என்ன நினைக்கிறீர்."

சற்று குள்ளமாகவும், குண்டாகவும், நீண்ட கேசத்தை உலர விட்டுக் கொண்டும் விரல்களால் பிரித்துக் கொண்டும் இருந்த ஒருவரைப் பார்த்து சட்டென்று பானுகோபன் கேட்டார்.

அவருக்கு இந்தப் பேச்சோடு எந்த சம்மந்தமும் இல்லை என்பது போல ஒரு புன்னகை நிரம்பியிருந்தது. அல்லது வாழ்க்கை என்றால் இப்படித்தான் இருக்கும் என்கிற அலட்சியம் இருந்தது.

அவர் சற்று திடுக்கிட்டு பானுகோபனைப் பார்த்தார்.

'என்னையா கேட்கிறீர்கள்' என்பது போல் புருவம் உயர்த்தினார்.

"உம்மைத்தான் பத்மபாதரே. சொல்லும், பெண்களுக்கு ஆயுதப்பயிற்சி அவசியமா. நம் பெண்களுக்கு அதை வரும் முகூர்த்தத்தில் கொடுக்கத் துவங்கிவிடலாமா."

"கொடுக்கலாம்."

ஒற்றை வார்த்தையில் பத்மபாதர் பதில் சொன்னார்.

"எதற்காக செய்யலாம் என்று சொல்கிறீர்கள். காரணம் சொல்லும்."

தருமதாஸர் வினவினார்.

"மூங்கிலுக்கு நடுவே நீளமாக ஓட்டை இருக்கிறது."

"ஆமாம். அதனால் என்ன. அது மூங்கிலின் இயல்பு."

"ஆமாம். அது மூங்கிலின் இயல்பு. நாம் என்ன செய்வோம். களிமண்ணை குச்சியால் குத்தி உள்ளே அனுப்பிவிட்டு மெழுகால் மூடிவிடுவோம். மூங்கில்தடி இறுக்கமாக இருக்கும். அடி பலமாக விழும்."

"என்ன சொல்கிறீர்கள் எனக்குப் புரியவே இல்லை."

தருமதாஸர் பத்மபாதரின் உவமானத்திற்கு மெல்லிய கோபம் பூண்டு சீறலாய்க் கேட்டார்.

"ஒரு பலவீனம் இருக்கிறதென்றால், அந்த பலவீனத்தை தமக்கு நேர் செய்துவிட்டு பொருளை பயன்படுத்துவது போல, பெண்களின் பலவீனம் பயம் என்றால், அது அவர்கள் ரத்தத்தில் உறைந்திருக்கிறது என்றால், அதை மெல்லக் களைந்து விட்டு அவர்களுக்கு ஆயுதப்பயிற்சி கொடுக்கலாம்."

"எப்படிக் களைவது. ரத்தத்தில் உறைந்திருக்கின்ற அவர்கள் அடிப்படையான விஷயத்தை..."

"எப்படிக் களைவது. இது இயலுமா." என்று ஒருவர் கேட்டார்.

"இயலுமா என்று சேர தேசத்து முன் குடுமி அந்தணர்கள் கேட்பதே இல்லை. கேட்கவும் கூடாது. நீரில் நடக்க முடியுமா என்று உள்ளுக்குள் கேள்வி வந்தால், கேள்வி வந்தவர் நீரில் நடக்கப் பயிற்சி எடுத்துக் கொள்கிறார். நீரில் நடந்து காட்டுகிறார். அப்படி நடந்து காட்டியதான சரித்திரங்கள் நமது பரம்பரையில் உண்டு."

"நல்ல காரணம் சொல்லுங்கள்."

முதலில் பேசியவர் மறுபடியும் வேகமாகப் பேசினார்.

"பெண்களை நாம் ஆயுதப் பயிற்சிக்கு உட்படுத்துவதற்கு ஒரு மிகச்சரியான காரணம் நீங்கள் சொல்ல வேண்டும்" என்று மறுபடியும் வற்புறுத்தினார்.

அங்குள்ளவர்கள் அமைதியாக இருந்தார்கள்.

பானுகோபன் மெல்ல பேசத் துவங்கினார்.

"ஒரு பிரச்சினை நம் தலைமேல் வந்து விட்டது. ஒற்றுமையாக இருந்த நாம் நம்முடைய குழுவிடமிருந்தே பிரிந்து, தனிக்குழுவாக, மிகச்சிறிய குழுவாக, எந்த ஆதாரமும் இல்லாமல், எவர் நட்பும் இல்லாமல், நமது வித்தை மட்டுமே நம்முடைய மூலதனம், நம் வித்தை மட்டுமே நம்முடைய

பாதுகாப்பு, நம் வித்தை மட்டுமே நம்முடைய செல்வம் என்று தனித்து வந்திருக்கிறோம். இங்கு வந்து முதல் மூன்று மாதங்கள் உணவுக்கும், உடைக்கும், உறைவிடத்திற்கும் நாம் பட்ட கஷ்டங்கள் சிவனே அறிவார். நாம் நகர்ந்து வந்ததைக் கேட்டு, சேர தேசத்து மக்கள் நமக்கு உதவி செய்தார்கள். பால் கறக்கும் பசுக்களை, கன்றுகளோடு கொண்டு வந்து கொடுத்தார்கள். பாத்திரங்களையும், பண்டங்களையும் கொடுத்தார்கள். பெண்கள் பரம்பரையாக கொடுக்கப்பட்ட பெட்டிகளையும் நகைகளையும் கொண்டு வந்து கொடுத்தார்கள். பாண்டிய தேசத்திலிருந்தும் உதவி வந்தது." பானுகோபர் பேச்சுக்கு நடுவே தருமதாஸர் பேச பானுகோபன் பேச்சை நிறுத்தினார்.

எதற்காக தருமதாஸர் இடைமறித்தார் என்று யோசித்தார்.

"பாண்டியரிடமிருந்து இல்லை. வீரபாண்டியன் என்கிற மன்னனிடமிருந்து வந்தது. பாண்டிய மக்களுக்கு நம்முடைய மகிமை எதுவும் தெரியாது. நம் உதவிகள் எதுவும் தேவையில்லை. அவர்கள் வேறு. நாம் வேறு. ஆனால், வீரபாண்டியன் அப்படியல்ல. அவன் காந்தளூர்ச்சாலை கடிகையில் பயின்றவன். கடிகையின் மீது உயிரை வைத்திருப்பவன். கடிகை பிரிந்து போயிருக்கிறது என்று தெரிந்ததும் அவன் தவித்துப் போயிருக்கிறான். என் தாயை இரண்டாக வகுத்து நான் எப்படி வணங்க முடியும். தெய்வத்தை இரண்டாகப் பிளந்து நான் எப்படி தொழமுடியும். தேசத்தை இரண்டாகப் பிளந்து நான் எங்கே போக முடியுமென்று கேட்கிறான். கவிதையாக ஓலை எழுதி அனுப்பியிருக்கிறான். அவன் உணர்வுகள் நமக்குப் புரிகின்றன. அவன் தமிழ் சொக்க வைக்கிறது. ஒரு மாணவன் தன் உபாத்யாயனுக்கு அனுப்பியது என்று அந்த ஓலையில் குறிப்பிட்டிருக்கிறான். எனவே, அதை நாம் ஏற்றுக் கொண்டோம். அவன் அனுப்பிய கருவிகளும், மண்கலன்களும், தானியங்களும் மிகப் பேருதவியாக இருந்தன. வீரபாண்டியனை ஒருக்காலும் மறக்க முடியாது. உண்மையில் வீரபாண்டியன் நமக்கு உதவி செய்தது, மகா உபாத்யாயருக்கு கோபத்

தையே கொடுத்திருக்கிறது. கடிகையின் தலைவருக்கு கடுப்பை ஏற்படுத்தியிருக்கிறது."

பானுகோபர் சிரித்தபடி சொன்னார்.

"இன்னும் கிருதபலியை கடிகையின் தலைவர் என்று எப்படிச் சொல்லுகிறீர்கள்."

"அது அந்த தனி மனிதனுக்கு கொடுக்கின்ற மரியாதை அல்ல. அந்தப் பதவிக்கு கொடுக்கின்ற மரியாதை. ஒரு நாயை அங்கு உட்கார வைத்தாலும், அதை மகா மகா உபாத்யாயன் என்றுதான் நான் குறிப்பிட வேண்டியிருக்கும்."

"ஆனால், வீரபாண்டியன் பாண்டிய மன்னரல்ல. தனி மனிதன் என்று சொல்கிறீர்களா."

"ஆமாம். பாண்டிய மன்னனின் ஸ்ரீ முகம் என்று அந்த ஓலை சொல்லவில்லை. காந்தளூர்ச்சாலை கடிகையின் முதல் மாணாக்கன் என்று அந்த ஓலை ஆரம்பிக்கிறது. அதுமட்டுமல்ல, இங்கு பொருள் கொணர்ந்த அத்தனை பேரும் கடிகையின் மாணாக்கர்கள், கடிகையின் மாணாக்கரல்லாத எவரையும் அந்தக் குழுவில் அவன் சேர்க்கவேயில்லை. சக்கரங்கள் உள்ள மாட்டு வண்டியை ஓட்டி வந்தவனும், குதிரை வண்டியை இழுத்து வந்தவனும், வெல்லப்பாகு எடுத்து வந்தவனும் நம்முடைய மாணவர்கள். அத்தனை பேரையும் அணைத்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடினோமோ மறக்க முடியுமா, அந்த நாளை."

பானுகோபர் கண்கள் மின்னச் சொன்னார்.

"நம்முடைய பெண்டுகளுக்கு வித்தை அளிப்பது பற்றி இன்னும் தீர்மானமாகப் பேச வேண்டும்."

தருமதாஸர் மறுபடியும் பேச, பானுகோபர் கண்களை மூடிக் கொண்டார்.

"வெகு நிச்சயமாக நமது பெண்களுக்கு அடிப்படையான ஆயுதப் பயிற்சி தந்து விடலாம். மிக நுணுக்கமான தேர்ச்சி அவர்களுக்குத் தேவையில்லை. தற்காத்துக் கொள்ள கத்தி

யையோ, வில் கம்பையோ பயன்படுத்திக் கொள்ள நிச்சயம் நாம் போதிக்கலாம். அருகே ஆளை வரச் சொல்லி புரட்டிப் போடுகின்ற வித்தையை அவர்களுக்கு கற்பிக்க வேண்டும். பின்னால் வந்து கட்டிப் பிடிக்கின்றவனை இடித்து சுவரோடு தேய்த்து மண்டையைப் பிளக்கின்ற வேகத்தையும் நாம் கற்றுத் தரவேண்டும். அவர்கள் முழங்கைகளுக்கும் மணிக்கட்டு களுக்கும் தனி வலிவு ஏற்ற வேண்டும். இளம் பெண்களுக் கும், மத்திம வயது பெண்களுக்கும் இந்த வித்தையை கற்றுக் கொடுக்கலாம். வயதான பெண்மணிகளுக்கு குழாயின் மூலம் ஊதுகின்ற அம்பால் குறிபார்த்து அடிக்கச் சொல்லித் தரலாம். குதிரையேற்றம் சில பெண்களுக்கு அவசியம். மற்றபடி மாடுகள் கட்டிய வண்டிகள் ஓட்ட, நம் பெண்கள் பலருக்குத் தெரியும்."

"யானையேற்றம் தேவையா?"

"இல்லை. தேவையில்லை. யானையிடமிருந்து பெண்கள் விலகியிருப்பதே நல்லது."

"கடிகையின் தலைவர் கிருதபலி மறுபடியும் சமாதானத் திற்கு வருவார் என்று நினைக்கிறீர்களா."

"நிச்சயம் வருவார். ஒரு வார்த்தை நாம் பரணைக் கிழவரிடம் கேட்டு விடுவோமே" என்று சொல்ல பானுகோபர் சரியென்று தலையசைத்தார்.

பரணைக் கிழவரை போய் பார்த்து விட்டு வரும்படி, இன்னொரு அறுபது வயதுக் கிழவரை அனுப்பினார். அறுபது வயதுக் கிழவர் தோளில் துணியை போர்த்திக் கொண்டு கையில் கம்பு ஊன்றி வேகமாக கோட்டையை விட்டு வெளியே போனார். கோட்டையிலிருந்து சற்று தள்ளி, ஒரு புல்வெளித் திடலில், ஒரு பனை உயரத்திற்கு ஒரு பரணை கட்டப்பட்டிருந் தது. அந்தப் பரணையின் மீது ஓலைத்தடுக்குகளால் இறுக்கப் பின்னப்பட்டு, மேலே வைக்கோல்கள் போடப்பட்டு, அதன்மீது தேக்கு இலைகளையும், பாக்கு மட்டைகளையும் வைத்து தைத்து, மிகத் திடமான ஒரு கூரை வேயப்பட்டிருந்தது.

கீழேயிருந்து ஊ... என்று குரல் கொடுக்க மேலேயிருந்து ஒரு கம்பு கீழிறங்கியது. அந்த மூங்கிலின் கணுக்களில் கால்வைத்து அறுபது வயதுக் கிழவர் மேலேறினார்.

"யாரடா... அது."

உள்ளிருந்து நடுங்கும் குரலில் ஆனால், அதட்டலாக ஒரு குரல் கேட்டது.

"நானே, ராமஉபாத்யாயன்."

"ராமனா வா."

இப்போது குரலில் குழைவு இருந்தது. ஆனால், அதிகாரம் குறையவில்லை.

ராம உபாத்யாயன் உள்ளே நுழைந்தார். உள்ளே இருட்டாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட மூலையை உற்றுப் பார்த்தார். அங்கிருந்து கூர்மையாக ஒரு பார்வை தன்மீது படுவதை உணர்ந்தார். சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். 'வெளியே இரு. வருகிறேன்' மறுபடியும் உத்தரவு போலும் ஒரு குரல் வந்தது.

ராமஉபாத்யாயர் மெல்ல வெளியே வந்து குடிசைக்கு அப்பால் சற்று நீண்டிருக்கும் பலகையின்மீது உட்கார்ந்து கொண்டார். குடிசையின் வாசலுக்கு யாரோ நகர்ந்து நகர்ந்து வருவது ஒலியால் உணர முடிந்தது.

வெள்ளை வெளேரென்று பஞ்சுப் பொதியாய் இருக்கிற பரட்டைத்தலை, அதே நிறத்தில் தாடி, மீசை, குழிவிழுந்த கன்னங்கள், எடுப்பான நாசி, குழி விழுந்த கண்கள், ஆனால், கூர்மையான பார்வை. நன்கு புடைத்திருக்கும் நாசி. பொக்கை வாய். கழுத்து இறுகி, புஜங்கள் குறுகி, மார்க்கூடு மெலிந்து ஒரு கிழ உருவம். குடிசையில் விளம்பில் வந்து உட்கார்ந்திருந்தது.

'ராமா...' என்று கனியக் கூப்பிட்டது.

அவர் மறுபடியும் விழுந்து வணங்கினார்

அந்தக் கிழவரின் அருகே போய் உட்கார்ந்து கொண்டார். மெலிந்த கைகளால் அந்தக் கிழவர் ராமஉபாத்யாயன் தலையைத் தடவினார்.

"வயதாகி விட்டதடா ராமா உனக்கு." என்று கிழவர் சொல்ல, ஆமாம் என்று தலையசைத்தார்.

கிழவர் ராமனின் முகத்தை தூக்கிப் பார்த்தார். ராமன் கிழவரை நன்கு பார்க்க முடிந்தது. அந்தக் கிழவருக்கு நூற்றிப் பன்னிரெண்டு வயது போனமாதத்தோடு முடிந்து நூற்றிப் பதிமூன்றாம் வயது ஆரம்பிக்கிறது. இரண்டு அறுபது வயதுகளை இவர் தாண்டப் போகிறார் என்று சேரதேசமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

கிழவர் மகாமகா உபாத்யாயர். வித்தை கற்றுக் கொடுக்கும் உபாத்யாயர்களுக்கெல்லாம் இவர் உபாத்யாயர். காந்தளூர்ச் சாலை கடிகையின் முதுகெலும்பு. அந்தக் கடிகையைச் சுற்றி அகழியும், கோட்டையும் இவர் காலத்தில் ஏற்பட்டன.

ஒரு குன்றின் உச்சியை சமதளப்படுத்தி அந்தக்குன்று முழுவதையும் போர்ப்பயிற்சி கூடமாக்கியது இவர் சாதனை. சேர மன்னனை விட பாண்டியர்கள்மீது இவருக்கு மிகப்பெரிய பிரியமுண்டு. ஆறு வருடங்கள் முன்பு அவர் பேசியது நினைவில் ஓடிற்று.

"பாண்டியர்கள் அப்பாவிகளடா. முரட்டுக் குழந்தைகள். அவர்களுக்கு வஞ்சனையில்லை. சூழ்ச்சிகள் இல்லை. சற்று வேகம்காட்டுவார்கள். மனதிலும் எதுவும் இல்லாமல், மண்டையிலும் எதுவும் இல்லாமல் ஒரு முரட்டுக் குழந்தைகளாக வளர்ந்திருக்கிறார்கள். பாண்டியர்களை கையாளுவது எளிது. பாண்டிய மன்னர்கள் வாக்கு தவற மாட்டார்கள். சூழ்ச்சியாகப் பேசமாட்டார்கள். பிடிக்கவில்லை என்றால் முகத்துக்கு நேரே கூச்சலிடுவார்கள். பிடித்ததெனில் ஓடிவந்து கட்டிக் கொள்வார்கள். ஒரு பக்கம் பாலைவனம். ஒரு பக்கம் மலைவளம். மறு பக்கம் நெல்வயல் கூட்டம் என்று பாண்டிய தேசம் பல்வேறு பகுதிகளாகப் பிரிந்து கிடக்கிறது. பரந்த கடல்பரப்பு. முத்துக்கள் அமோகமாக விளைகின்ற இடம். நான்கு வகை நிலங்கள் இருப்பதால், நான்கு விதமான மனிதர்கள் இருக்கிறார்கள். நான்குவிதமான மனிதர்கள் இருப்பதால் ஒரு தேசத்தில் சற்று குழப்பங்களும், கூச்சல்களும் அதிகம் இருப்பது இயற்கை. ஆனாலும், இந்தப் பாண்டியர்களை நம்பி எதுவும் செய்யலாம்.

"நம்ப முடியாதவர் யார்?"

பரணைக் கிழவரை கடிகை இளைஞர்கள் கேட்டார்கள்.

"சோழ தேசத்து அந்தணர்களை ஒருக்காலும் நம்ப முடியாது."

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்."

"வடக்கே இருந்து வந்தவர்கள், வடமர்கள் என்று அவர்களை கூறிக் கொண்டாலும் அவர்கள் கலப்பினம். ஆர்யராகவும் இல்லாமல், திராவிடராகவும் இல்லாமல் ஒரு இரண்டும் கெட்டான் நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டு விட்டார்கள். வித்தையிலும் விவேகமில்லை. வெகுளித்தனமும் இல்லை. வஞ்சனை செய்வதே வித்தையாக இருக்கிறது. நான் கெட்டிக் காரன் என்று அலட்டிக் கொள்வதே அவர்களுடைய எண்ண மாகப் போயிற்று. பாண்டியர்களிடம் இருக்கின்ற நேர்மை, உண்மை, சாதாரணத்துவம் அவர்களிடம் இல்லை."

"ஆனால் சோழ தேசம் செழிப்பாக இருக்கிறதே."

"அதற்கு சோழ மறவர்கள் காரணம். அந்த மறவர்கள் சிறப்புக்கும் கலப்பினம்தான் காரணம்."

"என்ன... கலப்பா, மறவர்களிடமா..."

"ஆமாம். சேரதேசத்து மன்னர்கள் போல உள்ளுக்குள்ளேயே திருமணம் செய்து கொள்ளாமல் பாண்டியர்களைப் போல முறை போய்விடக் கூடாது என்று உறவுக்குள்ளேயே திருமணம் செய்யாது, வைதும்பர்களையும், கீழைச்சாளுக்கியர்களையும், மேலைச்சாளுக்கியர்களையும், நடுநாடு, தொண்டை நாடு போன்றவற்றிலிருந்து பெண்கள் எடுத்து

இவர்கள் மூலம் குழந்தைகள் பெற்று பலம் பொருந்திய இளவரசர்களை உருவாக்கியிருக்கிறார்கள். ஆனால், நூறு வருடங்களுக்கு முன்பு தோன்றியதுதானே சோழவம்சம். நூற்றி ஐம்பது வருடங்கள் ஆகிவிட்டன. விஜயாலயச் சோழன் காலத்தில் ஆரம்பித்த மரபு அது. பிறகு ஆதித்த சோழன். அவனுக்குப் பிறகு பராந்தகன். பராந்தகனுக்குப் பிறகு அவனுடைய மூன்று பிள்ளைகள். ராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்செயன். அரிஞ்செயனுக்கு மகன் சுந்தரசோழன். கண்டராதித்தன் மகன் மதுராந்தகன் என்னும் உத்தமசோழன். உத்தம சோழன் சிறு வயதானபடியால் சுந்தரசோழன் ஆட்சிக்கு வந்தான். இப்போது சுந்தரசோழனின் மகன் ஆதித்த கரிகாலனும், அருண்மொழி என்ற இளைஞனும் சோழதேசத்தை மலர வைக்க முழு முயற்சியாய் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த சோழ மன்னர்கள் பேரழகிகளை, அறிவிர் சிறந்தவர்களை, நல்ல அரச பரம்பரையை சேர்ந்தவர்களை திருமணம் செய்து கொண்டார்கள்.

அவ்விதம் திருமணம் செய்து கொண்டதாலேயே படை வீரர்களும், படை தளபதிகளும், வெளிதேசத்திற்கு படையெடுத்து வரும்பொழுது அங்கிருந்து குலப்பெண்களை கையோடு அழைத்து வந்து திருமணம் செய்து அதன்மூலம் குழந்தைகள் பெறுகிறார்கள். அந்தக் குழந்தைகள் சோழதேசத்தில் பிறக்கின்றன. சோழராக வளர்கின்றன. அற்புதமான தளபதிகள் வருகிறார்கள். எதற்கும் அஞ்சாத இளைஞர்கள் வளர்ந்து வந்து சோழ தேசத்தின் வளர்ச்சிக்குப் பாடுபடுகிறார்கள். எந்த வேலை கொடுத்தாலும் செவ்வனே செய்கிறார்கள். சோழ தேசத்தின் வயல் நிலங்களை அளக்க ஆரம்பித்து விட்டார்கள். காவிரியில் ஊருக்காக பல இடங்களில் கால்வாய்கள் வெட்ட ஆரம்பித்து விட்டார்கள். கோயில் திருப்பணிகள் இடையறாது நடைபெறுகின்றன."

"கோயில் திருப்பணி செய்தால் தேசம் வளர்ந்து விடுமா." யாரோ கேட்டதற்கு சரட்டென்று பரணைக் கிழவர் சீறினார்.

"முட்டாளே. ஒரு கோயில் திருப்பணி செய்வது என்பது அந்தப்பகுதி மக்களுக்கு மிகப்பெரிய பெருமை தருவது. அது தவிர காசு புழக்கம் தருவது. அரசாங்கத்தின் மதிப்பைப் பெறுவது. கோயில் வேலை செய்வதில் ஒரு மனசந்துஷ்டி இருக்கிறது. அரசாங்கம் அவர்களுக்கு சோறு போட வேண்டிய அவசியம் இருக்கிறது. இதனால் உழவர்களும், கருமார்களும், மற்ற தொழில் வல்லுனர்களும், அந்த இடத்தில் குவிந்து அந்த இடத்தை மேன்மையாக்குகிறார்கள். அடுத்த தலைமுறை இந்த கலைஞர்களால் உற்சாகப்படுத்தப்படுகிறது. இந்த ஊரில் அதிகம் தச்சர்களும், கருமார்களும், மற்ற கைவினைஞர்களும், உருவாக்கி விடுகிறார்கள். கல்தூக்கி, கல்தூக்கி மறவர்கள் திண்மையடைந்து விடுகிறார்கள். எல்லோரிடமும் காசு, எல்லோரிடமும் திண்பண்டம். எல்லா இடத்திலும் ஆட்டம், பாட்டம், நாடகம். ஆனால், இந்த சேர தேசத்தில் பல ஊர்களுக்கு மன்னர் போனதேயில்லை. அரசாங்க அதிகாரிகள் நகர்ந்ததே இல்லை. அந்த கிராமத்து அதிகாரியே அரசனைப் போல நடந்து கொள்கிறார். அந்த கிராம மக்கள் உலகம் பற்றிய எந்த அறிவும் இல்லாமல் இருக்கிறார்கள். இப்படியொரு நிலைமை பாண்டிய தேசத்திலும் உண்டு. அங்குள்ள மலைவாழ் மக்களிடம் உண்டு. ஆனால், சோழ தேசத்தில் இது அறவே இல்லை. வடக்கே திருவொற்றியூரிலிருந்து, தெற்கே திரிச்சீரபுரம் வரை தொண்டைநாடு, நடு நாடு எல்லாம் சேர்த்த ஒரு சோழதேசம் உருவாகி விட்டது. எல்லா இடத்திலும் சோழர்களின் கலாச்சாரம்தான் ஒளிவீசிக்கொண்டிருக்கிறது. அடுத்த இரண்டு, மூன்று தலைமுறைகள் சோழ தேசத்தை இன்னும் உயர்த்தப் போகின்றன. மகத்தான காரியங்கள் செய்யப்படப் போகின்றன. சேரதேசமும், அதன் மக்களும் நம்மைப் போன்ற அந்த ணர்களும் ஆதரிப்பாரின்றி நாலா திசையிலும் பரவப் போகிறோம்."

பரணைக் கிழவர் இதைச் சொல்லி வெகு நாளாயிற்று. ராம உபாத்யாயருக்கு சகலமும் அவரைப் பார்த்ததும் நினைவுக்கு வந்தது.

"என்னடா ராமா... சொல். என்ன வேண்டும்."

அந்தப் பரணைக்கிழவர் பேசுவது எல்லோருக்கும் எளிதில் புரியாது. விசித்திரமான சப்தமாக வாயிலிருந்து வந்ததே தவிர, மொழியை நன்கு புரிந்தவர்கூட அவர் பேச்சு மொழியை புரிந்து கொள்ள முடியாமல் தவிப்பார்கள். ஆனால், ராமருக்குத் தெரிந்தது.

"மேடையில் ஒரு தீர்மானம் நடந்தது."

"என்ன. பெண்களுக்கு ஆயுதப் பயிற்சியா."

"ஆமாம்."

"என்ன முடிவு"

"செய்ய வேண்டுமென்று"

"நல்லது."

"உங்கள் ஆசிர்வாதம் வேண்டும்."

"சேற்றில் இறங்கினால்தான் ஆறு தாண்ட முடியும் என்ற நிலை வந்துவிட்டது. இதற்கு என்ன ஆசிர்வாதம்."

"ஏன், இதைத் தவறென்று கருதுகிறீர்களா?"

"பெண்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்தாக வேண்டுமென்ற நிலைமை நமக்கு வந்துவிட்டதே. இப்பொழுதே நாம் திக்கற்றவர்கள் என்ற நினைப்பு உனக்குத் தோன்றவில்லையா. இதற்கு முன் எந்த அந்தணப் பெண்களுக்காவது ஆயுதப் பயிற்சி தரவேண்டும் என்ற எண்ணம் உலகத்தின் எந்தப் பகுதியிலாவது நிகழ்ந்திருக்குமா. பரதகண்டத்தில் யாராவது யோசனை செய்திருப்பார்களா. நாம் யோசிக்கிறோம் என்றால் நமக்கு பிரச்சினைகள் இருக்கின்றன என்றுதானே பொருள். இதில் என்ன ஆசிர்வாதம் செய்யச் சொல்கிறாய்."

ராமர் மௌனமாக இருந்தார்.

"சரி, மேற்கொண்டு அடுத்ததைச் சொல்."

மகாமகா உபாத்யாயரான அந்த பரணைக்கிழவர் கைவீசி ராமரிடம் பேச, "ஒரு வேளை கடிகையிலிருந்து, கடிகையின் தலைவர் சமரசம் பேசவந்தால் என்ன செய்வது என்று பானுகோபர் கேட்கிறார்."

"பானுகோபன் முட்டாள். அந்தப் பதவியை தான் பறித்துக் கொள்ளாது. தன்னுடைய கௌரவத்தை முன்னிட்டு விலகி வெளியே வந்து விட்டான். தான் வெளியே வந்தால்தான் தன்னுடைய முக்கியத்துவம் புரியும் என்று ஒரு சுயநலத்தோடு அந்தக் கடிகையை விட்டு வெளியே வந்துவிட்டான். கடிகையின் மீது காதல் உள்ளவன். கடிகையினுடைய கட்டுப்பாட்டை பற்றிக் கவலைப்படுகிறவன் வெளியே வந்திருக்கவே கூடாது."

"சண்டை மூண்டு விடுமோ என்ற அச்சம் பானுகோபருக்கு."

"மூண்டால் என்ன. இரண்டு பேர் வாள் எடுத்து நடு முற்றத்தில் போரிட வேண்டியதுதானே. உயிரோடு இருப்பவர்தான் தலைவர் என்று தீர்மானிக்க வேண்டியதுதானே. கத்தி எடுக்கக் கூடாது என்று யார் தடுத்தது."

பரணைக்கிழவர் கோபமாகப் பேசினார்.

"ரத்தம் சிந்தலைத் தவிர்க்க பானுகோபர் வெளியே வந்தார்" என்று சமாதானமாகச் சொன்னான்.

"முட்டாள்தனம். ரத்தம் சிந்தாத யுத்தம் எவரடா நடத்த முடியும். கடிகையை நான் சரியான வழிக்கு கொண்டு வருவேன் என்ற நம்பிக்கை உள்ளவன் அந்தக் கடிகையின் தலைமைப் பதவியை பிடித்துக் கொண்டிருக்க வேண்டும். அவன் தேவையில்லாமல் பயந்திருக்கிறான். அது மட்டுமல்ல; வேறு சில விஷயங்களும் இருக்கின்றன."

"என்ன?"

"இப்பொழுது இருக்கின்ற மகா உபாத்யாயனுடைய மனைவி பேரழகி, அவள் மீது பானுகோபனுக்கு கடும் வெறுப்பு."

"அப்படியொன்றும் இருப்பதாகத் தெரியவில்லையே. அவளைப்பற்றி வெளியே பேசுவதில்லையே."

"உள்ளே புழுங்குகின்றான். தன் மனைவி இத்தனை அழகில்லையே என்ற வருத்தம் அவனுக்குண்டு. அந்த வருத்தமே மகாஉபாத்யாயன்மீது கோபமாகத் திரும்பிவிட்டது. மகா உபாத்யாயன் முட்டாள். பார்யா அதிரூபவதி சத்ரு என்று தெரியாதவன். மனைவி அதிரூபவதியாக இருந்தாலும் அதை அதிகம் கொண்டாடக்கூடாது. அவள் புத்திசாலித்தனம்தான் முக்கியம் என்று சொல்ல வேண்டும். அவள் நல்ல குணங்கள்தான் பாராட்டப்பட வேண்டும். மாறாக அழகி அழகி என்று சொல்லிக் கொண்டால் பெண்களுக்கு அறிவு கலைந்து போய்விடும். தான் இன்னும் மிகச்சிறந்த போகப் பொருளாக எப்படி இருப்பது என்ற கணக்கு வந்துவிடும். அதுதான் நிகழ்ந்துவிட்டது."

"என்ன நிகழ்ந்துவிட்டது."

"அவள் போகப் பொருளானாள், இவன் போகம் துய்த்தான். மண்டைக்கனம் வந்துவிட்டது. நான் அரசனைக் காட்டிலும் மிக உல்லாசமாக வாழ்கிறோம் என்ற நினைப்பு ஏற்பட்டுவிட்டது. தான் அரசனுக்கு இணையானவன் என்கிற மமதை வந்துவிட்டது. அதனால்தான் பானுகோபன் என்ன சொன்னாலும், அதற்கு எதிராக அவன் பேச ஆரம்பித்தான். அவன் எதிராகப் பேசுகிறான் என்பதை அவன் மனைவி புரிந்து கொண்டு, அதைத் தூண்டிவிட ஆரம்பித்தாள். அவள் தூண்டுதலில் இவன் பேசுவதை புரிந்துகொண்டு பானுகோபன் கோபமடைந்தான். கடிகை இரண்டு பட்டுவிட்டது. இரண்டு தனி நபர்களுடைய ஆசாபாசங்கள் ஒரு மிகப்பெரிய நிர்வாகத்தை பரம்பரை பரம்பரையாக கட்டிக் காத்து வந்து ஒரு கம்பீரத்தை குலைத்துவிட்டன. இது விதி. இவனும், அவனும் போட்டி போட்டுக் கொண்டு பிரத்யங்கரா உபாசனை செய்தார்கள். ஒரு இடத்தில் எவ்வளவு தேவதை உபாசனை செய்ய வேண்டுமோ அவ்வளவுதான் செய்ய வேண்டும். சௌலப்ய

மான தெய்வங்களைத்தான் வணங்க வேண்டும். லலிதாவையோ, காமாட்சியையோ வணங்குவதற்கு இல்லாமல், கருமாரியையும், சூலினியையும், துர்க்கையையும், பிரத்யங்கராவையும் இவர்கள் மந்திரம் சொல்லி ஹோமம் வளர்த்து, எதிரிகளை வீழ்த்த வேண்டுமென்று ஆத்திரப்பட்டு பூஜைகள் செய்தார்கள். பலன் இவர்களுக்குள்ளேயே சண்டை வந்துவிட்டது. தேவதைகள் உக்கிரமானதால் அந்த உக்கிரம் இவர்களையும் தாக்கிவிட்டது. இதையும் தடுக்க இயலாது. இது ஒரு சுழற்சி ராமா. ஒவ்வொரு காலகட்டத்திலும், ஒவ்வொரு தேசத்திலும் தேவதைகள் வழிபாடு அதிகரிக்கும். ஜனங்களிடையே போட்டி நிலவும்போது இம்மாதிரியான தேவதைகளுக்கு முக்கியத்துவம் கிடைக்கும். இம்மாதிரியான தேவதைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது இவ்விதமான போட்டிகள் இன்னும் உச்ச கட்டத்தை அடையும். தேசம் பிளவுபடும்."

"இதெல்லாம் நடந்து முடிந்த கதை. பானுகோபன் கேட்பது மகா உபாத்யாயன் சமாதானம் பேசவந்தால் என்ன செய்வது."

"ப்ரசன்னம் கேளுங்கள்."

"என்ன செய்வது என்றா."

"ஆமாம். சண்டையா சமாதானமா என்று ப்ரசன்னம் கேளுங்கள். இணைவதா வேண்டாமா என்று பாருங்கள். ப்ரசன்னம் கேளுங்கள். ப்ரசன்னத்தில் என்ன வருகிறதோ அது போலவே நடந்து கொள்ளுங்கள்."

"நல்லது." ராமஉபாத்யாயர் கைகூப்பினார். மறுபடியும் விழுந்து வணங்கினார். கம்பு பிடித்து கீழிறங்கினார். கம்பு மேலே தூக்கப்பட்டுவிட்டது. உள்ளுக்குள்ளே கிழவர் நகர்வது தெரிந்தது.

ராமஉபாத்யாயர் திரும்பி கோட்டைக்குள் நுழைந்தார். கோட்டைக்குள் பகல் சாப்பாடு நடந்து கொண்டிருந்தது.

"நெய்யும், பருப்புமாய் சோழதேசத்தில் சாப்பிடுவார்களாமே. காய்கறிக் கூட்டு செய்து நடுவில் ஊற்றிக் கொள்வார்களாமே. நாம் ஏன் அப்படி சாப்பிடக்கூடாது."

ஒரு இளைஞன் கேட்டான். அவன் எதிரே மிகப் பெரிய கலயம் வைக்கப்பட்டிருந்தது. கையில் சிரட்டை இருந்தது. அந்தக் கலயத்தில் சாதத்தை மசியப் பிசைந்து ஊற்றி வைத்திருந்தார்கள். அருகே வாழைக்காய் கறியும், பருப்புகளிட்ட கத்தரிக்காயும், பருப்புத் துவையலும் பரிமாறப்பட்டிருந்தன.

எல்லா இளைஞர்களும் உறிஞ்சி குடித்துக் கொண்டிருந்தார்கள். சற்றுதள்ளி பெண்களுக்கென்று ஒரு பந்தி நடந்து கொண்டிருந்தது. இளம் பெண்கள் மிக ஆவலாக சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

"இல்லை. நாம் அப்படி சாப்பிடக்கூடாது."

"காரணம் தெரிந்து கொள்ளலாமா"

இன்னொரு இளைஞன் கேட்டான்.

"அரிசி என்பது ஒரு தானியம். ஒரு விதை. விதையை உலகத்தில் எந்த உயிரினங்களும் தேடிப்போய் சாப்பிடுவதில்லை. அவைகள் தழைகளை, தண்டுகளை மட்டுமே உண்கின்றன. விதைகளை மட்டுமே உண்பது என்பது அவ்வளவு சரியான விஷயம் அல்ல. அரிசியை சமைத்து சாதமாக்கி அந்த சாதத்தை உருட்டி கூட்டிலே தோய்த்து சாப்பிட்டால், நெய்யும், பருப்பும் இட்டு சாப்பிட்டால் தொப்பை போடும். சாதம் ஜீரணமாவது கடினம். வயிற்றுக்கு ஜீரணம் செய்ய அதிகம் வேலை கொடுக்கக்கூடாது. குடலுக்கு அதிகம் வேலை கொடுக்கிற பொழுது வாயுக்கள் உற்பத்தியாகின்றன. வாயுக்கள் அதிகமானால் தொப்பை பெருத்திருக்கும். நடை தள்ளாடும். முழங்கால் வலியிருக்கும். கழுத்து புஜங்கள் போன்றவைகளில் குடைச்சல் வலி ஏற்படும். ஆகவே, தானியத்தை கஞ்சியாக மாற்றி சாப்பிடுவது நல்லது. எளிதில் ஜீரணமாகும். குடலுக்கு வேலை அதிகமில்லை. கனிகளும், வேகவைத்த காய்களும்

5247 0117

எவ்வளவு வேண்டுமென்றாலும் சாப்பிடலாம். தானியத்தை மாவாக்கி சாப்பிடுவது. தானியத்தை வேகவைத்து சாப்பிடுவது தானியத்தை வறுத்துச் சாப்பிடுவது நல்லதே அல்ல."

குழந்தைகளும், வாலிபர்களும், இளம் பெண்களும் சாப்பிட்டு முடித்ததும், முதிய பெண்களும், கிழவர்களும் உட்கார்ந்தார்கள்.

"சோழ தேசத்தில் வேறுமாதிரி. பெரியவர்கள் சாப்பிட்ட பிறகுதான் இளம் பையன்கள் சாப்பிட வேண்டும்."

ஒரு கிழவர் உரக்கச் சொன்னார். எல்லோரும் அவரை திரும்பிப் பார்த்தார்கள். பிறகு பானுகோபரைப் பார்த்தார்கள்.

பானுகோபர் இதற்கு என்ன சமாதானம் சொல்வார் என்பது போல் எல்லோர் செவிகளும் பானுகோபரின் குரலை நோக்கி இருந்தன.

"இது முறைகேடான விஷயம். பெரியவர்கள் பசி பொறுத்துக் கொள்ள முடியும். குழந்தைகள் பொறுத்துக் கொள்ளுமா... நாம் உட்கார்ந்து சாப்பிட, நாம் சாப்பிடுவதை வாலிபர்களும், குழந்தைகளும் பார்க்க நேரிட்டதெனில், கைகட்டி பார்த்துக் கொண்டிருப்பாரெனில் அவர்கள் பசி உச்சகட்டம் அடையாதா. அவர்கள் இலையில் உட்காரும் போது பசி முற்றிப் போய் விடுமே. அது மகாபாபமல்லவா. அதுவும் தவிர பசித்தவர்கள் பார்க்க பெரியவர்கள் உண்ணுவது என்பது அவர்கள் பெரியவர்கள் இல்லை என்பதைக் காட்டுகிறது. ஆவலாக, அழகாக, அமைதியாக, குழந்தைகள் சாப்பிடுவதை நாம் வேடிக்கை பார்க்கிறபோது பாதிவயிறு நிரம்பி விடுகிறது. அட... நம் மக்கள் நன்றாக சாப்பிடுகிறார்கள் என்கிற சந்தோஷம் நமக்கு நிறைவு கொடுக்கிறது. அந்த நிறைவோடு உண்ணுகிறபோது குறைவாக உண்ணத் தோன்றுகிறது. வயதாளிகள் குறைவாக உண்ணுதல்தான் பலம். இளைஞர்கள் அதிகம் உண்ணுவது தான் பலம். சோழதேசத்தில் சுயநலமிகள் அதிகம். அந்தணர் சாப்பிட்ட பிறகே, அரசர்கள் சாப்பிட வேண்டுமென்று ஆரம்பித்தார்கள். சுந்தரசோழன் மறுத்துவிட்டான். வேளாளர்களுக்

கும், அந்தணருக்கும் ஒரே நேரத்தில் உணவிடச் செய்தான். அந்தணருக்கு மானியம் கொடுப்பது போல, வேளாளர்களுக்கும் நடந்து கொண்டிருக்கிறது."

"பாண்டிய தேசத்தில் எப்படி சோறிடுகிறார்கள்."

சாப்பிட்டுக் கொண்டிருந்த இளைஞன் உரக்கக் கேட்டான்.

"பாண்டிய தேசத்தில் ஜாதிப்பிரிவுகள் இருந்தாலும் அவர்களுக்கு ஒருவர் மீது ஒருவர் பிடிப்பு அதிகம். ஒருவர் பார்க்க ஒருவர் உண்ணுவது என்பது பாண்டியதேசத்தில் இல்லை. பாண்டிய தேசத்தின் கோளாறே அவர்கள் உஷ்ணமானவர்கள். சிறிய விஷயத்தையும் பெரிதாக சண்டை போடுகிறவர்கள் என்பதைத் தவிர அவர்கள் மனிதாபிமானத்தின் மீது எந்தவித சந்தேகமும் எவருக்கும் வரவேண்டாம்."

"மறுபடி கேட்கிறேன். சோழதேசம் செழிப்பான பூமி அல்லவா."

"பாண்டிய தேசத்திலும் செழிப்புக்குக் குறைவில்லை. எல்லா இடங்களிலும் செழிப்பாக எந்தத் தேசமும் இருக்காது. சோழ தேசத்திலும் கொள்ளிடம் தாண்டி எண்ணாயிரம், பிரம்ம தேசம் போன்றவைகள் ஒரேயொரு போகம் மட்டுமே விளைவிக்கக் கூடியவை."

"சோழ தேசத்தின் வளமான பகுதி எது. காவிரிக் கரைதானே."

இன்னொரு இளைஞன் கேட்டான்.

"இல்லை தம்பி. காவிரிக்கரை அல்ல. காவிரிக்கரைகூட இரண்டு போகம்தான். நடுவே பயிறு வகைகள் ஏதாவது போடுகிறார்கள். சில சமயம் வெள்ளம் பெருக்கெடுத்தால் வண்டல் மண் அடித்து காவிரிக்கரை ஓரம் பல நிலங்கள் சாகுபடிக்கு ஏற்ற நிலமாக இல்லாமல் போய்விடுகிறது. அற்புதமாக மூன்று போகம் பயிரிடக்கூடிய விஷயம். வீரநாராயணபுரம் ஏரிக்கு அருகே உள்ள உடையார் குடி."

"எங்கிருக்கிறது அந்த இடம்."

"சிதம்பரத்திலிருந்து சிறிது தொலைவு. கொள்ளிடத்தில் பிரிந்த கால்வாய் ஒன்று வீரநாராயணபுரம் ஏரிக்கு வருகிறது. அதுவும் தவிர மழையால் நாராயணபுரம் ஏரி நன்றாக நிரம்புகிறது. வீரநாராயணபுரம் ஏரியைச்சுற்றி அத்தனை இடங்களும் வாழையும், நெல்லும், கரும்பும் பயிர் செய்யப்படுகின்றன. காய்கறிகள், கீரை வகைகள் அமோகமாகப் பயிராகின்றன. உழவும், உழவு சார்ந்த தொழிலும் அங்கு மிகச்சிறப்பாக இருக்கின்றன."

"சிவஸ்தலமா."

"விஷ்ணுவும் இருக்கிறார்."

"அங்கெல்லாம் நாம் ஒரு முறை சுற்றுப்பயணம் போய் வந்தால் என்ன. ஸ்தலங்களை தரிசிப்பதற்கு என்று போனால் சோழதேசத்தில் விடமாட்டார்களா."

"எந்த தேசத்திலும் எவரும் நம்மை தடுக்க மாட்டார்கள். சோழதேசம் மட்டுமல்ல. கங்கைக்கரை வரை, ஏன் கைலாயம் வரை கூட நம்மால் எந்தத் தடங்கலுமின்றி போக முடியும்."

"ஆஹா... அப்படி கைலாயம் வரைபோக வேண்டுமென்ற ஆவல் எங்கள் எல்லோருக்கும் இருக்கிறது."

ஒருவன் எச்சில் கையுடன் எழுந்து சொல்ல, இரண்டு மூன்று பேர் அதை ஆதரித்து எழுந்தார்கள்.

"அமருங்கள். உணவு உண்ணும்போது இது என்ன பழக்கம். விட்டால் நீங்கள் கடல் கடந்து போய் விடுவீர்கள் போலிருக்கிறதே."

பானுகோபன் பொய்யான கோபத்தோடு சொல்ல மற்ற கிழவர்களும் கிழவிகளும் சிரித்தார்கள்.

"ஏன், கடல் கடந்து போகக்கூடாது. அப்படியொரு விதி மனுதர்மசாஸ்திரத்தில் இருக்கிறதா. அந்தணர்கள் கடல்கடந்து போனால் ஜாதியிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று ஒரு உத்தரவு இருக்கிறதா."

"ஆமாம். அந்தணர்கள் கடல்தாண்டிப் போகக்கூடாது. பாரத தேசத்தின் நாகரீகத்தைத் தவிர மற்றொரு நாகரீகம் இங்கு வரக்கூடாது."

"அப்படியா சொல்கிறீர்கள். மற்றொரு நாகரீகம் நமக்குள் வரும்போல் தெரிகிறதே."

"எப்படி சொல்கிறாய்."

"சேர தேசத்துக் கரைகளில் யவனர்கள் நடமாடுகிறார்களே. பெரிய நாவாய்களில் வந்து இறங்குகிறார்களே. யவனர் போலவே தலையில் வெள்ளைத் துணி போட்டு கறுப்புக் கயிறால் கட்டி சேர இளைஞர்கள் உடையணிந்து கொள்கிறார்கள். அவர்கள் மொழியை நம்மூர் பரதவர்கள் பேசுகிறார்கள். ஆச்சரியமாக இருந்தது எனக்கு. கடற்கரையில் மணல் பயிற்சி செய்யப் போகும்போது அப்படி வேடமிட்ட பரதவர்களைப் பார்த்தேன். இதுவரை யவனர்களை பார்த்ததில்லை. யவனர்கள் வருவார்களாம். குளிர்காலம் முடிந்ததும் வருவார்களாம்."

"பழ மரங்களை நாடி வௌவால்கள் வருவது இயற்கை. வறண்ட பாலைவனப் பிரதேசத்திலிருந்து அந்த யவனர்கள் பசுமையான பரசுராமர் க்ஷேத்திரம் நோக்கி வருவது இயல்புதான். வியாபாரிகளை வரவேற்பதும் நல்லதுதான். ஆனால், வியாபாரிகள் எத்தனை நாள் வியாபாரிகளாக இருப்பார்கள் என்பதுதான் புரியவில்லை."

"அப்படியென்ன செய்வார்கள்." ஒரு கிழவர் கேட்டார்.

"நாடு பிடிக்க வருவார்கள். பெரும்படையுடன் வந்து இறங்குவார்கள்."

"எப்போது"

"இன்னும் சில நூறு ஆண்டுகளுக்குப் பிறகு. இப்பொழுதுதானே வரத் துவங்கியிருக்கிறார்கள். மெல்ல மெல்ல பரம்பரை பரம்பரையாய், தலைமுறை தலைமுறையாய் அரபிக்கடலில் பயணம் செய்து காற்று வாட்டமாக வீசுகிறபோது மேலைச்

சாளுக்கியத்திலும், கேரளத்திலும் ஏன் கன்னியாகுமரியிலும், சுற்றிப் போய் நாகப்பட்டினத்திலும் இறங்குவார்கள். குதிரைகளுக்கு சோழதேசத்தில் நல்ல விலை என்று அவர்களுக்குத் தெரியும். எனவே, சில நாவாய்கள் நிற்காமல் சுற்றி நாகப் பட்டினம் போகின்றன."

"ஒரு கேள்விக்கு பதிலே சொல்லவில்லை. ஏன் அந்தணர்கள் பரதகண்டம் தாண்டிப் போகக்கூடாது."

"போகலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது."

"எப்படி"

"குலமே அழியுமெனில் குலத்திற்கான சடங்குகளை விட்டு விடலாம் என்று ஒரு நியதி இருக்கிறது. உயிர் வாழ்வதற்காக கடல்தாண்டிப் போகலாம் என்ற உத்தரவு இருக்கிறது."

"அப்படியானால் நம்மை இந்த பரதகண்டம் ஆதரிக்கிற வரையில் நாம் இந்த பரதகண்டம் தாண்டிப் போக வேண்டியதில்லை அப்படித்தானே."

"ஆமாம்."

"பரதகண்டம் அந்தணர்களை ஆதரிக்காமல் போகுமா."

"போகலாம்."

"எப்போது."

"இன்னும் சில ஆயிரம் வருடங்கள் கழித்து."

"எதற்காக அப்படிச் சொல்கிறீர்கள்."

"இப்போது அந்தணர்கள் கிட்டத்தட்ட ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறோம். அரசர்களை முதன்மையாய் வைத்து நாம் நம்முடைய விஷயங்களை சொல்லிக் கொண்டிருக்கிறோம். நமது திறமையைக் காட்டி அரசர்களை அசரடித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலைமை மாறும். பிறகு மறவர்களுக்கென்று ஒரு யோக்கியதை வரும். மறவர்கள் மிகச்சிறப்பாக கவனிக்கப் படுவார்கள். அந்தணர்கள் புறக்கணிக்கப்படுவார்கள். மறவர்கள் சில நூற்றாண்டுகள் ஆனபிறகு வணிகர்கள் கிளம்புவார்

கள். வணிகர்களுக்கு மரியாதை கிடைக்கும். வணிகர்கள் சிறப்பாக ஆண்டபிறகு, சூத்திரம் அறிந்தவர்கள், நான்காவது வர்ணத்தினர், வேலை தெரிந்தவர்கள் மிக உன்னதமான பதவிக்கு வருவார்கள். அவர்களுடைய ஆட்சி தொடரும். அடுத்து பஞ்சமர்கள் வெகு நிச்சயமாக ஆட்சி செய்வார்கள்."

"அடாடா... அப்படியொரு நிலைமை உண்டா."

வியப்போடு ஒருவர் கேட்க...

"ஏன். ஏன் வரக்கூடாது என்று நினைக்கிறாய். உலகத்தில் கடவுள் தன்மை எல்லோர் மீதும் சரிசமமாக பரவியிருக்கிறது. எல்லோரிடமும் திறமை இருக்கிறது. எல்லோரிடமும் முன்னேற வேண்டும் என்ற வழி இருக்கிறது. வெகுநாள் பஞ்சமர்களை நீங்கள் அடிமைப்படுத்த முடியாது. சேரதேசத்தில் ஜாதிக்கலப்பு இல்லை. ஏனெனில் பரஸ்பரம் மிக மரியாதையோடு இருக்கிறோம். நான்காவது வர்ணத்தினர் இல்லாமலும், ஐந்தாவது வர்ணத்தினர் இல்லாமலும் நம்மால் வாழ முடியாது என்று தெரிந்து அவர்களை குசலம் விசாரித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களிடம் கேள்வி கேட்டு அவருக்கு என்ன உதவி வேண்டுமோ அதை செய்து கொண்டிருக்கிறோம். அவர்கள் மரியாதையாக இருக்கிறார்கள். நாம் பிரியமாக இருக்கிறோம். இந்த நிலைமை மற்ற இடங்களில் இல்லை. குறிப்பாய், பாண்டிய தேசத்தில் ஜாதி வேறுபாடுகள் மிக அதிகம். கொஞ்சம் இழிவும் படுத்துகிறார்கள். மறவர்களுடைய திமிர் பஞ்சமர்கள் மீதும், நான்காவது வர்ணத்தினர் மீதும் வெகுவேகமாகப் பாய்கிறது."

இளைஞர்களும், யுவதிகளும் எழுந்த பிறகு பெரியவர்களுக்கு இலை போடப்பட்டது. கிழவர்களும், கிழவிகளும் சாப்பிட உட்கார்ந்தார்கள். சாப்பிட்டு முடித்த இளைஞர்களும், யுவதிகளும் பரிமாறத் துவங்கினார்கள். கேள்வி கேட்டு பதில் பெற வேண்டும் என்ற ஆவல் உள்ளவர்கள் சாப்பிடுகிறவர்களுக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டார்கள்.

"மௌனமாக சாப்பிடுவதுதானே நம் வழக்கம். இப்போது கேள்விகளுக்கு பதில் சொல்லியாக வேண்டுமா."

தருமதாஸர் சொன்னார்.

"சரி. என்ன செய்வது. கேள்விகள் ஆவலாக கேட்கப்படும் போது பதில் பிற்பாடு சொல்கிறேன் என்று சொன்னால் அவர்களுக்கு சுவாரசியம் குறையும். கேளுங்கள் சொல்கிறேன்."

"எனக்கு வெகுநாட்களாக ஒரு கேள்வி இருக்கிறது."

ஒரு இளைஞன் எழுந்து நின்று கைகட்டி கேள்வி கேட்டான்.

"கேளேன். இத்தனை நாள் கேட்காமல் இருந்ததே தவறல்லவா. எந்தக் கேள்வி மனதில் இருந்தாலும் உடனே கேட்டு விடுங்கள். சில சமயம், சில பதில்களை தாமதமாகச் சொல்ல நேரிடும். அதற்காக வருத்தமடையாதீர்கள். உன் கேள்வி என்ன."

"அந்தணர்களான நாம் எதற்காக ஆயுதப்பயிற்சி பெறுகிறோம். இது நமக்குத் தேவையில்லாத விஷயம். மனுதர்மத்தில் நாம் ஆயுதம் தாங்க வேண்டுமென்று சட்டமில்லையே. தர்மத்தின் காவலனாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறதே தவிர, தர்மத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறதே தவிர, ஆயுதம் எடுப்பது நம்முடைய வழக்கமில்லையே. சோழதேசத்திலும், பாண்டிய தேசத்திலும் அந்தணர்கள் ஆயுதம் எடுக்கவில்லையே. நாம் மட்டும் ஏன் வாள் உருவி போரிட்டுக் கொண்டிருக்கிறோம்."

"கடைசி வார்த்தை தவறு."

தருமதாஸர் உரக்கச் சொன்னார். பானுகோபர் ஆமென்று தலையசைத்தார்.

"வாள் எடுத்து போர் செய்யவில்லை. எந்த யுத்தத்திற்கும் இந்த அந்தணப்படை போகவில்லை. ஆனால், யுத்தத்திற்குப் போகும் மறவர்களை இந்த அந்தணக் குழு தயார் செய்கிறது. அறுபத்து நான்கு கலைகள் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த அறுபத்து நான்கு கலைகளும் வேதத்தால் போற்றப்பட்டவை. வேதம் சொல்கிற, வேதம் போற்றிய எந்த விஷயத்தையும் கைக்கொள்வது நமக்கு வழக்கம். சேர தேசத்தின் நலன் பொருட்டும், சேர தேசத்தின் பண்பாடு காக்கும் பொருட்டும், சனாதன தர்மத்தை வலுவாக்கும் பொருட்டும், நாம் ஆயுதம் எடுத்து தற்காப்புக் கலையையும், படை நடத்துதலையும் கற்று, தெளிந்து மற்றவருக்கு சொல்லிக் கொண்டிருக்கிறோம். மற்றவருக்கு சொல்லிக் கொடுப்பதற்காகவே நாம் இந்த களறிப் பயிற்சியில் கத்தி வீச்சையும், அம்பு எறிதலையும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். சேர தேசத்து வில்லாளிகள் போல இந்தப் பரத கண்டத்தில் எவரும் இல்லை. வெகு தொலைவு குறி பிறழாது வில்லால் அம்பு தொடுக்கும் வித்தை நமக்குத் தெரியும். இப்படித் தெரிவதற்குக் காரணம் நம்முடைய முன்னோர்களான அந்தணர்கள் வில் வளைத்தலையும், அம்பு செய்தலையும் மிகத் துல்லியமாக ஆராய்ந்து கண்டுபிடித்து வகைதொகை தெரிந்து அதை சேர தேசத்து மறவர்களுக்கு சொல்லிக் கொடுத்ததுதான். சேரதேசத்து அரசகுலம் இன்றளவும் நம்மிடையே நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள். வெறும் வில்லாளிகளை மட்டும் தயார் செய்யாமல், நல்ல அரசர்களை, மிகச்சிறந்த தளபதிகளை, படைவீரர்களையும் நாம் தயார் செய்ய வேண்டும் என்று தீர்மானித்து நமது முன்னோர்கள் இங்கு படைக்களப் பயிற்சி அளித்தார்கள். இங்கு படைக்களப்பயிற்சி பெற்றவன் எங்கு போயினும் படை தளபதியாக இருக்க தகுதி உள்ளவனாகிறான்."

சேர தேசத்தில் இருப்பவர்களுக்கு மட்டுமே சொல்லித் தருவதில்லை. எந்த ஊர் மறவருக்கும், அரசகுல ஆட்களுக்கும் இம்மாதிரி யுத்தப் பயிற்சி சொல்லிக் கொடுப்பது நமக்கு வழக்கமாக இருக்கிறது. மற்ற தேசத்து அந்தணர்களைவிட நாம் இதிலே மாறுபட்டிருக்கிறோம். வெறும் வேதம் சொல்லுதல், ஆகம விதிகளை பின்பற்றுதல், கோ பூஜையோ, விஷ்ணு பூஜையோ செய்தல், தர்மம் உரைத்தல் என்று சோம்பலாக

இல்லாது, இன்னும் கட்டுக் கோப்பான ஒரு சமூகத்தை வலிவு மிக்க ஒரு சமூகத்தை நாம் வழி நடத்திக் கொண்டிருக்கிறோம். எனக்கு யுத்தம்பற்றி எந்த அக்கறையும் இல்லை. தெரியவும் தெரியாது என்று நாம் சொல்லலாகாது. உலகத்தில் சூரியனுக்குக் கீழே இருக்கின்ற அத்தனை விஷயங்களையும் ஒரு அந்தணன் அறிந்திருக்க வேண்டும்.

நெல் பயிரிடுவது எப்படி, தறியில் புடவை நெய்வது எப்படி, மரம் இழைப்பது எப்படி, பானை வனைவது எப்படி, உலோகத்தில் ஈட்டியும், வாளும், கேடயமும் செய்வது எப்படி, கவசங்கள் செய்வது எப்படி, கோட்டையை நிர்மாணிப்பது எப்படி, அகழியை அமைப்பது எப்படி, அரசாட்சியை நடத்துவது எப்படி, வரி வசூலிப்பது எப்படி, திருமணம் செய்வது எப்படி, வாழ்க்கை நடத்துவது எப்படி என்றெல்லாம் நாம் தீர்மானிக்கிறோம். ஒரு அரசன் தவறாக திருமணம் செய்யக்கூடாது என்றும் நாம் கண்டிப்பாக இருக்கிறோம்.

குல கலப்புகளை நாம் ஆதரிப்பதில்லை. ஏற்பதில்லை. அரசர்கள் செய்தாலும் அதைக் கண்டிக்காமல் விடுவதில்லை. அதே நேரம் எந்தக் குலத்தினரையும் எந்தக் காரணம் பொருட்டும் நாம் இழிவுபடுத்துவதில்லை. ஒவ்வொரு உயிரும் முக்கியம். வேடுவர்கள் இல்லையெனில் காட்டின் பெருஞ்செல்வம் நம்மிடம் வந்து சேராது. அதேநேரம் அந்த வேடுவர்களுடைய வாழ்க்கை முறை வேறு. இரவு பகலாக காட்டிற்குள் தனித்து நடந்து போகிறவன் மனநிலை வேறு. வயல்வெளிக்கு ஓரத்தில், தோப்புகளுக்கே நடுவே வாழுகின்ற நம்முடைய மனோநிலை வேறு. காட்டிற்கு நடுவே பசித்ததென்றால் ஒரு முயலடித்தோ அல்லது காட்டுக்கோழியை அடித்தோ சுட்டுத் தின்பது வேடுவருக்கு இயல்பு. அந்த உணவு அவனுக்கு செரிமானமாகும். நல்லதும்கூட. நமக்கு அந்த உணவு செரிமானமாகாது. நல்லதில்லை. விஷமாக மாறும். எனவே நாம் மாமிசம் உண்ணலாகாது."

"ஆனால், நாமும் மாமிசம் உண்ணலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதே. அது எப்போது."

"மிகப்பெரிய ஹோம யாக குண்டத்தில் ஆடுகள் பலி கொடுக்கப்பட, தகதகத்த அந்த தீயில் ஆட்டு மாமிசம் முழுவதுமாக வெந்து வெறுமே கொழுப்பு மட்டும் சுவர்களில் உருண்டையாக தேங்கி நிற்கிறபோது, அந்த நன்கு வெந்த சுடப்பட்ட கொழுப்புகளை சிறிதளவு நாம் உட்கொள்ளலாம். அந்தக் கொழுப்பு உண்பதற்காக சிறிதளவு மதுவும் சாப்பிடலாம். ஆனால், எல்லை மீறவே கூடாது. எனக்குத் தெரியாது என்று ஒரு காரியமும் செய்யக்கூடாது. தெரியாமல் செய்து விட்டேன் என்று எந்த அந்தணரும் சொல்வதில் அழகில்லை. அது அவமானம். எல்லாமும் தெரிந்து கொள்வதும், தெரிந்ததை தெளிவாகச் சொல்வதும் மற்றவருக்குக் கற்றுக் கொடுப்பதுமே வாழ்க்கை."

அந்தணரின் வாழ்வு விதிகள் ஆறு. கற்றல், கற்பித்தல், ஏற்றல், ஏற்பித்தல், வேட்டல், வேட்பித்தல். விஷயங்களை கற்பதும், மற்றவருக்கு கற்பிப்பதும், யாசகம் ஏற்றலும், மற்றவருக்கு யாசகம் வழங்குதலும், வேள்விகளை செய்தலும், வேள்விகளை செய்யுமாறு தூண்டுதலும்தான் அந்தணரின் வேலை. நம்முடைய கடிகை ஒரு வேள்வி. அது காடறுத்து செல்வது போலவோ, மாளிகை எழுப்புவது போலவோ, படையலுக்கு சூறையாடுவது போலவோ அல்ல. அழிவுக்காக பயன்படுத்தாதே. ஆக்கத்திற்காக பயன்படுத்து என்று மறவர்களுக்கு சொல்லித்தருவது நம் வேலை. இதற்காக தானம் வாங்குதலும், நாம் வாங்கிய தானத்தை நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்குக் கொடுப்பதும் நம் வேலை. இடையறாது எதையாவது கற்றுக் கொண்டிருப்பது, புதிது புதிதாக கண்டுபிடிப்பது, கண்டுபிடிப்பதை மற்றவருக்கு கொண்டு போய் கொடுப்பது, இதுவும் நம் வேலை. நாம் கண்டுபிடித்த பொறிவிற்கள் கீழைச்சாளுக்கியத்திலும், மேலைச் சாளுக்கியத்திலும் கோட்டைகளிலும் நிறுவப்பட்டிருக்கின்றன.

கிருஷ்ணன் என்ற ராஷ்டிரகூட மன்னன், இந்த பொறிவிற்களை வைத்துக் கொண்டே தஞ்சையின் பல பகுதிகளை கைப்பற்றினான். சிறிது காலம் ஆண்டான். அவனுக்கு தளபதிகள் சரியாக அமையாததால் அவன் மறுபடியும் பின்னோக்கிப் போக வேண்டியதாயிற்று. சுந்தரசோழரின் வீரமும் அதற்குக் காரணமாயிற்று.

பெரியவர்கள் வாயகன்ற மண்பாத்திரத்தில் ஊற்றப்பட்ட வெள்ளமாய்ப் பெருகிய சோற்றுக் கஞ்சியை தேன்விட்டும், பிறகு பச்சை மிளகாய் நீர் விட்டும், கிச்சிலி துவையலிட்டும் வேகமாக உண்டார்கள். ஏப்பமிட்டார்கள். எழுந்து செடிகள் ஓரம்போய் கையலம்பினார்கள். கால் கழுவினார்கள். மெல்ல வீடுகளிலுள்ள திண்ணைகளை நோக்கி நகர்ந்தார்கள். சுவரில் முதுகு சாய்த்து, மாணவர்கள் வெற்றிலைகளைக் கிள்ளித்தர, பாக்குபோட்டு அதக்கி, பிறகு வெற்றிலையை சுருட்டி போட்டுக் கொண்டார்கள். மென்று தின்றார்கள்.

"குறைந்த பட்சம் கைலாயம் வரையாவது போய் வர வேண்டுமென்ற பெரும் அவா எனக்குள் இருக்கிறது. இந்த ஆசை தவறா."

"இல்லை. உலகம் முழுவதும் சுற்ற வேண்டும் என்ற ஆசை ஒரு போதும் தவறில்லை. எந்த இடத்திற்குப் போனாலும் பிழைத்துக் கொள்ள முடியும் என்ற திமிர் இருப்பதால் நமக்குப் போக வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. வெளியூருக்குப் போனால் எப்படிப் பிழைப்பது என்று சந்தேகம் இருப்பவன், வெட்கப்படுபவன், லஜ்ஜை உள்ளவன் மண்ணை விட்டு என்றும் பிரியமாட்டான். சொந்த ஊரிலேயே சுற்றித் திரிவான். நாம் வெளியூருக்குப் போக வேண்டும் என்ற ஆசை வந்ததற்குக் காரணம் நம்முடைய படிப்பு, நம்முடைய திறமை. ஆனால், போய் என்ன, என்ன பலன் என்று யோசித்தால் எதுவும் இல்லை. இங்கேயே இருப்பதால் வெளியே போக வேண்டுமென்று தோன்றும். வெளியே போனால் ஆஹா... சேர தேசமும், காந்தளூர்ச்சாலையும், கோட்டைபுறமும் சொர்க்கமாக

இருந்தனவே என்று தோன்றும். மனிதருடைய இயல்பு அது. மறுபடியும் சொல்கிறேன், ஒரு குலத்திற்கு ஹானி உண்டாகும் வகையில் ஏதும் நேரிட்டால், அப்போது ஊர் விட்டோ, கடல் கடந்தோ போகலாம். போய் குடியேறலாம்."

"அப்படி யாராவது போய் குடியேறி இருக்கிறார்களா."

"கடல்கடந்து போனதில்லை. வெளி தேசம் போய் சில வருடங்கள் வாழ்ந்துவிட்டு திரும்பியிருக்கிறார்கள். சிலர் போயிருக்கிறார்கள்."

"இப்போது அப்படி போயிருப்பவர் யார். எங்கு போயிருக்கிறார்கள்."

"ஐந்து வருடங்களுக்கு முன்பு வடக்கே திரு வெஞ்சிக்களம், குடமலை, தடிகைப்பாடி, கங்கநாடு, விளம்பம்பாடி, ராஷ்டிர கூடம், இடைத்துறை நாடு, கீழைச்சாளுக்கியம், பொந்திப்பி, பெருந்தனப்பாடி, மயிலை, திருவல்லிக்கேணி கிராமம், திரு வொற்றியூர், உத்திரமேரூர், திருவண்ணாமலை, திருமுனைப் பாடி, திருக்கோயிலூர், திருவக்கரை, தில்லை, கங்கை கொண்ட சோழபுரம், பழுவூர், திருக்குடந்தை, பழையாறை, தஞ்சாவூர், திருவாரூர், திருநாகை, திருவரங்கம், கருவூர், உறையூர், கொடும்பாளூர் பிறகு மதுரை. மதுரையிலிருந்து நம் முடைய வேணாட்டிற்கு வந்து பயணப்பட்டு போயிருக்கிறார் கள்."

"யாரது."

"நம்முடைய உபாத்யாயர் ரவிதாஸன். அவருடைய சகோத ரர் பரமேஸ்வரன். அவரும் உபாத்யாயர்தான். நம்மில் பலருக்கு அவரை ஞாபகம் இருக்குமே."

ஞாபகம் இருப்பவர்கள் உயர கை தூக்கினார்கள்.

"ரவிதாஸனைப் போல ஈட்டி எறிவதில் சாமர்த்தியம் உள்ளவரை நான் இதுவரை பார்த்ததே இல்லை."

ஒருவன் புகழ்ந்து சொன்னான்.

சகலரும் அங்கே ரவிதாஸனையும், அவரது சகோதரரான பரமேஸ்வரனையும் மனசுக்குள் வரித்து நமஸ்கரித்துக் கொண்டிருந்தார்கள்.

எப்பேர்பட்ட பயணம். எவ்வளவு பெரிய தியாகம். போய் வந்து இந்த நாடுகள் பற்றியெல்லாம் விளக்கமாக வெகு நிச்சயமாகச் சொல்வார். ஆனால் எப்போது வருவார்...

எவருக்கும் தெரியவில்லை.

எங்கிருக்கிறார்.

அதுவும் தெரியவில்லை.

தானாகப் பேச்சு அடங்கியது. மெல்ல கிழவர்களும், கிழவி களும் உறங்கப் போக, மாணவர்கள் பாடங்கள் படிப்பதிலும், உட்கார்ந்து பேசுவதிலும் சத்தம் போடாமல் தச்சுவேலை, கல்வேலைகளிலும் ஈடுபட்டார்கள்.

பானுகோபர் எழுந்து முகம் கழுவிக் கொண்டு, சூடான பால் சாப்பிடுகின்ற நேரத்தில் தொலைவே எக்காளம் கேட்டது.

மகா உபாத்யாயரான கடிகையின் தலைவர் காந்தளூர்ச் சாலை கல்லூரியின் முதல்வர் கிருதபலி வருகிறார் என்பதற் குண்டான அடையாளம் அது.

காந்தளூர்ச்சாலை கடிகைக் கொடி உள்ளே வந்தது. வெள்ளைக் கொடிக்கு நடுவே சிகப்புச் சூரியன். நான்கு புறமும் நீண்ட கோடுகள் இழுத்து கதிர் போன்று வரையப்பட்டிருந்தது. அந்தக் கதிருக்கு நடுவே மறுபடியும் வெள்ளையில் ஓம் என்று எழுதப்பட்டிருந்தது. வெள்ளைக் கொடிக்குப்பிறகு, எருது களின் முதுகில் கட்டப்பட்ட சிறு முரசு ஒலித்துக் கொண்டு வந்தது. கடிகையை வரவேற்பவர்கள் அந்தக் கொடிக்கு வணக் கம் சொல்ல வேண்டும். எருதுக்கு புல்லும், நீரும் கொடுக்க வேண்டும். கோட்டையிலுள்ள அத்தனை ஆண்களும் வரிசை யானார்கள். மூன்று மூன்று பேராக நின்றார்கள்.

பளிச்சென்று ஒரு காலை மண்டியிட்டு மற்றொன்றை தரையில் ஊன்றி கொடியை வணங்கினார்கள். நிலம் தொட்டு

நெற்றியில் இட்டுக் கொண்டார்கள். கொடி ஊன்றிய இடத்தி லுள்ள மண்ணை இட்டுக் கொள்வது ஒரு பிரசாதம். எருதின் நெற்றியைப்போய் தொட்டு தலையில் வைத்துக் கொண்டார் கள். ஒரு கட்டுப் புல்லும், ஒரு மரத்தொட்டி நிறைய நீரும் எருதுக்கு வைக்கப்பட்டன.

கடிகையின் பல்வேறு பிரிவினரைக் குறிக்கும் சின்னங்கள் வந்தன. இரண்டு குறுக்குக் கத்திகள் கத்திச்சண்டை வகுப்பை யும், ஒரு தாமிரப்பலகை புடைத்து எழுப்பப்பட்ட ஆறு ஈட்டி களின் சின்னங்கள் ஈட்டி வகுப்பையும், அம்பாரத்துணிபோல் வளைக்கப்பட்ட பட்டயத்தில் எழுதப்பட்ட வில்... வில் வகுப்பையும் குறிக்கும்படியாய் வந்து நின்றன.

மாணவர்கள் பட்டயங்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்கள்.

காந்தளூர்ச்சாலை கடிகையை சேர்ந்த மாணவர்கள் கொம்பு சுற்றியும், சுருள்கத்தி வீசியும், செண்டை முழக்கியும், எக்காளம் முழக்கியும் வந்தார்கள். சடேர் சடேர் என்று சவுக்குக் கயிறு சொடுக்கப்பட்டது.

லாடமில்லாத ஒரு வெள்ளைக்குதிரை முதுகின் மீது கொடி போர்த்தப்பட்டு துள்ளித்துள்ளி வந்தது. அதற்கும் மாணவர்கள் கீரை கொடுத்தார்கள். முதுகைத் தடவி மரநிழலில் வைத்தார் கள். வாள் வீசுதலையும், உயரே அம்பு எய்தலையும் வேடிக்கை பார்த்தார்கள். அப்படி எய்து வந்தவர்கள் ஓரமாக நிற்க சற்று இடைவெளி விட்டு கட்டியக்காரர்கள் உள்ளே நுழைந்தார்கள். மிகச்சிறப்பாக காந்தளூர்ச்சாலையின் பெருமை பற்றிப் பேசி னார்கள்.

மகத நாட்டிலிருந்து, ஈழ தேசம் வரை... கிழக்கே வங்கக் கடற்கரையிலிருந்து, மேற்கே அரபிக்கடல்வரை உள்ள அத்தனை மன்னர்களும் வணங்குகின்ற மிகப்பெரிய கடிகை. பல மகா மகா உபாத்யாயர்களை தன்னகத்தே கொண்ட கடிகை. தர்மத்தை வளர்க்கின்ற கடிகை. நியாயத்தை சொல்லுகின்ற கடிகை. எல்லோருக்கும் பொதுவான கடிகை. எந்த தேசத்திற்

கும் சொந்தமில்லாத, எந்த அரசனுக்கும் அடிமைப்படாத கடிகை. அதன் தலைவர் வந்திருக்கிறார் என்று சொல்ல ஆறு குதிரை வீரர்கள் உள்ளே நுழைய, பின்னால் ஒரு கறுப்பு குதிரையின் மீது வெள்ளை வெளேரென்ற தாடியோடும், வெள்ளை உடையோடும், தலையில் வெள்ளை நிறத் தலைப் பாகையோடும், கழுத்தில் உத்திராட்சம் கோர்த்த பெரிய நீலக் கல் பதக்கத்தோடும், தங்கக் கங்கணங்களோடும், தோள் பட்டையில் தங்கக் கேயூரங்களோடும் அலங்கரித்துக் கொண்டு, ஒரு அந்தணர் நிதானமாக குதிரையை செலுத்தி வந்தார். உதடு இறுக்கி மெல்லிய கண்களில் கூர்மையாக சுற்றி யுள்ளவரைப் பார்த்து உள்ளுக்குள் நுழைந்தார். தரையிறங் கினார். மெல்ல குனிந்து கோட்டையின் மண்தொட்டு நெற்றி யில் இட்டுக் கொண்டார்.

கோட்டைக்கு அவர் செய்கிற மரியாதை இது. அவர் அந்த மரியாதை செய்ததும், கோட்டையிலுள்ள அத்தனை வீரர்களும் மறுபடியும் ஒற்றைக்காலை மண்டியிட்டு, நிலத்தைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொண்டார்கள். அந்த மகா உபாத்யாயர் நிற்கின்ற நிலத்தை, நாங்கள் தொட்டு நெற்றியில் வைத்துக் கொள்கிறோம் என்கிற மரியாதை அது.

மகா உபாத்யாயர் புன்னகை செய்தார்.

"எங்கே பானுகோபன்" என்று கேட்டார்.

பானுகோபன் இரண்டடி முன்னே வந்து கோட்டையின் புகழைப்பற்றி உரத்துச் சொன்னார்.

காந்தளூர்ச்சாலை கடிகையின் பரம்பரை என்றும், தருமம் கருதி பிரிந்த கோஷ்டி என்றும் சொல்லி அதன் தலைவராக தன்னை உருவகப்படுத்திச் சொல்லி சுற்றியுள்ளவர்கள் வாழ்க... வாழ்க... என்று கூச்சலிட்டார்கள். துணியை மேலே விசிறிப்போட்டு பிடித்தார்கள்.

மெல்லியதாய் ஒரு சீற்றம், மகா உபாத்யாயரின் கண்களில் படர்ந்தது. ஆனாலும்... நடந்து பானுகோபரை நோக்கி கைகள்

விரிக்க, பானுகோபர் அருகே போய் அவரை ஆரத்தழுவிக் கொண்டார். இருவரும் தழுவிக் கொள்ள, மறுபடியும் காந்தளூர்ச்சாலை கடிகை வாழ்க, கோட்டைபுரத்து குலம் வாழ்க என்று உரக்கக் கூவப்பட்டது.

பெண்டுகள் எங்கே என்று திரும்பிப் பார்க்க, கோட்டை வாசலில் காந்தளூர்ச்சாலை பெண்டுகள் மெல்ல உள்ளே நுழைந்தார்கள்.

ஜரிகை கரையிட்ட வெள்ளை வேட்டியை உடம்பில் சுற்றி, கழுத்து நிறைய நகைகளுடன், கைகள் முழுவதும் வளையலுடன், வைர அட்டிகைகளுடன், தலையில் பொற்பூக்களுடன், தட்டுகளில் பணியாரம் சுமந்து, வெல்லப்பாகுக்கு உண்டான சட்டிகளை எடுத்து இருவது பெண்கள் வர, அவர்களை குலவையிட்டு கோட்டைபுரத்துப் பெண்கள் வரவேற்றார்கள். அந்தக் கையிலிருந்த பண்டங்களை வாங்கிக் கொண்டார்கள். வந்திருந்த பெண்கள் திண்ணையிலுள்ள ஆசனங்களில் உட்கார, நடுநாயகமாக போட்ட மான்தோல் பீடத்தில் மகா உபாத்யாயர் உட்கார்ந்தார். அடுத்தது இன்னொரு மரப்பீடம் போடப்பட்டது. அதில் பானுகோபர் உட்கார்ந்தார்.

"எனக்கு மட்டும் மான் தோல் ஆசனம் எதற்கு" என்று மகா உபாத்யாயர் எடுக்க முற்பட பானுகோபர் அவரை அன்போடு தடுத்தார்.

"மரியாதை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்றார்.

மறுபடியும் மகா உபாத்யாயர் அமைதியாக உட்கார்ந்தார்.

அங்கே சட்டென்று ஒரு அமைதி நிலவியது.

"நீங்கள் வந்தது சந்தோஷம்."

பானுகோபர் வரவேற்பாகப் பேசினார்.

"நான் வந்தது உங்களை அழைத்துப் போவதற்கு..."

சட்டென்று மகா உபாத்யாயர் பேசினார்.

"எங்கே அழைத்துப்போவதற்கு..."

பானுகோபர் சிரிப்போடு கேட்டார்.

"உங்களுடைய இடமான, உங்கள் பீடமான காந்தளூர்ச் சாலைக்கு..."

"நான் எப்படி காந்தளூர்ச்சாலைக்கு வரமுடியும். பிரிந்து வந்தவனல்லவா. எதற்கு அழைக்கிறீர்கள்."

"உங்களை தலைமைப் பொறுப்பு ஏற்க அழைக்கிறேன். காந்தளூர்ச்சாலை கடிகையின் தலைமையிலிருந்து நான் விலகிக் கொள்ள விரும்புகின்றேன்."

எல்லோரும் லேசாய் அதிர்ச்சி அடைந்தார்கள்.

மறுபடியும் ஒரு மௌனம் அங்கு பரவியது.

"அது முடிந்து போன கதை. முனைமுறிந்து பாதத்திற்குள் போன முள்ளை மறுபடியும் எடுத்து மீண்டும் செடியில் ஒட்டவைக்க யார் முயற்சி செய்வார்கள்."

பானுகோபர் அமைதியாகப் பேசினார்.

"உங்களை ஏன் முறிந்தமுள் என்று சொல்லிக் கொள்கிறீர்கள். அரசியல் காரணங்களுக்காக நானே பதவியில் நீடிக்கலாம் என்று நினைத்தேன். பிறகு ஆழ்ந்து யோசித்துப் பார்த்ததில், என்னைவிட வலிவும், தெளிவும், திடமும் மிக்க நீங்கள்தான் தலைவராக இருக்க முடியும் என்று எனக்குத் தோன்றியது. அரசகட்டளைகள் முக்கியமல்ல. சேர தேசத்து மன்னனின் விருப்பம் முக்கியமல்ல. கடிகை என்பது ஒரு சுதந்திரமான இடம். சுயமான பூமி. அங்கே வலிவு உள்ளவர்தான் முதலில் இருக்க வேண்டும் என்று யோசிக்க, என்னைக் காட்டிலும் எல்லா விஷயங்களிலும் வலிமை மிக்கவர் நீங்கள் என்று எனக்குப் புரிந்து போயிற்று. நீங்களும், நானும் பிரிந்து வந்து இரண்டு வருடங்கள்தான் ஆகியிருக்கின்றன. நம்மோடு இருந்த ரவிதாஸனும், பரமேஸ்வரனும் இங்கு இருந்தால், நம்மிடையே இந்தப் பிளவு ஏற்பட்டிருக்காது என்றும் எனக்குத் தோன்றுகிறது. எனவே, சகலமும் மறந்து விட்டு நீங்கள் காந்தளூர்ச்சாலை வரவேண்டும். கடிகையை பலப்படுத்த வேண்டும்."

"அப்படியா. உங்கள் அழைப்பு ஆச்சரியமாக இருக்கிறது. இது இரண்டு வருடங்களுக்கு முன்பு உங்களுக்கு ஏன் உதிக்காமல் போய்விட்டது என்பது எனக்கு விளங்கவில்லை. ஆனால் ஒரு கேள்விக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டும்."

"என்ன."

மகாஉபாத்யாயர் பானுகோபரின் கேள்வியை எதிர் கொண்டார்.

"நான் வந்தால் உங்களுடைய நிலை என்ன. நீங்கள் எங்கிருப்பீர்கள். என்னவாக இருப்பீர்கள்."

"இந்தக் கேள்வியே புதிராக இருக்கிறதே. உங்களை நான் திருப்பி அழைப்பதினால் நான் வெளியேற வேண்டும் என்று நினைக்கிறீர்களா"

"நான் எதுவும் நினைக்கவில்லை. உங்களுடைய நிலை என்ன. நீங்கள் என்னவாக இருப்பீர்கள்."

"நீங்கள் மகா மகா உபாத்யாயராக இருப்பீர்கள். நான் மகா உபாத்யாயராக இருப்பேன். என்னைச் சேர்ந்தவர்கள், உங்களைச் சேர்ந்தவர்களுடன் கலந்து கொண்டு உபாத்யாயர்களாக இருப்பார்கள்."

"இல்லை"

பானுகோபர் நிதானமாக கால்களை நீட்டிக் கொண்டு சொன்னார்.

"நான் அங்கு வருவதெனில் நீங்கள் அங்கு இருக்க முடியாது. காந்தளூர்ச்சாலையை விட்டு நீங்கள் வெளியேறினாலொழிய, நான் உள்ளே வரமுடியாது."

"நான் எதற்காக வெளியேற வேண்டும். நானும் காந்தளூர்ச்சாலை மாணவன்தானே."

"இருக்கலாம். ஆனால், பிரிவு என்று வந்துவிட்ட பிறகு, நமக்குள் பேதம் என்று ஏற்பட்டு விட்டபிறகு நாம் இரண்டு பேரும் ஒரே இடத்தில் இருப்பது நல்லதல்ல. அது நமக்கும், நம்மைச் சுற்றியுள்ளோருக்கும் வேதனையைக் கொடுக்கும். ஒரு கோஷ்டிச் சண்டை இடையறாது உள்ளுக்குள்ளே இருந்து கொண்டிருக்கும். போர்ப் பயிற்சியின்போது கோஷ்டியாகப் பிரிந்து கொள்ளுதல் உயிருக்கு ஆபத்தான விஷயமாகப் போய் விடும். உங்கள் கோஷ்டி, என் கோஷ்டி என்று இரண்டாகப் பிரிவதற்கு வாய்ப்பிருப்பதால், நீங்கள் அங்கிருந்து உடனடியாக வெளியேற வேண்டியிருக்கும். பிறகுதான் நான் உள்ளே வரமுடியும்."

"எனக்கு ஒரு பதவியும் வேண்டாம். காந்தளூர்ச்சாலை கோட்டையின் காவலாளாக இருந்தால்...?"

"அதுவும் ஆபத்தான விஷயம். என்னைக் கடுமையாக எதிர்த்தவரின் கையில் காந்தளூர்ச்சாலையின் கோட்டைப் பொறுப்பை நான் கொடுப்பதற்கு தயாராக இல்லை."

"நான் எங்கே போக முடியும்."

சற்று கோபமாக மகா உபாத்யாயர் கேட்க, அங்கு மீண்டும் அமைதி நிலவியது.

"நீங்கள் மட்டுமல்ல. உங்களோடு உங்கள் மனைவியும், உங்கள் மகனும், மைத்துனனும், உங்கள் மைத்துனனுக்கு பெண் கொடுத்தவரும், உங்களுடைய மாமனாரும், மாமியாரும், அவர்கள் உறவினர்களும், உங்களுடைய அரண்மனையை விட்டு வெளியேற வேண்டும். உங்கள் வேலையாட்கள் அத்தனை பேரும் வெளியே அனுப்பப்படுவார்கள். உங்களைச் சார்ந்தோர்கள் என்று நான் நினைக்கின்ற அத்தனை பேரையும் கடிகையை விட்டு வெளியேற்றுவேன். அதற்குப் பிறகே என்னால் கடிகையின் தலைமையை ஏற்க இயலும்."

"என் மீதுள்ள கோபத்தை, என் மனைவியின் மீது ஏன் காட்டுகிறாய்."

"இல்லை. உங்கள் மீது எனக்கு கோபமேயில்லை."

"நீ சொல்வது புரிகிறது. உன் மீது கோபமில்லை. உன் மனைவியின் மீதுதான் கோபம் என்று சொல்கிறாய் அல்லவா."

"நீங்கள் அப்படி அர்த்தம் எடுத்துக் கொண்டால் எனக்கு அதில் எந்த ஆட்சேபணையும் இல்லை."

"பானுகோபா... எனக்கு பேரழகியாக ஒரு மனைவி கிடைத்து விட்டாளே என்ற கோபம் உனக்கு."

"தயவு செய்து பெண்களைப் பற்றி பேச வேண்டாம். பெண்களின் மடியில் காந்தளூர்ச்சாலை இல்லை. அவர்களுடைய கட்டுப்பாட்டில் என்னுடைய கலை இல்லை. தயவு செய்து இப்படிப் பேசுவதை நிறுத்திவிடுங்கள்." எச்சரிக்கையாக பானுகோபர் சொல்ல, அங்கே ஒரு சலசலப்பு நிகழ்ந்தது.

"எல்லாவற்றிற்கும் நான்தான் காரணம் என்று இன்னமும் நினைக்கிறீர்களா."

மகா உபாத்யாயரின் மனைவி எழுந்திருந்தாள். தாட்சாயிணி என்பது அவள் பெயர். கோதுமை உடைத்த நிறம். சிவந்த அதரங்கள். முப்பத்தைந்து அகவை நிறைந்திருப்பினும் உடம்பு திண்மையாக இருந்தது. கூரிய மூக்கு. சிறிய கண்கள். பிறை போலும் நெற்றி. காதுகளில் தடித்த வளையங்கள். கழுத்து முழுவதும் நகை. வலப்பக்கம் சாய்ந்த கொண்டை. கொண்டையில் திருகுப்பூ. வைரக்கற்கள் பதித்த ஒரு சங்கிலி. குழி விழுந்த முகவாய். கன்னத்திலும் அதிர்ஷ்டக் குழி இருந்தது. பெரிய மார்பகங்களும், சிறிய இடுப்பும், திடமான பிருஷ்டங்களும், நடையில் ஒயிலும், உடம்பில் வாசனையுமாய் அவள் அருகே வந்து நிற்க பானுகோபர் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டார்.

"பெண்களை கோட்டைபுரத்து சபையில் பேச விடுவதில்லை. அவர்களுக்கென்று தனியாக நேரம் கொடுக்கும் போது அவர்கள் பேசுவதுதான் இங்கு வழக்கம். சபைக்கு நடுவே பெண்கள் ஒரு காலும், தங்கள் அபிப்ராயத்தைச் சொல்லக் கூடாது. அவர்கள் போய் அமரட்டும்" என்று கட்டளையிட, தருமதாஸர் எழுந்து நின்று, "போய் உங்கள் இடத்தில் இருங்கள். இப்பொழுது நீங்கள் பேசக்கூடாது."

"ஏன் கூடாது. பெண்களை அடிமையாகவே நினைக்கிறீர்களா."

"அப்படி அல்ல. சேர தேசத்து அந்தணர் எவரும் மனைவியை அடிமையாக நினைப்பதில்லை. மாறாக அதிகம் ஆளுமை செய்ய விட்டு விடுகிறார்கள். இதுதான் இப்போது குறை." தருமதாஸர் பேசினார்.

திடீரென்று அத்தனை ஆண்களும், பெண்களும் உரத்துச் சிரித்தார்கள்.

தருமதாஸர் உட்கார்ந்து கொண்டார்.

அவள் முகம் சிவந்து போனாள்.

தலை குனிந்திருந்த மகா உபாத்யாயர் திரும்பி அவளைப் பார்த்து ஹூம் என்று சீற அவள் போய் உட்கார்ந்து கொண்டாள்.

அவர் கண்களிலிருந்து பொங்கிய சீற்றம் மாணவர்களுக்கு வியப்பாக இருந்தது.

"அவள் வருகைக்கு உங்கள் மன்னிப்பை கோருகிறேன். இனி இந்த இடையூறு இருக்காது. கடிகையின் நல்லதிற்காக சொல்கிறேன். என்னை கடிகையிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்ற உங்கள் எண்ணம் கடுமையானது. இந்தக் கடிகைக்காக நான் உழைத்திருக்கிறேன். பதினைந்து வயதிலிருந்து, இதோ இந்த நாற்பத்தைந்து வயது வரை.... முப்பது வருடங்கள்... பல்வேறு விதமான புதிய பயிற்சிகளையும், நுணுக்கங்களையும் சேர்த்திருக்கிறேன். எந்த மன்னருக்கும் கட்டுப்படாமல் சுயமாக இருந்திருக்கிறேன். கடிகையின் கௌரவம் என்னால் குலையவே இல்லை. என்னை எதற்காக வெளியேறச் சொல்கிறீர்கள். நான் செய்த பாவம் என்ன."

"கடிகைக்கு தேர்தல் முறை உண்டு. அதை புறக்கணித்தீர்கள். தேர்தல் முறை இல்லாதபோது பலப்பரீட்சை உண்டு. அதையும் புறக்கணித்தீர்கள். பரணைக்கிழவரான மகா மகா உபாத்யாயர், உங்களைத்தான் நியமித்ததாக ஒரு ஓலையைக் காண்பித்து உட்கார்ந்து கொண்டீர்கள். சேர மன்னனின் அன்பு

இருக்கிறது என்று பல்வேறு விதங்களில் அவருடைய வருகையை எங்களுக்கு தெரியப்படுத்தினீர்கள். ஆடம்பரமாய் சேரமன்னனுக்கு வரவேற்பு அளித்தீர்கள். அந்த வரவேற்பில் என்னைப் புறக்கணித்தீர்கள். உபாத்யாயன் அனுமதி இல்லாமல் சேர தேசத்திற்குள் எந்த மன்னனும் நுழையக்கூடாது. ஒரேயொரு உபாத்யாயன் புறக்கணித்தாலும் கூட அவனை சமாதானப்படுத்திவிட்டு அன்னியர் படை, அன்னியர் வருகை உள்ளே நுழைய வேண்டும். ஆனால், இதுபற்றியெல்லாம் கவலைப்படாது, உங்கள் இஷ்டப்படி அரச வரவேற்பும், விழாக்களும் நடந்தன. அதுவுமல்லாது சொகுசான மாளிகைகள் காந்தளூர்ச்சாலைக்குள் கட்டப்பட்டு விட்டன. சேர தேசத்து மன்னனின் அரண்மனை போலவும் நீங்கள் அரண்மனை கட்டிக்கொண்டீர்கள். ஒரு யுத்தபூமி அரண்மனையோடு இருத்தல் தவறு. நாமெல்லாம் மெல்லிய குடிசைக்குள் இருப்பதுதான் நமது உடம்புக்கு உரம். சொகுசு உடம்புக்கு பழக்கப்படக்கூடாது என்று நான் பலமுறை எச்சரித்தும் கேட்காமல், நீங்கள் பஞ்சு மெத்தை படுக்கையும், இடையறாத கயிறு விசிறியும், உபயோகிக்கக்கூடாத, உபயோகிக்கப்படக்கூடாத சில மூலிகைகளை உபயோகித்தீர்கள். இதுவும் குற்றம். ஹோமங்கள் வளர்க்கும் நேரமல்லாது வேறு எப்போதும் நாம் மது அருந்துவதில்லை. அதுவும் உள்ளங்கையை குவித்து மூன்று முறை மது அருந்துவதைத் தவிர வேறு அளவுகள் நமக்கு இல்லை. நீங்கள் இந்த சட்டதிட்டங்களை மீறினீர்கள். இதற்கு யார் காரணம் என்று நாங்கள் கண்டுபிடித்து விட்டாலும் இந்தச் சபையிலே நாங்கள் சொல்வதாக இல்லை. இந்த குற்றங்கள் புரிந்த நீங்கள் இந்த காந்தளூர்ச்சாலையை விட்டு வெளியேறினால்தான், காந்தளூர்ச்சாலையினுடைய மதிப்பிற்கு நல்லது என்பது என்னுடைய கருத்து. வெளியேற மாட்டேன் என்று நீங்கள் சொன்னதால் நாங்கள் வெளியேறினோம். காந்தளூர்ச்சாலையில் ஒழுக்கம் முக்கியம். விதிகள் முக்கியம். இதை மீற ஒரு பொழுதும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம். நீங்கள் இன்று நான்கு விதிகளை மீற... நாளை

இன்னொரு உபாத்யாயன் நாலு விதிகளை மீற... ஆக, ஒரே தலைமுறையில் நாற்பது விதிகள் மீறப்படும். விதிகள் மீறப்பட்டால், ஒழுக்கம் குறைந்தால், காந்தளூர்ச்சாலையின் மதிப்பு குறையும். இது காந்தளூர்ச்சாலை அல்ல என்று புறக்கணிப்பதற்காகவே நாங்கள் இங்கு வந்தோம். கோட்டைபுரத்தை எங்கள் வாசஸ்தலமாக்கிக் கொண்டோம். உங்களுக்கு சேரமன்னனிடமிருந்து ஆதரவு வரவில்லை. அதற்கு ஏதேனும் காரணம் இருக்கலாம். அதனால் எங்களை நோக்கி வந்துவிட்டீர்கள் என்று நினைக்கிறேன்" என்று பானுகோபர் சொல்ல, உரக்கச் சிரித்து மகா உபாத்யாயர் எழுந்தார். பலக்க கை தட்டினார். கோட்டையின் வெளியே இருந்து சிறு முரசு மறுபடியும் முழங்கியது. உள்ளுக்குள் வாள் உருவிய வீரர்கள் வந்தார்கள். பல மாணவர்கள் பதற்றமடைந்து வீடுகளுக்குப் போய் ஆயுதங்களுடன் வெளியே வர, வாள் உருவியவர்கள் தங்கள் வாட்களை உறைக்குள் போட்டார்கள். விலகி நின்று கொண்டார்கள்.

முப்பது வேலையாட்கள் பெரிய சீர் வரிசைகளை... மூட்டைகளை கொண்டு வந்து நடுசபையில் இறக்கினார்கள். மாட்டு வண்டிகள் உள்ளே வந்தன. வண்டிகள் முழுவதும் பொருள்கள் இருந்தன.

"இது சேரன் எனக்கு அனுப்பிய பரிசில் ஒரு பகுதி. உங்களுக்குக் கொடுக்க வேண்டியது என் கடமை என்பதால் இவைகளைக் கொண்டு வந்தேன். நான் உங்களை அழைத்தது ஒரு மரியாதையின் பொருட்டே. பயத்தின் பொருட்டு அன்று. எனக்கு எந்தவித மரியாதைக் குறைவும் எவராலும் ஏற்பட்டு விடவில்லை. காந்தளூர்ச்சாலை உங்கள் வருகையால் மேலும் கெட்டிப்படும். நல்ல மாணவர்கள் உருவாவார்கள் என்று நினைத்தேன். நீங்கள் என்னை தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதோ இவைகளை ஏற்றுக்கொள்ளுங்கள். நான் வருகிறேன்" என்று கிருதபலி சொல்ல பானுகோபர் சடேரென்று எழுந்தார்.

"கடிகைத் தலைவரே... நில்லும்... இந்தப் பரிசுப் பொருட்கள் எங்களுக்கு முக்கியமே அல்ல. சேரன் உங்களுக்கு அளித்ததை எனக்கு பங்கிட்டு போடச் சொல்லும்படி உங்களை நான் நிர்பந்திக்கவில்லை. ஒரு வேளை சேரன் நிர்பந்தித்திருக்கலாம். அந்த சேரனிடம் சொல்லுங்கள், எனக்கு அவன் பரிசு தேவையில்லை என்று. எந்த அரசனுடைய பரிசையும் எதிர்பார்த்து கோட்டைபுரம் இல்லை என்று சொல்லுங்கள். அதில் ஒரு பங்கு எனக்கு பரிசாகக் கொடுக்கிற விஷயம் எனக்குப் பிச்சையிடுதல் போல் இருக்கிறது. நான் யாசகம் வாங்குகிற அந்தணன்தான். ஆனால், யாரிடம் வாங்க வேண்டும் என்பதை நான்தான் தீர்மானிப்பேன். எவ்வளவு வாங்க வேண்டும் என்பதையும், எதை வாங்க வேண்டும் என்பதையும் இந்த அந்தணன் தீர்மானிப்பான். மகா உபாத்யாயரே உங்கள் பரிசுப் பொருட்கள் தேவையில்லை. எடுத்துக் கொண்டு போங்கள்."

"அடேய்... எடு. ஒரு நெல்முனைகூட இங்கு இருக்கக் கூடாது. எடு."

வேலையாட்கள் திணற, சட்டென்று திரும்பி தன்னுடைய கூட்டத்தைப் பார்த்தார். கீழே இறக்கப்பட்டவை தபதபவென்று அவருடைய மாணவர்களால், இளைஞர்களால் வண்டிகளில் ஏற்றப்பட்டது. வண்டி திருப்பி வைக்கப்பட்டது.

"உன் முடிவு இதுதானா பானுகோபா. நீ எதிரி என்று என்னை எண்ண வைக்கிறாய் இல்லையா."

மகா உபாத்யாயர் அருகே வந்து கேட்டார்.

மெல்ல தாட்சாயிணி எழுந்து கொண்டாள். அவளைச் சுற்றியுள்ள பெண்களும் எழுந்து கொண்டார்கள். போய் வருகிறேன் என்று சொல்லாது தாட்சாயிணி வாசல் நோக்கி நடக்க, அவன் கொண்டு வந்த பொருள்கள் சட்டென்று பெண்கள் எடுத்துக் கொண்டு போய் இளைஞர்களிடம் கொடுக்க, அந்தப் பொருள்கள் தாட்சாயிணியை தாண்டிக் கொண்டு முன்னே போயின. கோட்டை வாசலுக்கு வெளியே இறக்கி வைக்கப்பட்டன.'

மாணவர்கள் மறுபடியும் உள்ளே ஓடி வந்தார்கள். என்ன நடக்கிறது என்று ஆவலாகப் பார்த்தார்கள்.

"அவமானப் படுத்துகிறாய் பானுகோபா. திட்டமிட்டு அவமானப் படுத்துகிறாய். உனக்குப் பரிசளிக்க எனக்கு தகுதியில்லை என்று நினைக்கிறாய். நல்லது நான் வருகிறேன். இதுவரை நீ ஏதேனும் ஒரு கணத்தில் உள்ளே நுழைவாய், காந்தளூர்ச்சாலை மீது உனக்கு காதல் இருக்கிறது என்று நினைத்தேன். இல்லை. உனக்கு உன் மீதுதான் காதல். நீதான் தலைவனாக வேண்டுமென்ற வெறி. உன்னைத்தவிர வேறு யாரும் எங்கேயும் ஆளுமை செய்துவிடக்கூடாது என்ற அட்டகாசம் உன் மனதிலே இருக்கிறது. பானுகோபா இதற்கு உண்டான பலனை அனுபவிப்பாய். இந்த அந்தண இளைஞர்களை பலவீனர்களாய் மாற்றிக் கொண்டிருக்கிறாய். வலிவு இல்லாமலும் திறமை இல்லாமலும் உன் கூட்டம் இருக்கிறது என்பது உனக்குத் தெரியவில்லை."

"என் கூட்டத்தின் வலிவு பற்றியும், திறனைப் பற்றியும் உங்களுக்கு நிரூபிக்க வேண்டியபோது நான் நிரூபிப்பேன். மற்றபடி அதைப்பற்றிய அபிப்ராயம் சொல்ல உங்களுக்கு எந்த அருகதையும் இப்போதைக்கு இல்லை. நீங்கள் போய் வரலாம். போய் வரலாம் என்று வார்த்தை ஒரு மரியாதைக்கானது. பண்பாடோடு சொல்லப்படுவது. நேரிடையாக அர்த்தம் எடுத்துக்கொள்ள வேண்டாம்" என்று சொல்லி முகம் திருப்பிக் கொள்ள கடிகைத்தலைவர் மகா உபாத்யாயர் மெல்ல நடந்து குதிரையில் தாவி ஏறிக் கொண்டார். குதிரையை ஓட்டியபடியே அந்தக் குடியிருப்பை சுற்றிப் பார்த்து வந்தார்.

"ஹு... வெறும் மண்கோட்டை" என்றார்.

"ஆமாம். கல் கோட்டையாய் இருந்தால் கைப்பற்ற முடியாது. மண்கோட்டையாக இருந்தால் கைப்பற்றி விடலாம் என்று நினைக்கிறாயா. உன் ஆள் ஒருவனை உள்ளே வந்துவிடச் சொல். உள்ளே வந்து உயிரோடு வெளியே போகச்

சொல் பார்க்கலாம். இது மண் கோட்டையா இல்லை, மனிதக் கோட்டையா என்பது புரியும்."

மகா உபாத்யாயர் அந்தச் சவாலை எதிர்கொள்ளத் தயாராக இல்லை. சரட்டென்று குதிரையை திருப்பிக் கொண்டு வெளியேற, மற்ற வீரர்கள் பின்னால் நடந்தார்கள். வண்டி மாடுகள் நகர்ந்தன.

பானுகோபரும் மற்றவரும் கோட்டைக் கதவை மூடி மரச்சாளரங்களில் ஏறி கோட்டைச் சுவரிலிருந்து பார்க்க அந்த ஊர்வலம் மிக துரிதமாக காந்தளூர்ச்சாலை நோக்கிப் போய்க் கொண்டிருப்பதை கண்டார்கள்.

"கூடுதலாக கதவு திறந்திருக்கட்டுமா, மூடட்டுமா."

ஒரு இளைஞன் கேட்டான்.

"திறந்துவிடு. காற்று வரட்டும். இன்னும் நான்குபேரை காவலுக்கு வை. அதுபோதும்."

"மனதில் ஏதோ ஒரு பிசையல் இருக்கிறது." தருமதாஸர் ஒரு வேப்ப மரத்தின் மீது சாய்ந்து கொண்டு சொன்னார்.

"எனக்கும், எனக்கும் இருக்கிறது. அவர்கள் வந்துவிட்டுப் போன பிறகு ஒரு புறாகூட தரையில் இறங்கவில்லை. குருவிகள் இடையறாது கத்துகின்றன. கோபமும், ஆத்திரமும் சூழ்ச்சியுமுள்ள மனிதர்கள் வந்தால், பறவைகள் அவர்களை மறுதலிக்கும்."

பானுகோபர் வேகமாகப் பேசினார்.

"இப்பொழுது என்ன செய்வது."

"என்ன வருகிறதோ அதை எதிர்கொள்வதுதான் சிறந்தது."

"பரணைக்கிழவர் என்ன சொன்னார்."

தருமதாஸர் ராம உபாத்யாயரை நோக்கித் திரும்ப, ராம உபாத்யாயர் பரணைக்கிழவர் பேசியதைச் சொன்னார்.

"பிரசன்னம் பார்க்க வேண்டும். யார் பார்ப்பது."

"பிரசன்னம் பார்ப்பதில் நம்மில் தேர்ந்தவர் சுதபலி. சுதபலி உபாத்யாயரே வாரும். பிரசன்னம் எப்போது பார்க்கலாம். இப்போது பார்க்கலாமா."

"பார்க்கலாம். ஆமாம்... என்ன கேள்வி. இது நல்ல ஹோரைதான்..."

ராமஉபாத்யாயர் அதற்கு பதில் சொன்னார்.

"காந்தளூர்ச்சாலை கடிகை நம்மைத் தாக்குமா அல்லது அணைக்குமா. இதுதான் கேள்வி."

கோலம் போடப்பட்டது. நீர் சொம்புகள் வைக்கப்பட்டன. கைகால் கழுவிக் கொண்டு சுதபலி உபாத்யாயர் உட்கார்ந்து கொண்டார். சோழிகளை உருட்டி கோலத்தின் மீது போட்டார். மல்லாந்தும், குப்புறவும், சோழிகள் இருந்தன. சோழிகள் விரிந்த திசைகளை குறித்துக் கொண்டார்.

"காந்தளூர்ச்சாலை தாக்கும், உடனடியாகத் தாக்கும்."

"எந்தப் புறமிருந்து தாக்கும்."

பானுகோபர் கவலையோடு கேட்டார்.

"காந்தளூர்ச்சாலை அது இருக்கும் வழியில் தாக்காது. தாண்டிப்போய் திரும்ப வந்து தாக்கும்."

"புரியவில்லையே."

பானுகோபர் பேசினார்.

"எனக்கும் புரியவில்லை."

"இன்னொரு கேள்வி இருக்கிறது. மறுபடியும் பிரசன்னம் பார்க்கலாமா."

"பார்க்கலாம். என்ன கேள்வி."

"நாம் இங்கிருந்து எதிர்ப்பதா. வெளியேறுவதா."

மறுபடியும் சோழிகள் உருட்டப்பட்டன.

அத்தனைச் சோழிகளும் மல்லாந்திருந்தன.

"பாருங்கள்" சுதபலி கை நீட்டிக்காட்டினார்.

எல்லோருக்கும் புரிந்து போயிற்று.

"கிளம்புங்கள். உடனடியாகக் கிளம்புங்கள்" பானுகோபர் கூவினார்.

சோழிகள் அதைத்தான் சொல்லின.

2

"எதிரிகளை கால்மாட்டில் வைத்துக் கொண்டு எப்படித் தூங்குவீர்கள். பானுகோபன் இன்னொரு கடிகை துவக்கும் எண்ணத்தில் இருக்கிறார். கிட்டத்தட்ட கோட்டைபுரத்தை கடிகையாகவே மாற்றிவிட்டார் என்று எனக்குத் தோன்றுகிறது. இங்கு வரப்போகும் அரச குலத்து இளைஞர்களை தன் வழிக்குக் கொண்டு வர, தன் பக்கம் திரும்ப அவர் வெகுநிச்சயமாய் அடுத்த முயற்சிகள் செய்வார். மன்னர்களுக்கு தூது அனுப்புவார். ஏற்கனவே ரவிதாஸனையும், பரமேஸ்வரனையும் அப்படி எல்லா இடத்திற்கும் அனுப்பியிருக்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது. பாண்டியன் ஆதரவு திரட்ட ஒரு சிறியபடை வெளியே போயிருக்கிறது. ரவிதாஸனின் உறவுக்கார இளைஞர்கள் போயிருக்கிறார்கள். அவர்கள் திரும்பி வரும்போது, வலிவுமிக்க வீரர்கள், அரசிளங்குமரர்கள் அந்தப் பக்கம் சாய்ந்துவிடலாம். அப்பொழுது நீங்கள் வாரிக்கொண்டு, இம்மாதிரியான கையுறைகளை அங்கு கொண்டு போய் கொடுக்க வேண்டிய அவசியமிருக்காது. வெகு சீக்கிரத்தில் இன்னும் பத்து வருடத்திற்குள், கோட்டைபுரம் நம்முடைய கடிகையை விட மிகப் பெரிய கடிகையாகிவிடும். ஒரு வேளை அப்போது இந்த இடத்தை அவர் வன்முறையில் வளைத்துக் கொள்ளக் கூடும். உங்களுக்குப் பிறகு இந்தக் கடிகையை நிறுவிக்கக் கூடிய திறன் பெற்றவர் யார். அவரால் பானுகோபரை சமாளிக்க முடியுமா என்று நீங்கள் இப்பொழுதே யோசிக்க வேண்டும்.

அது இல்லாத பட்சத்தில் பானுகோபரை அழித்துவிட வேண்டும்."

தாட்சாயிணி உரத்த குரலில் சொல்லி முடிக்க மகாஉபாத்யாயர் கண்கள் மூடி அமர்ந்து கொண்டிருந்தார்.

"நீ உள்ளே போ. இதில் தலையிடாதே" என்று சொன்னார்.

மனைவி எழுந்து உள்ளே போனாள். அறையின் இருட்டிலிருந்து கணவனைப் பார்த்தாள்.

அவருக்கு நான்கு பேர் எதிரே மற்றவர் உபதேசிப்பது பிடிக்காது. ஆனால், உபதேசம் சரியாக இருந்தால் அது வெகு நிச்சயமாக நிறைவேறும். இந்த உபதேசம் மிகச்சரியாக அவர் மனதிலே தைத்துவிட்டது. இனி பானுகோபர் வாழ முடியாது. பானுகோபர் வெட்டப்பட்டு இறந்தால், அவர் மனைவியை தலைமுடியை பிடித்து இழுத்து வந்து, எரிகின்ற சிதையில் அவளையும் வெட்டித் தள்ளவேண்டும். ஸதி என்று ஊருக்குச் சொல்ல வேண்டும்.

தாட்சாயிணி பல் கடித்தாள்.

பானுகோபர் மாதிரி திறமையான ஆண்களுக்கு இப்படிப் பட்ட அசட்டுப் பெண்கள் ஏன்தான் மனைவியாக வருகிறார்களோ. என்னைப் போன்ற இத்தனை பேரழகும், அறிவும், உள்ளவளுக்கு எதற்கு இந்த மகா உபாத்யாயர் போன்ற முட்டாள்கள் கணவராக அமைகிறார்களோ. இறைவன் எப்பொழுதுமே தப்புக் கணக்கு போட்டு வேடிக்கை பார்க்கிறான்.

கடவுளிடம் அவளுக்கு கோபம் வந்தது. நிலம் அதிர நடந்து அவள் மாளிகையின் மறுபக்கம் போனாள்.

"நேற்று நம்மைத் தேடி வேடுவர்கள் வந்தார்களே, எங்கே இருக்கிறார்கள்" மகா உபாத்யாயர் திடுமெனக் கேட்டார்.

"சாலையின் வெளிப்புறத்தில் கொட்டகையில் தங்கியிருக்கிறார்கள்."

"உடனே வரச்சொல். அவர்கள் என்ன தேடி வந்திருக்கிறார்கள்?"

"அவர்கள் குழந்தைகளுக்கு சில பயிற்சிகள் அளிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். நான், நீங்கள் யோசித்துச் சொல்வதாகச் சொன்னீர்கள்."

"நிச்சயம் அளிக்கிறோம் என்று பேசிக் கொண்டே கூட்டிவா. அதற்கு சம்மதித்து விட்டார் என்றே சொல்."

"அப்படியா... இதுவரை நாம் வேடுவர்களுக்கு எந்தப் பயிற்சியும் தந்ததில்லையே."

"சொல் என்றுதான் சொன்னேனே தவிர, பயிற்சி தருகிறேன் என்று சொல்லவில்லை. உன்னைச் சொல்லச் சொன்னேன் அவ்வளவே."

"புரிந்தது" என்று சொல்லி வெளியேறினார்.

சிறிது நேரத்தில் வேடுவர்கள் கும்பலாக வெளித் திண்ணை எதிரே கூடினார்கள். மகா உபாத்யாயர் வெளியே போய் அமர்ந்ததும், சகலரும் நிலம்பட விழுந்தார்கள். யாரும் எழுந்திருக்கவே இல்லை.

மகா உபாத்யாயர் கை தட்ட... ஆண்களும், பெண்களும் எழுந்து நின்று கை கூப்பினார்கள்.

எல்லோர் முகத்திலும் மண் ஒட்டியிருந்தது.

"என்ன வேண்டும் நாகா. என்ன இவ்வளவு தூரம். குடகு மலை இறங்கி தெற்கு நோக்கி ஒரு கும்பலோடு வரும்படியான அவசியம் என்ன ஏற்பட்டது. கொண்டு வந்த தேன் குடங்களைப் பார்த்தேன். அற்புதமாக இருக்கின்றன. உயர்ந்த மாமரத்துத் தேன். உடம்புக்கு மிக நல்லது. உன் அன்புக்கு நன்றி. உனக்கு என்ன வேண்டும் சொல் நாகா."

மிகப் பிரியமாகக் கேட்டார்.

நாகன் இரண்டடி அருகே வந்தான்.

"இன்னும் அருகே வா."

அழைத்தார்.

நாகன் வெகு அருகே வந்து தன்னுடைய கோரிக்கையைச் சொன்னான். தன் இளைஞர்களுக்கு மிருகங்களோடு சண்டை போடும்போது பலத்த காயம் ஏற்படுகிறது என்றும், இறந்து போகிறார்கள் என்றும், மிருகங்களோடு கை கலப்புச் செய்ய சில பயிற்சிகள் அவர்களுக்குத் தரவேண்டும் என்றும் சொன்னான்.

"நிச்சயமாகத் தருகிறேன். யானையைத் தவிர, காண்டா மிருகம் தவிர, மற்ற எந்த மிருகங்களையும் நம்மால் சமாளித்து விட முடியும். காட்டெருமைகளைக்கூட நாம் போக்குக்காட்டி அடித்து வீழ்த்தலாம். காண்டா மிருகங்கள் வம்புக்கு வருவதில்லை. ஆனால், யானைகள் அப்படி அல்ல. அவை கோபம் கொண்டால் அடக்குவது மிகக் கடினம். நாம் அப்பால் நகருவதே புத்திசாலித்தனம். மற்றபடி வேங்கைகளையும், சிங்கங்களையும், சிறுத்தைப் புலிகளையும், கரடிகளையும் கையாளுவதற்கு வெகு நிச்சயமாய் நான் பயிற்சி அளிக்கிறேன். முழம் நீள அம்பு, ஒரு வில், ஒரு கைக்கோல் போதும். அவைகளை ரணப்படுத்தி அனுப்பிவிடலாம். மிருகங்களின் பலவீனங்கள் உங்கள் இளைஞர்களுக்கு மிக நிச்சயமாக வெகு விரைவில் சொல்லித் தரப்படும். உன்னால் எனக்கொரு உதவி ஆக வேண்டியிருக்கிறது."

"என்ன. சொல்லுங்கள் ஐயா, நிச்சயம் செய்கிறேன். என் வம்சத்துக் குழந்தைகளுக்கு நீங்கள் உதவி செய்ய வரும்போது, உங்களுக்கு நான் உதவி செய்ய மாட்டேன் என்று எப்படிச் சொல்வேன்."

"மாட்டேன் என்றும் சொல்லலாம். ஒன்றும் தவறில்லை. எங்களிலிருந்து பிரிந்து போய் வேறொரு இடத்தில் மண் கோட்டை கட்டிக் கொண்டிருப்பவன், எனக்கெதிராக தொடர்ந்து போர் செய்து கொண்டிருக்கிறான். எனக்கு வர வேண்டிய வருவாய்களை தடுத்துக் கொண்டிருக்கிறான். இதெல்லாம் கூடப் பரவாயில்லை. என்னுடைய இளைஞர்

களை விஷம் வைத்துக்கொல்வதற்கு முயற்சிக்கிறான். எனவே, இதை நான் தடுத்தாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன்."

"சொல்லுங்கள். என்ன செய்ய வேண்டும்."

"கோட்டையை அழிக்க வேண்டும். எப்படி அழிக்கலாம் என்று நீங்கள் யோசிக்க வேண்டும்."

"தீ வைத்துவிட்டால்..."

"உள்ளே இருக்கின்ற சில குடிசைகள் எரியும். அவ்வளவே, மற்றபடி உயிர்ச்சேதம் ஏதும் இருக்காது."

"நாம் அழிப்பது கட்டிடத்தையா."

"இல்லை... இல்லை."

மகா உபாத்யாயர் மறுத்தார்.

"ஆற்றை திசை திருப்பலாமா." என்று கேட்டார்.

"அது எளிதல்ல. அப்படியே திருப்பினாலும் உடனடியாக ஒன்றும் ஆகிவிடாது. பெரும் மழை பெய்து வெள்ளம் வந்தாலொழிய அந்த ஆறு அழிவை ஏற்படுத்தாது. உணவில் விஷம் கலப்பதும் சரியாக வராது."

மகா உபாத்யாயர் யோசித்தார்.

ஒட்டுமொத்தமாக உணவு தயாரிக்கப்படுகிறது. தயாரிக்கப் படும் உணவு பித்ருகளுக்கு படையல் இட, காக்கைகளுக்கு போடப்படுகிறது. காக்கைகள் உண்ட பிறகு மற்றவர்கள் உண்கிறார்கள். எனவே... அது ஒரு நாளும் சரியாக வராது.

யோசித்துக் கொண்டிருக்கும்போது, மெல்ல நாகன் தலை நிமிர்ந்தான். சிரித்தான்.

"என்ன"

"ஆறு என்று சொன்னவுடன் ஒரு யோசனை வந்தது. ஆற்றுக்கு மறுகரையில்... அதாவது, கீழ்கரையில் யானைகள் உலவிக் கொண்டிருக்கின்றன."

"அதனால் என்ன"

"அந்த யானைகளில் இரண்டு பூரண கர்ப்பமாக இருக் கின்றன. நான் வரும்போது அவைகள் அவஸ்தைப்படுவதை பார்த்துவிட்டு வந்தேன். மற்ற யானைகள் கர்ப்பமுள்ள அந்த யானைகளுக்கு ஆதரவாக தடவிக் கொடுத்துக் கொண்டிருக் கின்றன."

"நீ சொல்வது விளங்கவில்லை."

"அந்த யானைகள் இந்நேரம் குட்டி ஈன்றிருக்கும். குட்டிகள் ஓடியாடத் துவங்கியிருக்கும். அந்த இரண்டு யானைகளையும் தவிர, வேறுசில குட்டி யானைகளும் அங்கிருக்கின்றன. அந்த குட்டி யானைகளை மெல்ல ஆறுதாண்டி வெல்லம் கொடுத் தது வரவழைத்து இங்கே வந்ததும் குழியில் இறக்கிவிட்டால் போதும்."

"என்ன ஆகும்."

"மற்ற யானைகள் தேடிக் கொண்டு ஓடிவரும். முகர்ந்து கொண்டே குட்டியானை போன வழியை கண்டு பிடித்துவிடும். குட்டிகள் குழியில் இருப்பதைக் கண்டால் கோபமடையும். இடதும், வலதும் அசையும். சுற்றியுள்ள எல்லா மரங்களையும் அழிக்கும். அருகே கோட்டையிருந்தால் அங்குள்ளவர்கள் கலவரப்பட்டு சப்தமிடுவார்கள். நெருப்பு வீசுவார்கள். யானை கள் மிரண்டு கோட்டையை தரைமட்டமாக்கி விடும்."

"அட.. இது நன்றாக இருக்கிறதே. அழித்தது யானை. நாமென்ன செய்வது அஞ்சலிதான் செலுத்த முடியும்."

மகா உபாத்யாயர் உரக்கச் சிரித்தார்.

ஒரு படி நிறைய பொற்காசுகள் கொண்டு வரச்சொல்லி நாகனுடைய மேல்துண்டில் கொட்டினார்.

"ஐயா... இதை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது."

"இதை வைத்துக் கொண்டு என்னென்னமோ செய்யலாம். என்ன செய்ய வேண்டுமென்று நான் சொல்லித் தருகிறேன்."

"என்னுடைய இளைஞர்களுக்கு பயிற்சி."

"அது நிச்சயம் உண்டு. கவலைப்படாதே. கோட்டை புரத்தை அழித்து விட்டு வா. இந்த விஷயம் நமக்கு நடுவே இருக்கட்டும். வேறு எவருக்கும்... உன்னுடைய மனைவிக்கும், உன்னுடைய உதவியாள் எவருக்கும் இதைத் தெரிவிக்க வேண்டாம்." என்று சொல்ல அவன் தலை அசைத்தான்.

அவன் கூட்டம் அங்கிருந்து நகர்ந்தது.

ஒரு வேளை குட்டி யானையை காப்பாற்ற முடியாது மற்ற யானைகள் திரும்பிப் போய்விட்டால்... அவர் யோசித்தார்.

குட்டி யானைகளை கொண்டு வரட்டும். பின்னால் பெரும் யானைகள் வரட்டும். அவைகள் உன்மத்தம் பெரும் வண்ணம் சில விஷ மருந்துகள் தடவி அம்பு எய்து, அந்த யானைகள் உடம்புக்குள் செலுத்திவிட்டால், அவைகள் ஆக்ரோஷமாக காட்டின் பெரும் பகுதியை அழிக்கத் துவங்கிவிடும்.

யார் விஷ அம்பை எய்துவது.

யார் புதியதாக வந்து சேர்ந்திருக்கிறானோ அவனை அம்பு விட அனுப்பி, அவன் கையில் விஷக்குப்பியை கொடுத்து மரத்தில் மறைந்திருக்கச் சொல்லி பிறகு செய்யலாம்.

எவனைத் தேர்ந்தெடுப்பது.

பாண்டிய தேசத்திலிருந்து பதினைந்து நாட்களுக்கு முன்பு வந்த இளைஞனை அவர் நினைவுபடுத்திக் கொண்டார்.

அவனை உடனே அழைத்துவரச் சொன்னார்.

யானைகள் நீர் வாரி இறைத்து ஆடிக் கொண்டிருந்தன. நாகனும் அவனைச் சேர்ந்தவர்களும், எதிர் கரையிலிருந்து உற்றுப் பார்த்தார்கள். மெல்ல நீரில் முதலைகள் போல இறங்கினார்கள். நடந்து எதிர் கரைக்குப்போனார்கள். பிறகு, கரையோரம் நகர்ந்து தொலைவிலுள்ள யானைக் கூட்டத்தை வேடிக்கை பார்த்தார்கள்.

மரம் கடைந்து நாகனின் ஆள் தீமூட்டினான். சிறிய இரும்புச் சட்டியில் வெல்லத்தை நசுக்கி நெய்யூற்றினான். சுள்ளிகளை

தீயில்காட்டி அடுப்பு மூட்டினான். சில நொடிகளில் வெல்ல வாசனை, காட்டின் எல்லா திக்கும் பரவியது. குட்டிகள் அலைந் தன. பெரிய யானைகள் குட்டிகளை அடக்கி கூட்டத்திற்கு நடுவே வைத்திருந்தன. இருப்பினும் ஒரு குட்டி வேகமாக வாசனை இடம் நோக்கி வந்தது. ஒரு பெரிய உருண்டையை தூக்கி யானைக்குட்டியிடம் போட யானை வெகுநேரம் அதைத் தடவிப் பார்த்துவிட்டு சட்டென்று சுருட்டி வாயில் போட்டுக் கொண்டது. அசைத்து அசைத்து விழுங்கியது. எச்சில் ஊற பிளிறியது. மறுபடியும் முன்னேறி, நாகன் இருக்குமிடத்திற்கு வந்தது.

நாகன் இன்னொரு உருண்டை கொடுத்தான். இன்னும் சில குட்டிகள் வந்தன.

உடம்பெல்லாம் புழுதியோடு, மரங்களில் முதுகைத் தேய்த்த கீரல்களோடு, சதா அசைந்து கொண்டிருக்கும் பெரிய காதுகளோடு, கடுகொத்த கண்களோடும் வெல்லம் சாப்பிட்ட குட்டியை சுற்றி வந்து, அதன் வாய்க்குள் துதிக்கையை விட்டு முறைத்து பார்த்தன. நாலாபக்கமும் அலைந்தன.

நாகன் ஒரு வெல்லக்கட்டியை தான் நின்ற இடத்தில் போட்டுவிட்டு ஆற்றுப் பக்கம் விரைந்தோடினான். அந்த வெல்லக்கட்டிக்கு யானைக்குட்டிகள் சண்டையிட்டுக் கொண் டன. போட்டி போட்டுக் கொண்டு மோப்பம் பிடித்தன. நாகன் இருந்த திசை நோக்கி நகர்ந்து வந்தன. வெல்லக் கட்டிகளை நசுக்கித் தூவிக்கொண்டே, நாகன் புதரில் மறைந்து மறைந்து ஓடினான். தூரத்திலிருந்து ஒரு பெரிய யானை வேகமாக பிளிறிற்று. குட்டிகள் தயங்கி நின்றன. ஒரு குட்டி திரும்பி தடதடவென்று கூட்டம் நோக்கிப் போயிற்று. பிறந்து பத்து நாட்களேயான ஒரு யானைக்குட்டி வேகமாக நாகன் நோக்கி வந்தது.

நாகன் அதை தடுத்து நிறுத்தினான். அதன் வாயில் வெல்லக் கட்டிகளை திணித்தான். கீச்சுக்குரலில் சந்தோஷத்தில் குட்டி யானை கத்தியது. மற்ற யானைகள் ஓடி வந்தன. நாகன் நீரில்

இறங்கினான். யானைக்குட்டிகள் தொடர்ந்தன. எல்லா யானைகளுக்கும், அவன் கை நீட்டி வெல்லக் கட்டிகளை கொடுத்தான். யானைகள் துதிக்கையை நீட்டி வாங்கிக் கொண்டன. ஆழமில்லாத அந்த இடத்தில் கீழே கால் ஊன்றி நீரை கிழித்துக் கொண்டு, அவனை நோக்கி முன்னேறின. எதிர்க்கரைக்கு ஏறி கீழே வெல்லக் கட்டிகளை நாகன் பரப்பி வைத்தான். ஆற்றங்கரை மேட்டில் புதர்களுக்கு நடுவே அவன் ஆட்கள் காத்துக் கொண்டிருந்தார்கள்.

நாகன் புதருக்குள்ளே நின்றான். குட்டி யானையை வெல்லம் நீட்டிக் கூப்பிட்டான். குட்டி யானை வந்தது. மற்ற மூன்று யானைக்குட்டிகளும் வந்தன. புதருக்குள் நுழைந்தன. நாகன் ஓட ஓட துரத்திக் கொண்டு வந்தன.

அவன் ஆட்கள் வேகமாக யானைக் குட்டிகளைத் தொடர்ந்து வந்து கழுத்தில் சுருக்கிட்டு சரட்டென்று இழுத்தார்கள். யானைகள் உரத்த குரலில் பிளிறின. அவர்கள் வேகமாக இழுத்துக் கொண்டு கோட்டைப் பக்கம் ஓடினார்கள். அந்தி சரியும் நேரத்தில், கோட்டைபுரத்தின் வடக்குப்புற உயர்ந்த மதிலுக்கருகே வெட்டியிருந்த குழியில், யானைக் குட்டிகளை தள்ளினார்கள். புதரில் மறைந்து மறைந்து காடுகளைச் சுற்றி காந்தளூர்ச்சாலை நோக்கிப் போனார்கள். விஷயம் முடித்து விட்டதாக மகா உபாத்யாயரிடம் சொன்னார்கள். தன்னுடன் கூட்டிக் கொண்டு வந்த பன்னிரெண்டு இளைஞர்களை மகா உபாத்யாயரிடம் ஒப்படைத்து விட்டு கலப்பைகளும், மண் பாண்டங்களும், தங்கச் சங்கிலிகளும், வாள்களும், சிம்மாசனமும் வாங்கிக் கொண்டு வடதிசையில் இருக்கும் தனது குடகு மலையை நோக்கி நாகன் நடக்கத் துவங்கினான்.

குட்டிகள் குரலெடுத்து அழுதன. கோட்டைபுரத்தில் உள்ளவர்கள் விழித்துக் கொண்டார்கள்.

"என்ன சப்தம் இது. யானையின் பிளிறலாக இருக்கிறதே."

"பெரும் பிளிறலாகத் தெரியவில்லையே. சிறிய யானைகள் பிளிறலாக இருக்கிறது. போய்ப் பார்ப்போமா."

"அந்தி சரிந்துவிட்டது. தீப்பந்தங்கள் எடுத்துக் கொண்டு போய் பார்த்தால் யானைகள் கோபப்படும். எனவே காலையில் பார்த்துக் கொள்ளலாம்."

"ஆனால், குட்டிகள் எங்கோ மாட்டிக் கொண்டது போலல்லவா தெரிகிறது. கூக்குரலாகவல்லவா அதன் குரல்கள் இருக்கின்றன."

"ஆமாம், அதுவும் கவலையாக இருக்கிறது. இப்பொழுது போகலாமா."

"இல்லை. வேண்டாம்."

டங்... டங்... என்று மூங்கிலை மூங்கிலால் அடிக்கும் சப்தம் பரணையிலிருந்து கேட்டது. பரணைக்கிழவர் ஏதோ சொல்ல முற்படுகிறார் என்று நினைக்கிறேன்.

"போய்ப் பார்."

பானுகோபர் ராம உபாத்யாயரைச் சொல்ல, கோட்டைக் கதவைத் தாண்டி இருட்டில் நடந்து கீழிருந்து ஓவ்... என்று ராம உபாத்யாயர் குரல் கொடுக்க, சரக்கென்று கம்பு ஒன்று விழுந்தது. ராம உபாத்யாயர் தாவி பரணையில் ஏறினார்.

"என்ன..." என்று கேட்டார்.

"பிரசன்னம் பாரடா." ஒற்றை வார்த்தையாய் வந்தது.

"எதற்கு பார்க்க வேண்டும். என்ன ஆபத்து. எதனால் ஆபத்து."

"எப்போது ஆபத்து என்று பிரசன்னம் பார்."

"யாருக்கு."

"உங்களுக்குத்தானடா."

"போ. போய்ப்பார். உடனே பார்."

விரட்டினார்.

ராம உபாத்யாயர் கீழே இறங்கி வந்து பானுகோபரிடம் சொல்ல, "என்னாயிற்று பரணைக்கிழவருக்கு. ஏன் பயப்படுகிறார்."

"அவருக்கு யானைகளின் பிளிறல்களை கேட்டிருக்க, குட்டி யானைகள் இப்படிப் பிளிறினால் எங்கோ மாட்டிக் கொண்டிருக்கின்றன என்று அர்த்தம். அவர் பிரசன்னம் பார்க்கச் சொல்கிறார்."

"பிரசன்னம் மட்டும் பார்ப்போமா அல்லது வேறுவிதம் செய்வோமா."

"சுதபலி. நீ பிரசன்னம் பார். இரவில் பிரசன்னம் பார்க்கலாமல்லவா."

"அவசியமென்றால் எந்த நேரமும் பார்க்கலாம்."

"வேறு ஏதேனும் வழி உண்டா."

"நான் ஜாதகம் பார்க்கலாம் என்று நினைக்கிறேன். இந்த நேரம், இந்த நாழிகையை மையமாக வைத்து ஜாதகம் எழுதுகிறேன். இப்போது ஒரு குழந்தை பிறந்தால் அது என்ன ஆகும் என்று நான் யோசித்து அதன்மூலம் பலன் சொல்கிறேன்." மகாநந்தி என்கிற இளைஞன் சொன்னான். சட்டென்று வானத்தைப் பார்த்து நேரம் குறித்துக் கொண்டான்.

"தம்பி வஜ்ஜிரபாகு. உன் தந்தை உனக்கு சூட்சும தேவதைகளை சந்தித்து பேசுவதின் மூலம் ஆருடம் சொல்ல சொல்லிக் கொடுத்திருக்கிறாரே. அதன்படி ஏதேனும் செய்ய முடியுமா."

"முயற்சிக்கிறேன்."

வஜ்ஜிரபாகு எழுந்து போனான்.

"தரையில் தேவதை வந்து, ஒற்றை வரி எழுதும் என்று சொல்வார்களே... அந்த முயற்சி யாருக்கு செய்யத் தெரியும்."

"ஹரிணிக்கு... தெரியும். ஹரிணி மாமிக்கு கண்பார்வை அவ்வளவு தெளிவாக இல்லை."

"அதனாலென்ன. நாம்தானே ஓலையை படிக்கப் போகிறோம். தேவதைதானே எழுதப் போகிறது. ஹரிணி விரைவாகவும், தெளிவாகவும் பூஜை செய்வாள்."

"எல்லா விதமாகவும் பார்த்துவிடலாம். பரணைக் கிழவர் வேகமாகப் பார்த்துவிடு என்று சொல்வதால், ஏதோ ஆபத்து நம்மை சூழ்ந்திருக்கிறது என்று தோன்றுகிறது. எனக்கு உறக்கமே வரவில்லை."

பானுகோபர் சொல்ல எல்லோரும் வேகமாக செயல்பட்டார்கள். பானுகோபர் தனியாகப் போய் ஒரு இடத்தில் அமைதியாக உட்கார்ந்து கொண்டார்.

சமாதானமாகப் போயிருக்கலாமோ என்று ஒரு எண்ணம் அவருக்குள் வந்தது. அவர் மனைவி அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"சமாதானமாகப்போக முடியாது" என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

அவர் திடுக்கிட்டு அவளைத் திரும்பிப் பார்க்க "சண்டையிடவே, சண்டைக்கு ஒரு காரணம் கண்டுபிடிக்கவே அவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களை நீங்கள் அவமானப்படுத்தி விட்டீர்கள் என்று சொல்வதற்காகவே, நாலு பேரிடம் பேசுவதற்காகவே அவர்கள் இங்கு வந்தார்கள்."

"அவர்கள் கோபப்படும்படி நான் என்ன செய்தேன். என்மீது எதற்கு இத்தனை வஞ்சம் கொள்ள வேண்டும்."

ஆதங்கத்தோடு அவர் பேசினார். அவர் மனைவி இன்னும் நெருக்கமாக உட்கார்ந்து அவர் முதுகை தடவிக் கொடுத்தார்.

"எனக்குப் புரிகிறது. ஆனால், தாட்சாயிணி கோபத்திற்கு காரணம் இருக்கிறது."

"என்ன. சற்று அலுப்போடு பானுகோபர் வினவினார்."

"நீங்க வலிவு உள்ளவராய் இருக்கிறீர்கள். ஆற்றல் மிக்கவராய் இருக்கிறீர்கள். ஆற்றல் மிக்கவர்களைக் கண்டால் பெண்களுக்கு வியப்பும், பிரியமும் ஏற்படுவது இயல்பு."

"அவள் புருஷனும்தான்... ஆற்றல் மிக்கவன், மகா உபாத்யாயன்."

"ஆனால், உங்களைவிடவா என்ற கேள்வி ஒன்று இருக்கிறதே. எல்லோரையும்விட மிகச்சிறந்த வீரன்தான் தனக்கு கணவனாக வரவேண்டும் என்று அவள் நினைத்திருக்கிறாளே."

"கணவனாவதும், மனைவியாவதும் அவரவர் தலையெழுத்து. விதியின் விளையாட்டு. நம்முடைய தேர்வு இதில் என்ன இருக்கிறது."

"ஆனால், அவளுக்குத் தெரியவில்லை. தான் பேரழகி. தனக்குக் கணவனாக வரப்போகிறவன் மிகச்சிறந்த வீரனாக இருக்க வேண்டும் என்று அவள் எண்ணுகிறாள். உங்களை சேர அரசர்களும், சேர அரசகுலத்துப் பெண்மணிகளும் கொண்டாடுவது பார்த்துவிட்டு, தன் புருஷனை இப்படிக் கொண்டாடவில்லையே என்று பொருமியிருக்கிறாள். அதனால்தான் இத்தனை சூழ்ச்சி. இத்தனை வஞ்சனை."

"நான் ஒரு தவறு செய்துவிட்டேன் சுபாஷிணி."

அவர் திரும்பி தன் மனைவியைப் பார்த்தார்.

"என்ன"

"நான் மட்டும் வெளியேறியிருக்க வேண்டும். இந்தக் கூட்டத்தை அழைத்துக் கொண்டு வெளியேறியது தவறு."

"நீங்கள் மட்டும் வெளியேறி இருக்கவே முடியாது. இந்தக் கூட்டத்தை நீங்கள் அழைக்கவும் இல்லை. அவர்களாக நீங்கள் வெளியேறியவுடன் உங்கள் பின்னே வந்து நின்று கொண்டார்கள். உங்களால் அவர்களை தடுத்திருக்க முடியாது. நீங்கள் இல்லையெனில் அவர்கள் காந்தளூர்ச்சாலை விட்டு வேறெங்கேனும் போயிருப்பார்களே தவிர, மகா உபாத்யாயர் தலைமையில் தாட்சாயிணி அதிகாரத்தை ஒரு நாளும் ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள்."

"அதுவும் உண்மைதான்."

பானுகோபர் தன் மனைவி சுபாஷிணி பேசுவதை ஏற்றுக் கொண்டார்.

"இப்பொழுது அவளை சமாதானப்படுத்த வேண்டியது அவசியம் என்று நினைக்கிறீர்களா."

"இல்லை. அவள் எதற்கும் சமாதானமாகக் கூடியவள் அல்ல. அவளை யாரும் எதன் பொருட்டும் சமாதானம் செய்துவிட முடியாது."

"நீங்கள் உணர்ந்தால் சரி. இப்பொழுது தாக்குவார்களோ என்ற பயம் இருக்கிறது."

"ஆமாம். எனக்கும் இருக்கிறது. ஏன், உன்னிடம் தாட்சாயிணி ஏதாவது சொன்னாளா."

"இல்லை. ஒரு பார்வை பார்த்தாள்."

"என்ன"

"உன்னை அழித்து விடுகிறேன் பார் என்று பார்த்தாள்."

"பார்வையா இப்படிப் பேசும்."

"வெகு நன்றாகப் பேசும். பெண்கள் பார்ப்பது பெண்களுக்கு நன்றாகத் தெரியும்."

"இல்லை. சுபாஷிணி, நீ தாட்சாயிணி பற்றி அதிக கற்பனையில் இருக்கிறாய்."

"இல்லை. பெண்களைப் பற்றி ஆண்களுக்கு எதுவும் தெரியாது. பெண்களின் பார்வை பற்றி ஆண்கள் கவனித்தது இல்லை. பெண்களுடைய சமிக்ஞைகள் என்ன என்று ஆண்கள் ஒருபோதும் அறிந்ததில்லை. பெண்களை பெண்கள்தான் உணர்ந்து கொள்வார்கள். தாட்சாயிணி யார் என்று எனக்குத் தெரியும்."

"என்ன சொல்கிறாள் தாட்சாயிணி."

"இந்த இடத்தை நிர்மூலமாக்க வேண்டும் என்று சொல்கிறாள்."

"ஏன்"

"நீங்கள் இருக்கும் வரை அவளுக்கு உறக்கம் வராது."

"என்ன... என்ன பேச்சு இது."

"நீங்கள் போட்டிக் கடிகை துவங்கப் போகிறீர்கள் என்று அவளுக்கு தெரிந்திருக்கக்கூடும். அந்த போட்டிக் கடிகை விரிவடைந்தால் என்ன ஆகும் என்று அவள் யோசித்திருக்கக் கூடும். ஐந்து வருடத்தில் மிகப் பலமாக கோட்டைபுரம் ஆகி விட்டால் பிறகு காந்தளூர்ச்சாலை தலையெடுப்பது கடினம் என்பதை, மகா உபாத்யாயர் யோசித்திருக்க மாட்டார். ஆனால், தாட்சாயிணி யோசித்திருக்கிறாள். அதனால்தான் மகா உபாத்யாயரை தூண்டிவிட்டு இங்கு வந்திருக்கிறாள்."

"மகா உபாத்யாயரை தூண்டிவிட்டாள் என்பதை நீ கேள்விப் பட்டாயா."

"இல்லை."

"அதுவும் ஊகம்தானா"

"ஊகம் இல்லை. தெளிவான ஒரு கண்டுபிடிப்பு."

"எனக்குப் புரியவில்லை சுபாஷிணி. சரியாகச் சொல்."

"எல்லா சீர்வரிசையோடு... மறைத்தபடி, கடுகு கொண்டு வந்திருக்கிறாள்."

"கடுகா."

"ஆமாம். பேய்க்கடுகு." ஒரு சிறிய மரப்பெட்டியை சுபாஷிணி காட்டினாள். அதற்கு அடியில், இருபது முப்பது மிகச்சிறிய விதைகள் இருந்தன.

"ஆமாம். பேய்க்கடுகுதான். எங்கிருந்தது."

"தரையில் சிதறிக் கிடந்தது."

"யார் எடுத்தார்கள்."

"நமது பெண்கள். யாரோ உள்ளே வரும்போது பேய்க்கடுகு போட்டுக் கொண்டு வந்திருக்கிறார்கள்."

"அடிப்பாவிகளா. ஒரு இடம் நிர்மூலமாக வேண்டுமென்றல் லவா பேய்க்கடுகு விதைப்பார்கள். இதை விதைத்திருக்கிறாள்

என்றால், இவள் சமாதானத்திற்கு வரவில்லை என்று தெளி வாகத் தெரிகிறதே. ஏன் இதை உடனடியாகச் சொல்ல வில்லை."

"சபை நடுவே சொல்லும் விஷயமா இது. எல்லோரும் கலவரப்பட மாட்டார்களா. நீங்கள் எப்போது தனியாக வருவீர் கள் என்று காத்திருந்து இதை உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் ஆருடம் பார்ப்பதில் முறையாகவும், கவனமாகவும் இருந்து விட்டீர்கள். வெளியே யானையின் கூக்குரல்கள் கேட்கின்றன. அதுபற்றியும் கவலையோடு இருக்கிறீர்கள். இப்பொழுதுதான் வீட்டிற்கு அருகே வந்தீர்கள். உங்களிடம் சொல்லிவிட்டேன்."

"புரிகிறது. அவள் நம்மோடு மறைமுகமாய் யுத்தமென்று சொல்லாமல் சொல்லிவிட்டுப் போய்விட்டாள்."

"ஆமாம். நம்மால் யுத்தம் செய்ய முடியுமா என்பதுதான் கேள்வி."

ஏன் முடியாது என்கிறாய் சுபாஷிணி.

"இல்லை. சிறிய குழந்தைகளும், இளைஞர்களையும் பலிபோட நான் விரும்பவில்லை. காந்தளூர்ச்சாலையில் எண்ணிக்கையில் அதிகமான வீரர்கள். அந்த வீரர்கள் இங்கு வந்து நம்முடைய குழந்தைகளையும் தாக்குவது நல்லதல்ல. காந்தளூர்ச்சாலை மாணவர்களே நம்மை வெட்டினால், நாம் காந்தளூர்ச்சாலை மாணவர்களை வெட்டினால் மிகச்சிரிப்பாகப் போகும். அந்தணர்கள் அடித்துக் கொண்டு சாகிறார்கள் என்று பாண்டியனும் மிகக் குறிப்பாய் சோழனும் வாய்விட்டுச் சிரிப்பார்கள். சேர மன்னன் செய்வதறியாது கை பிசைவான்."

"என்ன செய்யலாம் என்கிறாய் சுபாஷிணி."

"இந்த இடம் விட்டு போய்விடலாம்."

"எங்கே."

"அதை நீங்கள் தீர்மானியுங்கள்."

பிரசன்னம் முடிந்ததும் ஒருவர் வந்து அருகே நின்றார்.

"என்ன சொல்கிறது பிரசன்னம்"

"ஆபத்து என்கிறது."

"எதனால்."

"மிருகத்தால் என்கிறது."

"மிருகமெனில் எது."

"யானையாக இருக்கலாம் என்று சொல்கிறது பிரசன்னம்."

"ஆருடம் சொல்பவன்."

"மனிதர்களால் ஆபத்து என்று தெள்ளத் தெளிவாகச் சொல்கிறான். மிருகத்தால் ஆபத்து இருக்கிறதா என்று தெரியாது. ஆனால், ஆபத்து வெகுநிச்சயம் மனிதர்களால் வந்து விட்டது என்று சொல்கிறான்."

"அடேய்.... அந்தப் பெண்மணி என்ன சொல்கிறாள்."

"அவள் இன்னும் மௌனத்தில் இருக்கிறாள் எதுவும் பேசவில்லை. குறி சொல்பவள் என்னிடம் ரகசியமாக வந்து மற்றவர்களை வெளியே போகச் சொல்லுங்கள் என்றாள். ஏன் என்று கேட்டேன். நல்ல விஷயங்கள் வரவில்லை. காமவெறி பிடித்த ஒரு அந்தணப் பெண்மணி பற்றி உள்ளுக்குள்ளே குமுறிக் குமுறி வருகிறது. இதை சபையிடம் எப்படிச் சொல்வது என்று சொல்கிறாள்."

"என்னதான் சொன்னாள். அதைச் சொல்."

"உங்களிடம் தாட்சாயிணி மண்டியிட்டு அழுததாகவும், நீர் மறுத்ததாகவும், அதனாலேயே கோபம் அடைந்ததாகவும் சொல்கிறாள்."

பானுகோபர் அமைதியாக இருந்தார். சுபாஷிணி திடுக்கிட்டாள். வந்தவர் தலை குனிந்திருந்தார்.

"அது உண்மை."

"என்ன மறுத்தீர்கள். என்ன கேட்டாள்."

"தன்னைக் கொடுக்க தயாராக இருக்கிறேன். என்னோடு சங்கமித்திரு என்று சொன்னாள். நான் மறுத்துவிட்டேன்."

"இப்படி அந்தப் பெண் சொல்வதற்கு என்ன காரணம். அவள் நல்ல குலத்தில் பிறந்தவள்தானே."

"எல்லாம் சரிதான். மிகப்பெரிய பலவீனம் ஒன்று இப்பொழுதுதான் தெரிய வந்தது" வந்தவர் பேசினார்.

"என்ன அது."

"மகா உபாத்யாயர் உபயோகமில்லாதவர்"

"கடவுளே... இதெல்லாமா அவள் சொன்னாள்."

"இதை சபையில் சொல்ல முடியாது என்று அருள் வந்தவள் சொல்லிவிட்டாள்."

"அப்படியானால் அருள் வந்தவராக அவர் எனக்குத் தெரியவில்லையே."

சுபாஷிணி கேள்வி கேட்டாள்.

"அவள் யட்சினியை அழைத்ததாகவும், அந்த யட்சினி சிரித்துச் சிரித்து பல விஷயங்களைச் சொன்னதாகவும் சொன்னாள்."

"வேறு என்ன சொன்னாள்."

"சுபாஷிணி கேட்க பானுகோபர் அவளைத் திரும்பிப் பார்த்தார்."

"சுபாஷிணி... இந்த விஷயத்தை எனக்கு தாட்சாயிணி சொன்னாள். இதைச் சொல்லித்தான் காலில் விழுந்து தன்னை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினாள். இது உன் விதி. இதை நான் ஏற்க இயலாது. எனக்கு இதில் ஒப்புமை இல்லையென்று மறுதலித்தேன். மறுநாள் மறுபடியும் கெஞ்சினாள். நான் மீண்டும் மறுதலித்தேன். அவள் ஆபாசமான ஒரு சைகை செய்தாள்."

"என்ன அது."

"தன் புடவையை அவிழ்த்துப் போட்டுவிட்டு இடுப்பில் கட்டியிருக்கிற சிறு துண்டுடன் தரையில் ஓங்கி அடித்து சத்தியம் செய்தாள். என்னோடு இன்று மாலைக்குள் நீ கூடவில்லையெனில் நான் உன்னை அழிப்பேன் என்று சொன்னாள். நான் முகம் திருப்பி வெளியே வந்துவிட்டேன்."

"அடிப்பாவி... பிறகு."

"இதோ அழிக்க ஆரம்பித்துவிட்டாள்."

"நீங்கள் ஏன் இதைச் சொல்லவில்லை."

"நீ ஏன் இதைக் கண்டுபிடிக்கவில்லை. பெண்ணின் பார்வை பெண்ணுக்குத் தெரியுமென்று இப்போது சொன்னாயே. இப்படியெல்லாம் நடந்தது என்று உனக்குத் தெரியவில்லையே."

பானுகோபர் வெறுப்போடு முணுமுணுத்தபடி பேசினார்.

"ஐயா, ஓலை வந்துவிட்டது."

அந்தப் பெண்மணி எடுத்துக் கொடுத்த ஓலையை ஒருவன் எடுத்து வந்தான். விளக்கு வெளிச்சத்தில்தான் பானுகோபர் அதைப்படித்தார்.

"நாகர்களால் ஆபத்து விலகு என்று போடப்பட்டிருக்கிறது."

"என்ன இது. நான்கு விதமான விஷயங்கள் வெளிவருகின்றனவே. பிரசன்னம் மீண்டும் குழப்புகிறதே."

"விலகு என்று ஓலை வந்துவிட்டதல்லவா. விலகி விடுவதுதான் உத்தமம்."

"விலகி விடுவதென்றால். இந்த இடத்தை விட்டே வேகமாக நகருவதுதான்."

"எப்போது விலகுவது."

"உடனே இப்பொழுதே. இது தசமிதிதி. சந்திரன் வளர்பிறை நோக்கி இருக்கின்ற பத்தாவது நாள். வெளிச்சம் இருக்கிறது. கையில் கிடைத்தவற்றை எடுத்துக் கொண்டு, நாம் இந்த இடத்தைவிட்டு நகர்ந்து போவோம்."

"நாகர்கள் ஆபத்து என்றால், நாகர்கள் இருக்குமிடம் போய் மாட்டிக் கொள்ளவா. கோட்டை பாதுகாப்பல்லவா."

"இல்லை. விலகு என்று போட்டிருக்கிறது. அதுவே முக்கியம். பூவைப் போல சப்தமெழாமல் இந்த இடம்விட்டுப் போய்விடுவோம்."

"மறுபடியும் ஒன்றை கேட்கச் சொல். எந்த திசை நோக்கி நாம் போக வேண்டும் என்று பிரசன்னம் கேள்" என்று பானுகோபர் சொல்ல மறுபடியும் சோழிகள் உருட்டப்பட்டன.

"தெற்கு நோக்கிப் போய், தெற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் போகச் சொல்லியிருக்கிறது."

"நல்லது. நமது கோட்டை வாசல் தெற்கு நோக்கிதான் இருக்கிறது. கோட்டை வாசல் வழியாகவே உள்ளே வந்தோம். கோட்டை வாசல் வழியாகவே வெளியே போவோம். எல்லோரையும் எழுப்பு. என்னென்ன எடுத்துக் கொள்ள முடியுமோ எடுத்துக் கொள்ளச் சொல். உணவுப் பண்டங்கள் அதிகம் வேண்டாம் என்று சொல்."

"வண்டிகள் வேண்டுமா."

"இல்லை. குதிரைகள் போதும். கழுதைகள் போதும், எருதுகள் போதும். மலைப்பாதைகளை, வண்டிகளை வைத்துக் கொண்டு கடப்பது கடினம். பாதை சேறாகவும், புதர்கள் மிகுந்ததாகவும் இருக்கும். வண்டிகள் உடைந்து போகவும் வாய்ப்பிருக்கிறது. எனவே, முடிந்தவரை மூட்டைகளை எருதிலோ, குதிரையிலோ அல்லது கழுதையிலோ சுமந்து வரச் செய்யலாம். நுணுக்கமானவற்றை நாம் முதுகில் தூக்கிக் கொள்வோம்."

"எனக்கும் ஒரு மூட்டை கொடுங்கள். சகலரும் சுமக்க வேண்டும் என்பது விதி என்று சொல்லிவிடுங்கள்."

"குறி சொல்பவள் வரமுடியாது என்று மறுத்துவிட்டாள்."

"ஏன். கண்பார்வை சரியில்லை என்பதாலா"

"இல்லை. இங்கு அவள் விசாரிக்கப்படுவாளாம். அப்போது தவறான தகவல் கொடுத்து வேறு பக்கம் அனுப்பி விடலாமாம்."

"கடவுளே... உயிர் தியாகமா... எதற்கு இது."

"இல்லை. அவளை யாரும் எதுவும் செய்யமாட்டார்கள் என்று சொல்கிறாள்."

"இல்லை. செய்து விடுவார்கள். தவறான தகவல் சொன்னதை விரைவில் கண்டுபிடித்து அவளை சாட்டையால் அடித்துக் கொன்று விடுவார்கள்."

"தப்பித்து விடுவேன் என்று சொல்கிறாள்."

"தேவி அருள் புரியட்டும். பரசுராமர் காக்கட்டும். கிளம்புங்கள். கால் நாழிகையில் கிளம்புங்கள்."

அந்தக் கோட்டைபுரத்தில் அந்தண இளைஞர்கள் பரபரப்பானார்கள்.

யானைகள் ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொண்டன. ஒரு பெண் யானை சுற்றி சுற்றி வந்து எல்லா யானைகளையும் அடித்து இழுத்தது. ஆண் யானைகள் அந்தப் பெண் யானைகளின் வெறியைக் கண்டு பயந்தன. தும்பிக்கையை துழாவி பெரிதாகப் பிளிறின. குட்டிகள் எங்கே என்று தேடின. மெல்ல மெல்ல, வெல்ல வாசனையை நோக்கி முன்னேறின. ஆற்றில் இறங்கின. தரையைத் தடவித் தடவி குட்டிகள் எந்த திசையை நோக்கி இழுத்துப் போகப்பட்டனவோ, அந்த திசை நோக்கி நகர்ந்தன. பெரிய மலைகளைப் போல், ஆற்றங்கரையில் ஒவ்வொன்றாய், ஒவ்வொன்றாய் நீர் சொட்ட மேலேறின. நூற்றி நாப்பது யானைகள் கோபமும், அகங்காரமுமாய் புதர்களை மிதித்துக் கொண்டு, காட்டு மரங்களை முட்டி உடைத்துக் கொண்டு, வழி ஏற்படுத்தி முன்னேறின. நூற்றி நாப்பது யானைகள் கரையேறி அமைதியாய் நின்றன. தொலைவில் குட்டிகள் குரல் கொடுப்பது அவைகளுக்குத் தெரிந்தது. ஒருபெரிய ஆண் யானை, மற்ற யானைகளை நிறுத்தி வைத்துவிட்டு மெல்ல முன்னேறி உற்றுப் பார்த்தது.

மனிதர்கள் பல திசையிலும் நகர்ந்திருப்பதை அந்த யானை உணர்ந்து கொண்டது. செடிகளைத் தடவி செடிகள் உடைந்திருப்பதைப் பார்த்து எந்த திசையில் யார் போயிருக்கிறார்கள் என்று கவனித்தது.

தொலைவே... வெகு தொலைவே, வானத்தில் வெளிச்ச அசைவுகள் தென்பட்டன. புகை மூக்கை நெருடியது. யானைகள் அதிகம் சப்தமெழுப்பாது, மெல்ல மெல்ல கோட்டையை நோக்கி முன்னேறின. நடுவில் இருக்கின்ற தலைவனான ஆண் யானை, மற்ற யானைகளை பிரித்து வெவ்வேறு திசை நோக்கி அனுப்பியது. யானைகள் அந்தத் தலைவனுக்கு கட்டுப்பட்டன. அமைதியாக சப்தமெழாது கிளைகளை ஓசைப்படாமல் முறித்த வண்ணம் நிலவொளியில் முன்னேறின. இப்போது குட்டிகளின் அலறல் மிகத் தெளிவாக அந்த யானைகளுக்குக் கேட்டது. தாய் யானை பொறுக்கமாட்டாமல் பிளிறியது. அந்த பிளிறலைக் கேட்டு பானுகோபர் திடுக்கிட்டு எழுந்தார்.

"இல்லை. நமக்கு நேரம் இல்லை. எடுத்துக் கொண்டவரை போதும். மூட்டை கட்டவெல்லாம் நேரமில்லை. கிளம்புங்கள். உடனே கிளம்புங்கள். எல்லோரும் ஆயுதம் வைத்திருங்கள். அது மட்டுமே போதும். உணவு வகைகளை வழியில் எங்கேனும் பார்த்துக் கொள்வோம்" என்று வேகமாக உத்தரவிட அவர்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு வரிசையானார்கள்.

தேவி சிலையின் முன்பு பானுகோபர் நின்றார். மண்டியிட்டு தேவி சிலையின் மீது தலை வைத்தார்.

அவர் உடம்பு அழுகையில் குலுங்கிற்று.

"தாயே... என்னால்தான் இத்தனையும்... நான் ஒருவன் அனுசரித்துப் போயிருந்தால், இந்தக் கூட்டம் முழுவதும் இன்னும் பலமாக இருந்திருக்குமல்லவா. ஒரு தேசத்திற்கு ஹானி உண்டானால், ஒரு நகரத்தை பலிகொடு, ஒரு நகரத்திற்கு ஹானி ஏற்படுமென்றால், ஒரு கிராமத்தை பலி கொடு. ஒரு கிராமத்தை அழிவு தாக்கும் என்றால் ஒரு வீட்டை பலி கொடு. ஒரு வீட்டை ஏதேனும் கவ்வி பசி தீர்க்கும் என்றால்,

ஒரு மனிதனை பலிகொடு என்று தர்மசாஸ்திரம் சொல்கிறது. தாயே என் குலத்திற்காக நான் என்னை பலி கொடுத்திருக்க வேண்டும். வரட்டு பிடிவாதத்தால், முரட்டுப் போக்கால், நான் மிகப்பெரிய கோபத்தை சம்பாதித்துக் கொண்டுவிட்டேன். அதுவும் என் குழந்தைகளை, இந்த இளம் வாலிபர்களை, நட்டநடு நிசியில், திசை தெரியாமல் எங்கோ அழைத்துப் போகிறேன். தாயே... நான் என்ன செய்ய... எனக்குப் புரியவில்லை."

எழுந்து நின்றார்.

பெண் யானை மீண்டும் பிளிறியது. மற்ற யானைகளும் உரக்கக் குரல் கொடுத்தன. கோட்டை சுவர் மீது இருந்தவன் பந்தங்களை எடுத்து வீசிப் பார்த்தான். யானைகளுக்கு அந்த பந்தத்தின் ஒளி தெரிந்தது. அந்த ஆட்டம் கோபத்தைக் கொடுத்தது. எல்லா யானைகளும் சேர்ந்து பிளிறின.

காடு அதிர்ந்தது.

அவர்கள் பயந்தார்கள். வேகமாக கதவு திறந்து, கதவு வழியே தருமதாஸர் முதலில் வெளியே நடக்க, இன்னும் சில கிழவர்கள் உருவிய வாளோடு நடக்க, பெண்களும் நடந்தார்கள். பிறகு குழந்தைகள் நடந்தார்கள். பிறகு இளைஞர்கள் நடந்தார்கள். அதற்குப் பிறகு மீண்டும் உறுதியான வலிவுமிக்க கிழவர்கள் வேலோடும், எருதுகளோடும், குதிரைகளோடும் முன்னேறினார்கள்.

பானுகோபர் கோட்டைக் கதவை சாத்தினார். பூட்டு போட்டார். சாவியை விசிறி காடு நோக்கி எறிந்தார்.

பரணைக்கருகே போனார். "போய் வருகிறோம்... போய் வருகிறோம்... போய் வருகிறோம்..." என்று குரல் கொடுத்தார்.

மகா மகா உபாத்யாயரான அந்தப் பரணைக் கிழவர் மெல்ல எட்டிப் பார்த்தார். இரண்டு கைகளையும் தூக்கி ஆசீர்வதித்தார்.

"யானைகள் வந்திருக்கின்றனவே, என்ன செய்யப்போகிறீர்கள்" என்று கேட்க, "நீ போ" என்பதாக சைகை செய்தார்.

பரணைக் கிழவர் எப்பொழுது அந்தப் பரணையில் ஏறினாரோ, அப்போதே ஒரு சபதம் செய்துவிட்டார். "என்ன ஆனாலும் மரணம் வரை பரணையில்தான் இருப்பேன். பூமியில் கால் வைக்க மாட்டேன்" என்று உரக்க பரணையில் நின்றபடி அறிவித்துவிட்டார்.

அவர் வரமாட்டார். எத்தனை வற்புறுத்தினாலும் வரமாட்டார். பானுகோபர் பரணையைச் சுற்றி வந்து நெடுஞ்சாண்கிடையாக கிழவரை வணங்க, கிழவர் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார். பானுகோபர் பின்னடைந்து தன்னுடைய கூட்டத்தோடு கலந்து கொண்டார். தொலைவிலுள்ள யானைகள் திபுதிபுவென்று குட்டிகளை நோக்கி ஓடிவந்தன. குழி எங்கே என்று தேடின.

ஆழமாக வெட்டப்பட்ட குழியில் நான்கு குட்டிகளும் இருப்பதைப் பார்த்துவிட்டு, தந்தத்தால் மண்ணை குத்திக் குத்தி கிளறி சரித்தன. குட்டிகள் உள்ளுக்குள்ளே கூச்சலெடுத்து தடுமாறின. பெரிய ஆண் யானைகள் மண்சரிக்க, பெண் யானைகள் நாலா பக்கமும் ஓடின. மரக்கிளையை ஒடித்து வீசின. ஒரு பெண் யானையின் கண்ணில் பரணை பட்டது. வேகமாகப்போய் பரணையை பிடித்து இழுத்து உருட்டியது. பரணை சாய பரணைக்கிழவர் பொத்தென்று உருண்டு விழுந்தார். வேறொரு யானை ஓடி வந்தது. அவரை முகர்ந்து பார்த்தது. பற்றியது. தூக்கி வேகமாக காட்டை நோக்கி வீசி எறிந்தது. வெகு உயரம் மேலே பறந்த கிழவர் தலை குப்புற ஒரு மரக்கிளையில் விழுந்து உடைந்தார். ரத்தம் எல்லா பக்கமும் தெறித்தது. உடைந்த க்ஷணத்தில் கிழவரது உயிர் பிரிந்தது. இன்னொரு யானை ஓடிப்போய் சிதைந்த அவர் உடலை மிதித்து கூழாக்கியது. இன்னொரு யானை ஓடிப்போய் பரணையை அடித்து ஒடித்தது. இன்னும் பல திக்கும் யானைகள் பரவின. யானைகளின் கூச்சல் காந்தளூச்சாலை வரை கேட்டது. காந்தளூர்ச்சாலையின் மக்கள் ஆயுதங்களுடன் யானைகளை எதிர்க்கத் தயாராக இருந்தார்கள். யானைகள் மண்

கோட்டைச்சுவரை முட்டின. கதவை உடைத்தன. நூற்று சொச்சம் யானைகளும் உள்ளுக்குள் நுழைந்து, கையில் கிடைத்ததையெல்லாம் பிடித்து வீசின.

மண் தள்ளப்பட்டுக் கொண்டேயிருந்தது. திடீரென்று செம்மண் சரிந்து குட்டிகள் மீது விழுந்தது. குட்டிகள் தலையை உதறி சிலும்பி விலகிப் போயின. ஒரு குட்டியானை அந்த செம்மண் சரிவில் கால் வைத்து இன்னொரு குட்டி யானையை நோக்கி தும்பிக்கையை நீட்டியது. குழியிலிருந்த குட்டி யானை நீட்டிய குட்டி யானையின் தும்பிக்கையை பற்றிக் கொள்ள, அந்த குட்டி யானையின் கால்களை மற்ற பெரிய யானைகள் பிடித்துக் கொண்டு இழுத்துப் போட்டன. குழியில் விழுந்த குட்டி யானை மேலே ஓடி வந்து, தாயின் கால்களுக்கு நடுவே நின்றுகொண்டது. துதிக்கையால் தாயின் வயிற்றைத் தடவியது. முலைக்காம்புகளை பற்றியது. தாய் பளிச்சென்று அந்தக் குட்டியை அடித்து தன்னோடு இன்னும் இறுக்கிக் கொண்டது. தன் கால்களை அழுத்தி வைத்துக் கொண்டது. இதேபோல் மற்ற குட்டி யானைகளும் மீட்கப்பட்டன. அதற்குள் கோட்டைபுரம் முழுவதும் துவம்சமாகிவிட்டது.

யானைகள் நின்று வாசனை பிடித்தன. மனிதர்கள் இந்தப் பக்கம் போயிருக்கிறார்கள் என்று ஒரு யானை சைகை காட்டியது. ஆனால், தலைவனான யானை திரும்பு என்று கட்டளையிட எல்லா யானைகளும் குட்டிகளோடு ஆறு நோக்கி நடந்தன.

பானுகோபர் ஒரு மரத்தில் தாவி ஏறினார். கிளைக் கிளையாக ஏறி உச்சியில் நின்று பார்த்தார். வெறும் குச்சிகள் மட்டுமே கோட்டைபுரத்தில் நின்று கொண்டிருப்பது அவருக்குத் தெரிந்தது. அவரால் அழுகையை அடக்க முடியவில்லை. நின்ற வண்ணமே கதறித் தீர்த்தார். மறுபடியும் அதே வேகத்தில் கீழிறங்கினார்.

"போங்கள். விரைவாகப் போங்கள்" என்று கூச்சலிட்டார்.

37683
5470117

அவர்கள் வேகமாக வெறி பிடித்தது போல [illegible] விட்டு, பாண்டிய தேசம் நோக்கி நடந்தார்கள்.

யானைகள் ஆற்றில் இறங்கி கரையேறின.

மரக்கிளை உச்சியில் உட்கார்ந்து, சகலமும் பார்த்துக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன் கீழிறங்கினான். மெல்ல காந்தளூர்ச்சாலை நோக்கித் திரும்பினான். வேகமாக ஓடினான். அவனை கோட்டைக்கதவு திறந்து உள்ளே அழைத்துக் கொண்டது.

அவன் மகா உபாத்யாயரின் வீடு நோக்கிப் போனான்.

கோட்டைபுரம் அழிந்துவிட்டது என்று கை கால்கள் ஆட்டி, யானைகள் எப்படியெல்லாம் துவம்சம் செய்தன என்று மகா உபாத்யாயருக்கு விளக்கினான். மகா உபாத்யாயர் தலை குனிந்து கேட்டுக் கொண்டிருந்தார். பின்னால் தாட்சாயிணி நிற்பது அவருக்குத் தெரிந்தது. தடேரென்று தாட்சாயிணியால் கதவு சார்த்தப்பட்டது. அந்தக் கதவு சார்த்தலில் ஒரு கோபம் இன்னும் இருப்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

பானுகோபரும், அவர் கூட்டமும் சேர தேசத்தைத் தாண்டி விடியல் நேரத்தில் பாண்டிய தேசத்தில் கால் வைத்தார்கள்.

இனி கொஞ்சம் தொலைவு வரையில் பசுமை இருக்காது. பெரும் பாழ்வெளிதான் இருக்கும். இன்று முழுவதும் பாழ் வெளியில் பயணம் செய்தால்தான் பசுமைக்கு அருகே போக முடியும் என்று அவருக்குத் தெரிந்தது.

பலமுறை போய் பழக்கமான வாலிபர்களை முன்னே போகச் சொல்லி, அவர் பின்னே தளர்வோடு நடந்து வந்தார்.

திடீரென்று ஊர்வலத்தின் ஆரம்பத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

"என்ன..." என்று கேட்க "ரவிதாஸனும், பரமேஸ்வரனும்" என்று சொல்லப்பட அவர் திடுக்கிட்டார். எங்கே எங்கே என்று பரபரத்தார். ஆவலோடு பரபரப்பாய் இரண்டு இளைஞர்கள் அவர்களுடைய வீரர்களுடன் வேகமாக அவரை நோக்கி ஓடி

வந்தார்கள். பாய்ந்து அவர் கால்களைப் பற்றிக் கொண்டு முத்தமிட்டார்கள்.

ரவிதாஸன் எழுந்து நின்று கதறினான்.

"என்ன இது. என்ன கோலம். ஏன் உங்களை துரத்தினார்கள். உங்களைத் துரத்த அவர்கள் யார். என்ன தைரியம் இருக்கிறது. அவனை நான் சும்மா விடமாட்டேன். எங்கே அந்த மகா உபாத்யாயன்."

வாள் உருவினான்.

அவன் வாளை பிடுங்கி அவன் உறையிலிட்டு, அவன் தோளில் கை சார்த்தி இடது பக்கம் பரமேஸ்வரனை அணைத்துக் கொண்டு தொடர்ந்து மதுரையை நோக்கி பானுகோபர் நடக்கத் துவங்கினார்.

ரவிதாஸனையும், பரமேஸ்வரனையும் பார்த்ததில் பானுகோபருடைய கோபம், சுத்தமாகக் குறைந்து மனதில் ஒரு குதூகலம் வெளிப்பட்டது.

அவர்கள் காலை உணவுக்காக ஒரு குளக்கரையில் குழுமினார்கள். பாண்டிய தேசத்து உழவர்கள், ஆச்சரியத்தோடு அவர்களை வந்து பார்த்தார்கள். அவர்களுக்கு சிறிய பரிசுப் பொருட்களையும், உணவு வகைகளையும் பானுகோபர் வழங்கினார். சற்று விலகியிருக்கச் சொன்னார். அவர்கள் விலகியிருந்தார்கள்.

பானுகோபர் ரவிதாஸனையும், பரமேஸ்வரனையும் அருகே வைத்துக் கொண்டார். மற்ற உபாத்யாயர்கள் அவர்களை சூழ்ந்து கொண்டார்கள்.

"சொல் ரவிதாஸா. உலகம் எப்படி இருக்கிறது. சொல்."

பானுகோபர் கட்டளையிட்டார்.

ரவிதாஸன் தொண்டையை செருமிக் கொண்டு அவருக்கு பதில் சொல்லத் துவங்கினான்.

"ராஷ்டிரகூடம் முழுவதும் சுற்றிவிட்டு வந்தேன். மேலைச் சாளுக்கியமும், கீழைச் சாளுக்கியமும், பொந்திப்பி நாடும் பார்த்துவிட்டு வந்தேன். ஒன்று சொல்லட்டுமா. இந்த பரத கண்டத்திலேயே நான் பார்த்தவரை மிகச்சிறப்பாக இருப்பது சோழ வளநாடு மட்டுமே. வளநாடு, வளநாடு என்று சொல்கிறார்கள். அந்த வளநாடு என்பதற்கு முழு அர்த்தமாக சோழதேசம் திகழ்கிறது."

"ஒரு தேசத்தின் உயர்வை எதை வைத்து மதிப்பீடு செய்கிறாய் ரவிதாஸா."

தருமதாஸர் சற்று வேகமாகக் கேட்டார்.

அவர் குரலில் கோபம் இருந்தது.

"நீ சொல்வது போல சோழ தேசம் ஒன்றும் பெரிய அற்புதமான விஷயமில்லை என்கிற த்வனி இருந்தது. ஒரு தேசம் வளமானது என்று எப்படிச் சொல்வது. பயிர் பச்சைகளை வைத்தா, செல்வப் புழக்கமா, படை பலமா. இல்லை என்று நான் கருதுகிறேன். ஒரு தேசம் சுபிட்சமாக இருக்கிறது என்பதை மக்கள் முகத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். மக்கள் விடுதலையாக இருக்கிறார்களா... இல்லையா என்பதுதான் தேச சுபிட்சத்தின் அடையாளம்."

"சோழ தேசத்தில் மக்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள். தளபதிகளை கேள்வி கேட்கிறார்கள். அதிகாரிகளை அதட்டுகிறார்கள். கலைக்கல்விகளில் உயர்ந்து இருக்கிறார்கள். இன்னும் இன்னும் உன்னதமான வாழ்க்கை முறைக்கு தங்களை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ராஷ்டிரகூட மன்னன் கிருஷ்ணனால் கைபிடிக்கப்பட்ட பல இடங்களை சுந்தரசோழன் மீட்டு விட்டான். அங்குள்ள சிற்றரசர்களை தன்பக்கம் வளைத்துக் கொண்டு என்றென்றும் சோழ தேசத்துக்கு நட்பாக இருக்கும்படி பல விஷயங்களை செய்து முடித்துவிட்டான்."

"சிற்றரசனை ஒரு பேரரசன் அங்கீகரிப்பது எப்படி"

"முதல் விஷயம் திருமண சம்மந்தம். இரண்டாவது அவன் ஊரில் பேரரசன் கோவில் எழுப்புதல். இன்னும் உற்றுக் கவனித் தீர்கள் என்றால் வேறு எவரோ எழுப்பிய கோவிலுக்கு ஒரு பேரரசன் நிவந்தங்கள் அளித்து, நல்ல தங்க நகைகள் கொடுத்து அந்தக் கோவிலை பழுது பார்த்தால் கூடப்போதும், உன்னதமான ஒரு நட்பு அங்கு ஏற்பட்டு விடுகிறது. மக்களுக்கு எதுவும் செய்யாமல் கோவிலுக்கு செய்வது என்பதை சோழ மன்னர்கள் வெகு எளிதாக முன் வைக்கிறார்கள். ஆனால், கெட்டிக்காரத்தனமாக சோழ மன்னன் மக்களுக்கும் செய் கிறான். மக்களுக்கு நடுவே இருக்கும் கலைஞர்களை தேர்ந் தெடுத்து அவர்களை ஆதரிக்கிறான். அவர்களுக்கு சன்மானம் வழங்குகின்றான். தன்னுடைய பெயரால் ஆதுரச்சாலை எழுப்பவும், தன்னுடைய பெயரால் கால்வாய்கள் வெட்டவும், கிணறுகள் தூர் எடுக்கவும், சோழ தேசத்து ஆட்களுக்கு பெரும் பணம் கொடுத்து அங்கே வேலை செய்யச் சொல்கிறான். ராஷ்டிர கூடத்திலும், மேலைச் சாளுக்கியத்திலும், கீழைச் சாளுக்கியத்திலும், ஏன் பாண்டிய தேசத்திலும் அவ்வப்போது புகுந்து கொள்ளையடித்த பெரும் செல்வத்தை அம்மாதிரியான சிற்றரசர்களுக்கு, அவர்களின் படைவீரர்களுக்கு பங்குபோட்டு கொடுத்து விடுகிறான். சோழ மன்னரிடமிருந்து சரியான பங்கு வாங்கின படை வீரர்கள் சோழ மன்னனை குனிந்து, வணங்கி போற்றுகிறார்கள். அந்த சிற்றரசனைவிட, அவர்களுடைய படை மிக மிக தாழ்மையாக சோழப்பேரரசருக்கு கட்டுப்பட் டிருக்கிறது. அவர்கள் ஊருக்கு வரும் சோழ வீரர்களை மிக மரியாதையுடன் நடத்துகிறது."

திருவொற்றியூரிலிருந்து திருப்பதி வரை வங்கக் கடலி லிருந்து பாண்டிய தேசத்து எல்லை வரை, எல்லா சிற்றரசர் களையும் அவர்கள் தங்கள் வசப்படுத்தி வைக்கிறார்கள். ஆடல் கலைஞர்களும், பாடல் கலைஞர்களும், புலவர்களும் இந்த சிற்றரசர்களின் தேசத்திற்கு அடிக்கடி போய் வருகிறார்கள். வணிகர்களின் உணவுப்பண்டங்களும் தானியங்களும் இடை

யறாது, இடையறாது சோழ தேசத்தின் எல்லாப் பகுதிக்கும் நகர்ந்து கொண்டே இருக்கின்றன. அறுவடை முடித்து, தானி யத்தை வரியாகக் கொடுத்த மறுகணம், உழவர்கள் கும்பல் கும்பலாக தங்கள் பெண்டு பிள்ளைகளோடு ஊர்பார்க்க நகர்ந்து விடுகிறார்கள்.

அந்தி சாய்ந்தால் போதும், தீப்பந்தங்களை கொளுத்தி வைத்து வாசனை எண்ணெய்களை விட்டு, அகிற்புகை போட்டு தெருவில் தண்ணீர் தெளித்து ஆடலுக்கோ, பாட லுக்கோ, பேச்சிற்கோ, கவிதை வாசிப்பிற்கோ தயாராகி விடு கிறார்கள்.

"போர்ப் பயிற்சி?"

ஒரு கிழவர் ஆவலோடு கேட்டார்.

"அவை மறவர்களிடம் மட்டுமே மிக ரகசியமாக, மூங்கில் களை அரணாக எழுப்பிய பெரிய திடலுக்குள் நடைபெறு கின்றன. பெண்டுகளோ, அந்தணர்களோ பார்க்கும்படி அவர்கள் போர்ப்பயிற்சி செய்வதில்லை."

"ஏன். எதனால்"

"போர்ப் பயிற்சியின்போது, தவறுகளையோ, தோல்வி களையோ, பெண்டுகள் பார்த்துச் சிரித்தால் கோபம் ஏற்பட்டு, அதனால்கூட பயிற்சியில் ஈடுபடுவோர் மீது தாக்குதல் நடத்து கின்ற அல்லது தந்திரம் செய்கிற மனோபாவனை வந்துவிடும்."

"நம் பெண்டுகள் சிரித்து நம் ஆட்களே அடிவாங்க வேண்டுமா என்று மறைப்பாக செயல்படுகிறார்கள்."

"அது சரி. அந்தணர்கள் ஏன் பார்க்க வேண்டாம் என்கிறார் கள்."

"கிட்டத்தட்ட அந்தணர்கள்கூட, போர்ப் பயிற்சியின் போது நின்று பார்த்து தேவையில்லாமல் பேசுகிறார்கள். ஊம்... போடு. அப்படிப் போடு என்று ஆர்ப்பரிக்கிறார்கள். அதைத் தவிர்ப்பதற் காக அவர்களையும் அண்டவிடுவதில்லை."

"யாரை அண்ட விடுகிறார்கள்."

"யாருக்கு போர்ப் பயிற்சியில் ஆர்வம் இருக்கிறதோ, யார் போர்ப் பயிற்சியில் ஈடுபடுகிறாரோ, அவர்தான் போர்ப் பயிற்சியை பார்க்கவும் லாயக்கானவர். வேறு எவரும் இல்லை என்று சொல்கிறார்கள்."

"அடாடா... நல்ல தெளிவான எண்ணமாக இருக்கிறதே."

ஒரு கிழவர் உரக்கச் சொன்னார்.

"ஒன்று புரிகிறது."

மற்றொரு கிழவர் மெல்ல கனைத்தபடி பேசினார்.

"என்ன புரிகிறது."

"பெண்டுகளும், அந்தணர்களும் ஒன்று என்று சோழர்கள் நினைக்கிறார்கள்" என்று சொல்ல அங்கு சிரிப்பொலி பரவியது.

"இது சிரிப்பதற்கான விஷயம் அல்ல. அந்தணர்களை கேவலப்படுத்துகின்ற விஷயம்."

அபிப்ராயம் சொன்னவர் உரத்துச் சொன்னார்.

"ஆனால், அது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நீங்கள் என்ன செய்வீர்கள்."

"போரின் வலி தெரியாதவன் கத்தியும், கம்பும் மேலே படும்போது, பிய்ந்து பீய்ச்சி அடிக்கின்ற ரத்தத்தின் சூடு உணராதவன், மரணம் தெரியாதவன் தொலைவில் நின்று கைகட்டிக் கொண்டு அடிபோடு, விளையாடு என்று உற்சாகப்படுத்தினால் அல்லது பெண்டுகள் போல் கெக்கெக்கே என்று சிரித்தால் அது எவ்வளவு பெரிய அவமானம். அப்படிச் சிரிப்பது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். எனவே, மூங்கில் தடுப்புக்குள் பயிற்சி செய்கிறார்கள் என்பது மிக உத்தமமான விஷயம். யாரோ ஞானமுள்ளவன் இதைக் கண்டுபிடித்திருக்கிறான்."

பானுகோபர் உரக்கச் சொல்ல மற்றவர்கள் ஆமோதித்தார்கள்.

"வேறென்ன..."

"விளைநிலங்கள் அளக்க ஆரம்பித்திருக்கிறார்கள்."

"என்னது?"

"அப்படியொரு எண்ணம் அவர்களுக்கு வந்திருக்கிறது."

"ஏன்"

"வரிவசூலிப்பு சரியாக இருக்க வேண்டுமென்பதற்காக."

"எந்தெந்த நிலங்களை."

"திருவொற்றியூரிலிருந்து திரிச்சீரபுரம் வரை உள்ள நிலங்களை..."

"அடேங்கப்பா... அதை எழுதி எங்கே சமர்ப்பிப்பார்கள்."

"அந்த கிராமத்து சபையினரிடம். அந்த கிராமத்து சபையினர் ஒன்றுகூடி, அந்த மங்கலம் அல்லது வேளாண்வகை நிலத்து கிழார்களிடம் சமர்ப்பிப்பார்கள். வேளாண்வகை நிலக்கிழார்கள் அதை முதல் மந்திரிக்கும், அரசனுக்கும் சமர்ப்பிப்பார்கள். அரசனிடம் ஒட்டுமொத்தமாய் இப்பொழுது எத்தனை நிலங்களில் எத்தனை போகம் விளைகிறது என்கிற குறிப்பு தெளிவாக இருக்கும். அப்போது எவ்வளவு வரி விதிக்கலாம் என்கிற எண்ணமும் அரசனுக்கு நன்றாகப் புரிந்துவிடும். மக்களை கஷ்டப்படுத்தக்கூடாது என்றும் அதே நேரத்தில் மக்கள் முழுவதும் அனுபவித்து விடக்கூடாது என்றும் அரசர்களும், முதல் மந்திரிகளும் கவனமாக இருக்கிறார்கள்."

"இது ஆகக்கூடிய காரியமா."

"செய்தே தீர வேண்டும் என்று சில சேனாதிபதிகளும், மந்திரிகளும் சொல்கிறார்கள்."

"யார் அந்த சேனாதிபதி."

"ஒரு அந்தணன்"

ரவிதாஸன் சிரித்தபடி சொன்னான்.

சட்டென்று அங்கு மௌனம் நிலவியது.

எல்லோரும் பார்த்துக் கொண்டார்கள்.

"பெயரென்ன."

"கிருஷ்ணன்ராமன். அமண்குடி என்ற கிராமத்திலிருந்து வந்திருக்கிறான். இப்பொழுதுதான் சேனாதிபதி பதவியை ஏற்றிருக்கிறான். நல்ல திறமை. நல்ல துடிப்பு."

"சோழ அந்தணனா."

"இல்லை மகத தேசம். கிழக்குக் கடற்கரையோரம். அங்குள்ள அந்தணர்கள் பலமுள்ளவர்கள். வாள் பயிற்சி செய்தவர்கள். சேனையை நடத்த வல்லவர்கள். விவேகமுள்ளவர்கள். ஆனால், கிருஷ்ணன்ராமன் பல தலைமுறைகளாக இங்கு குடியிருக்கிறான். அவனுடைய வேர். அவன் பரம்பரை. திராஷாராமாவுக்கு* அருகே இருக்கிறது. அங்கு அந்தணர்கள் போர்வீரர்கள். தாஷ்டிகமாக இருப்பார்கள்."

வேறொருவர் சொல்ல கூட்டம் ஆமோதித்தது.

"வேறு என்ன மாற்றங்கள்."

"இடையறாது கட்டிடங்கள். அந்த செங்கல்லால் கட்டப்பட்ட கோட்டைகள். அவைகளுக்கு ஓடுகள் போடாமல் தளம் போடுகிறார்கள். தளத்தின் மீது சூடு கீழே இறங்காமல் இருக்க தென்னோலைகளால் கூரைகள் போட்டு விடுகிறார்கள். அரண்மனை முழுவதும் தளம். மேலே ஓலைப்பந்தல். மாலை நேரங்களில் அந்த ஓலைப்பந்தல் கீழே உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு வீடும், பாட்டும், பேச்சும், சிரிப்புமாய் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறது. நன்கு இருட்டிய பிறகு நிலவு மேலே நன்கு எழும்பிய பிறகுதான் உறங்கவே போகிறார்கள். சூரிய உதயத்தின் போதுதான் எழுந்திருக்கிறார்கள். விதம் விதமாக காய்கறிகளை சமைத்து உண்கிறார்கள். வெஞ்சினம் என்கிறார்கள். கூட்டு, கறி, துவையல், பிரட்டல், வதக்கல் என்று விதம் விதமாக சாப்பிடுகிறார்கள். அரிசி மாவும், காய்கறிகளும் போட்டு கொதிக்க வைத்த குழம்பை சோற்றிலே ஊற்றி பிசைந்து சாப்பிடுகிறார்கள். வறுத்த உணவுகளை துணைக்கு

* ஒரிஸா மாநிலம் பூரிக்கு அருகே உள்ள இடம் திராஷா ராமா

வைத்துக் கொள்கிறார்கள். வறுத்த உணவுகள் என்றால் வாழைக்காய் வறுவல், கொத்தவரங்காய் வறுவல், சுண்டைக்காய் வறுவல், கத்தரிக்காய் வறுவல் என்று பலதும் உப்பிட்டு செய்து வைத்திருக்கிறார்கள். அதை எண்ணெயில் பொரித்து உண்கிறார்கள்."

"மாமிச உணவும் தூக்கல்தானோ."

"அடேயப்பா. விதம்விதமான மாமிச உணவுகள் சோழ தேசத்தினர் சாப்பிடவே பிறந்தது போல சாப்பிடுகிறார்கள். பலகாரக் கடைகள் அதிகமிருக்கின்றன. தேங்காய் புட்டும், அரிசிப்புட்டும் விற்கிறார்கள். சேர தேசத்து பாணி என்று சொல்கிறார்கள். ஆனால், சேர தேச புட்டுக்கும், அவர்கள் புட்டுக்கும் அதிக வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் வெல்லப் புட்டு என்று ஒன்று செய்கிறார்கள். மிக நன்றாக இருக்கிறது."

"வியாபாரமாகிறதா."

"காலை விடிந்ததுமே, தீர்ந்து போகிறது. அரிசி மாவை புளிக்க வைத்து பானைக்குழியில் ஊற்றி வேகவைத்து, ஒரு ஆவி பொங்கும் மணத்தோடு குழம்பில் ஊற்றி சாப்பிடுகிறார்கள். இதற்கு *இடரிக என்று பெயர். காலை எழுந்ததும் அதிரசங்களையும், வேக வைத்த இந்த அரிசி மாவையும் சாப்பிடுகிறார்கள்."

"மது வகைகள்?"

"தென்னங்கள்ளுதான் அங்கு உச்சகட்ட வியாபாரம். மாலையில் சிறிதளவு பெண்களும் கள்ளு சாப்பிடுகிறார்கள். போர் வீரர்கள் பனங்கள் குடிக்கிறார்கள். வெகு சிலரே முந்திரி சாராயமோ அல்லது சோற்றைப் புதைத்து வைத்த சாராயமோ சாப்பிடுகிறார்கள்."

"சோழ வீரர்கள் மது அருந்திவிட்டு பெரிதாக சத்தம் போடுவார்களே."

* இட்டலி

"இல்லை. அப்படிச் சத்தமிட்டால், அவர்கள் தண்டிக்கப் படுகிறார்கள். ஆனாலும், அங்கங்கே இந்த மாதிரி ரகளை நடந்து கொண்டுதான் இருக்கிறது."

"பொது மகளிர் அதிகமென்று சொல்லப்படுகிறதே."

கிழவர் கூர்மையாக ரவிதாஸனைப் பார்த்துக் கேட்டார்.

"ஆமாம். இருக்கிறார்கள். அங்கே இரவும், பகலும் நாட்டிய நாடகங்களும், கவிதை வாசிப்பும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது."

"கோயில் திருவிழாக்கள் உண்டா."

"அதிகம். நெற்பயிரில் பால்பிடித்து பிறகு கதிர் வளரும் நாட்களில் யாரும் எந்த விழாக்களுக்கும் போவதில்லை. கதிர் அறுத்த பிறகு தொடர்ந்து ஏதேனும் விழாக்கள் நடந்த வண்ணம்தான் இருக்கின்றன."

"அக்னி நட்சத்திரம் முடிந்து மறுபடியும் ஒரு மழை வரும்பொழுது நிலம் குளிர அவர்கள் பருப்பு வகைகள் விதைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். அதிகம் காய்கறிகள் பயிரிடுகிறார்கள். நிலத்தை வெறுமே உழுது உழுது புரட்டிப் போடுகிறார்கள். புற்களையும், தழைகளையும் கொண்டு வந்து போட்டு உரமாக்குகிறார்கள். மாடுகளை பட்டியிலிட்டு அதன் சாணத்தை பிரட்டிப் போடுகிறார்கள்."

"கறவைகள் நன்றாக இருக்கின்றனவா."

"ஆமாம். அவர்களுக்கென்று சிறிய கொம்புள்ள மோழைகள் இருக்கின்றன. அவர்கள், மேலைச் சாளுக்கியத்திலிருந்து நீண்ட கொம்புள்ள பலமான எருதுகளையும், பொந்திப்பி நாட்டிலிருந்து நல்ல எருமைகளையும், கங்க நாட்டிலிருந்து இன்னும் அதிகமான புதுவகை பசுக்களையும் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள். பால், தயிருக்குப் பஞ்சமேயில்லை. குட மலை நாட்டு ஆடுகள் அதிகமிருக்கின்றன. நல்ல ரோமமுள்ள ஆடுகள். நாணயங்கள் அச்சிட்டிருக்கிறார்கள். ஆனாலும், பண்டமாற்று வியாபாரம்தால் அங்கு கொடிகட்டிப் பறக்கிறது."

"சுந்தரசோழன் எப்படியிருக்கிறார்?"

"அவ்வளவு உற்சாகமாக இல்லை. கிட்டத்தட்ட சோழ தேசத்தின் ஆளுமை முழுவதும் சேனாதிபதிகளின் கையிலும், மந்திரிமார்களின் கையிலும் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அதை திறம்பட நிறைவேற்றுகிறார்கள். சுந்தரசோழர் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் ஆரோக்கியமாக இல்லை என்பது என்னுடைய அபிப்ராயம். ஆனால், வெளியே எதையும் சொல்ல மறுக்கிறார்கள்."

"நாம் போவது பாண்டிய நாட்டிற்கு... பாண்டிய நாட்டைப் பற்றி ரவிதாஸன் அவர்கள் ஒன்றுமே சொல்லவில்லையே."

ஒரு வாலிபன் கேட்டான்.

"அடேய் பயலே... உனக்கு இப்பொழுது மீசை முளைத்து விட்டதா. கேள்வி கேட்கிறாயா."

ரவிதாஸன் கையிலிருந்த சிறு பிரம்பால், அந்த இளைஞ னின் புறங்கையில் அடித்தான். மிகச் சந்தோஷமாகப் பார்த்தான். இன்னும் வேண்டுமானால் அடித்துக்கொள்ளுங்கள் என்பது போல் இளைஞன் வலது புஜத்தைக் காட்ட, பிரம்பு அவன் வலது புஜத்தை ஆசிர்வாதம் போல் தொட்டுவிட்டு நகர்ந்தது.

"பாண்டிய தேசத்தில் உற்சாகம் அதிகமில்லை. நிர்வாகக் கோளாறுகள் மிக அதிகம். சுயநலமிக்க அதிகாரிகள்தான் பாண் டிய தேசத்தை சூறையாடிக் கொண்டிருக்கிறார்கள். அரசன் சிலசமயம் கவனித்து கடுமையாக நடவடிக்கை எடுக்கிறான். பலசமயம் கண்டும் காணாமல் போய்விடுகிறான். ஆகவே, அரசனுடைய தயவைப் பெறவே எல்லா அதிகாரிகளும் முழு மூச்சாய் முனைந்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் என்பது அவர்களுக்கு முக்கியமேயில்லை. அரசனைப் போற்றுவதும், அரசனுக்கு பரிசுப் பொருட்கள் கொடுப்பதும், அரசன் என்ன கேட்டாலும் உடனடியாக நிறைவேற்றுவதுமே, அவர்கள் குறிக்கோளாக இருக்கின்றன. இங்கு மக்களுடைய நிலைமை என்ன என்று தெரியவே இல்லை. உதாரணமாக அரசன் எதிர்

வீட்டுப் பெண்ணைக் கேட்டாலும், அவளைக் கையகப் படுத்தி, கொண்டு போய் அரசனுக்கு முன்னே நிறுத்தி வைக்க பல தளபதிகள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். செய்யவும் செய்திருக்கிறார்கள். இது மக்கள் மத்தியிலே கசப்புணர்வை ஏற்படுத்துகிறது."

விளைநிலங்களை செம்மையாக கவனிப்பதில்லை. இதனால் விளைச்சல் சற்று குறைவுதான். ஆனாலும், பாண்டிய தேசத்து காட்டுப் பொருட்களை சோழ தேசத்தில் கொண்டு போய் விற்கின்ற ஒரு விஷயம் வேகமாக நடந்து கொண்டிருக்கிறது. விவசாயிகளைவிட காட்டு வாசிகள் செல்வச் செழிப்பாக இருக்கிறார்கள். ஒரு பானை தேனுக்கு ஒரு கூடை நெல் கொடுப்பார்கள் என்பதால் தேன் எடுத்து தேனில் வெல்லப்பாகு கலந்து கொண்டு போய் சோழ தேசத்தில் விற்கிறார்கள். மூலிகைகளுக்கும், காட்டுப் புற்களுக்கும் சோழ தேசத்தில் அத்தனை மதிப்பு.

"பாண்டிய தேசத்தில் அடிப்படையான குறை என்ன."

"லஞ்சம். அதிகமான லஞ்ச லாவண்யம். கொடூரமான தண்டனைகள். இது மக்களிடையே அரசாங்கத்தின் மீது வெறுப்பு ஏற்படுத்தியிருக்கிறது."

"அரசனை மக்கள் நிந்திக்கிறார்களா."

"இல்லை. அதுதான் இல்லை. வீரபாண்டியன் மீது மக்களுக்கு மிகப்பெரிய காதல் இருக்கிறது."

"அவன் இளைஞன்தானே. அவனையா நம்புகிறார்கள்."

"ஆமாம்."

"முதியோர்களை மக்கள் நம்புவதில்லை. இளைஞன் சற்று ஒழுக்கமாக இருந்தால், நல்ல அரசனாகி விடுவான் என்று சொல்லி அவனை பலரும் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்."

"இது எனக்குப் புரியவில்லையே. முதியோர்களை மதிப்பது தானே எல்லா ஊரிலும் பழக்கம்."

"உண்மைதான். ஆனால் பாண்டிய தேசத்து முதியவர்கள் இளம் பெண்களை திருமணம் செய்து கொண்டு கொடுமைப்

படுத்துகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். சேர தேசத்தில் சற்று குறைவு."

"இல்லை. சேர தேசத்தில் தொடர்பில்லாத கிராமங்கள் அதிகம். அந்த கிராமங்களுக்குள் என்ன நடக்கிறது என்று நமக்குத் தெரியவேயில்லை. பாண்டிய தேசமும், சோழ தேசமும் வேறு மாதிரியானவை. அங்கு யார் என்ன செய்தாலும் உடனே வெளியே வந்துவிடுகின்றன. மக்கள் அதைப்பற்றி கூடிப்பேச ஆரம்பித்துவிடுகிறார்கள். கூட்டத்தில் கூவுகிறார்கள். அதற்கு அதிகாரிகள் பயப்படுகிறார்கள்."

"ஏன். பாண்டியதேசத்தில் இவை நடப்பதில்லையா."

"நடந்தது. ஒரு பாணன் நாடகம் போட்டான். ஒரு அதிகாரியை கேலி செய்தான்."

"எதில். நாடகத்திலா."

"ஆமாம். அந்த அதிகாரிக்கு ஞாபகமறதி அதிகம். அரசியை மனைவி என்று நினைத்துக் கொள்கிறான். மனைவியை அரசி என்று நினைத்து கொள்கிறான். ஒரே குழப்பம். வயிறு வெடிக்க ஜனங்கள் சிரிக்கின்ற நாடகமது. அதைப் பார்த்துவிட்டு அந்த அதிகாரி கோபமடைந்தான். மக்கள் தடுக்கத் தடுக்க அந்தப் பாணனை கதறக்கதற சவுக்கால் அடித்தான். அவனை நடுத் தெருவில் பலபேர் முன்பு கைகால்களை துண்டமாக்கி பிறகு கழுத்தையும் சீவித் தள்ளினான். நாப்பது பேர் கொண்ட அந்தப் பாணர் குழு நெஞ்சில் அடித்துக் கொண்டு வெட்டுப்பட்டவனை தொடாமல், மூட்டை முடிச்சுகளோடு மதுரையை விட்டு சோழதேசம் நோக்கி நகர்ந்துவிட்டது. அந்தப் பாணனின் மனைவி கதறிய கதறல் இருக்கிறதே இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது."

"இதை அரசன் கேட்கவே இல்லையா."

"கேட்க முயற்சிக்க வேறு அதிகாரிகள் தடுத்து விட்டார்கள்."

"ஏன். என்ன காரணம்"

"இப்படி கேலி செய்து நாடகம் போடுகிறவர்களை, பாட்டுப் பாடுகிறவர்களை கண்டிக்காது போனால் தொடர்ந்து எல்லோ ரையும் கேலி செய்து கொண்டிருப்பார்கள். அதனால், இவனை இப்படிக் கண்டிப்பது, வெட்டிப் போடுவது நல்லது என்று அவர்கள் நினைக்கிறார்கள். உனக்கு எந்த ஆபத்தும் வராது. கவலைப்படாதே என்று முட்டாள் அதிகாரிகள் தட்டிக் கொடுக்கிறார்கள்."

"அதாவது அதிகாரிகள் மட்டத்தில் ஒரு ஒற்றுமை ஏற்பட்டு விட்டது."

"ஆமாம். அதிகாரிகள் ஒன்றுகூடி, அரசாங்கத்தை கைப்பற்ற நினைக்கிறார்கள். சில பகுதிகளை பிரித்து வரிவசூல் செய்கிறார்கள். இந்த வரிவசூலிலும் பல முட்டாள்தனங்கள் இருக்கின்றன. அணைக்கு அருகேயுள்ள வயல் வெளிகளில் உள்ள. விவசாயிகளுக்கு என்ன வரியோ... அந்த வரிதான் தேரிக் காட்டில் பனை மரங்களுக்கு நடுவே இருக்கின்ற மனிதர் களுக்கு வரி. அங்கு வாழும் மனிதர்களுக்கு வரி என்றாலே என்னவென்று தெரியவில்லை. எதற்கு வரி. எதற்கு வரி என்று கேட்கிறார்கள்."

"தேரிக் காட்டில் என்ன வருமானம்."

"பனை மரம்தான். பனைமரத்தை வெட்டி எடுத்துக் கொண்டு வந்து, கோட்டை அரண்மனைகளாக வீட்டின் உத்தி ரங்களாக, தூண்களாக, மாட்டுக் கொட்டகைகள் கட்டுவதற் காக உபயோகப்படுத்துகிறார்கள். பனை மட்டையிலிருந்து நார் எடுத்து, அந்த நாரை கயிறாய் திரித்து பெரிய வளையங்கள் செய்து அவைகளையும் விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள். பனை ஓலைகளில் அழுத்தமான, விதம் விதமான கூடைகள் முடைகிறார்கள். அவைகளுக்கு வரி விதிக்கத் தெரியவில்லை. ஒரு வேலி பனை மரத்திற்கு இத்தனை வரி என்று சொன்னால் அவன் என்ன செய்வான்."

"பாண்டிய நாட்டில் கெட்டிக்கார மறவர்கள் உண்டா."

"கெட்டிக்காரர்கள் எங்கும் உண்டு. ஆனால், இங்கு முட்டாள்களின் கை ஓங்கியிருக்கிறது என்று சொல்ல வரு கிறேன்."

அதற்குள் அந்த அந்தணப் பெண்டிர்கள் சற்று தள்ளிப் போய் அடுப்பு மூட்டி அரிசி நொய்யை கஞ்சியாக்கி, மாங்காயும், வெல்லமும் கலந்து பச்சடி வைத்து குழந்தைகளுக்கும், யுவதிகளுக்கும் கொடுத்துவிட்டு பெரிய சட்டியோடு இங்கு வந்தார்கள்.

"மோர் இல்லை. அதனால் புளிப்பில்லாத கஞ்சியாக இருக்கும். எல்லோரும் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்ல பானுகோபர் ஆச்சரியத்தோடு அந்தப் பெண்களைப் பார்த்தார்.

"உணவு வகைகளை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று சொன்னேனே."

"நான் தானியம்தான் எடுத்தேன். உணவு எடுக்கவில்லை."

அந்த வயது முதிர்ந்தவள் சொல்ல, அவள் கைகளை பலபேர் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டார்கள்.

"அடுத்த வேளைக்கும் தானியம் வைத்திருக்கிறாயா."

பானுகோபர் கேட்க சுபாஷிணி சிரித்தாள்.

"என்ன சிரிப்பு."

"அடுத்த வேளை உணவை, அடுத்த வேளை யோசிப்போம். இப்போது இருக்கும் உணவை உண்போம். ஒரு பெரிய கலயத்தில் ரவிதாஸனுக்கும் கஞ்சி கொடுக்கப்பட்டது."

அவன் நிமிர்ந்து வானம் பார்த்தான். சிறிதளவு நீர் உட்கொண்டான். கண்மூடி உட்கார்ந்திருந்தான். காயத்ரீ ஜபம் உள்ளுக்குள் உருண்டது. பிறகு மெல்ல கஞ்சியை முகர்ந்து பார்த்து கீழே வைத்துவிட்டான். மற்றவர்களும் அப்படியே செய்தார்கள். பரிமாறியதை உடனே உண்ணாமல் சற்று காத் திருந்தார்கள். உடம்பு உணவுக்குத் தவிப்பதை மட்டுப்படுத்தி னார்கள்.

"உங்களுக்கு உணவு இருக்கிறதா" என்று கேட்க, "ஆஹா... இன்னொரு பானை உணவிருக்கிறது" என்று சுபாஷிணி சொன்னாள்.

"நீங்களும் சாப்பிடுங்கள். தாமதிக்க வேண்டாம்."

அந்தப் பெண்கள் நகர்ந்து போய் வட்டமாக உட்கார்ந்து கொண்டார்கள். அவர்களுக்கும் கலயங்கள் கொடுக்கப்பட்டன. நொய் கஞ்சி ஊற்றப்பட்டது.

ஆண்கள் கஞ்சிக் குடிக்க ரவிதாஸன் ரசித்துச் சாப்பிட்டான்.

"ஆஹா... சேர தேசத்து அரிசிக்கு சுவை அதிகம். பசைச்சத்து அதிகம் அதில் கலந்திருக்கிறது. உப்பிடாமலேயே மிகச் சிறப்பாக இருக்கிறது பாருங்கள். ஆனால், சோழதேசத்து உணவு சொடேர் என்று உப்போடு சாப்பிட்டு இந்த உப்பு இல்லாமல் இருப்பது சற்று சிரமமாக இருக்கிறது. எவரிடமேனும் உப்பு இருக்குமா" என்று கேட்க ஒரு இளைஞன் ஓடிப்போய் உப்பு எடுத்து வந்து கிச்சிலி இலையில் வைத்து நசுக்கி அதை அப்படியே அவனுடைய கிண்ணத்தில் போட்டான். குச்சியில் கலக்கினான்.

ரவிதாஸன் ஆசை தீர அனுபவித்து கஞ்சியைப் பருகினான். பச்சடியை விழுங்கினான்.

"கடிகையைத் தேடி மாணவர்கள் வருவது போக, இப்போது கடிகை மாணவர்களைத் தேடிப் போகிறதோ" என்று சொல்லி விட்டுச் சிரித்தான். மற்றவரும் சிரித்தார்கள்.

"ஆமாம். அப்படித்தான். பாண்டியதேசத்தில் நம்மால் கால் ஊன்ற முடியுமா."

"வெகு எளிதாக முடியும். ஆனால், பாண்டிய தேசத்து வீரர்களின் ஒழுங்கீனங்களை, முரட்டுத்தனங்களை சகித்துக் கொள்ள நாம் பழகிக் கொள்ள வேண்டும்."

"என்னவாக அங்கு கால் ஊன்றுவது. அங்கு கடிகை ஆரம்பிப்பதா அல்லது வெறும் வேதபாராயணம்தானா."

"வைத்தியம் என்று துவங்குவோம். உணவாலும் இன்ன பிற விஷயங்களாலும் நிறைய நோய்கள் இருக்கின்றன. ஜோசியம் பார்க்க அவர்கள் பரபரக்கிறார்கள். வைத்தியமும், ஜோசியமும் ஆரம்பித்து பிறகு தேவைப்பட்டால் களரிப்பயிற்சியை துவங்குவோம். நல்ல அமைதியான மறவர்களை தேர்ந்தெடுப்போம். இன்னும் அமைதியாக்குவோம்."

"முரட்டு வீரர்கள் அதிகம் என்று சொன்னாயே."

"ஆமாம். தேரிக் காட்டிலிருந்து வந்த அந்த வீரர்கள் முரடர்களாகத்தான் இருக்கிறார்கள். இரவு நேரத்தில் குடித்துவிட்டு மதுரை முழுவதும் அலைகிறார்கள்."

"அவர்களை வசப்படுத்த முடியாதா."

"இல்லை. அப்படியொரு ஒழுக்கத்திற்கு உட்படக்கூடாது என்று அந்த வீரர்கள் நினைத்துக் கொள்கிறார்கள்."

"எதனால்."

"அந்த வீரர்களை அரசன் எப்பொழுதும் முன்னே போகும் படையாக அனுப்புகிறான். அனேகமாக களபலியாக அவர்கள் தான் திகழ்கிறார்கள். அவர்களுக்கு சிறுவயது முதற்கொண்டே அதுவொரு வீர விஷயம். மரணத்தை வரவேற்கத் தயாராக இரு என்று சொல்லிக் கொடுப்பதால் அவர்கள் உக்கிரமாக முன்னேறி சண்டை போடுகிறார்கள். அதில் பலபேர் இறக்கிறார்கள். கண் முன்னே மரணம் பார்த்ததால் அவர்களுக்கு வாழ்க்கை விளையாட்டாய், திமிர் நிறைந்ததாய், ஒழுங்கீனமற்றதாய், கிடைத்த நேரத்தில் கிடைத்ததை அனுபவித்து விடவேண்டுமென்ற கோபாவேசமாய் இருக்கிறது."

"எனக்குப் புரிகிறது. ஆனால், ஒரு படையெடுப்பை இப்படிப்பட்ட ஆட்களை வைத்துக் கொண்டு நடத்துவது நல்லதா."

"அது இதுவரை சொல்லுபடியாகிறது."

"இனிமேல் செல்லுபடியாகாது என்று நினைக்கிறேன். சோழர்கள் இந்த விதமான தாக்குதல்களை புரிந்து கொண்டு விட்டார்கள்."

"எப்படி சோழர்கள் சமாளிக்கிறார்கள்."

"ஒரு படையை நிறுத்தி அவர்களை நோக்கி இந்த ஒழுங்கீன மற்ற படை வந்ததும் மிக வேகமாகப் பின் வாங்குகிறார்கள். துரத்திக் கொண்டு ஓடுவது போல ஒழுங்கீனமற்ற படை, சோழப்படையை துரத்திக் கொண்டு ஓடுகிறது. சோழப் படையை துரத்திக் கொண்டு ஓடியதும் சட்டென்று புதர்களில், மரங்களில் ஒளிந்து கொண்டிருக்கிற மற்றொரு படை இவர்களை சுற்றி வளைத்துக் கொள்கிறது. கவன் கல்லும், பொறி வில்லும், அம்பும், ஈட்டியும் கொண்டு அவர்களை நாலாபக்கமும் தாக்குகிறார்கள். யானைகளை விட்டு நசுக்குகிறார்கள். போன வருடம் சித்ரா பௌர்ணமி அன்று கிட்டத்தட்ட இம்மாதிரியான வீரர்கள் இருநூறு பேர் ஒரு எல்லைப் போரில் மடிந்து போனார்கள். பாண்டியன் மற்றவர்களை சவுக்கால் அடித்து நிறுத்திவிட்டான்."

"அப்படி நிறுத்தாவிட்டால் என்ன ஆகும்."

"மறுபடியும் போய் விட்டில் பூச்சிகள் போல விழுவார்கள். ஆனால், வேறு விஷயங்களும் செய்கிறார்கள்."

"என்ன."

"இரவோடு இரவாக சோழ தேசத்தின் வேறு பகுதிக்கு ஊடுருவிப் போய் அங்கு சட்டென்று வாள் உருவி குத்தி மக்களை கொலை செய்துவிட்டு திரும்பி ஓடிவந்து விடுகிறார்கள்."

"அடடே... என்ன அசிங்கம் இது."

"அசிங்கம்தான். ஆனால், இப்படித்தான் பழி வாங்கப்பட வேண்டும், நாங்கள் சிறுபடை பெரும்படையை இப்படித்தான் அழிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்."

"இது ஆண்மையற்ற செயலல்லவா."

"இதுபற்றி அவர்கள் கவலைப்படவில்லை. ஒழுங்கீனம் தான் எங்கள் குறிக்கோள் என்று சொல்கிறார்கள்."

"பாண்டியப்படை மொத்தமும் இப்படித்தானா."

"இல்லை. அதிகம் மது அருந்தாத, முறைப்படி பயிற்சி பெற்ற, மதுரை நகரத்து நாகரீகமான வாலிபர்கள் உண்டு. அவர்கள் கவிதை எழுதுவதில் வல்லவர்கள். சிலர் புல்லாங்குழலில் திருவாசகம், தேவாரம் வாசிக்கிறார்கள். வேதகானம் எழுப்புகிறார்கள். அதுதான் சொன்னேனே மதுரை எல்லாம் கலந்தது. ஆனால், நிச்சயம் உயர்ந்து வர முடியும். நல்ல இளைஞர்களை உருவாக்க முடியும். இப்பொழுது இருக்கிற இளைஞர்களுக்கு இன்னும் அதிகம் கற்றுக் கொடுக்க முடியும்."

"இப்பொழுதே கிளம்புவோம். சேரதேசமே உனக்கு வணக்கம். இனிமேல் உன்னை நான் பார்ப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை."

பானுகோபர், சேரதேசம் இருக்கும் இடம் நோக்கி கும்பிட்டார். எல்லோரும் எழுந்து நின்றார்கள். தெற்கு நோக்கி நகர்ந்து, பிறகு கிழக்கு நோக்கி வளைந்து மலைகளில் ஏறி, காடுகளூடு போய் காட்டினங்களை அதட்டி துரத்திவிட்டு, கழுகுகளை கவண் கல்லால் விரட்டி விட்டு மூலிகைக் கிழங்குகளையும், வேர்களையும், இலைகளையும் பறித்து காலியான கூடையில் போட்டுக் கொண்டு அதை கழுதைகளில் ஏற்றி சந்தன மரங்களை பக்குவமாக அறுத்து அவைகளை எருதுகளின் முதுகில் ஏற்றி மெல்ல மெல்ல பாண்டிய தேசத்தின் வயல்வெளிகளுக்கு வந்து நின்றார்கள். மலையிலிருந்து பொங்கிய காட்டாறு தேசத்தின் அந்தப் பகுதியில் ஊடறுத்துப் போனது. நெல்வயல்கள் தென்பட்டாலும், கம்பும், சோளமுமே அதிகம் விளைவிக்கப்பட்டிருந்தன.

சேர அந்தணர்களை ஊர்மக்கள் ஆச்சரியத்துடன் வரவேற்றார்கள். கிராம அதிகாரிகள் அவர்களை புரிந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள். வெந்நீர் வைத்துத் தரவா என்று கேட்டு பெரிய பாத்திரத்தில் சுடுதண்ணீர் வைத்து அதைக்

கொண்டு போய் அந்தணர்களுக்குக் கொடுத்தார்கள். அந்தணப் பெண்கள் தங்கள் புருஷர்களுக்கு அந்த சுடுநீர் வைத்து முதுகில் ஒத்தடம் கொடுத்தார்கள். அரிசியும், பருப்பும் விலை கொடுத்து வாங்கி உணவு தயாரித்தார்கள்.

பெரிய கோவில் மண்டபங்களில் யுவதிகளும், பெண்களும் படுத்துக் கொள்ள, ஆண்கள் வெட்டவெளியில் படுத்து எந்தக் கவலையுமின்றி நிம்மதியாகத் தூங்கினார்கள்.

இரண்டு நாளில் மதுரையை அடைந்தார்கள்.

மதுரையில் எக்காளம் முழங்க, சிறு முரசு ஒலிக்க அவர்கள் வரவேற்கப்பட்டார்கள். வந்து இறங்கிய நான்காவது நாழிகை வீரபாண்டியன் ஒரு குதிரைப்படையோடு வந்து கீழிறங்கினான்.

"யார் மகா மகா உபாத்யாயன். எங்கே அந்த பரணைக் கிழவர்" என்று கேட்டான்.

எல்லோரும் மௌனமாக நின்றார்கள்.

"அவரை நான் பார்த்திருக்கிறேன். என் தகப்பன் அவரை எனக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார். அவர் வரவில்லையா" என்று மறுபடியும் வினவினான்.

அவர்கள் நடந்ததைச் சொன்னார்கள்.

மிக வேதனையோடு அந்த அரசன் ஒரு ஆசனத்தில் தடேர் என்று உட்கார்ந்தான். கால் நீட்டினான். முகம் பொத்திக் கொண்டான். தங்களுடைய மகா மகா உபாத்யாயனுக்காக அந்த அரசன் கவலைப்படுவதைப் பார்த்து அந்த அந்தணர்கள் நெகிழ்ந்தார்கள்.

"ஒரு வார்த்தை சொல்லி அனுப்பியிருக்கலாம். நான் அவர்களை அள்ளிக் கொண்டு வந்து இங்கே இறக்கியிருப்பேன்."

மெல்லிய உருவமாய், உயரமாய் சற்று பழுப்பேறிய மீசைகளோடு முன்பக்கம் முடி குறைந்து, பின்பக்கம் நெளிநெளியான நீண்ட கேசத்தோடு அந்த இறுக்கிய தலைப்பாகையோடு அந்த

தலைப்பாகையில் சுற்றிய முத்து ஹாரத்தோடு, கழுத்தில் மிகப் பெரிய முத்து வடத்தோடு கைகளில் தங்கக்காப்போடு அதிக அலங்காரம் இன்றி சாதாரண படைவீரன் போல வீரபாண்டியன் இருந்தான்.

யார் மன்னர் என்பதில் மக்களுக்கு இடையறாது குழப்பம் ஏற்படுத்தவே வீரபாண்டியன் -விரும்பினான். சட்டென்று கிட்டத்தட்ட இதே அலங்காரத்தோடு இருக்கின்ற சேனாபதியை முன்னே அனுப்பிவிடுவான். மக்கள் சேனாபதியிடம் அரசே... அரசே என்று பேசுகிறபோது இவன் உற்று பல விஷயங்களை கவனிப்பான். இடையறாத. ஒரு தந்திரமே வீரபாண்டியனிடம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் என்று சொல்வார்கள். ஒரு அரசன் அப்படித்தான் இருக்க வேண்டுமென்று அவன் சொல்வதாகவும் கேள்விப் பட்டிருக்கிறார்கள்.

அரசன் தந்திரமாக இருக்க வேண்டாம். ஆனால், மந்திரிகள் தந்திரமாக இருக்க வேண்டும். மந்திரிகள் தனது தந்திரத்தை உபயோகப்படுத்தி, மக்களை அறிந்து கொண்டு, பிரச்சினையை புரிந்து கொண்டு, மன்னனிடம் சொல்லும்போது தந்திரமில்லாத மன்னன், எல்லோரையும் நேசிக்கின்ற மன்னன், எல்லோரையும் தான் ஆதரிக்க வேண்டுமென்று எண்ணமுள்ள மன்னன், அப்போது சில முடிவுகளை திறம்பட எடுப்பான். தந்திரத்தின் அடிப்படையில் எடுக்கின்ற திறனைவிட மக்கள் மீதும், மற்றவர்கள் மீதும் அக்கறையோடு ஏற்படும் முடிவுகள் சரியாக இருக்கும். அரசாட்சி என்கிற அமைப்பு, அரசன் என்கிற மனிதனுடைய நிர்வாகம் இப்படித்தான் நடக்க வேண்டுமென்று சாத்திரங்கள் சொல்லியிருக்கின்றன.

ஒரு அரசனுடைய சபையில் கோபமில்லாதவர்கள் இருக்கக் கூடாது. கோபமுடையவர்கள் வேண்டும். ஒரு அரசனுடைய சபையில் எல்லோரும் கோபமுடையவர்களாக இருக்கக் கூடாது. கோபமில்லாதவர்களும் வேண்டும். அவர்களிடமிருந்து வருகின்ற விஷயத்தை சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்ய அரசனுக்குத் தெரிந்திருக்கவேண்டும். இங்கே வீரபாண்டியன்

அரசனாக இல்லாமல் மந்திரியாக இருக்கிறான். தந்திரவாதியாக இருக்கிறான்.

இதுதான் பிரச்சனை. இதை அவனுக்கு மெல்லச் சொல்லி மாற்ற வேண்டும்.

பானுகோபர் வேகமாக யோசித்தார். வீரபாண்டியன் எழுந்தான். பின் கை கட்டிக் கொண்டு நடந்தான்.

"பரணைக்கிழவர் நெஞ்சடைத்து இறந்து போனார் என்று சொன்னாலும் நான் பொறுத்துக்கொள்வேன். யானைகளுக்கு பலி கொடுத்திருக்கிறீர்களே, எனக்குத் தாங்கவில்லையே" என்றான்.

"அவருடைய முடிவு அப்படித்தான் என்று அவருக்கு முன்னமே தெரிந்திருந்தது. அவர் தனது உடம்பை கெட்டிப்படுத்தியவர். அவருக்கு நெஞ்சடைத்து சாவு வராது. வாள் முனையில் இறக்க வேண்டுமென்று விரும்பினார். அப்படி இறக்கக்கூடாது என்று அவருடைய மனைவி சத்தியம் வாங்கிக் கொண்டு விட்டாள்."

"ஒரு வீரன் அப்படி இறப்பதில் என்ன தவறு."

"ஒரு அந்தணரைக் கொன்ற பாவம் மற்றவருக்கு வந்து விடுமல்லவா, அதனால்தான். மற்றவருக்கு இவரால் பாவம் வரக்கூடாது என்ற எண்ணத்தில்தான் அந்த பெண்மணி அப்படி சத்தியம் வாங்கிக் கொண்டாள்."

"அடாடா... அடாடா.... எவ்வளவு அருமையான பெண் மணி."

மறுபடியும் வீரபாண்டியன் உணர்ச்சி வசப்பட்டான்.

அந்த அந்தணக் கிழவியை மனதால் நினைத்து கையெடுத்துக் கும்பிட்டான்.

வீரபாண்டியன் நல்லவன் என்பதை அங்குள்ள அந்தணக் கூட்டம் உணர்ந்தது. இவனிடம் வேலை செய்வது எளிது என்று அவர்களுக்குத் தோன்றியது.

"நல்லது உங்களுக்குத் தங்க இடமும், மற்ற வசதிகளும் செய்து தருகிறேன். பரணைக் கிழவர் இழப்பை என்னால் இன்னமும் முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஒரு குருநாதருக்குண்டான நீத்தார் கடன்களை என் அரசவை அந்தணர்கள் மூலம் செய்து கொள்கிறேன். அப்போதேனும் என்மனம் ஆறும் என்று நினைக்கிறேன். காந்தளூர்ச்சாலை கடிகை இந்த பாண்டியதேசத்து மன்னர்களுக்கு பெரும் உதவி செய்திருக்கிறது. தேவைப்பட்டபோதெல்லாம் உதவி செய்திருக்கிறது. காந்தளூர்ச்சாலையில் பிரச்சினைகள் இருக்கின்றன என்று அறிவேன். நீங்கள் பிரிந்து வந்திருக்கிறீர்கள் என்பதும் தெரிகிறது. அதுபற்றி இப்போது விசாரிக்கவில்லை. பிற்பாடு உங்களிடம் பேசுகிறேன்."

"இவர் என்னுடைய மந்திரிகளில் ஒருவர். பெயர் தாணு மாலயன். இவர் உங்களை கவனித்துக் கொள்வார்."

"இந்த அந்தணர்கள் நமது முக்கிய விருந்தாளிகள். கவனத்தோடு பார்த்துக் கொள்ளுங்கள்."

சொல்லிவிட்டு திரும்பினான்.

கிட்டத்தட்ட ஓட்டமாக ஓடி வாசலை அடைந்து குதிரையில் தாவி ஏறிக்கொண்டான்.

அவனுடைய குதிரையோடு போட்டிபோட மற்றவர்கள் மிகுந்த பிரயத்தனம் எடுக்க வேண்டியதாயிற்று.

மறுநாள் காலை. விடியல் வேளையில் அவர்கள் ஒரு மாளிகைக்குள் பிரவேசித்தார்கள். உள்ளே போகும் முன் ஒரு துணியில் மஞ்சள் சாயம் தோய்த்து வாளால் அதை மூன்றாக நெடுக கிழித்து, அதை வாசலில் தொங்க விட்டார்கள். உள்ளுக்குள் நோய்கள் வராமல் இருக்க அந்தக் கொடி உதவும் என்று நம்பினார்கள். மாளிகையின் நடுவே போய் விளக்கேற்றினார்கள். தென்னங்குருத்தையும், பாளையையும் பரப்பி வைத்தார்கள். குருத்துவிட்டு குருத்து, குருத்து விட்டு குருத்து எங்கள்

குலம் வளரட்டும், குலை குலையாய் செல்வம் தழைக்கட்டும் என்றும் வேண்டிக் கொண்டார்கள்.

கொல்லைப்புறத்தில் பூசணியை வானில் உயர விசிறி அது தரையிறங்குவதற்குள் பளிச்சென்று இரண்டாய் அறுத்தார்கள். அறுத்த இரண்டு துண்டை எடுத்துக் கொண்டு போய் ஈரமண்ணில் விதைகளைத் தெளித்தார்கள்.

இன்னது ஏற்பாடு செய். இன்னது வேண்டுமென்று பாண்டிய தேசத்தில் அந்த அந்தணர் கூட்டம் யாரையும் கேட்கவேயில்லை. ஆனால், அவர்களுக்கு எல்லாமும் கிடைத்தன.

மாளிகை வாசலில் பெரிய பந்தல் போட்டு பந்தலைச் சுற்றி தென்னோலை அடைத்து உள்ளுக்குள் ஹோமகுண்டம் கட்டி எடுக்கின்ற எல்லா காரியங்களும் சித்திக்க வேண்டும் என்றும் இழந்த கௌரவங்களைப் பெற வேண்டும் என்றும் அவர்கள் சுதர்ஸன யாகமும், கார்த்த வீர்யார்ச்சுனனுடைய ஹோமமும் செய்தார்கள்.

"இழந்ததைப் பெறுவதா, அதற்கு ஹோமம் உண்டா. கார்த்த வீர்யார்ச்சுனன் யார்?"

அவர்களை மதுரை மந்திரிகளும், சேனாதி பதிகளும் கேள்விகள் கேட்டார்கள்.

எல்லோருக்கும் ஏதோ இழந்திருக்கிறோம் என்ற உணர்வு அதிகமாகவே இருந்தது.

இழந்த கௌரவம், செல்வம், நிலம், அதிகாரம் இவைகளை மறுபடியும் கைப்பற்ற ஒரு பூஜையும், ஒரு மூல மந்திரமும் இருக்கிறது. மிக நீளமான ஒரு மூலமந்திரத்தை திரும்பத் திரும்ப ஜபித்து கார்த்த வீர்யார்சுனனுக்குப் பிடித்த பன்னிரெண்டு திரவியங்களை அக்னியில் சேர்த்தால் நிச்சயம் இழந்ததை பெறலாம்."

"என்ன மூலமந்திரம்?"

கார்த்த வீர்யஹ சகராக்ஷஸஹ க்ருத வீர்யஹ
சுதபலி சகஸ்ரபாஹு‿ஹு‿ சத்ருக்ரணஹ ரக்தவாசஹ

தனுர்த்ரஹ ரக்த கந்தஹ ரக்த மால்யஹ
ராஜா, ஸ்மார்த்த அபீஷ்டதஹ...

மந்திரம் பெரியதாய் தொடர்ந்தது.

"அப்பா... எவ்வளவு விஷயம் தெரிந்திருக்கிறது இவர்களுக்கு..." என்று மதுரை மாநகரம் வியந்தது.

எனக்காக அப்படியொரு ஹோமத்தை செய்ய முடியுமா என்று ஒருவர் ரகசியமாகக் கேட்டார்.

நீங்கள் ரகசியமாகக் கேட்டது போலவே, ரகசியமாக செய்து தரப்படும். வெளியில் சொல்லாதீர்கள் என்று அவருக்கு காதோரம் சொல்லப்பட்டது. ஆனால், அவர் ரகசியமாக மதுரையைச் சுற்றி பல பேரிடம் சொல்லி வைத்தார். அனைவர் வீட்டிலும் ஹோமம் நடந்தது. அந்தணர்களுக்கு நிறைய தானம் கொடுத்தார்கள்.

"வயதான அந்தணர்களுக்கு வேட்டியும், மேல் துண்டும் தரவேண்டும்."

"அவ்வளவுதானே தருகிறேன். மதுரை அந்தணர்கள் எங்கள் பக்கமே இருக்கிறார்கள் என்று அவர் சொல்ல உங்கள் அந்தணர்களுக்கு அல்ல, எங்கள் அந்தணர்களுக்கு" என்று அவர்கள் தங்கள் குடும்பத்தை கை காட்டினார்கள்.

பத்து பிரம்மச்சாரிகளுக்கும், வயதுக்கு வராத சிறு பெண்களுக்கு துணிகளும், தின்பண்டங்களும் வாங்கித் தர வேண்டுமென்று அவர்கள் குழுவிலிருந்தே குழந்தைகளை கூட்டிக் கொண்டு வந்தார்கள். சுமங்கலிக்கு பூஜை செய்ய வேண்டுமென்று பதினோரு சுமங்கலிகளை அவர்கள் பக்கமிருந்தே அழைத்து வந்தார்கள். ஒரு நெல்மணி கூட வேறொருவருக்குப் போகாமல் பார்த்துக் கொண்டார்கள்.

"மேற்கு மலைச்சரிவிலுள்ள பெரும் வயல் வெளிகளுக்கு மறுபடியும் நீங்கள் அதிகாரியாக நியமிக்கப்படுவீர்கள். இந்த ஹோமம் முடிந்த ஆறாவது நாள் உங்களுக்கு சித்திக்கும்" என்று

சொன்னார்கள். வீரபாண்டியன் குதிரைகள் வாங்குவதற்கு நல்ல நேரம் எழுதித்தர வேண்டுமென்று கேட்பதற்கு வந்தான்.

அவனிடம் அந்த அதிகாரியைப் பற்றி விசாரித்தார்கள்.

"திறமையுள்ளவன்தான். சற்று முரடன். அங்குள்ள மக்களை அடித்துத் துன்புறுத்தினான் என்று எனக்கு செய்தி வந்தது. இந்தப் பக்கம் இழுத்து வந்து விட்டேன்."

"அவன் சனியின் தாக்கம் உள்ளவன். அவனை உங்களுக் கருகே வைத்துக் கொள்ளாதீர்கள். மேலும் குதிரைகள் வாங்கும் போது சனியின் தாக்கம் உள்ளவர்கள் அருகேயிருப்பது நல்ல தல்ல. அவனை மேற்கே அனுப்பி விடுங்கள். அவனுடைய இடத்திற்கே போகட்டும்" என்று சொல்ல "சரிசரி செய்து விடுகிறேன்." என்று வீரபாண்டியன் சொன்னான். குதிரைகள் வாங்குவதற்கு நேரம் குறித்துக் கொண்டான். குதிரையின் லட்சணங்கள் எவை எவை என்பதற்கு ஒரு அந்தணரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான்.

பானுகோபரிடம் மறுபடியும் வந்து கைகட்டினான்.

"குதிரைகளுக்கு லாடம் அடிப்பது பற்றி யவனர்கள் சொல்கிறார்கள். நாம் மறுத்து வருகிறோம். குதிரைக்கு லாடம் அடிப்பது தேவையா" என்று கேட்க, பானுகோபர் "ஆமாம். உன்னுடைய பாண்டிய தேசத்தில் குதிரைகளுக்கு லாடம் தேவை. வெறும் புழுதிகளும், மணல்களும், சரளைக்கற்களும் மிகுந்த சேதம். சேர தேசத்தில் செடிகொடிகள் அதிகம். மரங்கள் அதிகம். நிழல் அதிகம். வெய்யில் அதிகமிருந்தாலும் தாக்குவ தில்லை. சோழ தேசத்தில் லாடம் கட்ட ஆரம்பித்து விட்டார்கள் என்று ரவிதாஸன் சொல்கிறான். நீ வெகுநிச்சயமாய் லாடம் கட்ட வேண்டும். அந்த விஷயங்களை தெரிந்து கொண்டு வா" என்று சொன்னார்.

அவன் சரியென்று சொல்லிவிட்டுப் போனான். அவர் இரண்டு இளைஞர்களை அழைத்தார். "ரவிதாஸனிடம் பேசி வழி தெரிந்து கொண்டு சோழதேசத்தின் கடற்புரங்களுக்குப் போங்கள். நாகை அல்லது திருக்கடல்மலை போன்ற இடத் திற்கு போய், அங்கு குதிரைகள் வந்தால் வாங்கி, யவனர்கள் அதை எப்படிப் பேணி பாதுகாக்கிறார்கள். எப்படி லாடம் அடிக்கிறார்கள் என்று கற்றுக் கொண்டு, எவ்வளவு விரைவாக வரமுடியுமோ வந்துவிடுங்கள்" என்று கட்டளையிட்டார்.

வீரபாண்டியன் கிளம்புவதற்கு முன், அவர்கள் இரண்டு பேரும் நல்ல குதிரைகள் வாங்கி சோழதேசம் நோக்கி விரைந்தார்கள். ரவிதாஸன் அவர்களுக்கு அறிமுக ஓலைகள் பலதும் கொடுத்திருந்தான்.

பானுகோபருக்கு பாண்டிய தேசத்து வெய்யில் தாங்க வில்லை. கூடத்தை விட்டு வெளியே வராமல் கூடத்திலிருந்த படியே பார்த்துக் கொண்டிருந்தார்.

"வைகாசி வந்துவிட்டது. இன்னும் வெய்யில் காய்கிற தேடா" என்று அலறும் குரலில் கூறினார்.

"இதென்ன சேரதேசமா. வைகாசியில் மழை ஆரம்பிப்ப தற்கு.. ஆனியில் அடித்துப் பெய்வதற்கு... இது பாண்டிய தேசம். ஆடிக்காற்று வெப்பம் வாரியடிக்கும். பிறகுதான் மழை வரும்."

பானுகோபருக்கு முடியவில்லை. எனவே, ரவிதாஸன் மெல்ல மெல்ல அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டான். பரமேஸ்வரன், ரவிதாஸனுக்குத் துணையாக இருந்தான்.

நாள் முழுவதும் படுத்திருந்த பானுகோபர், மாலை வேளை யில் வந்து, ரவிதாசனிடம் விவரங்கள் கேட்டு அவனுக்கு உதவிகள் செய்து வந்தார்.

அந்தணர்கள் தொடர்ந்து பாண்டிய தேசத்தின் பல்வேறு திக்குகளுக்குப் பரவி, அங்குள்ள மனிதர்களோடு பேசி, ஹோமங்கள் செய்து ஜனங்களை வாழ்த்தினார்கள்.

மெல்லிய உடம்பும், சிவந்த மார்பும், முன்னால் தொங்கும் குடுமியும், கழுத்தில் தங்கச் சங்கிலியும், கங்கணமும், தோளில் வெள்ளைத் துண்டும், அலங்காரமாக மின்னுகின்ற அந்த

அந்தணர்களைக் கண்டால் பாண்டியர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவர்கள் வெற்றிலைப் பிரியர்கள் என்று கேள்விப்பட்டு, எல்லோருமே வெற்றிலை கொண்டு வந்து கொடுத்தார்கள்.

"வீடு கட்டுமானம் சரியாக இருக்கிறதா. குழந்தைகளுக்கு மலச்சிக்கல். என்ன சாப்பிட்டாலும் வாயிலெடுத்து விடு கிறான். என் பெண் இந்த நட்சத்திரத்தில் ருதுவானாள். இது நல்லதா, கெட்டதா, என்ன பரிகாரம். மாப்பிள்ளை கோபப் பட்டு, என் மகளை இங்கே கொண்டு வந்து விட்டுவிட்டு, தன் வீட்டிற்கு போய் விட்டான். மறுபடியும் என் மகள் அவரோடு சேருவாளா. சேர என்ன செய்ய வேண்டும். என் பூமியில் நெல் விளைகிறது. கரும்பு வரவில்லை. கரும்புக்கு நல்ல காசு இருக் கிறது. கரும்பு பயிரிடும் வித்தையை சொல்லிக் கொடுங் களேன்."

ஐயா, நாங்கள் பாணர்கள். மதுரை அதிகாரிகளால் மிக்க கடுமையாக தண்டிக்கப்பட்டு நிலை குலைந்து போனவர்கள். எங்களில் ஒருவரை அடித்தே கொன்றதால் எங்களுக்கு மதுரை யில் பாடவே முடியவில்லை. பாடினால் அவர் நினைவுதான் வருகிறது. எங்களில் பெரும்பான்மையினர் இந்த இடத்தை விட்டு சோழ தேசத்திற்கு போய் விட்டார்கள். உங்கள் முன்பு என் துக்கத்தை குறைக்கும் வண்ணம் சில பாடல்கள் பாட விரும்புகிறேன்.

அவன் உரத்த குரலெடுத்து பாடத் துவங்கினான். பின்னா லிருந்து அவன் மனைவி மெல்லிய குரலில் அடுத்த பாடலைப் பாடினாள்.

ஒரு உயிர்க்கொலை அந்தப்பாட்டில் அசைந்தது. தமிழின் மேன்மையும், தமிழின் தூக்கலும் ஒன்று கலந்து கதிகலங்க வைத்தன.

ஒரு குதிரை வீரன் அருகே வந்து இறங்கினான்.

"இந்த ஒப்பாரிப் பாடலை பாடக்கூடாது என்று உங்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறதே... என்ன செய்கிறாய்" என்று அதட் டினான்.

"வெளியே போடா. நான் பாடுவேன்." என்று அந்தப் பாணன் தீர்மானமாகச் சொல்ல, அந்தக் குதிரை வீரன் சவுக்கு உயர்த்த, ஊம்... என்ற ஒரு அதட்டலில் தருமதாஸர் தரையிறங் கினார்.

"அப்பாலே போ" என்று குதிரை வீரனை அதட்டினார்.

"நீங்கள் யார் என்னைச் சொல்வதற்கு. இது எங்கள் பிரச் சினை" என்று சொல்ல, குதிரைவீரன் சவுக்கை வெடுக்கென்று பற்றியிழுத்தார். குதிரை வீரன் நிலை தடுமாறி விழுந்தான். அந்த சவுக்கை இரண்டாக உடைத்தார். விசிறி எறிந்தார்.

"மதுரை தேசத்துக் கலைஞர்களை எவரேனும் தண்டிக்க முனைந்தால், அது அரசனாக மட்டுமே இருக்க வேண்டும். தண்டிக்கும் முன் சபைக்கு காரணம் சொல்ல வேண்டும். அந்தணர்களையும், கலைஞர்களையும், பெண்டுகளையும் கண்டிக்கிறபோது காரணமில்லாமல் கை ஓங்கினால் அந்தக் கையை துண்டாக வெட்டலாம். வெட்டுவோம்."

"என் கையை வெட்டுவீர்களா... வெட்டுங்கள் பார்க்கலாம்."

அந்தணர் சரக்கென்று பக்கத்திலிருந்தவன் வாளைப் பிடுங்கிப் போர்வீரன் மீது பாய்ந்தார். போர் வீரன் தடுமாறினான்.

"எடுத்துக் கொள் வாளை, வா சண்டைக்கு" என்று அழைத்தார்.

அந்த போர்வீரன் குதிரைக்கு ஓடிப்போய், குதிரையின் சேனத்தில் சொருகப்பட்டிருந்த வாளை எடுத்துவந்து மிக பலமாக அந்தணனைத் தாக்கினான். அந்தத் தாக்குதல்கள் பளிச் பளிச்சென்று தடுக்கப்பட்டன. சுழற்றிய கத்தி தரை யிறக்கப்பட்டது. மறுபடியும் அந்த வீரன் துள்ளி, இடதும் வலதும் பாய்ந்து அந்தணனைத் தாக்க முற்பட அந்தக் கத்தியை கத்தியால் வளைத்து கீழே வைத்து இடது காலால் அந்தக்

கத்தியைப் பளிச்சென்று உதைக்க அந்த வீரனின் கத்தி இரண்டாக உடைந்து போயிற்று. கூட்டம் கைதட்டியது. கத்தியின் பட்டைப் பக்கத்தால் அவன் புஜத்தை வேகமாகத் தட்டினார்.

அவனது இடதுபுஜம் இறங்கிப் போயிற்று.

எங்கள் முன் பாடியவரை தண்டிப்பதற்கு நீ வந்துவிடுவாயா. அத்தனை திமிரா உனக்கு. இத்தனை அந்தணர்கள் இங்கு இருக்க, சவுக்கு எடுத்து ஓங்கி ஒரு பாணனை அடிக்க வருகிறாயே. ஆண்மகனா நீ. இந்த ஆட்டமெல்லாம் வேறு எங்கேயாவது வைத்துக்கொள்."

தருமதாஸர் கடுமையாக எச்சரித்தார்.

கூட்டம் மறுபடியும் கைதட்டியது. அந்த குதிரையை அடித்து விரட்டியது. அந்த வீரன் வலி தாங்காமல் அரற்றிக் கொண்டே குதிரையை தேடிக் கொண்டு ஓடினான்.

தருமதாஸர் திண்ணையில் ஏறி உட்கார்ந்தார்.

கூட்டம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தது.

"வீரர்களால், தெருச் சண்டியர்களால் எவரேனும் தாக்கப்பட்டால் அல்லது தொந்திரவுக்கு ஆளானால், எங்களிடம் சொல்லுங்கள், நாங்கள் நின்று நியாயம் கேட்போம்." உரத்து, வலது கையை உயர்த்திச் சொல்ல, மறுபடியும் கூட்டம் கை தட்டிற்று.

அந்த குதிரைவீரன் சேனாதிபதிகளிடம் போய் அந்தணர்கள் மீது குற்றம் சொன்னான். சேனாதிபதிகள் ஒன்றுகூடிவிட்டு, அரசன் வரட்டும் என்று அமைதியாகி விட்டார்கள். அவனை போகச் சொல்லி விட்டார்கள்.

தொண்டி துறைமுகத்திலிருந்து அரசன் பதினைந்து, நாட்கள் கழித்து பெரும் குதிரைப் படையோடு வந்தான். முரட்டு அராபியக் குதிரைகள் பின்னால் வந்தன.

குதிரைகள் வந்த அன்றே, தஞ்சையிலிருந்து பானுகோபர் அனுப்பிய இரண்டு அந்தண இளைஞர்களும் வந்தார்கள்.

"லாடம் அடிப்பது மிக நல்லது. அது மிகவும் எளிது. லாடம் அடித்த உடனேயே குதிரையில் சவாரி செய்யக் கூடாது அதை தன்னிச்சையாக விட்டு, அதற்கு நடை பழகவிட வேண்டும். லாடகுதிரை கருங்கல் தரைகளில் சறுக்கி விடுகிறது. மற்ற இடங்களில் அற்புதமாக நிற்கிறது. எனவே, அப்படிப்பட்ட குதிரைகளை கருங்கல் தரைக்கும் நடத்திப்பழக வேண்டும். முதுகில் ஏறவே கூடாது என்பதில் முக்கியமான விதி.

லாடமும், லாடத்திற்கான ஆணிகளையும் அவர்கள் காட்டினார்கள்.

ரவிதாஸன் அவர்களை கட்டித் தழுவிக் கொண்டான்.

"இதுதான் காந்தளூர்ச்சாலை கெட்டிக்காரத்தனம். இதுபற்றி வெளியே மூச்சுவிட வேண்டாம்" என்று தடயங்களை மறைத்து விடச் சொன்னான்.

பானுகோபரும், ரவிதாஸனும், பரமேஸ்வரனும், தருமதாஸரும், சுதபலியும், ராமரும் மற்ற உபாத்யாயர்களும் ஒன்றுகூடி இருக்க குதிரைகளை பார்வையிட்டார்.

"ரவிதாஸா பார்த்தாயா" பானுகோபர் கேட்டார்.

"பார்த்தேன். குதிரைகள் அற்புதமாக இருக்கின்றன."

"நான் கேட்டது அதை அல்ல. யவன குதிரைகள் அற்புதத்திற்கு கேட்பானேன். அரசனைப் பார்த்தாயா."

"இல்லையே. பார்க்கவில்லையே."

"அரசன் அதோ இருக்கிறான். அவன் முகத்தில் இருக்கிற கர்வத்தைப் பார். எவ்வளவு பரபரப்பாக இருக்கிறான் பார். கைகள் பிசைந்து முன்னும், பின்னும் நடமாடுவதும் கால்கள் உதைத்துக் கொள்வதும் எத்தனை உக்கிரமாக உற்சாகமாக இருக்கிறான் பார்."

"இது நல்லதா, கெடுதலா, ஒரு அரசன் இவ்வளவு வேகமாக இருக்கக்கூடாதே."

"ஆமாம்."

"என்ன செய்வான் என்று நினைக்கிறீர்கள்."

"குதிரைகள் இப்படி இருக்கின்றன. எனவே, அவன் படையெடுப்பு நடத்த திட்டமிட்டு விட்டான் என்று தோன்றுகிறது."

"ஆமாம். குதிரைகளை பழக்கி வீரர்களை அதில் அணிவகுக்கச் சென்ற பிறகு சோழ தேசத்தை நோக்கி குறிவைத்துப் பாய்வான்."

"இவனால் சோழ தேசத்தை வெற்றி கொள்ள முடியுமா ரவிதாஸா."

"ஒருக்காலும் முடியாது."

"முடிய வேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்."

"குறைந்தபட்சம் ஒரு வருடமாவது கடும் பயிற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இவனுடைய படை ஒழுங்கீனமான படை. அந்தப்படையை கட்டுப்பாடு உள்ள ஒழுங்கான படையாக மாற்ற வேண்டும். உப படைகள் இவனிடம் சரியாகவே இல்லை. அதனால் போரில் ஈடுபட்டு திரும்பி வந்தால் ஈடுபட்ட வீரர்களுக்கு மருத்துவ உதவியோ, உணவோ செய்யக்கூடிய திறமையுள்ளவர்கள் மிக மிகக் குறைவு. அவர்களும் அலட்சியமாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் அப்படியொரு படையே இவர்களிடம் இல்லை என்று நான் கேள்விப்பட்டேன்."

"சோழர்களிடம் உள்ளதா."

"மிகச்சிறப்பாக இருக்கிறது. குறிப்பாக மறக்குலப் பெண்களுக்கு வெட்டுக் காயத்திற்கு கட்டுப் போடுதலையும், நோய்களுக்கு மருந்துகள் தருவதிலும், மிக நல்ல பயிற்சி கொடுத்திருக்கிறார்கள். போரற்ற காலங்களில் அவர்கள் ஆதுரச்சாலையில் வேலை செய்கிறார்கள். போர்க்காலங்களில் வீரர்களோடு அவர்களும் பயணப்பட்டு விடுகிறார்கள்."

"எத்தனை குதிரைகள்?"

"ஆயிரத்து நானூற்று ஐம்பது."

"இன்னும் ஒரு மாதத்தில் இதுபோல இரு மடங்கு குதிரைகள் வருமாம். அப்பொழுது இவன் எண்ணமெல்லாம் சோழ தேசத்தை படையெடுப்பதாகத்தான் இருக்கும்."

"நல்லது. இனி வேறு வழியில்லை. நாமும் அரசியலில் இறங்க வேண்டியதுதான். இல்லாவிட்டால் இவனை அமைதிப்படுத்த முடியாது. முட்டாள் சேனாதிபதிகளுக்கு நடுவே உட்கார்ந்து கொண்டு இவன் மூர்க்கத்தனமாக முயல்வான். பாண்டியதேசம் கெட்டுப்போகும்."

பானுகோபரும், ரவிதாஸனும், பரமேஸ்வரனும் மற்ற உபாத்யாயர்களும் கூடிக்கூடி பேசினார்கள். லாடம் அடிக்கத் தெரியவில்லை என்று வீரபாண்டியன் வந்தபோது குதிரைகளுக்கு லாடம் அடிப்பதை அந்தண இளைஞர்கள் இரண்டு பேரும் திறம்பட செய்து காட்டினார்கள். அவர்களிடம் பயிற்சி எடுத்துக் கொள்ளும்படி, வீரபாண்டியன் தன் வீரர்களுக்கு கட்டளையிட்டான்.

"லாடம் அடிப்பதில் மட்டும் பயிற்சி போதுமா" என்று பானுகோபர் கேட்க, சரட்டென்று திரும்பிப் பார்த்தான்.

"மற்ற யுத்தப் பயிற்சிகளும் நீங்கள் கொடுப்பதாக இருந்தால் எனக்கு சந்தோஷம்."

"தருவேன். அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், என்னுடைய பதவி என்ன, என் யோக்கியதை என்ன என்று நான் தெரிந்து கொள்ள வேண்டும். எனக்கு வசதிகள் வேண்டும்."

சிறிதுநாள் கழித்து வீரபாண்டியன் அவர்களுக்கு நடுவே வந்து உட்கார்ந்து கொண்டான்.

அவர்கள் கேட்ட அத்தனை வசதிகளையும் தரச் சம்மதித்தான். அந்த உபாத்யாயர்கள் அனைவரும் பாண்டிய தேசத்து சேனாதிபதிகளாக மாறினார்கள்.

ராம உபாத்யாயருக்கு, தேரிக்காட்டின் மறவர்களுக்கு, பாடம் சொல்லிக் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டது. அவர்களை

அமரச் சொல்லி நடுவில் நின்று கொண்டு, எந்தக் காரியம் செய்வதற்கும் ஒழுக்கம் முக்கியம் என்று உரக்கச்சொன்னார். எதிரே சலசலப்பு தோன்றியது.

"ஒழுக்கம்னா என்னா" என்று ஒரு இளைஞன் கேட்டான்.

ஒரு மத்திம வயது ஆள் எழுந்து, "வயித்துப் போக்கைத்தான் நாங்க ஒழுக்கம்னு சொல்லுவோம். தொடை வழியா ஒழுகறது னால ஒழுக்கம். அதைச் சொல்றீங்களா" என்று சொல்ல எல் லோரும் பூமியில் அறைந்து, மல்லாந்து, நிமிர்ந்து, நெளிந்து வாய்விட்டு சிரித்தார்கள்.

ராமஉபாத்யாயர் மனம் தளரவில்லை. தொடர்ந்து பேசினார்.

"கொக்கரிப்பது வீரமில்லை. வெறுமே எருமைகள் சேற்றில் விழுவதுபோல, எதிரிப்படை மீது விழுவது வீரமில்லை. சாகப் போகிறேன். சாவதற்குத்தானே பிறந்திருக்கிறேன் என்று நினைப்பதும் வீரமில்லை. வாழ்வதற்காக பிறந்திருக்கிறோம். யுத்தம்தான் வாழ்க்கை என்றால் அதற்கு மரணம்தான் வாழ்க்கை என்று பெயரல்ல. யுத்தத்தில் எதிரியை வீழ்த்துதல் எனில் சாகடித்தல் கூட அல்ல. உன்னைவிட நான் வலிவுமிக்கவன் என்று நிரூபித்தல், அவன் இறந்து போனால் அதை நிரூபிக்க முடியாது.

அவன் உயிரோடு இருக்கும் போது மறுபடி மறுபடி வாள் கொடுத்து, ஒவ்வொரு முறையும் அவன் வாளை தட்டிவிட்டு, அவனை செயலற்றவனாக மாற்றுகிறபோது உன் வீரம் பன்மடங்கு பெருகுகிறது. ஒரே வீச்சில் அவனை குத்திக் கொன்று விட்டால் உனக்குள் ஒரு அதிர்ச்சி கலந்த சந்தோஷ மும், வியப்பும், மிகப்பெரிய நிம்மதியும் வந்துவிடுகிறது.

அடுத்தமுறை படையெடுப்பது என்றிருந்தால், உங்களை முன்னால் அனுப்பமாட்டோம்."

"முன்னால் போகவே பிறந்தவர்கள், பின்னால் ஒரு காலும் போகமாட்டோம்."

நாலுபேர் எழுந்து நின்று கத்தினார்கள்.

ராமஉபாத்யாயர் அயர்வதாக இல்லை.

"இங்கு நாங்கள் வைத்ததுதான் சட்டம். நாங்கள் சொல்வது தான் விதி. நாங்கள் என்ன சொல்கிறோமோ அதைச் செய்ய வேண்டியதுதான் உங்கள் வேலை. மாட்டேன் எனில் உங்கள் படையை நாங்கள் அனுப்பவே மாட்டோம். நீங்கள் வெறுமே மதுரை மாநகரத்தை காவல் காத்துக் கொண்டிருங்கள். எல்லோரும் கையிலே தடிபிடித்து அலைந்து கொண்டிருங்கள் என்று உங்களை இங்கேயே உட்கார வைத்து மதுரையை விட்டு பாண்டியர் படைபோகும்."

அவர்கள் மறுபடியும் எகிறி குதித்தார்கள். வாய்க்கு வந்தபடி பேசினார்கள். கெட்ட வார்த்தையில் திட்டினார்கள்.

யாரோ ஒருவன் முஷ்டியை மடக்கிக் கொண்டு வந்தான்.

"வா... வா... அருகே வா. என்னை நோக்கி முஷ்டியை மடக்கியவனை நான் சும்மா விடமாட்டேன். வா. நீ சுத்த வீரனாய் இருப்பின், உன் தாய் ஒருவனுக்குப் புடவை விரித்திருப்பின் என்னோடு சண்டைக்கு வா. கோல் எடுத்துக் கொள். வாள் எடுத்துக் கொள், எது வேண்டுமானாலும் எடுத்துக்கொள். வா சண்டைக்கு..." என்று ராமர் அழைக்க, அவன் திகைத்தான்.

எல்லோரும் உற்சாகப்படுத்த கோல் உருவிக் கொண்டான்.

ராமஉபாத்யாயர் இடுப்புத் துண்டை உருவி, முறுக்கி தயாராக இருந்தார்.

அவன் கோல் வீச, மூன்றாவது வினாடி அவன் கோலை துண்டால் சுற்றி பிடுங்கி எறிந்தார். மறுபடியும் துண்டை முறுக்கி அவன் முகத்தில் பலமாக அடித்தார். அவன் ஓட கால் இடறி விட்டார். அவன் தரையில் விழ, இரண்டு கைகளையும் மிதித்தார். இடுப்பில் எட்டி உதைத்தார்.

தலைமயிரைப் பிடித்துத் தூக்கி முகத்தைப் பற்றி தரையில் வேகமாக மோதினார். மறுபடியும் நிமிர முறுக்கிய துண்டால் இரண்டு கண்களையும் தாக்கினார். அவன் அலறினான். அங்கே

யிருந்த வீரன் வாளை சரக்கென்று பிடித்துக் கொண்டார். வீசி சுற்றினார்.

அவர்கள் பயந்து விலகி ஓடினார்கள். காலால் மிதித்ததில் அவன் கை மணிக்கட்டுகள் இரண்டும் முறிந்து போயின. இடுப்பு எலும்பு உடைந்து விட்டிருந்தது. கால் இடறியதில் அவன் முழங்கால், வயிறெல்லாம் தேய்ந்திருந்தது. பின் மண்டையிலிருந்து ரத்தம் வடிந்தது. இரண்டு கண்களும் துணியில் அடித்ததில் கறுத்துக் கிடந்தன. திறக்க முடியாமல் அடிக்கடி கண்களை பொத்திக் கொண்டான். வலி தாங்காமல் அழுதான்.

"சொல்லுங்கள். இவன் உங்கள் கூட்டம்தானே. என்னோடு போரிட்டு இவன் தரையில் இருக்கிறான். இவனைக் குத்திக் கொன்று விடட்டுமா. உங்களில் ஒருவன் இவனைக் குத்திக் கொல் என்று சொன்னாலும் நான் கொன்று விடுவேன். சொல்லுங்கள். இவன் நெஞ்சை வகுந்து இரண்டாகப் பிளந்து விடுகிறேன். சொல்லுங்கள்." என்று வாள் சுழற்ற, அவர்கள் திகைத்து பின்வாங்கினார்கள்.

வெறும் துண்டால் கோல் வைத்திருப்பவனை அடித்து வீழ்த்தியதைப் பார்த்து வாய் பிளந்து கிடந்தார்கள்.

ஒரு கிழவன் முன் வந்தான். மண்டியிட்டான். நிலம் தொட்டு நிமிர்ந்தான்.

"இல்லை. அவனை விட்டு விடுங்கள். உங்கள் பலமறியாது முஷ்டியை மடக்கி விட்டான். அவனால் இனி என்ன செய்ய முடியும். அவன் வேறு ஏதேனும் தொழில் செய்து பிழைத்துப் போகட்டும். அவனால் யுத்தம் செய்ய முடியாது. விட்டு விடுங்கள்" என்று கெஞ்சினான்.

"ஏன் விட வேண்டும். அவனைக் குத்திக் கொன்று விட லாம். யுத்தம் செய்ய முடியாத மறவன் எதற்கு இங்கே. தேரிக்காட்டு வீரன் போர் வீரனாகத்தான் இருக்க முடியுமே தவிர பிச்சை எடுப்பவனாக இருக்க முடியாது."

"கொன்று விடுங்கள்" வேறு யாரோ ஒருவன் கூறினான்.

"அவன் மட்டும் தனியாக எப்படிப் போக முடியும். அவனுக் குத் துணை வேண்டுமே. நீ வருகிறாயா துணைக்கு" என்று கேட்க, அவன் பயந்து பின்வாங்கினான்.

"வாள் எடடா நாயே. வந்து போரிடு" என்று அவனைக் கேட்க, அவன் இன்னும் பின் வாங்கினான்.

"அவனைக் கொல் என்று சொல்கிறாயே, உன்னைக் கொல்ல வந்தால் ஏன் இப்படி பயந்து ஒதுங்குகிறாய். எடு வாளை. வா நாயே சண்டைக்கு" என்று சொல்லி எகிறிப் போய் அவன் தோளில் படேரென்று வாளால் அடித்தார்.

கூட்டம் நடுங்கியது.

"வேண்டாம். வேண்டாம்..." என்று கத்தியது.

"இங்குள்ள அத்தனை பேரையும் தனித்தனியாகக் கூப்பிட்டு என்னால் அடித்து நொறுக்க முடியும். உங்களில் ஒருவனாலும், என் சிறிய ரோமத்தைக்கூட அசைக்க முடியாது. நீங்கள் எல்லாம் தேரிக்காட்டுப் பனங் குப்பைகள், உங்களுக்கு சண்டையிடத் தெரியாது. போர்வீரன் என்றால் பெரிய மீசையும், கருத்த தொடையும், காவிப் பல்லும் என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா. உரக்க சிரித்து விட்டால் நீ சண்டியனா. எருமை மாடே இன்னொரு முறை எவனாவது எதிர்த்துப் பேசினீர்கள் என்றால் அவனை சவுக்காலும், செருப் பாலும் அடிப்பேன்." வெறிபிடித்தது போல ராம உபாத்யாயர் முன்னும் பின்னும் அலைந்தார்.

இரண்டு மூன்று உபாத்யாயர்கள் தொலைவில் நின்று ராம உபாத்யாயரைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். மெல்ல கைகட்டி சிரித்துக் கொண்டிருந்தார்கள். மெல்ல நகர்ந்து கீழே விழுந்தவனை நிமிர்த்தி உட்கார வைத்தார்கள். மற்ற வீரர்களிடம் நீண்ட கோல் கொடுத்து அவனைத் தாங்கி வரச் சொன்னார்கள். நான்கு வீரர்கள் அவனுக்கு அடியிலே கோல் கொடுத்து அவனைத் தாங்கி எடுத்துவர, அவனை தங்களு

டைய இடத்திற்கு அழைத்துப் போனார்கள். கொல்லைப்புறத்தில் மல்லாக்கப் போட்டார்கள். காயங்களைப் பரிசோதித்தார்கள். பச்சிலை அரைத்தார்கள். எண்ணெயைக் குழைத்தார்கள். கீரை மசியல் போல அதை எடுத்து கையிலே அப்பிக் கட்டுப் போட்டார்கள். கட்டுப்போட்ட இடத்திலும் எண்ணெய் விட்டார்கள்.

அவனுடைய அக்குளிலிருந்து கால்வரை கட்டையைக் கொடுத்து அசையாமல் படுக்கச் சொன்னார்கள். வாயைத் திறக்கச் சொல்லி மருந்தும், பசும்பாலும் கொடுத்தார்கள். ஒரு துணியை மருந்தில் நனைத்து, பற்ற வைத்து, புகை வரச் செய்து மெல்ல அந்தப் புகையை அவனை இழுக்கச் சொன்னார்கள். அவன் இழுத்ததும் சிறிது நேரத்தில் மயக்கமானான். அவன்மீது வாழை இலையை போர்த்தினார்கள். அடர்த்தியான வேப்ப மரத்தடியில் வாழை இலை போர்த்தியபடி மயக்க மருந்தின் தாக்கத்தால் அவன் ஆழ்ந்து உறங்கினான்.

அவனை நான்கு நாட்கள் அசையாமல் வைத்து, பிறகு மெல்ல நிமிர்த்தி, ஆற்றோரம் கொண்டு போனார்கள். அவன் மலஜலம் கழித்த பிறகு வெதுவெதுப்பான நீரை அவன்மீது ஊற்றினார்கள். ஒரு பெரிய வட்டிலில் கஞ்சி வெள்ளம் வைத்து அவன் வாயின் அருகே வைத்து குடிக்கக் கொடுத்தார்கள். அவன் விக்கியபோது தலை தட்டினார்கள். முதுகு தடவினார்கள்.

"அந்தணர்களான நீங்கள் எங்களைத் தொட்டு இப்படி உதவி செய்கிறீர்களே."

அவன் அழுதான்.

"நீ நோயாளி. நான் வைத்தியன். தொடாமல் சிகிச்சை செய்வது நம்மிடையே பழக்கமில்லை. தொட்டு நாடி உணர்ந்து உனக்கு வைத்தியம் செய்வதுதான் வைத்தியனான என் பணி. தீண்டக்கூடாது என்று மரபு சொல்கின்ற சோழ தேசத்து அந்தணர்களல்ல நாங்கள். மற்றவர்களையும், மனிதர்

களையும் மதிக்கத் தெரிந்தவர்கள். இந்தக் கட்டுகளை அவிழ்த்துவிட்டு, வேறு கட்டுகள் பொருத்துவோம். இன்னும் மூன்று நாட்கள் அமைதியாகப் படுத்திரு. சகலமும் சரியாகும். கொல்லையில் படுக்க வேண்டாம். முன் பக்கத்து நடையில் படுத்திரு" என்று சொல்லி அவனை கைத்தாங்கலாக கூட்டி வந்து மாளிகையின் இடப்பக்கத்து கயிற்று கட்டிலில் படுக்க வைத்து கட்டு மாற்றிப் போட்டார்கள். மறுபடியும் புகையை முகரச் சொன்னார்கள். குடிக்கவும் மயக்க மருந்து கொடுத்தார்கள்.

அவன் மீண்டும் தூங்கிப் போனான். அரைகுறையான விழிப்பில் அந்த அந்தணக் குடியிருப்பிலிருந்து வந்த சத்தங்களைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

ருத்ரமும் சமகமும் காதாரக் கேட்டான்.

அந்த அந்தணர்களின் வீட்டு இளம் பெண்கள் வந்து எட்டிப் பார்த்தார்கள். ஒரு கிழவி வர, புடைசூழ அவனுக்கருகே வந்து நின்றார்கள். நலமா என்று விசாரித்தார்கள். நீண்ட சிகையும், பெருத்த மீசையும், காவிப் பல்லும், வளைந்த உதடுமாய் எழுந்து உட்கார்ந்து சிரிக்கிறவனைப் பார்த்து குழந்தைகள் மிரண்டு அழுதன. மற்றோர்கள் அந்தக் குழந்தைகளைச் சமாதானப்படுத்தினார்கள். அவன் அடிபட்ட ரத்த காயங்களுக்கு மெல்லிய மயிலிறகால் அவர்கள் எண்ணெய் துடைத்துவிட்டுப் போனார்கள். கஞ்சியும், பாதாம்பாலும் கொடுத்தார்கள். வெண்ணெய் கொடுத்தார்கள்.

வாழைப்பழமும், கோமியமும், நெய்யும், தயிரும் கலந்த கலவை கொடுத்து குடிக்கச் சொன்னார்கள்.

அவனுக்கு குமட்டல் எடுத்தது. ஏய்... என்று அவனை அதட்டி கிழவி குடிக்கச் சொன்னாள். ஒரு சிரட்டை முழுவதும் அவன் குடித்துத் தீர்த்தான். அதைக் குடித்த சில நிமிடங்களிலேயே மாறுதலை உணர்ந்தான்.

கட்டிலுக்கு வந்த மூன்றாம் நாள் முளை கட்டின பயிரையும், சத்துமாவுக் கஞ்சியையும் கொடுத்தார்கள். நான்காம் நாள் நடக்கச் சொன்னார்கள். கைகளை அந்தப் பெண்களே அசைக்கச் சொன்னார்கள்.

"உன் பெயரென்ன, கலியானா"

இன்னொரு பெண் கேட்டாள்.

"கலி புருஷனைப்பற்றி இப்படித்தான் வேதத்தில் வர்ணித்திருக்கிறது. உயரமாய், கறுப்பாய், கூர்த்த நாசியாய், நீண்ட சடையாய், பெரிய மீசையாய், காவிப் பல்லாய், ஒட்டிய வயிறாய், தட்டைப் பாதமாய், மது கலந்த நெடியோடு கலி புருஷன் இருப்பான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் ஐந்து நாட்கள் அங்கு தங்கினான். வீடு பெருக்கினான். ஒட்டடை அடித்தான். கதவுகள், ஜன்னல்கள் துடைத்தான். அழிக்கம்பிகளை சுத்தம் செய்தான். யாரோ ஒரு வீரன் விறகு பிளந்து கொடுக்க இவன் இதை சிறு சுள்ளிகளாக அரிவாளால் நறுக்கிக் கொடுத்தான். கட்டுக்கட்டி அடுக்கி வைத்தான்.

ராம உபாத்யாயர் அவன் மணிக்கட்டுகளைப் பரிசோதித்தார்.

"நீ வாளோ, வேலோ பிடிக்க வேண்டிய அவசியமில்லை. உனக்கு வேறு சில வித்தைகள் கற்றுத்தருகிறேன். உன் காதுகளை, கண்களை கூர்மையாக்குகிறேன். வேவு பார்ப்பதற்கு சொல்லித் தருகிறேன். மூச்சடக்கி நீரில் இருப்பதற்கும், ஆற்றோடு போவதற்கும் உனக்குச் சொல்லித் தருகிறேன். நீ போய் தேரிக்காட்டு வீரர்களிடம் ஒழுக்கம் பற்றிச் சொல். வெறுமே கொம்பு ஊன்றி, வலக்கால் ஊன்றி, இடக்கால் மடித்து நெடுநேரம் நிற்பதற்கு அவர்களை முயற்சி செய்யச் சொல். நாள்முழுவதும் யாரோடும் பேசாமல் இருப்பதற்கு முயற்சி செய்யச் சொல். அவர்கள் வீரம் சிதறிப் போகக்கூடாது. அவர்களுடைய திறமை தரையில் சிந்தக்கூடாது. மிகச்சிறந்த

படையாக தேரிக்காட்டு வீரர்களை இந்த ராம உபாத்யாயன் மாற்றிக் காட்டுவான். இவர்கள் இப்படியே வெறும் முரட்டு வீரர்களாய் இருக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் அரச பரம்பரையினராய் மாற வேண்டும். நாடாளும் தகுதியை அவர்களுடைய அடுத்த வம்சம் பெறவேண்டும். அதற்கு இப்பொழுதே இவர்கள் தங்களை தயார் செய்துகொள்ள வேண்டும் என்று சொல். தேரிக்காட்டு சேனாதிபதிகளாக, சேதுபதிகளாக அவர்கள் வளர வேண்டுமென்றால் இந்தக் கணத்திலிருந்து ஒழுக்கம் அவசியம் என்று சொல்."

மதுரையிலிருந்து தொண்டி, தேவிப்பட்டணம், குமரி முனை வரை பரவிய அந்த தேரிக்காட்டு மறவர் குழு வந்து பேசிய கலியன் வார்த்தையை அமைதியாய் கேட்டது.

"எதற்கு நாடாள வேண்டும். இப்படியே இருந்து விடலாமே" என்று சொன்னவரை வெளியே விரட்டியது.

"எப்பொழுது பயிற்சி ஆரம்பம்."

"வழக்கமாக இரவு கூச்சலிடுவோம் அல்லவா. குடித்துவிட்டுப் பேசிக் கொண்டிருப்போம். அல்லவா. இந்த இரவு முழுவதும் நாம் ஒருவரோடு ஒருவர் பேசக்கூடாது. விடியல் நேரம்வரை குடிக்கக்கூடாது. ஆனால், இந்த இடம் விட்டும் போகக்கூடாது."

அவர்கள் எல்லோரும் அவனுடைய குடிசை வாசலில் உட்கார்ந்து கொண்டார்கள். பேசாமல் ஒருவரையொருவர் பார்த்தபடி இருந்தார்கள். ஆரம்பத்தில் சிரிப்பும், சலசலப்பும் இருந்தன. பிறகு மெல்ல மெல்ல அடங்கின. விடியல் நேரம் தூங்கினார்கள். காலை எழுந்திருந்ததும் அவர்களுக்கு மௌனமாக தொடர்ந்து இருக்க வேண்டும் என்று தோன்றியது. மறுநாளும் அவர்கள் மௌனமாக இருந்தார்கள். வெகுசில வார்த்தைகளையே பேசினார்கள்.

தேரிக்காட்டு பெண்களுக்கு பெரும் திகைப்பாய் போய் விட்டது. ஆனால், கலியன் அவர்களுக்கும் மௌனத்தை உப

தேசித்தான். கலியனால் தேரிக்காட்டு வீரர்களிடம் மிகப்பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. அந்த மாதத்தில் அந்த முரட்டு வீரர்கள் அத்தனை பேரும் அந்தணர்களுக்கு அடங்கி நடப்பவராகவும், ஆரவாரம் இல்லாதவர்களாகவும் இருந்தார்கள்.

அவர்கள் மாறியது மற்ற சேனாதிபதிகளுக்குத் தெரிந்தது. மற்ற சேனாதிபதிகளின் மூலமாக வீரபாண்டியனுக்குத் தெரிந்தது.

"ராம உபாத்யாயரிடம் போய் உங்களுக்கு என்ன சன்மானம் தரட்டும்." என்று வீரபாண்டியன் கேட்டான்.

அவர் "இவர்களை எனக்குக் கொடுத்துவிடு" என்று சொன்னார்.

அவன் புரியாமல் விழித்தான்.

"இவர்களுக்கு ஏதும் கட்டளையிட வேண்டுமென்றால் என் மூலம் கட்டளையிடுங்கள் என்று சொல்கிறேன். வேறு எதுவுமில்லை." என்று சொன்னார்.

சரி என்று வீரபாண்டியன் கை உயர்த்தி சத்தியம் செய்வது போலச் சொல்ல, ராமஉபாத்யாயர் நிறைவோடு திரும்பினார். பானுகோபரிடம் சொன்னார்.

பானுகோபர் எழுந்து நின்று அவரை கட்டிக் கொண்டார்.

"ஆக, நமக்கென்று ஒரு படை வந்து விட்டது. வீரபாண்டியன் முட்டாள். உணர்ச்சி வசப்பட்டு வலிமைமிக்க மறவர்களை நம்மிடம் தாரை வார்த்து விட்டான்.'

"வீரபாண்டியன் நல்லவன். அதனால்தான் முட்டாளாக இருக்கிறான்."

"நல்லது, இந்த வீரபாண்டியனை நன்கு பேணிக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை. பாண்டிய நாட்டை பல்வேறு விதங்களில் சீரமைக்க வேண்டியது நம்முடைய முக்கியமான பணி. சோழ தேசத்திலிருந்து மதுரைக்கு வரும் எல்லா சாலைகளையும் சீரமைப்பு செய்ய வேண்டும் என்று

வீரபாண்டியனிடம் சொல்லுங்கள். நமது படையைத்தவிர மற்ற படைகளை இதற்கு உபயோகப்படுத்துங்கள். அதேபோல காடுகள் ஊடாக சேரதேசத்திற்கு போகும் வழியை நாம் செப்பனிட வேண்டும். ஒரு முறை இந்த நானூற்று சொச்சம் வீரர்களையும் கூட்டிக்கொண்டு சேரதேசம் போய் திரும்பலாம். பத்துநாள் பயணமாக வைத்துக் கொள்ளலாம். பத்துநாள் காடுகளூடே பயிற்சி தரலாம். மறுபடியும் அதே பாதை வழியாக கற்களை வெட்டியும், பாதைகளை உருட்டியும் தரையை சமன்செய்து கொண்டும் வரலாம்" என்று பானுகோபர் சொல்ல பலரும் அதை ஆதரித்தார்கள்.

"இன்னொன்றும் செய்யலாம்."

நீலகண்ட உபாத்யாயர் எழுந்துநின்று பேசினார்.

"நான் யானைகளுக்கு பயிற்சி தருபவன். யானைப் பாகர்களுக்கு பயிற்சி தருபவன். இந்த யானைகளை பாண்டிய தேசத்தில் நன்கு பயிற்சி பண்ணி வைத்திருக்கிறார்கள். வீரபாண்டியனிடம் கேட்டு சில யானைகளை அழைத்துக்கொண்டு போய், யானைகளுக்குப் பின்னே உருளைப் பாறைகளை கட்டி, வீரர்கள் சுத்தம் செய்த பாறையை சமன் செய்தும் வரலாம். செங்குத்தான மலைமீது வீரர்களை வைத்தே திமிக போடச் சொல்லலாம். ஆதுரச்சாலைகள் அமைப்பது பற்றியும் வீரபாண்டியனிடம் பேசுங்கள்."

நீலகண்டர் சொல்ல கூட்டம் கை தட்டியது.

"தொண்டை வரையில் இருந்த ஒரு விஷயம் நீங்கள் சொல்லி விட்டீர்கள்." என்று ராமஉபாத்யாயர் சொல்ல அவரை எல்லோரும் தட்டிக் கொடுத்தார்கள்.

"ஆதுரச் சாலையில் பெண்களை பயில விட்டால் என்ன."

தருமதாஸர் சொல்ல அதையும் வரவேற்றார்.

மேலும் ஒரு வருடம் மதுரையை சீரமைக்கும் பணியில் வீரர்கள் வேகமாக ஈடுபட்டார்கள்.

வடக்கிலிருந்து தெற்கு நோக்கி காற்று வீசும் போதெல்லாம் மரக்கலங்கள் வந்தன. மரக்கலங்கள் வந்த போதெல்லாம் நல்ல குதிரைகள் வந்து இறங்கின. அந்த குதிரைகள் சில சமயம் சேரதேத்துக் கடற்கரையில் இறங்கி யவனர்களால் ஓட்டிவரப் பட்டு மதுரையில் கயிறு மாற்றிக் கொடுக்கப்பட்டன. சேரத் துறைமுகம் வரை மரக்கலத்தில் வந்ததற்காகவும் அங்கிருந்து குதிரைகளை காடுகளுடே ஓட்டி வந்ததற்காகவும் யவனர் களுக்கு பெரும்பணம் கொடுக்கப்பட்டது. தங்கத்தில் பதித்த வைர ஆபரணங்கள் தரப்பட்டன. பெரிய பித்தளைப் பாத்திரங் கள் கொடுக்கப்பட்டன. நாணயம் அதிகம் புழக்கத்திற்கு வந்தது.

தேரிக்காட்டு வீரர்கள் கள் இறக்கி பெரிய பானைகளில் நிரப்பி வெகுதூரம் வெட்ட வெளியைக் கடந்து மதுரையை நோக்கி வந்து நல்ல விலைக்கு விற்றார்கள். வதக்கிய இறைச்சி யும், பொரித்த மீனுமாய் கடைகளில் பனங்கள்ளு விற்கப்பட் டது. பனங்கள்ளு விற்கின்ற இடத்திற்கு அருகிலேயே கூத்தும், கும்மாளமும் நடந்தது. நாடகங்கள் நடந்தன. பாணர்கள் அதிகம் போற்றி கௌரவிக்கப்பட்டார்கள். அதிகாரிகளுக்கு பயந்திருந்த பாணர்கள், அந்தணர்கள் அதிகாரம் ஏற்றதும் அதிகமான நாடகங்களை நடத்தத் துவங்கினார்கள். நிறைய பாடல்கள் பாடினார்கள்.

சிறு தெய்வங்களைக் குறித்துப் பாடிய பாணர்கள் சிவனைக் குறித்தும் விஷ்ணுவைக் குறித்தும் பாடினார்கள். சூரியனை வணக்கம் செய்தார்கள். இரவாக இருந்தாலும் கிழக்கு நோக்கி நமஸ்கரித்தார்கள்.

வாழ்க அந்தணர், வாழ்க ஆநிரை என்று பாடினார்கள். வீரபாண்டியனைப் புகழ்ந்தார்கள். சோழர்களுக்கு காலாந்தகன் போன்றவன் என்று பட்டம் கொடுத்தார்கள். அவன் காலத்தில் சாலைகள் போடப்பட்டன. குளங்கள் வெட்டப்பட்டன. கல்வி அதிகரித்தது. ஆதுரசசாலைகள் மேன்மையடைந்தன. அவன்

நல்லவர்களை அருகே வைத்துக் கொண்டு பொது மக்களை அன்போடு கவனித்தான் என்று கொண்டாடினார்கள்.

பாட்டுடைத் தலைவனை புகழந்து பாடினால் மட்டும் நாடகம் நிறைவு பெறவில்லை. எல்லா நாடகத்திலும் பாட்டு டைத் தலைவனை புகழ்வதற்காகவும் அவனை சிறப்பிப்பதற் காகவும் ஒரு எதிரி தேவைப்பட்டான்.

பாண்டிய தேசத்தில் பாண்டிய மன்னனின் எதிரியாக சோழ தேசமும், சோழ மன்னனும் இருந்தார்கள். சோழ தேசத்தில் வேளாண்வகை நிலங்கள் பிரம்மதேயமாக மாற்றுகின்ற வழக்கு அதிகம் பரவியிருந்தது. எப்போதேனும் செய்கிற இந்த விஷ யத்தை சுந்தரசோழனும், அவன் சேனாதிபதிகளும் அடிக்கடி பல இடங்களில் செய்தார்கள்.

வேளாளர் குடி நிலத்தை அப்படியே அந்தணர்களுக்கு தானமாகக் கொடுத்து, அந்தணர்களுக்கு இத்தனை கொடுத்து விட்டு மீதியை வேளாளர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டது. வேளாளர்கள் எதிர்க்க முடியாமல் திண்டாடினார்கள். அந்தணர்கள் அரசனைக் கொண்டாடினார் கள். இதைக் கேலி செய்து பாடல்கள் எழுதப்பட்டன. நாட்டிய நாடகங்கள் நடந்தன.

"நம்ம ஊர்ல தருமசேனர் இல்லையா. நம்ம ஊர்ல ராமஉபாத் யாயர் இல்லையா. நம்ம ஊர்ல பானுகோபர் இல்லையா. நம்ம ஊர்ல ரவிதாஸன் இல்லையா. நம்ம ஊர்ல பரமேஸ்வர உபாத்யாயர் இல்லையா. அத்தன பேரும் சேர்ந்து நிலம் கொடுன்னு கேட்டாங்களா, வேளாளன் நிலத்தப் புடுங்குன்னு சொன்னாங்களா. ஏன் கேட்கலை. கத்தியை தூக்கி யுத்தத்திற்கு போனவன் தான் வெட்டின வலிபத்தி தெரிஞ்சுக்க முடியும். அவுக வெட்டினவலி தெரிஞ்சவுக. வீரர்கள் வேதனை புரிஞ்சவக. வீரபாண்டியரை அறிஞ்சவக. விவகாரம் பண்ணாத பெரியவக" என்று போற்றிப்பாட கூட்டம் கைதட்டி ஆதரித்தது.

"அந்தணர்களுக்கு எதற்கு நிலம். நீங்கள் எங்களை ஆதரிக் கிறபோது நாங்கள் எதற்காக விளை நிலத்தைப்பற்றி பேச

வேண்டும். இது முழுவதும் வேளாளர்களுடையது. அவர்கள் தங்களுடைய சம்பாத்தியத்தில் அரசனுக்கு இருபது பங்கும், அந்தணருக்கு பத்து பங்கும், மற்ற சாதுக்களுக்கு பத்து பங்கும் தருவது உலக இயல்பு. அதுவே விதி.

அரசரின் வேலையும், அந்தணரின் வேலையும் வேளாளரை பாதுகாப்பது மட்டுமே.வேளாளருக்கு உதவியாக இருக்கின்ற மறவரைப் போற்றுவது மட்டுமே." என்று பானுகோபர் சொல்ல கூட்டம் கைதட்டியது.

இது சிறப்பான ஆட்சி என்று பேசிக் கொண்டார்கள்.

வீரபாண்டியன் மதுரையின் எல்லாப் பகுதிக்கும் இடைவிடாது போனான். மதுரை எல்லையின் விளிம்பில் நின்று திரிச்சீரபுரத்தை வெறித்துப் பார்த்தான்.

"எனக்கு அதுவும் வேண்டும்" என்று உரக்கச் சொன்னான். அருகே இருந்த பானுகோபர் "கிடைக்கும்.கவலை வேண்டாம். இப்போதைக்கு அவசரப்படாதே. இன்னும் பலமாக்கிக் கொள்ளலாம்" என்று சொன்னார்.

வீரபாண்டியனின் வேவுப்படைகள் சோழ தேசத்திற்குள் புகுந்தன. ஓரிரு மாதங்களுக்குப்பிறகு மீண்டன.

"சோழ தேசத்தில் நிலைமை சரியில்லை. சுந்தர சோழர் துவண்டு போயிருக்கிறார். அவனது தந்தையார் கண்டராதித்தன் மனைவி செம்பியன்மாதேவியினுடைய பேச்சுக்கு சோழ தேசத்து சேனாதிபதிகள் தலையசைக்கிறார்கள். இதைத்தவிர சுந்தரசோழருடைய மகளான குந்தவை அரசியலுக்குள் தந்திரமாக நுழைய எல்லா முயற்சிகளும் செய்கிறார்கள். சுந்தரசோழனின் மகன் ஆதித்தகரிகாலன் மிகுந்த முனைப்போடு காஞ்சிபுரத்திற்கு அப்பாலுள்ள இடங்களை கிருஷ்ணனிடமிருந்து கைப்பற்றுவதில் தீவிரமாக இருக்கிறான். அவன் போன இடங்களிலெல்லாம் அவனுக்கு வெற்றி அதிகமாக இருக்கிறது. சுந்தரசோழனும் தன்னுடைய இடத்தை தஞ்சையிலிருந்து காஞ்சிபுரத்திற்கு மாற்றிக் கொண்டுவிட்டார்.

இப்போது சோழருடைய பார்வை முழுவதும் வடக்கேதான் இருக்கிறது. ராஷ்டிரகூட மன்னன் கிருஷ்ணனால் கைப்பற்றப்பட்ட இடங்களை தங்களுடைய வசமாக்கிக்கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். அது எளிதாகவும் நடக்கிறது. ஏனெனில் ராஷ்டிரகூடமன்னன் இந்த இடங்களைக் கைப்பற்றி தன்னுடைய பணி ஆட்களுக்கும், சேனாதிபதிகளுக்கும் பரிசாகக் கொடுத்தானே தவிர அங்கு ஆட்சி செய்ய வேண்டுமென்ற ஆவல் அவனுக்கில்லை. எனவே, சரியாக நிர்வாகம் இல்லாத நகரங்களாக அவை இருந்தன. அந்த நகரங்களுக்குள் ஆதித்த கரிகாலன் படைகளோடு புக யுத்தத்திற்கு முன்பே அந்த நகரங்கள் அவனிடம் சரணடைந்தன. மேலை சாளுக்கியம் வரை போய் தன்னுடைய படை வீட்டை அங்கு பலமாக நிறுவி அதற்கப்பாலும் போவதற்கு ஆதித்தகரிகாலன் துடித்துக் கொண்டிருக்கிறான். ராஷ்டிரகூடர்களை பழிவாங்க வேண்டுமென்ற வெறியோடு இருக்கிறான். கீழைச்சாளுக்கியம் சோழர்களது நண்பர்களாக மாறிவிட்டது. மேலைச்சாளுக்கியத்தின் மீதுதான் சோழர்களுக்கு கோபம் அதிகம். சோழ தென் எல்லையான திரிச்சீரபுரத்து எல்லையில் எந்தப் பாதுகாப்பும் இல்லை. விவசாயம் செய்பவர்களும், நெசவுத் தொழிலில் உள்ளோர்களுமே நாட்டை காவல் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கண்டராதித்தன் மனைவியான செம்பியன்மாதேவியார் சோழ தேசத்தின் வடபுறத்தில் கோவில் கோவிலாக கட்டிக் கொண்டிருக்கிறார். திருப்பணிகள் செய்து கொண்டிருக்கிறார். அவருக்குத் துணையாக வரும் படைதான் பெருத்த அதிகாரங்கள் செய்து கொண்டிருக்கிறது. அவர்கள்தான் உத்தமசோழரை வாழ்த்திப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆதித்தகரிகாலனைப் பற்றி அதிகம் அவர்கள் பேசுவதில்லை. இதுதவிர இன்னொரு விஷயமும் நடக்கிறது"

"என்ன அது"

"ஆதித்த கரிகாலனின் தம்பி அருண்மொழி என்கிற சிறுவனைப் பற்றி சோழமக்கள் ஆவலோடு பேசுகிறார்கள்."

"என்ன பேசுகிறார்கள்"

பானுகோபர் நெற்றியைச் சுருக்கி விசாரித்தார்.

"மூன்று உலகையும் படைத்து ஆளும் திருமாலே பூமிக்கு வந்ததாக சொல்லுகிறார்கள். அருண்மொழி கடவுள் அவதாரம் என்றும், மிகப்பெரிய பேரரசராக அவர் சோழ தேசத்தில் திகழ்வார் என்றும், அவருடைய ஆட்சிக் காலத்தில் சோழ தேசத்தில் தேனும் பாலும் ஓடுமென்றும், மக்கள் மிகச் சுபிட்ச மாக இருப்பார்கள் என்றும் ஜோசியர்களாலும், ஆருடர்களா லும், குறி சொல்பவர்களாலும் சொல்லப்பட்டு இச்செய்திகள் சோழ தேசத்தில் பரப்பப்படுகின்றன."

"இதற்கு யார் காரணம்" இது அரசியல் தந்திரம்.

"குந்தவை. அருண்மொழியின் அக்காள் குந்தவை காரணம்"

"உங்களில் யார் அருண்மொழியைப் பார்த்திருப்பது"

சட்டென்று திரும்பி ரவிதாஸனை அவர் பார்த்தார்.

"நான் பார்த்திருக்கிறேன்"

"இவர்கள் சொல்கிறார்களே திருமாலே பூமியில் பிறந்தது என்று அந்த அங்க அடையாளங்களா அருண்மொழியின் உடம்பில் இருக்கின்றன."

பானுகோபர் கேட்டார்.

ரவிதாஸன் சிறிதுநேரம் மௌனமாக இருந்தான்.

"அழகான முகம், திருத்தமான கண்கள், அழுத்தமான உதடு. கோதுமையை உடைத்த நிறம்.சங்குக் கழுத்து. அகன்ற மார்பு கள். பெண்மையின் சாயல் கலந்த ஆண்மை உடம்பு. ஆனால், அவனைப் பார்த்தபோது பதிமூன்று வயது. இப்பொழுது இன் னும் ஒரு வயது அதிகமாக இருக்கலாம். ஆனாலும் பதிமூன்று

வயதைவிட அதிகமான ஒரு வனப்பும், வளர்ப்பும்தான் அந்த உடம்பில் தெரிந்தது.

ஓடுகிற குதிரையில் தாவி ஏறுவதும், நின்ற வண்ணம் ஈட்டி எறிவதுமுண்டான பயிற்சியை அப்பொழுது அந்த இளைஞன் செய்து கொண்டிருந்தான். அதில் தெளிவு வரும் வரை அவன் பயிற்சியை நிறுத்தவேயில்லை.பல தடவை மணலில் விழுந்து உருண்டும்,உடம்பில் பல இடங்களில் காயம் ஏற்பட்டும் அதைப்பற்றி சிறிதளவும் அவன் வெளிக்காட்டிக் கொள்ள வில்லை. நல்ல வீரன் என்பது தெரிந்தது. ஆனால், இவர்கள் புகழ்வது போல உள்ளவனா, பேரரசனா என்று எனக்குத் தெரியவில்லை."

"நல்லது அருண்மொழி என்ன நட்சத்திரம்"

"சதயம்"

"எந்த மாதத்து சதயம்"

"ஐப்பசி மாதத்து சதயம்"

"அடேய்... மழை நேரத்தில் சதய நட்சத்திரத்தில் பிறந்த வன் என்றால் அவன் எப்படி சாதாரண ஆளாக இருக்க முடியும்" பானுகோபர் பரபரத்தார்.

"எந்த நாழிகை என்று தெரியுமா"

"உதயற்காலம். இரண்டாம் நாழிகை."

"எந்த இடம் தெரியுமா"

"திருக்குடந்தை. அதற்கருகேயுள்ள பழையாறையில் அருண்மொழி பிறந்தான்."

"அப்படியானால் ஜாதகம் கணித்துப் பார்த்து விடலாமே."

பானுகோபர் சொல்ல அந்த அந்தணர்கள் போட்டி போட்டுக் கொண்டு அருண்மொழியினுடைய ஜாதகத்தை மடமட வென்று போட்டார்கள். விரல் கணுக்கள் வைத்து கணக்கிட் டார்கள். லக்னம் கண்டு பிடித்தார்கள். லக்னத்தை வைத்து குரு எங்கே என்று பதித்தார்கள். குருவைப்பார்த்து சந்திரனை கண்டு

பிடித்தார்கள். சந்திரனை வைத்து புதனையும், சனியையும், தீர்மானித்தார்கள். மொத்த ஜாதகத்தையும் கால் நாழிகையில் போட்டு முடித்தார்கள்.

"பேரரசன்தானா?"

"அருண்மொழி மிதுன லக்னம். கடகத்தில் குரு. பதினொன்றில் சனி. லாபஸ்தானத்தில் யோகக்காரகன். செவ்வாய், புதன், பரிவர்த்தனை. எனவே பேரரசன்தான். கால சர்பயோகம். அதனால் முப்பத்தி மூன்று வயது வரை அல்லாடுவான். பிறகுதான் அரச பதவி."

"உத்தம சோழனின் பிறந்த நேரம் தெரியுமா."

"ஜாதகமே இருக்கிறது."

ஒரு வேவுக்காரன் பனை ஓலைத்துண்டை நீட்ட• பானுகோபர் வாங்கிப்பார்த்தார்.

சில மனக்கணக்குகள் போட்டார்.

"இவனும் அரசன்தான். அரசபோகம் அயனசயன சுகம். இரண்டும் மிகச்சரியாக இருக்கின்றனவே."

"சரி. வேவுக்காரர்களை அனுப்பிவிடு"

அவர் சபையைக் கலைத்தார்.

எல்லா அந்தணர்களும் அமைதியாக உட்கார்ந்து கொண்டு "இது மிக ரகசியமான விஷயம். எல்லா உபாத்யாயர்களையும் நான் இதில் சேர்த்துக் கொள்வதில்லை. எனவே, நான் சொல்லுகிறவரைத்தவிர மற்றவர்கள் தங்கள் கடமைகளைச் செய்யப் போகலாம். ரவிதாஸன், பரமேஸ்வரன் தருமதாஸன் போதும்." மற்றோர்கள் எந்த ஆட்சேபணையும் சொல்லாமல் எழுந்து போனார்கள்.

"ஏன், எதற்கு கூட்டத்தை சுருக்கிவிட்டீர்கள்"

"இங்கே வந்து சோறு தின்று மூன்று வருடங்களாகி விட்டன. வீரபாண்டியனுக்கு நாம் ஏதேனும் செய்ய வேண்டாமா. அவன் திரிச்சீரபுரம் வேண்டுமென்று கேட்கிறானாமே.

37683
5470117

அதைக் கைநீட்டி வாங்கித்தர வேண்டாமா. [illegible]லையை விஸ்தீரப்படுத்த வேண்டாமா. அவனை உற்சாகப் படுத்த வேண்டாமா. வெறுமே தின்பதற்கு மட்டுமே இந்த அந்தணர்கள் இருக்கிறார்கள் என்று அவன் நினைத்துவிடக் கூடாதல்லவா. நாம் படைகளை பயிற்றுவித்தோம். அந்த பயிற்றுவித்த படைகளினால் என்ன பயன் என்று மற்ற சேனாதிபதிகள் கேட்பதற்கு முன்பு நாம் படையெடுப்பை நடத்தியே ஆகவேண்டும்"

"இது தவிரவும் படையெடுப்பு நடத்த வேறு ஏதேனும் காரணம் உண்டா"

"உண்டு."

"என்ன."

"சேரதேசத்து காந்தளூர்ச்சாலையிலிருந்து பஞ்சம் பிழைக்க பாண்டியதேசத்திற்குள் வந்தார்கள் என்ற பெயர்தான் இந்த க்ஷணம் வரை நமக்கு இருக்கிறது."

"ஆமாம். அது உண்மை."

ரவிதாஸன் பானுகோபரின் பேச்சுக்கு தலையசைத்தான்.

"அந்தப் பழிச்சொல்லை நீக்க வேண்டுமெனில் வீரபாண்டியனுக்கு வெற்றிகளைத் தேடிக் கொடுக்க வேண்டும். சேரமன்னன் அடாடா... அற்புதமான அந்தணர்களை நாம் இழந்துவிட்டோமே காந்தளூர்ச் சாலையை நாம் இவர்களுக்கு தாரை வார்த்துக் கொடுக்காமல் வேறு ஒரு தடியனுக்கு கொடுத்தோமே என்று சீற்றமடைச் செய்ய வேண்டும் .இப்பொழுது மகா உபாத்யாயனாக இருக்கின்ற அந்த முட்டாள் கேள்வி கேட்கப் பட வேண்டும். வெட்கித்தலை குனிய வேண்டும். எனவே, வீரபாண்டியனுக்கு அவசியமோ இல்லையோ, நமக்கு சோழப் படையெடுப்பு அவசியம். ஆனால், இது நாம் ஏற்பாடு செய்த படையெடுப்பாக இருத்தல் கூடாது"

"புரிகிறது. வீரபாண்டியனை மறைமுகமாகத் தூண்டிவிட்டு, வீரபாண்டியனுக்கு ஆசை ஏற்படுத்தி வீரபாண்டியன் வாயி

லிருந்தே படையெடுப்பு நடத்த வேண்டும் என்று சொல்ல வைத்து வீரபாண்டியன் காரியமாகவே அதை நிகழ்த்திக் காட்டவேண்டும்"

"ஆமாம்"

"வெற்றி பெற்றபிறகு அந்த வெற்றியில் நாம் சரியான பங்கு கேட்கலாம்"

பானுகோபர் கண்மூடி பேசினார்.

"ஒரு வேளை தோல்வியுற்றால்...?"

பரமேஸ்வரன் கேள்வி எழுப்பினான்.

"எல்லோர் மனதிலும் இந்தக் கேள்வியும் இருக்கிறது பரமேஸ்வரா. நீ வாய் திறந்து கேட்கிறாய். ஒரு வேளை தோல்வியுற்றால், அதை பிற்பாடு பேசிக்கொள்வோம். ஏனெனில்.. அதன் விளைவு பயங்கரமாக இருக்கும். இந்தத் தோல்வியில் ஒரு வேளை நாம் அழிக்கப்பட்டாலும் அழிக்கப்படலாம். நாம் சிதறிப் போனாலும் போகலாம். எனவே, சிதறிப் போகின்ற போது அழிக்கப் பட்டபிறகு அதைப் பற்றிப் பேசுவோம். நாம் வெற்றி பெற வேண்டும் என்ற வேகத்தோடேயே இதில் இறங்குவோம். சேரதேசத்துக்குப் போன நமது தேரிக்காட்டு மறவர்கள் திரும்ப வந்து விட்டார்களா."

"வந்து விட்டார்கள். முன்னிலும் உறுதியாகவும், திறமையாகவும் இருக்கிறார்கள். காந்தளூர்ச்சாலை படை கூட இத்தனை கட்டுப்பாடோடும், இத்தனை தெளிவோடும் இருக்காது. ஒவ்வொரு வீரனும் நாடாளத் தகுதியான மனிதனாகவே இருக்கிறான்."

"எண்ணிக்கையை இரட்டிப்பாக்க வேண்டுமா, வேண்டாமா... என்பது இப்போதைய கேள்வி."

தருமதாஸர் சொன்னார்.

"இல்லை. அதிகம் படைகள் சேர்த்துக் கொள்ள வேண்டாம்.

அப்போது பயிற்சியின் தன்மை குறைவுபடும். இந்தப்படை விரிவுபடுத்தலை போருக்குப்பிறகு யோசிப்போம்."

அந்தணர்கள் திட்டமிட்டு வரி வசூலை அதிகப் படுத்தினார்கள். நிறைய பொற்காசு வேண்டுமே குதிரைகள் வாங்குவதற்கு என்ன செய்வது என்று யோசித்தார்கள்.

சிறுபடையை அழைத்துக் கொண்டு திரிச்சீரபுரத்திற்கு பானுகோபர் போனார். இரவோடு இரவாக திரிச்சீரபுரத்தில் எந்தக் கொடியுமின்றி, எந்த அடையாளமுமின்றி அந்தப்படை உள்ளே புகுந்து கொள்ளையடித்தது. கோயிலை, பணக்காரர்கள் வீட்டை, வியாபாரத்தலத்தை ஒட்டுமொத்தமாக கொள்ளையடித்து, நெல்மூட்டைகளோடும், தங்கக் கட்டிகளோடும், வெள்ளிப் பாளங்களோடும், நகைகளோடும், பித்தளை சாமான்களோடும் அவர்கள் பாண்டிய தேசத்திற்கு விரைவாகத் திரும்பினார்கள். மறுபடியும் வருவோம் என்று எச்சரித்துப் போனார்கள்.

திரிச்சீரபுரம் நிலைகுலைந்து அழுதது.

இம்முறை தொண்டி துறைமுகத்திற்கு ரவிதாஸனும், பானுகோபரும் போனார்கள்.

இந்த முறை மூன்று மரக்கலங்களில் அறுநூற்று சொச்சம் குதிரைகள் இறங்கின. அத்தனையும் அற்புதமான குதிரைகள். யவனர்கள் பெரும் பணம் கேட்டார்கள். அதில் பாதிதான் கையில் இருந்தது. கொடுக்கவில்லையெனில் சோழதேசம் போய்விடுவோம் என்று யவனர்கள் மிரட்டினார்கள்.

இப்பேர்பட்ட குதிரைகளை சோழதேசத்திற்கு அனுப்புவதா.

வீரபாண்டியன் அலறினான். அந்த அராபியன் கேட்கின்ற தங்கத்திற்கு எங்கே போவது என்று தடுமாறினான்.

குதிரைகளை இறக்கிவிடும் படியும், தொண்டியிலிருந்து நாகப்பட்டினத்திற்கு தங்களைக் கொண்டுபோய் விடும்படியும், அங்கே பணம் கொடுப்பதாகவும், பானுகோபர் சத்தியம் செய்து கொடுத்தார்.

வீரபாண்டியனும் உறுதி கொடுத்தான்.

குதிரைகள் இறங்கின.

வீரபாண்டியனை குதிரைகளை ஓட்டிக்கொண்டு மதுரைக்கு போகச்சொன்னார்.

வீரபாண்டியன் அவரை நோக்கித் திகைத்தான்.

"நான் வருவேன். கவலைப்பட வேண்டாம். இவனுக்கு காசு கொடுத்துவிட்டு வருவேன்." என்று சொன்னார்.

கடற்பயணத்தை ரவிதாஸனும், பரமேஸ்வரனும் பானுகோபரும், தருமதாஸரும், தேரிக்காட்டின் பதினைந்து மறவர்களும் மேற்கொண்டார்கள்.

முதல்நாள் கடற்பயணம் வயிற்றைப் பிரட்டியது. வாயில் எடுக்க வைத்தது. யவனர்கள் தின்பதற்கு சில இலைகளையும், பழங்களையும் கொடுத்தார்கள். மதுக் குப்பிகளை முகர்ந்து பார்க்கச் சொன்னார்கள். காற்று மிகச் சாதகமாக இருந்ததால் கப்பல் விரைவாக வடக்குநோக்கி நகர்ந்து, நாகப்பட்டினத்திற்கு அருகே போனது. பகல் நேரத்தில் ஊர் அருகே போகாமல், தொலைவில் நின்று வலைஞர்கள் வலை வீசுவதையும், உச்சி வெயிலில் வேகமாக திரும்பிப் போவதையும் மரக்கலத்தில் அமர்ந்தபடியே பார்த்தார்கள். இரவு நேரம் மரக்கலத்திலிருந்து, மரப்பலகைகளை இறக்கி அவற்றை பிடித்துக் கொண்டு கரை நோக்கி நீந்தினார்கள். ஆயுதங்களோடு கரையேறினார்கள். அங்குள்ள புத்தவிஹாரத்தில் நுழைந்து, வெளியே உலர்த்தியிருந்த காவித்துணிகளை உருவிக் கொண்டார்கள். சிவன் கோவில் மதில்சுவரில் ஏறி குதித்து, திருநீறு எடுத்து வந்து உடம்பு முழுவதும் பூசிக் கொண்டார்கள். கயிறுகளை காபாலிகர்கள் போல் குறுக்கே போட்டுக் கொண்டார்கள்.

ஆட்டமும், பாட்டமும் அடங்கிய நேரம். நாகப்பட்டினத்திற்கு வந்து வண்டியிலுள்ள குதிரைகளை எடுத்துக்கொண்டு தனவணிகர்களைத் தாக்கி அவர்களுடைய குதிரைகளையும் பறித்துக் கொண்டு நகரின் நடுமையத்திற்குசென்று, அங்கு சகலரையும் மிரட்டி பெண்களிடமிருந்தும், ஆண்களிடமிருந்

தும், பொன் ஆபரணங்களை சூறையாடி, எதிர்த்தோரை வெட்டி வீழ்த்தி, அடித்துப் புடைத்து, நிதானமாகக் கொள்ளையடித்தார்கள். நாகப்பட்டினமும் பெரிய படைபலம் இல்லாமல் இருந்தது. அங்கிருந்த படை வீரர்களும், இவர்களுடைய முரட்டுத்தனமான அடி, உதைகளை தாங்க முடியாமல் சிதறி ஓடினார்கள். நின்று எதிர்த்தவர்கள் உடனே வெட்டிக் கொல்லப்பட்டார்கள்.

பெண்களின் அலறல் சத்தம் கேட்டு புத்த விஹாரம் விழித்துக் கொண்டு விளக்குகள் ஏற்றப்பட்டன. புத்த பிட்சுகள் நீண்ட தடிகளோடு வந்தார்கள். தேரிக்காட்டு மறவர்களை தாக்கத் துவங்கினார்கள்.

புத்த பிட்சுகளின் சண்டையே ஆச்சரியமாக இருந்தது. மிகவும் அமைதியாகவும், பிச்சையெடுத்து உண்பதையே வாழ்க்கையாகவும் உள்ள புத்தபிட்சுகள் கோலை சுழற்றி சண்டையிடுவதும், கோலைத் திருகி அதிலிருந்து நீண்ட கத்தியை எடுப்பதும், அந்தக் கத்தியில் வேகமாக வீரர்களை தாக்குவதும் பார்த்து தருமதாஸரும், பானுகோபரும் வியந்து போனார்கள்.

"என்ன செய்வது புத்த பிட்சுகளாக இருக்கிறார்களே" என்று ரவிதாஸன் கூறினான்.

பரமேஸ்வரன் "வெட்டிக் கொல். எவனாக இருந்தால் என்ன" என்று ஆக்ரோஷத்துடன் கூறினான்.

அவன் தோளில் பலமாக ஒரு வெட்டு விழுந்திருந்தது.

பானுகோபர் ஹூம்... என்று வேகமாக தலையசைக்க ரவிதாஸனும், தருமதாஸனும் வேகமாக முன்னேறினார்கள். ஒரு புத்த பிட்சுவை அடித்து பளிச்சென்று தலையைச் சீவி, உடம்பிலிருந்து தலையை வேறாக்கினார்கள். இன்னும் இரண்டு புத்த பிட்சுகளை வெகுமூர்க்கமாக தாக்கி அடித்தார்கள். புத்த மடாலயத்திற்குள் போனார்கள். கோவிலிலிருந்த தங்கத் தகடுகளையும், தங்கப்பாத்திரங்களையும், மணிகளையும் எடுத்தார்கள். அந்த புத்த விக்ரஹமும் முழுக்கத் தங்கம் என்று

சொல்லப் பட்டிருக்கிறது. எடுத்து விடுவோமா பரமேஸ்வரன் கேட்டான். வேண்டாம் என்று பானுகோபர் சொல்ல ,அவர்கள் அந்த புத்த விஹாரத்திலிருந்து நிரம்ப தங்கப் பாத்திரங்களுடன் வந்தார்கள். புத்த விஹாரத்திலிருந்த மருந்துகளை எடுத்து வெட்டுப்பட்ட காயத்தில் தடவிக்கொண்டார்கள். கட்டுப்போட்டுக் கொண்டார்கள். துறைமுகத்தில் நிற்க வைக்கப்பட்டிருந்த பெரிய மரக்கலன்களை எடுத்து இவ்வளவுதான் கிடைத்தது என்று யவனர்களிடம் கொடுத்தார்கள். யவனன் திகைத்தான். தூக்க முடியாமல் தங்கப்பாத்திரத்தை தூக்கிப் பார்த்து கண்ணில் வைத்துக்கொண்டு கூத்தாடினான். நன்றி... நன்றி... என்று சொன்னான்.

இன்னும் குதிரைகள் வேண்டும் என்று பானுகோபர் அதட்ட, இன்னுமா... ஆறுமாதத்தில் கொண்டுவந்து தருகிறேன் என்று சொன்னான்.

இப்போது காற்றை எதிர்த்துக் கொண்டு மரக்கலம் தொண்டியில் போய் நின்றதும், அந்த மரக்கலத்தையும் ஈழப் போர் வீரர்களுக்கு விற்றார்கள். அந்தக்காசையும் எடுத்துக் கொண்டு வந்து தொண்டியிலிருந்து மதுரைக்குப் பயணப்பட்டார்கள். அரசனிடம் பாத்திரங்களையும், தங்கக்கட்டிகளையும், வெள்ளிப்பாளங்களையும், ஈழர்களுடைய பொற்காசுகளையும் காட்டினார்கள். என்ன நடந்தது என்று விவரித்தார்கள். எழுந்து நின்று வீரபாண்டியன் கை கூப்பினான்.

இதுபெரும்பேறு. சிவன் எனக்கு அளித்த கொடை என்று எல்லார் காலையும் தொட்டு வணங்கினான்.

அவையிலுள்ள அத்தனை பேரும் எழுந்து நின்று வீரபாண்டியன் அந்தணர்கள் காலைத் தொட்டு வணங்குவது பார்த்து வியந்தார்கள். அந்தணர்கள் நெகிழ்ந்தார்கள்.

"வீரபாண்டியா நாங்கள் உயிரைக் கொடுத்தேனும் உன்னுடைய ராஜ்ஜியத்தை விஸ்தரிப்போம். உனது கனவுகளை நனவாக்குவோம்" என்று பானுகோபர் சொல்ல, அவரை மகாமகா உபாத்யாயர் என்று அரசசபையில் அவன் அறிவித்

தான். மிகப் பெரிய கடிகை ஒன்று மதுரையில் கட்டப்படும் என்று தெரிவித்தான்.

பானுகோபர் நெஞ்சு விம்மியது. திரும்பி ரவிதாஸனைப் பார்த்தார்.

பரமேஸ்வரனும், ரவிதாசனும் அவர் கைகளை கோர்த்துக் கொண்டார்கள். ரவிதாசனும், ராமஉபாத்யாயரும், நீலகண்ட உபாத்யாயரும் அவருக்கு அருகே வந்து வாழ்த்து சொன்னார்கள்.

அரசு பொக்கிஷத்திலிருந்து கங்கணங்கள் கொண்டு வரச் சொல்லி, காலுக்கு வீரக்கழலும், கைகளுக்கு தங்கக்கங்கணமும், புஜங்களில் தங்கக் கேயூரமும் கட்டினார்கள். ஒற்றை சாளக்கிராமம் வைத்து ஐந்துமுக ருத்திராட்சத்தில் கோர்க்கப் பட்ட பெரிய மாலையை அவருக்கு அணிவித்தார்கள்.

சாளக்கிராமமும், ருத்திராட்சமும் கலந்த மாலையை மகாமகா உபாத்தியாயர் மட்டுமே அணிந்து கொள்ள முடியும்.

கடிகை கட்ட இடம் தேர்ந்தெடுக்கப்பட்டால் போதும். இந்த இடத்தில் கடிகை வேண்டுமென்று சொன்னால் போதும். அதைக் கோட்டை போல் கட்டிக் கொடுக்க உண்டான சகல விஷயங்களையும் நான் செய்கிறேன் என்று வீரபாண்டியன் சொன்னான். அது பிற்பாடு நிகழட்டும்.அதற்கு முன்பு சோழ தேசத்தை நோக்கி படையெடுக்க வேண்டிய நிர்பந்தம் நமக்கு ஏற்பட்டு விடும். திரிச்சீரபுரமும், நாகப்பட்டினமும் நம்மால் கொள்ளையடிக்கப்பட்டு விட்டன. வடக்கே இருக்கின்ற ஆதித்தகரிகாலன், வெகுநிச்சயமாக தெற்கே திரும்புவான். எனவே, சோழர் பகைமை ஏற்பட்டுவிடும். நாம் சோழனை எதிர் கொள்ளத் தயாராக இருக்க வேண்டுமென்று சொல்லி அவர்கள் படைபலத்தை பெருக்கினார்கள். முரசறிவித்து கிராமங்களுக்குப் போய் வீட்டிற்கு ஒரு ஆண்மகன் என்று அழைத்து வந்தார்கள். படைவீரர்களுக்கு சமைப்பவர்களையும், படைக்கலன்கள் பழுதுபார்க்கும் கருமார்களையும், தச்சர்களையும், வண்டி ஓட்டிகளையும், யானைப் பாகர்களையும், குதிரை

களுக்கு புல்லிட்டு குளிப்பாட்டுகிறவர்களையும் கூட்டி வந்தார்கள். எல்லோருக்கும் உணவு ஏற்பாடாயிற்று. கம்பும், நெல்லும், கேழ்வரகும் அரசே வழங்கியது.

சோழனை நாம் தாக்க வேண்டுமா அல்லது சோழன் தாக்கும் வரை காத்திருக்க வேண்டுமா என்பதுதான் பானுகோபரின் கேள்வியாக இருந்தது. அவருடைய அரண்மனையில் நித்தமும் இதுபற்றியே விவாதம் இருந்தது. இதைக் குறித்து இரண்டுவிதமான கருத்துக்கள் இருந்தன.

"எப்போதும் நீங்களே கேள்வி கேட்கிறீர்களே தவிர உங்கள் அபிப்ராயம் என்ன. சோழதேசத்தில் படையெடுப்பதா வேண்டாமா என்று நீங்கள் ஏன் சொல்வதில்லை."

நீலகண்டஉபாத்யாயர் உரக்க பானுகோபரிடம் பேசினார்.

ரவிதாஸன் ஆச்சரியத்தோடு "அதே கேள்வி எனக்கும் இருக்கிறது" என்று பானுகோபரை நோக்கித் திரும்ப பானுகோபர் எழுந்து நின்றார்.

"எனக்குக் கனவுகள் வேறு விதமாக மாறிவிட்டன. ஆனால், அந்தக் கனவுகளுக்கு என் வயது ஈடு கொடுக்குமா என்று தெரியவில்லை. நான் எண்பதைக் கடந்து விட்டேன். வேகமாக ஓட முடியவில்லை.நான் போருக்கு லாயக்கில்லாமல் போய் விடுவேனோ என்று தோன்றுகிறது. ஆனால், எனக்கு இன்னொரு விஷயம் பிடித்து விட்டது."

"என்ன அது"

பரமேஸ்வரன் ஆவலோடு வினவினான்.

"அந்த யவனனோடு அவன் தேசம் நோக்கி நான் போயிருக்க வேண்டும். அல்லது அதே மரக்கலத்தைத் திருப்பி கடாரமோ, வேறு தீவுகளுக்கோ போயிருக்க வேண்டும். பயணத்தை துண்டித்து வந்தது எனக்குப் பிடிக்க வில்லை. கடற்பயணத்தை நான் ரசித்தேன். அடேயப்பா... எவ்வளவு பிரம்மாண்டமானது கடல். அதை வெற்றிக் கொள்வதல்லவா வாழ்க்கை. வெறுமே பூமியைப் பற்றிக்கொள்ள சில வீரர்களை காவு கொடுப்பதில்

என்ன லாபம் இருக்கிறது. இதில் எந்த மமதையும் கொள்ள எனக்குத் தெரியவில்லை. சோழன் வந்தால் என்ன அல்லது நாம் போனால் என்ன. இது வெறும் விளையாட்டு விஷயமாகவே இருக்கிறது. கடல்தாண்டி பல தேசங்களுக்குப் போவதுதான் எனக்கு வாழ்க்கையாக இருக்க வேண்டும் என்று தோன்றியது. எப்படி அதை விட்டுவிட்டேன் என்று புரியவில்லை. சேரதேசத்தில் பிறந்திருந்தும் மரக்கலங்களில் பயணப்பட்டிருந்தும் அது சிறு பயணங்களாகவே போய்விட்டனவே தவிர, வெகு தூரம் வெகு தூரம் பல தேசங்களுக்கு போக வேண்டும் என்று தெரியவில்லை. இந்த யவனர்கள் உயிரை பணயம் வைத்து இத்தனை குதிரைகளோடு இந்த மரக்கலத்தில் ஒண்டிக்கொண்டு வருவது பார்க்கும் போது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

மரக்கலம் முழுவதும் குதிரைச் சாணம். குதிரைத் தீனி. கொட்டு மழையிலும், சுட்டெரிக்கும் வெய்யிலிலும் இவன் நனைந்து கொண்டு வருகிறான். திரும்பவும் தங்கக் காசுகளோடு போகிறான் என்றால் என்ன வெறி.பணம் மீது என்ன ஆசை. அந்த ஊர் யவனன் என்னோடு அதிகம் பேசினான். அவன் கிழக்கேயும் போயிருக்கிறானாம். அற்புதமான ஊராம். சிங்கங்கள் நிறைய இருக்குமாம். சிங்கபுரம் என்று பெயராம். அடர்ந்த வனப் பகுதியாம். எனக்கே கிழக்கே போக வேண்டுமென்று ஆசை. சூரியன் உதிக்கின்ற திசையில் என்ன இருக்குமென்று தெரிந்துகொள்ள ஆசை. பூமி உருண்டையானது என்று சொல்கிறார்கள். ஆனால், கிழக்கேயுள்ள தேசத்திற்கு அப்பால் கிழக்கு என்னவாக இருக்கும் என்று தெரிந்துகொள்ள ஆசை.

சிறிய கண்களும், சப்பைமூக்கும், மஞ்சள்நிற முகமுமாய் ஒரு வேலையாள் அந்த யவனனிடம் இருந்தான். கவனித்தாயா. அவனுக்கு சீனன் என்று பெயராம். கடாரம் தாண்டி மறுபடியும் கடல் பயணப் பட்டால் கிழக்கிலிருந்து,வடக்கே நகர்ந்தால் தான் அந்த சீன தேசத்திற்கு போக முடியுமாம். கடற்பயணம்

பற்றி அத்தனை அறிவிருக்கிறது அவர்களுக்கு. அவர்களுக்கு முன்பு நாம் ஒன்றுமே இல்லை."

"இந்தப் போருக்குப்பிறகு நாம் எல்லோருமே கடாரம் போவாம்" என்று ரவிதாஸன் சொல்ல மணியடித்தது.

எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

வீரர்களுக்கு பயிற்சி அளித்து, அவர்களை ஒன்று சேர்த்து திரிச்சீரபுரம் நோக்கி நடப்பதற்குள் மூன்று லட்சம் சோழ வீரர்கள் திரிச்சீரபுரத்திலிருந்து பாண்டிய எல்லைக்குள் வேகமாகப் புகுந்தார்கள்.

முதலில் நூறு யானைகள் கொண்ட படை பூமி அதிர, வயல்வெளியூடே மதுரையை நோக்கி வந்தது. அங்குள்ள பாண்டிய வீரர்கள், மடக்கி யானைகளைத் தாக்க யானை மீதிருந்து வேலும், கவண் கல்லும் எறியப்பட்டன. வீட்டுக் கூரை கள் மீது நெருப்புப் பந்தங்கள் தூக்கிப் போடப்பட்டன. சிறுதேர்களில் பொறிவில்லை கட்டிக் கொண்டு வந்து கோட்டையை நோக்கி சரமாரியாக தீப்பந்தங்களும், அம்புகளும் விடப்பட்டன. கோட்டையிலிருந்த ஒருவர் கூட தலையெடுக்க முடியவில்லை. பாறைகளை வைத்தே அகழி தகர்க்கப் பட்டது. பாண்டிய மக்களை சவுக்கால் அடித்து மணல் கொண்டு வரச்சொல்லி அவர்கள் முதுகில் ஏற்றி அந்த மணல் மூட்டைகளை அகழியில் போட்டு மீதியிருந்த பெருங்கற்களைத் தள்ளி அவர்கள் பாலம் அமைத்தார்கள்.

இரவோடு இரவாக கோட்டையில் ஏறி கதவு திறந்தார்கள். யானைகளோடு கோட்டைக்குள் நுழைந்து வெறித்தனமாக சகல வீடுகளையும் இடித்தார்கள். பெண்களின் தலைமயிரை இழுத்துக் கொண்டு போனார்கள்.ஆண்களை வெட்டிச்சாய்த்தார்கள். அரண்மனை மாடங்களிலிருந்து சிறுவர்களையும் தூக்கிப் போட்டார்கள்.வரமறுத்த பெண்களை பிரம்பாலும், சவுக்காலும் அடித்தார்கள். வா, வந்து என்னிடம் படு அல்லது எரியும் கொள்ளியில் விழு என்று கட்டளையிட்டார்கள். பல

பாண்டியப் பெண்கள் எரியும் கொள்ளியில் தாவி விழுந்தார்கள்.

இப்படி ஒவ்வொரு கிராமமாக கபளீகரம் செய்து கொண்டு மதுரையை நோக்கி வந்தார்கள்.

ஆதித்தகரிகாலன் முன்னே நடத்திக்கொண்டு வருகிறான். கொடும்பாளூர் பூதிவிக்ரம கேசரியும், பார்த்திவேந்திரன் என்கிற கீழைச் சாளுக்கிய சிற்றரசனும் தலைமை தாங்கி வருகிறார்கள் என்று சொல்லப்பட்டது.

கீழைச் சாளுக்கியப்படைதான் மிக கோரமாக நடந்து கொள்கிறார்கள் என்றும் பேசப்பட்டது. சோழதேசத்து மறவர்கள் எந்தப்பெண்ணையும் கற்பழிப்பதில்லை, மாறாக குத்திக் கொன்று விடுகிறார்கள் என்று சொல்லப்பட்டது.

அந்தணர்கள் கோபமானார்கள்.

மூன்று லட்சம் வீரர்கள் கொண்ட படையை, நம்முடைய ஒரு லட்சத்து இருபதாயிரம் படை வீரர்களை வைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியாது. இங்கு நியாயமான போர் இல்லை. எனவே ,என்னுடைய படையை எடுத்துக்கொண்டு நான் வேறுவிதமாக ஆதித்தகரிகாலனை தாக்குகிறேன். கவலைப்படாதீர்கள். ஆதித்தகரிகாலனை உள்ளே நுழைய விட்டு, பிறகு அடித்து நொறுக்குகிறேன் என்று பானுகோபர் தன்னுடைய திட்டத்தைச் சொன்னார்.

ஆதித்தகரிகாலன் உள்ளே நுழைந்ததும், வேறு வழியாக அவனுடைய யானைப் படைக்கும், குதிரைப் படைக்கும் இடையே அந்த அந்தணருடைய தேரிக்காட்டுப்படை வந்து நின்று கொண்டது. விஷ அம்புகளை குதிரையை நோக்கி எய்தது. குதிரைகள் மீது விஷ அம்புகள் பட்டதும், குதிரைகள் துடித்து இறந்தன. சில நிமிடங்களில் நானூறு குதிரைகள் மடிந்தன. காயம் பட்ட வீரர்கள் உடனே மரணமடைந்தார்கள். மற்றவர்கள் அலறிக் கொண்டு ஓடினார்கள். அந்தப் படையை துரத்திக் கொண்டு தேரிக்காட்டுப் படை ஓடியது. எரியூட்டப்

பட்ட ஒரு கோட்டைக்குள் புகுந்து அந்தக் கோட்டையை உடனடியாக பல்வேறு தடுப்புகள் ஏற்படுத்தி, அதை அரணாக வைத்துக் கொண்டது. பகல் நேரம் முழுவதும் நன்றாக குடித்து உறங்கியது.

நடுநிசியில் கோட்டையின் பின் வாயில் திறந்து ஒவ்வொருவராக வெளியேறி மறுபடியும் கோட்டைக் கதவை மூடி விட்டார்கள். உள்ளே ஆறேழு வீரர்கள் மட்டும் இருந்து பெரும் படை இருப்பது போன்ற ஒலிகளை இடையறாது ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஆதித்தகரிகாலன் தன் யானைப்படையோடு மறுபடியும் அந்த பாழ்பட்டக் கோட்டையை சூழ்ந்து கொண்டான். தகர்க்க உத்தரவிட்டான். இப்போது ஆதித்தகரிகாலனின் படையை மறுபடியும் பின்னாலிருந்து தேரிக்காட்டு வீரர்கள் விஷ அம்புகளினால் தாக்கினார்கள். உள்ளேயிருந்து சத்தம் வருகிறது. ஆனால், பின்னேயிருந்து தாக்குதல் வருவதால், ஆதித்தகரிகாலன் துடித்தான். யானைகள் பெரும் பிளிறலோடு முன்னும் பின்னும் அலைந்தன. வலி தாங்காமல் விஷத்தின் வேகம் தாங்காமல், தனக்கு மேலிருந்த பாகர்களைத் தூக்கி சிதறடித்தன. கோட்டைக்குள் புகுந்த ஆதித்தகரிகாலன் அங்கிருந்த ஆறுவீரர்களை வெட்டி வீழ்த்தினான். எப்படி தப்பிப்பார்கள் என்று பார்த்து சிறிய சந்துவழியாக வெளியே வந்தான். அவன பின்னால் அவனுடைய பாதுகாவல் படையும் வந்தது. அந்தணர்கள் வெளியேறிய அதே வழியாக ஆதித்தகரிகாலன் வெளியேறினான்.

அவன் குதிரையோடு வேகமாக திரிச்சீரபுரம் நோக்கிப் போனான். அங்குள்ள படை வீரர்களை தடுத்து நிறுத்தினான். சேனாதிபதிகளோடும், பூதிவிக்கிரம கேசரியோடும் ஆலோசனை செய்தான். மிகுந்த கோபத்தோடு எப்படியாவது பாண்டியர்களை நசுக்க வேண்டும் என்று சொன்னான். இறந்து போன குதிரைகளைப் பார்த்து மனம் வெதும்பியதாகக் கதறினான். இவ்வளவு பெரிய படை இருந்தும் புதியதாக ஒரு வேதனை

யைக் கொடுத்தார்களே... யார் அவர்கள்.அந்த அந்தணர்களை நாம் இத்தனை நாள் எப்படி விட்டுவைத்தோம். நம்முடைய வேவுக்காரர்கள் என்ன செய்தார்கள் என்று சகலரையும் ஏசினான். வெறும் தடியர்கள்.திண்ணை தூங்கி தடியர்கள் என்று சேனாதிபதிகளை ஏசினான். திரிச்சீரபுரத்தை யார் காவல் காத்தது என்று சொல்லி, அவரை சவுக்கால் அடித்தான். சேனாதிபதிகள் நொந்து போனார்கள். அரசனின் கோபம் தாங்காமல் தலை குனிந்தார்கள். அடிக்காதே என்று ஒருவருக்கும் சொல்ல முடியவில்லை.

ஆதித்தகரிகாலன் கோபம் குறைப்பதற்காக பழையாறைக்கு ஆள் அனுப்பினார்கள். குந்தவை தன்னுடைய சேடிப் பெண்களோடும், பாதுகாவல் வீரர்களோடும் திரிச்சீரபுரம் வந்து ஆதித்தகரிகாலனை சமாதானப்படுத்தினார்.

வீரபாண்டியன் தன்னுடைய வெற்றியை விழாவாகக் கொண்டாடுகிறான் என்ற செய்தி வந்தது. மூர்க்கமாக போரிடாதே, விவேகமாகப் போர்செய் என்று குந்தவை வலியுறுத்த போர்த்திட்டங்கள் மாற்றப்பட்டன.

எப்படி அந்தணப் படைகள் முன்னும், பின்னும் நின்று தாக்குகின்றனவோ... அதேபோல தாக்க வேண்டுமென்று இவர்கள் தீர்மானித்தார்கள்.

கீழைச்சாளுக்கிய இளவரசன் பார்த்திவேந்திரவர்மன், நாகப்பட்டினத்தில் ஆறு மரக்கலன்களோடு தொண்டிக்குப்போய் தொண்டியை எரியூட்டி நாசம் செய்துவிட்டு அங்கிருந்து மேற்கு நோக்கி நகர்ந்து மதுரைக்குள் நுழைய வேண்டும்.

கொடும்பாளூர் அரசன் பூதிவிக்கிரமகேசரி இன்னும் மிகப்பெரிய படையோடு பதினைந்து மரக்கலன்களோடு குமரி முனையை சுற்றிக் கொண்டு சேர தேசத்திற்குப் போய், அங்கு எங்கேனும் வசதிப்படுகின்ற ஒருதுறைமுகத்தில் இறங்கி சேர மன்னனுக்கு காந்தளூர்ச் சாலையிலிருந்து தப்பிவந்த அந்தணர்களைத் தாக்குவதாகச் சொல்லி படைகளை தாண்டிப்போக அனுமதி கோரி, அப்படி அனுமதி கிடைத்தால் சேரதேசத்தின்

வழியாகவும் அப்படி அனுமதி கிடைக்கவில்லையெனில் இன்னும் சற்று தள்ளி ராஷ்டிரகூட எல்லைக்கு வந்து அங்கிருந்து கிழக்கு நோக்கி நகர்ந்து பாண்டியர்களைத் தாக்க வேண்டும். இப்பொழுது அமாவாசை. அடுத்த பௌர்ணமியில் நாம் அத்தனை பேரும் பாண்டியனை ஒரு சேர நாலா திக்கில் இருந்தும் நசுக்க வேண்டும். பாண்டிய தேசத்தை சூறையாட வேண்டும். எவர் எதிர்த்தாலும் வெட்டிக்கொல்லலாம். நாம் வெறும் அம்புமட்டும் செலுத்தாமல், இப்பொழுது வேட்டையாட எண்ணெய் பந்துகளை பயன்படுத்தி, காற்றில் நெருப்புப் பிடித்துக் கொள்ளும் கற்பூரத் தைலத்தை அதில் கலப்போம். எண்ணெய் பந்து எங்கு விழுந்தாலும், சிதறி நாலா பக்கமும் நெருப்பு தெறிக்கும். எல்லோர் மீதும் பட்டு எண்ணெய் ஒட்டிக் கொண்டு எரியும். குதிரைகளுக்கும், யானைகளுக்கும் நெருப் பென்றால் பயம். அவைகளுக்கு நடுவே குறிபார்த்து வீச நாம் இதைப் பழக வேண்டும். இன்னும் அதிக தூரம் போகும் பொறிவிற்களை தயார் செய்ய வேண்டும்.''

ஆதித்தகரிகாலன் வேகமாக உத்தரவுகள் சொல்ல திரிச்சீரபுரம் பாடிவீடாக மாறியது.மிக வேகமாக போர்க் கருவிகள் தயாராயின. வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இரவு நேரத்தில் எண்ணெய் பந்துகள் வீசி எறியப்பட்டன. அவை விளைவிக்கும் சேதம் பார்க்கப்பட்டது. திட்டமிட்டபடி படகுகளிலும், மரக்கலன்களிலும் அவர்கள் தனித்தனியே கிளம்ப, ஆதித்தகரிகாலன் திரிச்சீரபுரத்திலிருந்து மிக நிதானமாக முன்னேறினான். மறுபடியும் பாண்டிய தேசத்தை பாழ்படுத்தினான். ஒரு வீட்டு சுவரும் நில்லவொட்டாது இடித்துத் தரை மட்டமாக்கினான். பாண்டிய மக்களை ஆடுகளைப் போலவும், மாடுகளைப் போலவும் பட்டியில் அடைத்தான். தப்பித்து விட முயற்சி செய்கிறவர்களை வெட்டிக் கொன்றான். பல வீரர்களின் மூக்கை அரிந்து அவர்கள் முகத்தை சுற்றி கட்டு கட்டி ஒரு வெள்ளைத் துணியில் சோழன் என்று எழுதி, சோழ இலச்சினை பிடிக்கச்செய்து மதுரையை நோக்கி ஓட வைத்தார். போ, போய்ச்சொல் என்று கட்டளையிட்டான்.

சேரதேசத்தில் இறங்கி ஊடறுத்துப் போவதற்கு பூதிவிக்கிரம கேசரிக்கு அனுமதி கிடைத்தது. ஆதரவும் கிடைத்தது. காந்தளூர்ச்சாலை படைகள் அவர்களை வாழ்த்துசொல்லி அனுப்பினார்கள். புதிய கருவிகள் கொடுத்தார்கள்.

"விஷ அம்புகளை விடுகிறார்களே என்ன செய்வது?" என்று கேட்க, "எத்தனை விஷ அம்புகள் வேண்டும்."

காந்தளூர்ச்சாலை மகா உபாத்யாயன் கொக்கரித்தார்.

"அம்புகள் மட்டும் போதுமா. இல்லை விஷப்பாத்திரங்களும் தரட்டுமா. இந்த மரக்குடுவைகளில் விஷம் இருக்கிறது. ஒரு சொட்டு விஷம் போதும், ஒரு யானையைக்கூட கொன்றுவிடும். யானை இறக்க ஒரு மணி நேரமாகும். குதிரை இறக்க மூன்று நிமிடம் போதும். மனிதர்பட்டால் முப்பது நொடிகளில் மரணமடைவார்கள். அத்தனை அந்தணர்களையும் கொன்று போடுங்கள்." என்று விஷப்பாத்திரங்களையும் கொடுத்தார்கள். எப்படி கையாள வேண்டும் என்று சொன்னார்கள். எப்படியெல்லாம் போர்கள் செய்வார்கள் என்று பூதிவிக்கிரமகேசரிக்கு போதிக்கப்பட்டது. பூதிவிக்கிரமகேசரி மலைகள் ஏறி இறங்கி செப்பனிடப்பட்ட பாதை வழியாக யானைகளோடு மதுரையை நோக்கி இறங்கினார்.பெரிய வயல் வெளிகளை தாண்டினார். அங்குள்ள ஊர்களை தீயிலிட்டு அழித்தார். யானைகளையும், குதிரைகளையும் விட்டு வயல்களையும் கரும்புக்காடுகளையும் நாசம் செய்தார்கள். நிலத்திலிருந்த நெல்லும், மற்ற பயிர்களும் பறிக்கப்பட்டன. போர் வீரர்களுக்கு உணவாயின. ஆடுகள் வெறுமே வெட்டி சாய்க்கப்பட்டன. மாடுகள் குத்திக் கொல்லப்பட்டன. எந்தவித செல்வமும் பாண்டியநாட்டில் இருந்துவிடக் கூடாது என்ற வெறியோடு பூதிவிக்கிரமகேசரிப்படை இறங்கியது. அங்குள்ள யானைகளை வெட்டி வீழ்த்தி ரத்த சேற்றில் நகர்ந்து போனது. ஒரு குறிப்பிட்ட நாளில் பௌர்ணமி அன்று நாலாபக்கமும் மிகக் கொடூரமாக தாக்கினார்கள். அலை அலையாய் திரிச்சீரபுரத்திலிருந்து மிக வேகமாக சோழப்படைகள் வந்து கொண்டே

இருந்தனர். பூதிவிக்கிரமகேசரியின் விஷஅம்புகளுக்கு பாண்டிய தேசத்தின் யானைகள் பலியாயின.

குதிரைப்படை சேதமுற்றது.

பூதிவிக்கிரமகேசரி வெற்றியோடு முன்னேறுகிறார் என்று தெரிந்து சேர வீரர்களும், சோழ வீரர்கள் போல் உடையணிந்து கொண்டார்கள். காந்தளூர்ச்சாலை பெரும்படை அவர்களோடு கலந்து கொண்டது. எங்கே அந்த அந்தணர்கள், எங்கே அந்த அந்தணர்கள் என்று மதுரைக்குள் தேடினார்கள்.

நீலக்கண்ட உபாத்யாயரும், ராம உபாத்யாயரும், பானுகோபரும், ரவிதாஸனும், பரமேஸ்வரனும் பிசாசாய் சண்டையிட்டார்கள். கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் வைகை ஆற்றைத் தாண்டி சோழப்படைகள் ஒட்டு மொத்தமாய் இறங்குவது பார்த்து பானுகோபர் திகைத்தார். ஒன்றும்செய்ய முடியாது. என்ன செய்வது இனிமேல் மரணம் வரை யுத்தம்தான் என்று சொன்னார்.

அப்போது யாருமே செய்யக்கூடாத ஒரு தவறை வீரபாண்டியன் செய்தான். அவன் சோழப்படையைப் பார்த்து நடுங்கினான். அவனும் இன்னும் சில வீரர்களுமாய் போர்க்களத்தை விட்டு தப்பி ஓடி பார்த்திபேந்திரன் கொடுத்த இடைவெளியின் மூலமாக தப்பித்து சேவூர்காடுகளுக்குள்போய் ஒளிந்து கொண்டான். மாறுவேடத்தில் சோழவீரர்களைப் போல் உடையணிந்து அவன் தப்பித்தது தெரியாமல் பார்த்திவேந்திரவர்மன் திகைக்க, அவனுக்குத் துணையாகப் போகும் படையை வளைத்துக் கொண்டார்கள். அந்தப் படையை அடித்து உதைத்து பார்த்திவேந்திரன் வீரபாண்டியன் எங்கு தப்பிக்கிறான் என்று கேட்டுக் கொண்டார்கள்.

வீரபாண்டியன் போகட்டும். மதுரையை சீரழிப்போம் என்று ஆதித்தகரிகாலன் சொல்ல மதுரை அங்குலம், அங்குலமாக தீவைத்து கொளுத்தப்பட்டது. மதுரை சூறையாடப்பட்டது. சோழப்படைகள் கை கட்டி இருக்க, காந்தளூர்ச்சாலை படையும், வீடுவீடாய் ஏறி ஏறி இறங்கினார்கள். பெண்களிடமிருந்தும், ஆண்களிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்தும் நகைகளைப் பறித்தார்கள். செல்வங்களை அடித்துப் பிடுங்கிக் கொண்டார்கள். நிலவறையைத் தகர்த்து எங்கிருக்கிறது. எங்கிருக்கிறது என்று வீடு வீடாய்க் கேட்டார்கள். குழந்தைகளின் முதுகில் கத்தி வைத்து குத்திக்கொன்று விடுவேன். சகலமும் எடுத்து வை என்று மிரட்டினார்கள்.

வீரபாண்டியன் தப்பித்து ஓடிப்போனது பற்றி சோழவீரர்களால் பாண்டிய மக்களுக்கு சொல்லப்பட்டது. பாண்டிய மக்கள் நெஞ்சில் அடித்துக்கொண்டு அழுதார்கள். தரையில் விழுந்து புரண்டார்கள். அடிமையாகிப் போனோமே, அடிமையாகிப் போனோமே, என்றுவாய் விட்டு அழுதார்கள். சோழ வீரர்கள் அந்த அழுகையை கை கட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். வண்டியில் போவோர்களை மறித்து நொறுக்கினார்கள்.

பெண்களை நகரத்தை விட்டு, கிராமங்களுக்குப் போகச் சொன்னார்கள். சிறு துளி தங்கம் கூட இல்லாமல் ஒற்றைப் புடவையோடு கை வீசி பெரும் பணக்காரப் பெண்கள், சேனாதிபதியின் மனைவியர், ராஜகுடும்பத்தினர் ,அந்தணப் பெண்கள் என்று பலரும் வயல் வெளி நோக்கி, கிராமங்கள் நோக்கி நகர்ந்தார்கள். ஆனால், கிராமங்களும் பாழ்பட்டுத்தான் கிடந்தன. எதிர்காலம் என்ன என்று தெரியாமல் அவர்கள் முன்னும் பின்னும் அலைந்தார்கள். பாண்டிய தேசம் பாழ்பட்டது.

"இனிமேல் முடியாது. ஜெயிப்பது என்பது முடியாது. வீரபாண்டியன் ஏமாற்றிவிட்டான். இரவோடு இரவாக நாமும் வெளியேறத்தான் வேண்டும். ஒரு அரசன் நின்றிருந்தால், நானும் நின்றிருப்பேன்.பொதுமக்களை விட்டு வீரபாண்டியன் ஓடியதால், நானும் போக வேண்டிய அவசியம் இருக்கிறது. இதோ, நம்முடைய மாளிகையில் நாம் ஏற்படுத்தியிருக்கின்ற நிலவறை வழியாக இரவோடு இரவாக தொடர்ந்து நாம் வெளியே போவோம்"

"எங்கே போவது;;

பரமேஸ்வரன் ஆத்திரத்தோடு கேட்டான்.

"சோழதேசம் நோக்கிப் போவோம்."

"சோழ தேசத்தில் எங்கே போவோம்?"

"சிதம்பரம் நோக்கிப் போவோம்."

"சிதம்பரத்தில் என்ன இருக்கிறது?"

"வீர நாராயணபுர சதுர்வேதிமங்கலத்தில் உடையார் குடி* என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊரில் நிலம் வாங்கி அமர்வோம். சிதம்பரத்தில் சுவாமி தரிசனம் செய்ய வந்த அந்தணர்களாக சேரதேசத்து அந்தணர்களாக மாறிவிடுவோம். பாண்டியனாக இருப்பதுதான் ஆபத்து. சேர தேசத்து அந்தணர்கள் என்றால் ஒன்றும் சொல்லப் போவதில்லை. ஏனென்றால் இவர்கள் படையெடுக்க பூதிவிக்கிரம கேசரிக்கு சேரதேசத்துப் படைகள் தான் உதவி செய்தன. விஷ அம்புகள் கொடுத்தன.எங்களுக்கு சண்டை தெரியாது என்று சொல்லி, நாங்கள் போர்வீரர்கள் இல்லை என்று சொல்லி வெறுமே வேதம் மட்டுமே கற்றவர்கள் என்று சொல்லி உடையார்குடியில்போய் இருப்போம்"

"பிறகு"

"மெல்ல மெல்ல நம்முடைய சுயரூபத்தை வெளிப் படுத்துவோம். இது பதுங்கும் நேரம். பாயும் நேரமல்ல. பாய வேண்டிய நேரத்தில் கால் இடறிவிட்டு விட்டு வீரபாண்டியன் எங்கோ ஓடி விட்டான். அவன் ஓடாமல் இருந்தால், இன்றில்லையெனினும் நாளை நாம் ஜெயித்திருக்க முடியும். போரின் ஆரம்பத்தில் தோல்வியைப் பார்த்துவிட்டு பயந்து விட்டான் அவன். ஒட்டுமொத்தமாக பின் வாங்கி, மறுபடியும் மதுரையை தாக்கியிருக்க முடியும். மூன்று லட்சம் வீரர்கள். இவ்வளவு பெரியபடையோடு ஆதித்த கரிகாலன் வருவான் என்று நான் நினைக்கவே இல்லை. அவனுக்கும்தான் நஷ்டம்.

* இப்போது காட்டு மன்னார்குடி

அவனுடைய யானைகளும்தான் செத்தன. அவன் குதிரைப் படையும் மோசமாகியது. ஆனால், ஆதித்தகரிகாலன் ஓட வில்லையே. எங்கும் நகரவில்லையே. சற்றும் பயப்பட வில்லையே. எவ்வளவு வீரனாகப் போரிட்டான். வீரபாண்டியன் செய்தது மிகப்பெரிய தவறு. சோழனுடைய வீரம் மெச்சத் தகுந்தது. நாம் சோழ தேசம் போகிறோம். எதிரிகள் நம்மை அங்கே தேட மாட்டார்கள். பாண்டிய தேசத்தை சல்லடையிட்டு தேடுவார்கள். நாம் நகர்வோம். இரவோடு இரவாக... இரவோடு இரவாக நகர்வோம். நமது பெண்டுகளை முன்னே அனுப்பு"

பலத்த காவலோடு பெண்கள் இரவோடு இரவாகப் போனார்கள். அடுத்த நாள் இரவு வீரர்கள் போனார்கள்.

அந்தணர்கள் மாளிகை காந்தளூர் தேசத்து வீரர்களால் தாக்கப்பட்டது.

"வீரபாண்டியனை கை கழுவி விட வேண்டியது தானா"

ரவிதாஸன் கேட்டான்.

"என்ன செய்யச் சொல்கிறாய்"

பானுகோபர் கோபமாகப் பேசினார்.

"நானும், பரமேஸ்வரனும் வீரபாண்டியனை தேடிப் போகி றோம். அவன் எங்கிருந்தாலும் கண்டுபிடித்து அவனை உற்சாகப்படுத்தி மறுபடியும் போரிடுவதற்குண்டான ஏற்பாடு களைச் செய்கிறோம்."

"அப்பொழுது எங்கிருந்து செய்வாய்"

"தெரியவில்லை. வீரபாண்டியனை கண்டுபிடித்துவிட்டு அவனை எங்கேனும் பத்திரமாக வைத்துவிட்டு பிறகு உங்களை வந்து நான் பார்க்கிறேன். வீரபாண்டியனை விட எனக்கு மன மில்லை. அவனோடு நான் இன்னும் நெருங்கிப் பழகியிருக்க வேண்டும். விலகி நின்று விட்டது நம்முடைய தவறு என்று தோன்றுகிறது. உற்சாகம் கொடுக்காமல், அவனின் மனநிலை அறியாமல் அவனைப் புறக்கணித்து விட்டோமோ என்று தோன்றுகிறது.

வீரபாண்டியனைக் காக்க வேண்டியது நம் கடமை. நமக்கு சோறிட்டவன் அல்லவா. இந்த அந்தணக் குடும்பத்தை வாழ வைத்தான் அல்லவா. நான்கு வருடங்கள் அற்புதமாக நம்மை பேணிப் பார்த்தவன் அல்லவா. பாராட்டியவன் அல்லவா. அவனை எப்படி நான் மறக்க முடியும்.''

ரவிதாஸனுடைய உரத்தப் பேச்சு எல்லோருக்கும் பிடித்திருந்தது.

"நல்லது. செய். போய் வா." விடை கொடுத்தார்கள்.

"போகும் இடத்தில் வீரபாண்டியனை சோழத்திற்கு அழைத்து வா. உடையார் குடிக்கு அழைத்து வா. அங்கு வைத்து அவனுக்கு பயிற்சிகள் கொடுத்து உற்சாகமூட்டி, அவனை மறுபடியும் மதுரைக்கு தலைவனாக்கலாம். சோழ தேசத்தின் இறுக்கமும், நிர்வாகத் திறனும் எப்படி என்பதை அவனுக்குக் காட்டலாம். இதுதான் என்னுடைய எண்ணமும் கூட. அவன் இன்னும் உலகமறியாதவனாக இருக்கிறான். நிர்வாகம் தெரியாதவனாக இருக்கிறான்.

"அதை சோழ தேசத்திலிருந்து நாம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்பது என் விருப்பம். நான் போய் வருகிறேன். உயிரோடிருப்பின் சந்திப்போம்.''

"ஏன் இப்படிப் பேசுகிறாய் ரவிதாஸா"

பானுகோபர் அவனைத் தழுவிக் கொண்டு கேட்டார்.

"இது யுத்த காலம். யார் செத்துப் போவோம். தெரியவில்லை. கண்முன்னே ஆயிரக்கணக்கனான வீரர்கள் மடிந்திருக்கிறார்கள். நான் இன்னும் எப்படி உயிரோடு இருக்கிறேன் என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இன்னும் பூதிவிக்கிரம கேசரியின் விஷ அம்பு என்னை ஏன் தாக்கவில்லை என்று புரியவில்லை. நமக்காக கோட்டைக்குள் நின்று உயிர்த் தியாகம் செய்தார்களே அந்த ஆறு தேரிக்காட்டு வீரர்கள் அவர்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும். அவர்களுக்கு எள்ளும் தண்ணியும் நாம் வார்க்க வேண்டும். நம்முடைய

கடமை அது. அவர்கள் இறந்து ஒரு மாதமாகி விட்டது. அனைவரும் வந்து அந்த வீரர்களுக்காக தர்ப்பணம் செய்து விட்டுப் போகலாம்."

அந்த அந்தணர்கள் உட்கார்ந்து இறந்து போன வீரர்களுக்காகவும், யானைகளுக்காகவும், குதிரைகளுக்காகவும், பசுக்களுக்காகவும், போரில் நொந்து அலறி குத்துப்பட்ட பெண்களுக்காகவும், குழந்தைகளுக்காகவும் தர்ப்பணம் செய்தது. நீங்கள் எங்களை காப்பீர்களாக என்று கை கூப்பி வேண்டிக் கொண்டார்கள். எந்த சேதமும் அடையாமல், சோழ தேசத்தை நோக்கி அந்த அந்தணர் கூட்டம் நகர்ந்தது.

ரவிதாஸனும், பரமேஸ்வரனும் மேற்கு நோக்கிப் போய் வேடர்கள் போல் உடையணிந்து சேவூர் காடுகளை நோக்கிப் போனார்கள். இடம் இடமாகத் தேடினார்கள். ஒரு மாதம் கழித்து வீரபாண்டியன் ஒரு மலை உச்சியில் குடிசை போட்டு படுத்திருக்கிறான் என்றும், கடும் ஜுரத்தில் அவதிப்படுகிறான். பல வெட்டுக் காயங்கள் இருக்கின்றன என்றும் அந்த வெட்டுக்காயங்களினால் சீழ் பிடித்து தவிக்கிறான் என்றும் லேசாக ஒரு விஷ அம்பு கீறி அந்த விஷத்தின் கொடுமையை தாங்காமல் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறான் என்றும் நெஞ்சு முழுவதும் சளி கோர்த்துக் கொண்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் வீரபாண்டியனை நோக்கி ஓடினார்கள்.

காடுகளில் ஒளிந்து ஒளிந்து இரண்டு பேர் ஓடுகிறார்கள். காட்டு வாசிகளைப் போல் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் எதையும் கண்டு கொள்ளவில்லை. எதையோ ஒரு இடத்தை நோக்கி ஓடுவதாகத் தெரிகிறது என்று சோழ வேவுப்படையினர் சொல்ல, சோழப் படை அவர்களை பின்தொடருவதை சோழதேசத்தின் ஒற்றர்கள் ஓடிவந்து ஆதித்தகரிகாலனிடம் சொன்னார்கள்.

மதுரையில் முகாமிட்டிருந்த ஆதித்தகரிகாலனும் பூதிவிக்கிரம கேசரியும் பார்த்திவேந்திரனும் சிறுபடையோடு சேவூர் நோக்கி வேகமாகக் குதிரையில் போனார்கள்.

எப்படியும் வீரபாண்டியனைப் பிடித்து அவன் மணிமகுடத்தையும், செங்கோலையும் பிடுங்கி விடவேண்டுமென்ற ஆத்திரத்தில், ஆதித்தகரிகாலன் இருந்தான். காலால் அவனை மிதிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்தான்.

பாண்டியன் சிம்மாசனத்தில் சகலரும் உட்கார்ந்து பார்க்கலாம் என்று கட்டளையிட்டான்.

குதிரை வீரர்கள் ஒவ்வொருவராக பாண்டியன் சிம்மாசனத்தில் அமர்ந்து வெற்றி எக்களிப்பு செய்தார்கள். அதில் உட்கார்ந்து கொண்டு கள்ளுக் கலயத்திலுள்ள கள்ளை அருந்தினார்கள். கொஞ்சம் சிம்மாசனத்தின் மீது துப்பினார்கள். பாண்டியன் அரசவை அலங்கோலப்படுத்தப்பட்டது.

பாண்டிய தேசத்தின் புலவர்கள் கைகட்டி கண்ணீர் ஒழுக அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ரவிதாஸனும், பரமேஸ்வரனும் கட்டிலில் படுத்துக்கிடந்து அரற்றும் வீரபாண்டியனைப் பார்த்தார்கள். வீரபாண்டியன் முகம் கறுத்துப் போயிருந்தது. விஷம் நெற்றி வரை தாக்கியிருப்பது தெரிந்தது. தூக்கிக் கொண்டு கீழிறங்கி விடலாம். மதுரை வழியாக நாகை போய் நாகையிலிருந்து பூம்புகார் போய், பூம்புகாரிலிருந்து சிதம்பரம் போய்விடலாம் என்று பரமேஸ்வரன் சொல்ல "அவ்வளவு தூரப்பயணம் இவன் தாங்க மாட்டான். வழியிலேயே இறந்துவிடுவான். விஷமுறிவு வைத்தியம் இங்கேயே செய்வோம்" என்று சொல்லி மூலிகைகள் தேடினார்கள். மருந்து அரைத்தார்கள். காயங்களுக்கு போட்டார்கள். விஷ முறிவு வைத்தியத்தை துவங்கினார்கள்.

"மறுபடியும் சொல்கிறேன். இந்த... இந்த விஷமுறிவு மூலிகை கொடுத்தால் மூன்றுநாட்களில் இறந்து போவான். மூளை தவிர மற்ற எல்லா இடங்களுக்கும் விஷம் பாதித்திருக்

கிறது. இது இறங்குவது பற்றி எனக்கு சந்தேகம் அதிகம். விஷம் இறங்கினாலும் கை கால் விளங்காது போகுமோ என்ற பயம் உண்டு. பேச்சு குழறுமோ என்று தோன்றுகிறது. வீரபாண்டியன் கதை முடிந்து விட்டதாகத் தோன்றுகிறது" பரமேஸ்வரன் பயப்பட ரவிதாஸன் மறுத்தான்.

"இல்லை, முடியவிடக்கூடாது. ஏதேனும் செய்ய வேண்டும். வைத்தியத்தை ஆரம்பிப்போம்.யாரும் இங்கு இல்லை. இங்கு இருந்தபடியே தொடருவோம்."

அவர்கள் வைத்தியம் துவங்கினார்கள். வாயில் சாறு இறக்கினார்கள். உடம்பில் எண்ணெய் தடவினார்கள். வீரபாண்டியன் வாயிற்குள் விரல்விட்டு குமட்டி வாந்தி எடுக்கச் சொன்னார்கள்.

வீரபாண்டியன் வாந்தி எடுத்தான். நிற்க முடியாமல் தள்ளாடினான். கடும் ஜுரம் அடித்தது. மூக்கிலிருந்து ரத்தம் வடிந்தது. ஜுரம் தாங்காமல் உடம்பிலுள்ள ரோமங்கள் உதிரத் துவங்கின. தலைமுடி கையோடு வந்தது.

ரவிதாஸன் தலையில் அடித்துக்கொண்டான்.

என்னவிதி இது. எப்பேர்பட்ட அரசன். எவ்வளவு துடிப்புள்ளவன். முட்டாள்தனமாக, வந்து விட்டானே. இப்படி சாவதற்கு போரில் வீரமரணம் அடைந்திருக்கலாமே. வெட்டுப்பட்டு செத்திருக்கலாமே. வீரபாண்டியா ஏன் தப்பித்து ஓடினாய். ஆறு நாட்கள் எதுவும் சாப்பிடாமல் உடம்பை ஏன் பாழ் பண்ணிக் கொண்டாய்.

உலுக்கிக் கேட்டான்.

ஆனால், வீரபாண்டியனுக்கு எதுவுமே நினைவில் இல்லை. வெறுமே போர்... போர் என்றும் சர்வேஸ்வரா, சிவாயநமஹ, என்றும் பிதற்றிக் கொண்டிருந்தான். வேயுறுதோளிபங்கன்விடமுண்டகண்டன் மிக நல்ல வீணை தடவி.... என்றும் பாடினான்.

ரவிதாஸனுக்கும், பரமேஸ்வரனுக்கும் அவன் படுகிற அவஸ்தை பார்த்து-கண்ணிலிருந்து நீர் வந்தது.

"ஓம் காலாயா கோராயா வஜ்ரதனுஷ்டாயா. சத்ரு நாஸனாயா சர்வ பூதாத்மனே. ஹூம்பட் ஸ்வாஹா."

அவர்கள் கால பைரவ மந்திரம் சொல்லத் துவங்கினார்கள்.

எதிரிகளை வீழ்த்தவும், ஜூரத்தை இறக்கவும் இடையறாது மந்திரம் சொன்னார்கள்.

மறுநாள்... வீரபாண்டியனுக்கு மெல்ல நினைவு வந்தது.

ரவிதாஸனா... என்று காலையில் கேட்க துள்ளியெழுந்த ரவிதாஸன் ஓடிப்போய் வணக்கம் சொன்னான்.

"நான்தான்... ரவிதாஸன்தான். நலமாக இருக்கிறீர்களா மன்னா" என்று கேட்டு, "நீதான் காப்பாற்றினாயா" என்று கைகளை வீரபாண்டியன் நன்றியோடு பிடித்துக்கொண்டான்.

"இது என் கடமை"

"கடமையா, அந்தணனின் கடமை அரசனைக் காப்பாற்றுவதா. நீபோர்வீரன். நீ மறவன். என்ன தைரியமாக என்னைப் பின் தொடர்ந்து ஒரு காட்டுவாசி போல் வேடமணிந்து என்னைக் காப்பாற்றி இருக்கிறாய். ரவிதாஸா... ரவிதாஸா... காந்தளூர்ச் சாலை மகா மகா உபாத்யாயன் நீதான். எல்லோரும் என்னை விட்டுப் போன பிறகு என்னைப் பார்க்க வேண்டுமென்று வந்திருக்கிறாயே பரமேஸ்வரா... அருகே வா. என்னைத் தாங்கிக்கொள்"

அவர்கள் இருவரையும் தழுவிக் கொண்டான். கன்னங்களில் முத்தமிட்டான். கைகளை எடுத்து கண்ணில் ஒற்றிக் கொண்டான். என்னால் வீழ்ந்து வணங்க முடியவில்லை. அந்தணர்களே என்னை ஆசிர்வதியுங்கள் என்று கை கூப்பினான்.

அவர்கள் இருவரும் எழுந்து நின்றார்கள். உரக்க ருத்ரம் சொன்னார்கள். சமகம் சொன்னார்கள். குணமடைய வேண்டுமென்று சிவபெருமானை பிரார்த்தனை செய்தார்கள். ஒற்றர்கள் புதருக்குள் நடுவேயிருந்து வீரபாண்டியனையும், ரவிதாஸனையும், பரமேஸ்வரனையும் பார்த்தார்கள்.மெல்லப் பின் வாங்கினார்கள். கீழே தரைக்கு இறங்கினார்கள். சேவலி (சேவலி மலை புதுக்கோட்டைக்கு தென்பகுதியில் உள்ளது) மலைக்கு அடியிலுள்ள வீரர்களுக்கு தெரிவித்தார்கள். வீரர்கள் அங்கு வந்து சேர்ந்த ஆதித்த கரிகாலனுக்கு விஷயத்தைச் சொன்னார்கள். இன்னும் படைகளை அழைத்து வர ஆதித்த கரிகாலன் கட்டளையிட்டான். இன்னும் படைகள் வந்தன. அந்தப் பெரும் மலையை சோழற்படை சுற்றிக் கொண்டது.

ஒற்றைக் காட்டின் வழியூடே ஆதித்த கரிகாலனும், பார்த்திவேந்திரனும், பூதிவிக்கிரமகேசரியும் மேலேறினார்கள். அவர்கள் வழி ஏற்படுத்திக் கொண்டும், பின்னால் துணையாகவும் படைபோனது.

கீழே ஆரவாரம் கேட்டு ரவிதாஸன் திகைத்தான். பரமேஸ்வரன் நாலா பக்கமும் ஓடி மரங்களில் ஏறி, என்ன நடக்கிறது என்று பார்த்து இறங்கி வந்து வீரபாண்டியனிடம் சொன்னான்.

"தப்பித்து விடலாம். வாருங்கள் தெற்குப் பகுதியில் எவராலும் நெருங்க முடியாத அடர்ந்த வனம் இருக்கிறது. அதனூடே போய் விடலாம் வாருங்கள்" என்று சொன்ன போது வீரபாண்டியன் மறுத்துவிட்டான்.

"இனிமேல் பயணப்பட என்னால் முடியாது. நான் போரில் நின்று எதிர்த்து வீரமரணம் அடைந்திருக்க வேண்டும். தப்பி ஓடிவந்தது தவறு. தப்பி ஓடி வந்த என்னை இந்த விஷஅம்பு தீண்டி இந்த அசிங்கமான நிலைக்கு ஆளாகி விட்டேன். நீங்கள் தப்பித்து விடுங்கள்." என்று சொல்ல ரவிதாஸனும், பரமேஸ்வரனும் மறுத்தார்கள்.

"இல்லை. நிச்சயம் ஆதித்த கரிகாலன் மேலே வருவான். என்னைச் சந்திப்பான். அவனைப் பார்த்ததும் நான் அமர்ந்தபடி தரையில் உமிழ்வேன். அவனை இழிவாகப் பேசுவேன். சூளுரைப்பேன். ஆதித்தகரிகாலன் நிச்சயம் என் நெஞ்சில் வாள் பாய்ச்சுவான். இந்த மரணம் எனக்கு நல்லது. ஆதித்த கரிகாலனும் என்னைப் போல் படபடப்பானவன். முன்கோபி. அவனால் நியாயப்படி நடந்து கொள்ள முடியாது. எனவே என்

மரணத்தை நீங்கள் போய் உலகிற்கு சொல்லுங்கள், பாண்டியப் பரம்பரையை தொடர்ந்து காப்பாற்றிக் கொண்டிருங்கள். இன்று இல்லையெனினும் என்றேனும் ஒருநாள் சோழ தேசத்தில் ஒரு கல்லும் நிற்கவொட்டாது இடித்து கோவேறுக் கழுதை போட்டு உழுது பேய்க் கடுகு விதைக்க வேண்டுமென்று என்னுடைய அடுத்த தலைமுறைகளுக்குச் சொல்லுங்கள். அடுத்த தலைமுறை செய்யாவிட்டால் அதற்கு அடுத்த தலைமுறைக்கு சொல்லச் சொல்லுங்கள்.தலைமுறை தலைமுறையாக சோழதேசத்தை அழிப்பதே பாண்டியனின் வேலையாக இருக்கட்டும். என் அன்பு அந்தணர்களே, உங்களுக்கு நான் நன்றிக் கடன்பட்டிருக்கிறேன். என்னுடைய பாதுகாவலான படைகள் எங்கோ காணோம். ஆனால், அந்தணர்களே இங்கு என்னை தேடி வந்திருக்கிறீர்களே.... சேரதேசத்து முன்குடுமி அந்தணர்களே என்னை இங்கு வந்து காப்பாற்றியிருக்கிறீர்கள். விஷ ஜுரத்தில் சாகாமல் என்னை வீரனாக சாக வைத்தவர்களே உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்ய முடியும். என்னைதேடிவந்து எனக்கு சிகிச்சை அளித்ததற்கு நான் என்ன பதில் உபகாரம் செய்ய முடியும். நான் மன்னன். ஏதேனும் செய்தாக வேண்டும். இதோ எடுத்துக் கொள்ளுங்கள். கிரீடத்தையும், இடுப்பில் சொருகியிருந்த செங்கோலையும், வாளையும், கங்கணத்தையும், காது கடுக்கணையும், நெஞ்சிலிருந்த பதக்கத்தையும் கழற்றிக் கொடுத்தான்.

உள்ளே வெறும் துண்டோடு விரித்த சடையோடு, முறுக்கிய மீசையோடு, இடுப்பு வேட்டியோடு அமர்ந்து கொண்டான்.

"தீருநீறு இருக்குமா"

"ரவிதாஸனும், பரமேஸ்வரனும் இல்லை என்று சொன்னார்கள்.

"பரவாயில்லை. மண்ணை எடுத்து எனக்குத் திருநீறாக இடுங்கள்" என்று சொல்ல, மண்ணை சலித்து எடுத்து அந்தத் தூசியை அவன் நெற்றியில் திருநீறாக இட்டார்கள். ரவிதாஸன் தன்கட்டை விரலை கிழித்து ரத்தத்தை அவருக்குத் திலகமாக இட்டான்.

"துணிவோடு இருக்கிறீர்கள் மன்னரே' என்று சொன்னான்.

"நல்லது விடை கொடுக்கிறேன். போய் வாருங்கள். நான் சொர்க்கத்தில் உங்களுக்காக காத்திருக்கிறேன். உங்கள் ஆயுள் முடிந்து என்னை வந்து பாருங்கள்" என்று சொல்லி, கண்மூடி படுத்துக் கொண்டான்.

தொலைவில் ஆட்கள் வரும் சத்தம் கேட்டது.

ரவிதாஸனும், பரமேஸ்வரனும் புதருக்குள் பதுங்கிப் பதுங்கி நடந்து தொலைவிலுள்ள பெரிய மரத்தில் ஏறினார்கள். அதன் கிளைகளில் கால்வைத்து உச்சாணிக் கிளைக்குப் போய் இலைகளுக்கு நடுவே நகர்ந்து பெரும் கிளைகளில் படுத்துக் கொண்டார்கள். அங்கிருந்தபடி வீரபாண்டியன் குடிசையையும் அவன் கட்டிலையும், அவன் படுத்துக் கிடப்பதையும் பார்த்தார்கள்.

பலநூறு சோழ வீரர்கள் அந்தக் குடிசையை சூழ்ந்து கொள்வதை வீரபாண்டியனை நோக்கி ஆதித்தகரிகாலன் வந்ததையும் தலைமுடியைப் பிடித்து எழுந்து நிற்க வைப்பதையும், வீரபாண்டியன் சுருண்டு தரையில் விழுவதையும், பூதிவிக்கிரமகேசரியும், பார்த்திவேந்திரனும் அவனைத் தூக்கி கட்டிலில் சாய வைப்பதையும் வீரபாண்டியன் வேகமாகப் பேசுவதையும் பார்த்தார்கள். உற்றுக் கேட்டார்கள். வார்த்தைகள் தெளிவில்லாமல் இருந்தன. காற்றில் கரைந்தன. சரியாக காதுப் பறைகளில் கேட்காமல் போயின.

வீரபாண்டியன் எழுந்து நின்று தூ... என்று ஆதித்தகரிகாலன் முகத்தில் துப்புவது தெரிந்தது. ஆதித்தகரிகாலனும் பாய்ந்து வீரபாண்டியனை அடிக்க, மற்ற சிற்றரசர்கள் அவனைப் பிடித்து இழுத்துக் கொண்டார்கள். வீரபாண்டியன் எழுந்து நின்று தள்ளாடினான். வா சண்டைக்கு என்பது போல் முஷ்டியை மடக்கினான். ஏதோ வார்த்தைகள் சொன்னான். மறுபடியும்

தரையில் உமிழ்ந்து, தரையில் காலை மிதித்தான். சட்டென்று பிடித்திருந்த இருவரையும் விலக்கி விட்டு, ஆதித்தகரிகாலன் வாள் உருவினான். ஒரே வீச்சில் வீரபாண்டியனின் தலையைக் கொய்து தரையில் சாய்த்தான்.

வீரபாண்டியன் தலை தரையில் உருண்டது. முண்டம் சற்றுநேரம் நின்றது. முன்னும், பின்னும் அலைந்தது. கிழக்கு நோக்கி பார்த்தது. கைகூப்பியது. மண்டியிட்டது. சிவாய... சிவாய... சிவாய... என்று தலை முணு முணுப்பது தெரிந்தது. நீண்ட நெடுஞ்சாண் கிடையாக, தெய்வத்தை வணங்குவது போல கை கூப்பி வீரபாண்டியன் உடம்பு தரையில் விழுந்தது.

சோழம்... சோழம்... சோழம்... என்று சோழ வீரர்கள் கத்தினார்கள். தங்களுடைய இரும்புக் கேடயங்கள் மீது கத்தியால் அறைந்தார்கள்.

காடு அதிர்ந்தது.

மிருகங்கள் தலைதெறிக்க நாலாபுறமும் ஓடின.

ரவிதாஸன் மரக்கிளையில் படுத்துக் கொண்டு, மரக் கிளையை கட்டிக் கொண்டு விக்கி அழுதான். பரமேஸ்வரன் வெறுமே உட்கார்ந்து வானம் பார்த்துக் கொண்டிருந்தான்.

வீரபாண்டியன் தலையை காலால் எத்தி, பிறகு ஈட்டியால் சொருகி உயரத் தூக்கி பூதிவிக்கிரமகேசரி பிடிக்க பார்த்தி வேந்திர வர்மன் அதை வாங்கிக் கொள்ள, அந்த சோழப் பெரும் படை கீழிறங்கியது.

தலையோடு முண்டத்தை சுமந்து கொண்டு சில வீரர்கள் போனார்கள்.

மெல்ல இருட்டியது. வௌவால்கள் எழுந்து நாலா பக்கமும் அலைந்தன. நெஞ்சில் அடித்துக் கொண்டு ரவிதாஸன் ஒரு குழந்தை போல அழுதான்.

இதுதான் வீரமா, இதுதான் சோழதேசத்தின் நாகரீகமா. இதற்குத்தான் ஆதித்தகரிகாலன் வந்தானா. சண்டையிட முடியாத ஒருவனை, கையில் ஆயுதம் தரிக்காத ஒருவனை நிற்க

வைத்து தலை சீவுகிறானே.....இவன் அரசனா ஆதித்த கரிகாலா... இதுதான் உனக்கு வீரமென்றால், இதுதான் உன்னுடைய வழி என்றால் உன் தேசத்தை சீரழிப்பது என்வழி. உன்னை நடுநிசியில் துரத்தித் துரத்தி பதறப் பதற அழைத்துப் போய் சொல்லி சொல்லி வெட்டுவேன். இது சத்தியம். படையெடுப்பும் செய்யாமல், நேரே போருக்குக் கூப்பிடாமல், எலி வளையில் தீயிட்டு புகைபோட்டு, வெளியே வரும் எலியை அடித்துக்கொல்வது போல உன்னை அடித்துக்கொல்வேன் என்பது சத்தியம், இந்தக் காற்றில் இருக்கின்ற பூதப் பிசாசுகளே, இந்தக் காற்றில் இருக்கின்ற பிரம்மராட்சஸர்களே நீங்கள் எனக்குத் துணையிருக்க வேண்டும். இந்த அநியாயத்தைப் பார்த்த அத்தனை பேரும் எனக்குத் துணையிருக்க வேண்டும். ஆதித்தகரிகாலனை பழிவாங்க நீங்கள் உதவி செய்ய வேண்டும். இது சத்தியம்... இது சத்தியம்... என்று மரத்தில் அறைந்தான்.

"வீரபாண்டியனுக்கு உதவி செய்த காட்டுவாசிகளைக் காணோமோ" பார்த்திவேந்திரன் கேட்க "காட்டுவாசிகளைப் பற்றி நமக்கு என்ன கவலை" ஆதித்தன் சீறினான்.

"அவர்கள் காட்டு வாசிகள்தானா என்பது என் கவலை."

"எனக்கு எந்தக் கவலையும் இல்லை. வீரபாண்டியன் இறந்த பிறகு என் திரிச்சீரபுரத்தை, என் நாகையை, நான் ஆதரித்த பௌத்த விஹாரத்தை நாசம் செய்த வீரபாண்டியன் இறந்த பிறகு வேறு எவர் உயிரோடு இருந்தாலும் எனக்கு கவலையில்லை. வீரபாண்டியன் இறந்தால் பாண்டிய தேசமும் இறந்தது. பாழ்பட்டது. வெறும் சுடுகாடு. என் வேலை முடிந்தது. இனி நாம் வடக்கு நோக்கி நகரலாம். சோழதேசத்தின் எல்லைகளை பலப்படுத்தலாம். இனி அடுத்த பத்து வருடங்களுக்கு இந்த பாண்டியதேசத்திலிருந்து ஒரு வீரனும் வரக்கூடாதவாறு அடித்து நொறுக்குங்கள். கட்டை விரல்களை நறுக்கி எறிந்து விடுங்கள். பாண்டியனாக மலருவான் என்கிற எந்த சிறு பிள்ளைகளையும் அடித்து முடமாக்குங்கள். இரண்டு கால்

கட்டை விரல்களையும் வெட்டிவிடுங்கள்." என்றெல்லாம் உத்தரவு போட, அடுத்த பத்து நாட்கள் பாண்டிய தேசம் அலறியது.

சோழர்கள் முற்றிலும் அதை நாசப்படுத்தி விட்டு, திரிசிரபுரம் நோக்கி நகர்ந்தார்கள். பாண்டிய தேசம் முழுவதும் இந்த நாசம் பற்றிய ஒப்பாரியே, தினம் தினம் பாடப்பட்டது. இனி யார் வருவார் என்று கேட்கப்பட்டது.

வீரபாண்டியன் மரணத்திற்காக பலர் தற்கொலை செய்து கொண்டார்கள். சோழவீரர்களிடமிருந்து வீரபாண்டியன் எப்படிச் செத்தான் என்பது தெரிந்தது. எப்படிச் சாக நேர்ந்தது என்று நெஞ்சில் அடித்துக் கொண்டார்கள்.

மதுரை சொக்கநாதரே ஏன் கைவிட்டீர் என்று அலறி னார்கள். கருப்பசாமியே... காளியே... எங்கு காணாமல் போனீர் கள் என்று கதறினார்கள்.

ரவிதாஸனும், பரமேஸ்வரனும் வலைஞர்களைப் போல் உடையணிந்து, ஓலையில் தொப்பி அணிந்து, கிளிஞ்சல் மாலை அணிந்து, படகு ஏறி நாகை போய் இறங்கினார்கள். நாகை துறைமுகத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டு பூம்புகார் நோக்கி நகர்ந்தார்கள். பூம்புகாரிலிருந்து கிழக்கு நோக்கி நகர்ந்து திருக்கடையூர் போய் திருக்கடையூரிலிருந்து திரு விடைமருதூர் போனார்கள். பிறகு சிதம்பரம் திரும்பினார்கள்.

சிதம்பரத்தில் பல்வேறு இடத்தில் தனித்தனியாக வெவ் வெறு சேரதேசத்து அந்தணர்களாக கையில் ஓலைச் சுவடி களுடனும், தர்ப்பைப்புல்லும், கருப்புமான் தோலும், விசிறியும் வைத்துக் கொண்டு சிதம்பரம் தெருக்களில் நடந்து கொண்டி ருந்தார்கள்... ஜோசியம் சொன்னார்கள். மாந்த்ரீகம் செய்து காட்டினார்கள்.

"பூதம் தங்கியிருக்கிற தூணை வைத்திருக்கிறாயே எடுத்து விடு" என்று ஒரு வீட்டில் போய் சொன்னார்கள். "என்ன பூதம். எப்படித் தெரியும்" என்று கேட்க, "நான் அறைந்தால் அந்தத்

தூணுக்கு ரத்தம் வரும். அதிலிருந்தே பூதம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம்" தூணை ஓங்கி அறைய தூணிலிருந்து ரத்தம் வடிந்தது.

அந்த வீட்டுக்காரன் பயந்து போய் தூணைப் பிடுங்கிப் போட்டான்.

அந்தணர்கள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

சிதம்பரம் கோவிலில் பேய் உலவுகிறது. அதிலும் பெண் பேய்கள் அதிகமாக இருக்கின்றன. தாசிகளை கற்பழித்துப் போட்டிருக்கிறார்கள். அதுதான் அதிகம் தொந்திரவு இருக் கிறது. அதனால் தான் உங்களால் சரியாக பூஜை செய்ய முடிய வில்லை என்று சொன்னார்கள்.

சிதம்பரம் கோவில் நிர்வாகமும், கிராம நிர்வாகியும் அதற்கு உதவி செய்தார்கள். பேய்களை விரட்ட சண்டிஹோமம் செய்யப்பட்டது. பிறகு அன்னதானங்கள் செய்யப்பட்டன.

இந்த சிவன் கோவில் மங்களகரமாகவும் செல்வச் செழிப் போடும் இருக்க வேண்டுமாயின் இந்த இடத்திலே விஷ்ணு வின் சிலை அமைக்க வேண்டும் என்று கேரளத்து அந்தணர் கள் சொன்னார்கள். சோழ தேசத்து அந்தணர்கள் வேறு வழியில்லாமல் சம்மதித்தார்கள்.

செம்பியன் மாதேவியும், சுந்தர சோழரும் வந்து அந்த அந்தணர்களை பார்த்து விட்டு, இன்னும் ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்ள ரவிதாஸனும், பரமேஸ்வரனும் நீண்டதாடி யோடும் வடதேசத்து அந்தணர்கள் போல வந்து சேர்ந்தார்கள்.

வீரபாண்டியன் மரணம் பானுகோபருக்கு சொல்லப்பட்டது.

பானுகோபர் அழுதார்.

"என்னை நம்பினானடா அவன்....என்னை நம்பினான். மகாபாபி நான். கைவிட்டு விட்டேன். என் வித்தை வீரபாண் டியனை காப்பாற்றவில்லையடா. எனக்குத் தாங்கவில்லையே. அவன் மரணம் எனக்கு பொறுக்கவில்லையே."

அவர் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுதார். அவரை சமாதானப்படுத்தினார்கள். அமைதியாக இருங்கள்.நாம் அழக்கூடாது. நாம் காரியம் செய்யப் பிறந்தவர்கள் என்று தேற்றினார்கள்.

அவர் மூன்று நாட்கள் நீர்கூட அருந்தாமல் வீரபாண்டியன் மரணத்திற்காக உண்ணாவிரதம் இருந்தார். தர்ப்பணம் செய்தார்.

நான்காம் நாள் பழச்சாறு குடித்துவிட்டு இதற்கு பழிவாங்கப் பட வேண்டும் என்பது உண்மை. ரவிதாஸா... ரவிதாஸா... உரக்க அழைத்தார்.

"ரவிதாஸா... நீ பிரதிக்ஞை எடுத்துக் கொண்டிருக்கிறாயா. சத்தியம் செய்திருக்கிறாயா. வீரபாண்டியன் மரணத்தை பழி வாங்கப் போகிறேன் என்று உறுதி எடுத்துக் கொண்டிருக் கிறாயா. எனக்கு வயதில்லையடா. இருந்தால் நான் எடுத்துக் கொள்வேன். நீ எடுத்துக் கொள் ரவிதாஸா." என்று சொல்ல,

"செய்திருக்கிறேன்" என்று ரவிதாஸன் சொன்னான்.

"என்னவென்று செய்திருக்கிறாய்"

"நிச்சயம் வீரபாண்டியனைக் கொன்ற ஆதித்தகரிகாலனை நாயடிப்பது போல... எலி அடிப்பது போல... கொல்வேன் என்று சொல்லியிருக்கிறேன்."

"போதாது. ஒரு சத்தியம். ஞாபகம் இருக்க வேண்டுமெனில் அதற்குண்டான சடங்குகளும் முக்கியம்"

"என்ன செய்ய வேண்டுமென்று சொல்லுங்கள். செய் கிறேன்."

"ஆதித்தகரிகாலன் சாகும் வரை நீ இலைபோட்டு சோறு உண்ணக்கூடாது"

"பிறகு"

"நாதியற்றவர்கள் போல் கையில்தான் சோறு உண்ண வேண்டும். அதுவும் வெறும் சோறு உண்ண வேண்டும்.

சிறிதளவு மோர் எடுத்துக்கொள்ளலாமே தவிர வேறு எந்த ருசியும் இருக்கக் கூடாது. எந்தச் சுகமும் கூடாது. படுக்கை இல்லை. விருந்து இல்லை. பெண்கள் இல்லை. எந்தப் போக மும் இல்லை. ஆதித்தகரிகாலன் உயிர் பிரியும் வரை உனக்கு எதிலும் நாட்டமில்லை. சத்தியம் செய்" என்று கேட்டார்.

ரவிதாஸனும், பரமேஸ்வரனும், "இலை போட்டு சோறு உண்ணமாட்டோம். வெறுமே நாதியற்றவர்கள் போல எங்கள் கைகளில் போடப்பட்ட சோற்றை நாங்கள் விழுங்குவோமே தவிர நல்ல விருந்து சோறு உண்ணமாட்டோம். சுகம் தரும் பானங்களை சாப்பிடமாட்டோம். தலைக்கு மனைக்கட் டையோ... தலையணையோ... மெத்தையோ... வைத்து படுக்க மாட்டோம். கைகளையும் தலைக்கு அண்ட கொடுக்க மாட் டோம். பெண் போகம் பற்றி நினைக்கவும் மாட்டோம். ஆதித்த கரிகாலன் இறந்த மறுநாள் எங்கள் விருந்துகள் தொடரும்." அவர்கள் அக்னியின் முன்னே சத்தியம் செய்தார்கள்.

"இதே சத்தியத்தை நானும் சொல்கிறேன்"

பானுகோபர் எழுந்து இரண்டு கைகளையும் தழல் முன்பு நீட்டினார்.

"வீரபாண்டியன் அநியாயமாக இறந்தான். அதற்குக் காரணம், நான்... என் திறமையின்மை. எனவே, என் மரண பரியந்தமும் நான் இலைபோட்டு உண்ண மாட்டேன். திக்கற்ற வர் போல நான் கையில் சோறு எடுத்து உண்பேன். தலை யணையில் படுக்க மாட்டேன். போதையுள்ள எந்த பானமும் அருந்த மாட்டேன். ஒரு நாள் கூட விடாமல் தினந்தோறும் காலையிலும், மாலையிலும் தனியே வீரபாண்டியனுக்காக நான் தர்ப்பணம் செய்வேன். சொர்க்கத்தில் அவனுக்கு நீர்க் குறை வராவண்ணம், உணவுக்குறை வராவண்ணம் எந்தவித உபத்திரவமும் ஏற்படாத வண்ணம் என் தர்ப்பணங்கள் காப்பாற்றும். பூமியில் அவனை காப்பாற்ற முடியாத நான் சொர்க்கத்தில் காப்பாற்றுவேன். இது சத்தியம்.என் எண்ணத் தின் அலைகள். என் மந்திரத்தின் சக்தி வீரபாண்டியனை

வாழ்விக்கும். அவன் குலத்தை தழைக்கச் செய்யும். இப்படி அநியாயமாக கொன்ற சோழதேசத்தை வேரறுக்கும்.இதுவும் சத்தியம்."

பல உபாத்தியாயர்கள் முகம் பொத்தி அழுதார்கள். அந்தணப் பெண்கள் விசும்பினார்கள். அன்று யாரும் சாப்பிடாமல் பட்டினி கிடந்தார்கள். மறுநாள் பானுகோபர் சகலரையும் சமாதானம் செய்து சாப்பிடச் சொன்னார்.

சுபாஷிணி அவருடைய இரண்டு உள்ளங்கைக்கு நடுவே சோறு வைக்க அதை வாயால் கவ்வி உண்டார். ஐந்து முறை அவ்விதம் சாப்பிட்ட பிறகு கை கழுவினார். நீர் குடித்தார்.

"சிதம்பரம் அற்புதமான இடம். அங்குள்ள சோழ அந்தணர்களுக்கு எதுவும் தெரியவில்லை.எது கேட்டாலும் தடுமாறுகிறார்கள். பயப்படுகிறார்கள். மெல்ல மெல்ல சிதம்பரக் கோவிலை நாம் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். இது செய்கிறேன், அது செய்கிறேன் என்று ஏமாற்றி இந்தக் கோவிலையே ஒரு கோட்டையாக மாற்றிக் கொள்ள வேண்டும்."

"இது காஞ்சிபுரத்திற்கும், குடந்தைக்கும் நடுவே உள்ள இடம். சோழர்களுடைய எல்லை பூமி.வளமான காவிரிப் பகுதியை விட வீரநாராயண சதுர்வேதி மங்கலத்து உடையார் குடி இன்னும் வளமாக இருக்கிறது. மூன்று போகம் ஏரிப் பாசனம். மெல்ல, மெல்ல காசு கொடுத்து அங்கு நிலங்கள் வாங்குங்கள். அங்கு சிலர் குடியேறுங்கள். சிதம்பரத்தில் சிலர் இருங்கள். குதிரை ஏறினால் ஒன்றரை நாழிகையில் நாம் சிதம்பரம் வந்துவிட முடியும். ஒரு வேளை நம் இருப்பு தெரிந்து நம்மை கைது செய்ய ஆதித்தகரிகாலனோ வேறு சோழப் படையோ வந்தால் நாம் நமது பெண்டுகளுடன் பூம்புகாருக்குப் போய் அங்கு மரக்கலம் ஏறி தப்பித்துவிட முடியும். பூம்புகாருக்கு அருகே எப்போதும் ஒரு மரக்கலம் நிற்கும்படி நாம் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். வெறும் படகுகளை குப்புறப் போட்டு வைத்திருக்க வேண்டும். அவ்வப்போது அதை பழுது பார்க்க வேண்டும்.நம்முடைய தேரிக்காட்டு

வீரர்கள் சிலரை வலைஞர்களோடு இருக்கச் செய்துவிட வேண்டும். உடையார் குடியில் சில வீரர்களை குடியேற்ற வேண்டும். சிதம்பரத்திற்கு அருகேயுள்ள கிராமங்களிலும், சிதம்பரம் நகரத்திலும் நம்முடைய தேரிக்காட்டு வீரர்கள் இருக்கட்டும். சிதம்பரத்தில் தில்லை காளி என்று ஒரு அற்புதமான கோவில் இருக்கிறது. சாக்த உபாசனை நடந்த இடம். அதைச் சுற்றிய இடங்களிலெல்லாம் நமது தேரிக்காட்டு வீரர்கள் இருக்கட்டும்."

"நம்மிடம் இருக்கின்ற தங்க நாணயங்களையும், நகைகளையும், வெள்ளிப் பாளங்களையும் அந்த வீரர்களுக்குக் கொடுத்து சௌகரியமான வீடுகள் பார்த்துக் கொள்ளச் சொல்லுங்கள். பூம்புகாருக்கு அருகே நல்ல நீர் கிடைக்கின்ற மணற்பாங்கான இடத்தில் போர் வீரர்களுக்கு இரவு நேரத்தில் பயிற்சி அளிக்கலாம்."

"திருவெண்காடும் அடர்ந்த வனப்பிரதேசம். நல்ல வெள்ளை மண் பூமி, அங்கும் பத்து அந்தணக் குடும்பங்கள் வாழட்டும். அருகேயுள்ள வைத்தியநாத சுவாமி கோவிலில் அதை ஒட்டிய தெருக்களில் இன்னும் பத்து குடும்பங்கள் இருக்கட்டும். பிரும்மாபுரம் என்கிற சீர்காழியில் ஒரு பத்து குடும்பங்கள் வாழலாம். சிதம்பரத்தைச்சுற்றி நானும், சிலரும் இருக்கிறோம். தேரிக்காட்டு வீரர்களை தில்லை காளிக்கு சுற்றியுள்ள இடங்களில் குடிபெயரச் சொல்லி விடு."

சோழதேசத்தில் எவராலும் அந்த வீரர்களுக்கு ஆபத்து நேராத வண்ணம், அவர்கள் மீது ஒரு கண் வைத்திருக்க வேண்டும். எத்தனை நாட்கள் இப்படி வாழ்வது என்று நீங்கள் எண்ணலாம். வெகு சீக்கிரமே ஒன்றாவோம். நம்மீது சந்தேகம் ஏற்படாத வகையில் தனித்தனியாக வீரநாரயண சதுர்வேதி மங்கலத்தில் உடையார்குடியில் நிலங்கள் வாங்கி குடிபெயர்வோம். ஒரே குடியாக அங்கு வாழ்வோம். காவேரிப் படுகையை விட, இந்த ஏரிப்பாசனம் அற்புதம். மூன்று போகம் நெல்லும், கரும்பும் செழித்து வளருகின்றன. உடையார்குடியில் அற்புத

மான ஒரு சிவன் கோவில் இருக்கிறது. அங்கு வேளாளர்கள்தான் அதிகம் வசிக்கிறார்கள். மெல்ல மெல்ல அந்த நிலத்தை நாம் கையகப்படுத்திக் கொள்வோம். நாம் அரசியலில் ஈடுபடுவதும், நிலத்தை கையகப்படுத்துவதும் ஒரே விதமாக நிகழ வேண்டும். வரும் பௌர்ணமி அன்று உத்தமசோழன் இங்கு வருவதாகத் தகவல். அவனை இந்த சிதம்பரம் கோவிலுக்குள் வரவேற்று ஆசிர்வதிக்கிறேன். உன்னுடைய சகல அபிலாஷைகளும் நிறைவேறும் என்றும் பெரிய சக்ரவர்த்தியாக ஆவாய் என்றும் அவனிடம் சொல்கிறேன். அவன் பேச முற்படுகிற போது, தன் மனதை திறக்கிற போது மெல்ல அவனை வெளியே கூட்டிக் கொண்டு போய், தனியே பேசுவோம். சிதம்பரத்திற்கு அருகேயுள்ள ஏதேனும் ஒரு கிராமத்தில் உட்கார வைத்து அவனுக்கு உதவி செய்வதாக வாக்களிப்போம். நாம் யார் என்பதை அவனுக்குக் காட்டுவோம்.

சேரதேசத்திலிருந்து அந்தணர்களை வரவழைக்கிறேன் என்று சொல்லி அவனை ஏமாற்றுவோம். அரசாட்சி அவனுக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவோம்.''

பானுகோபர் பேச, ரவிதாஸன் கை கூப்பினான்.

"என் வேலை ஆதித்தகரிகாலனை பின் தொடர்வது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அவனை கொலை செய்வது. நான் அந்த வேலையை முடித்து விட்ட பிறகு உயிரோடு இருந்தால் உங்களை சந்திக்கிறேன். அது வரை நமக்குள் எந்தச் சந்திப்பும் நிகழாது இருக்கட்டும். நம்மோடு நீங்களும், நானும் உறவு என்பது கூட உலகத்திற்கு தெரியாது இருக்கட்டும்.நாம் ஒரே கூட்டம் என்பது எங்கும் பேசப் படாது இருக்கட்டும். நான் விடை பெறுகிறேன்."

ரவிதாஸன் எழ, அவனை நிழல்போல் பரமேஸ்வரன் பின் தொடர்ந்தான்.

பானுகோபர் அவர்கள் போவதைப் பார்த்து பெருமூச்செறிந்தார்.

"அவர்கள் போவது நல்ல நேரம். மிகச்சிறந்த ஹோரை. நிச்சயம் ஆதித்தகரிகாலன் கொல்லப்படுவான். சோழ ஆட்சி நமது வசப்படும். எனக்கு இதில் நெல்முனையளவும் சந்தேகமில்லை."

"சோழதேசத்தை வசப்படுத்தவா நாம் இங்கு வந்திருக்கிறோம்"

நீலகண்ட உபாத்யாயர் கேட்டார்.

"இல்லை நீலகண்டா. ஒரு தேசத்தின் மண்ணை வைத்துக் கொண்டு என்ன செய்வது.மலைகளையும், ஆறுகளையும் எனக்கு சொந்தமென்று சொல்லி என்ன செய்வது. மற்ற உயிரினங்களும் இங்கு வாழத்தானே வேண்டும். நான் மட்டுமே இருக்கவா பூமி. வசப்படும் என்பதற்கு அர்த்தம் என்னுடைய இந்த வித்தை இங்கே அங்கீகரிக்கப்படவேண்டும் என்பதே. பாண்டிய தேசத்தில் அங்கீகரிக்கப்பட்டது. பெரும் பதவி தரப்பட்டது. நமது குழந்தைகளும், பெண்டுகளும் மிகச் சுகமாக வாழ்ந்தார்கள். ஊர் விட்டு ஊர் ஓடி வந்த நமக்கு நம்முடைய வித்தைதான் சோறு போட்டது. மரியாதை கொடுத்தது. என் வித்தை எங்கு மதிக்கப்படுகிறதோ, என் வித்தை எங்கு கொண்டாடப்படுகிறதோ நான் அந்த பூமியைச் சேர்ந்தவனாகிறேன். அந்த பூமி என்வசப்பட்டது என்று அறிகிறேன். நான் சொல்வது புரிகிறதா நீலகண்டா."

அந்த அந்தணச்சபை மெல்ல ஆஹாரம், ஊஹாரம் செய்து பானுகோபரை பாராட்டியது.

அவர்கள் சிதம்பரம் கோயிலின் பல்வேறு விஷயங்களில் மெல்ல மெல்ல ஊடுருவினார்கள்.

ரவிதாஸன் சோழதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் போய் ஆதித்தகரிகாலனைத் தேடினான். அவனுடைய ஒற்றர்கள் நாலாபுறம் அலைந்து திரிந்து அருண்மொழியின் நடவடிக்கையும், குந்தவையின் போக்குவரத்தையும் ஆதித்தகரிகாலன்

எங்கெங்கு போகிறான், யார் துணையாக இருக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டு வந்து அவரிடம் சொன்னார்கள்.

குடந்தையில் தேவரடியார்கள் இருக்கும் பகுதிக்குப் போய், பரமேஸ்வரன் அங்குள்ள அழகிய பெண்களோடு ஸ்நேகம் செய்து கொண்டு, காசு கொடுத்து தன்னோடு தஞ்சைக்கு வருமாறு சொன்னான்.

தஞ்சையில் பெரிய மாளிகை எடுத்து அந்தப் பெண்களோடு தங்கினான்.

தஞ்சைக் கோட்டை வாசலில் வீரபாண்டியனுடைய தலை நாறிக் கொண்டிருந்தது. கழுகுகளும், காக்கைகளும் அதைக் குத்திக் கொண்டிருந்தன. சோழதேசத்துக் குழந்தைகளுக்கு அந்த ஊர் மக்கள் வீரபாண்டியனின் தலையை சுட்டிக்காட்டி ஆதித்தகரிகாலன் புகழை சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

பரமேஸ்வரனுக்கு ரத்தக் கண்ணீர் வந்தது.

படுத்துக் கொண்டிருந்தவனை எழுப்பி தலையைக் கொய்தாயடா பாவி என்று ஆத்திரம் பொங்கியது. கடும் ஜூரத்தால் தவிப்பவனை, கையில் ஆயுதம் இல்லாதவனை வெட்டிக் கொன்றாயடா என்று உள்ளே ரௌத்திரம் கிளர்ந்தது. அந்த ரௌத்திரம் சிரிப்பாக மாறியது.

அவன் சிரிப்பதைப் பார்த்து மற்ற சோழமக்களும் சேர்ந்து சிரித்துக் கொண்டார்கள்.

"இன்னும் நூறு ஆண்டுகளுக்கு சோழதேசத்தை எவராலும் அசைக்க முடியாது." யாரோ சொல்ல, ஆமாம். ஆமாம் என்று அவன் தலையாட்டினான். நகர்ந்து வந்தான்.

குடந்தைப் பெண்கள் தஞ்சையிலே நடனம் பயிலுகிறார்கள். மேடை நாடகம் பயிற்சி செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டு பல சேனாதிபதிகளும், பெரிய செல்வந்தர்களும் வந்தார்கள். வெறுமே பார்த்து விட்டுப் போய் விடுகிறோம் என்றார்கள்.

சேனாதிபதிகளை அவன் புறக்கணித்தான். வணிக செல்வந்தர்களை மட்டும் அனுமதித்தான். நாட்டியப் பயிற்சியை பார்த்து விட்டு மட்டும் தான் போக வேண்டும். மற்றபடி வேறு எந்த முயற்சி செய்தாலும் கடுமையாக தண்டிக்கப் படுவீர்கள் என்று எச்சரித்தான்.

யார் இவன். இவ்வளவு முரட்டுத் தனமாக பேசுகிறானே. அவன் தன்னை நான்காவது வருணம் என்றான். என்ன என்று விசாரித்த போது பாணர் என்று பதில் சொன்னான். பாணர் என்றாலும் போர் பயிற்சி உண்டு என்று கத்தியைச் சுழற்றிக் காட்டினான். குடந்தைப் பெண்களின் அசைவு கண்டு வணிகர்கள் சொக்கினார்கள். "இவ்வளவு அழகான பெண்கள் நாட்டியமாடத்தானா" என்று தாபத்துடன் கேட்டார்கள்.

பரமேஸ்வரன் அவர்களை புறந்தள்ளினான்.

ரவிதாஸனிடமிருந்து ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஆட்கள் வந்து செய்தி சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

அந்த வணிக செல்வந்தர்கள் சேனாதிபதிகளிடம் போய் இத்தனை அழகான பெண்கள் குடந்தையிலிருந்து இங்கு வந்திருக்கிறார்கள். உங்களால் ஒன்றும் செய்ய முடியாதா. என்னத்திற்குத்தான் நீங்கள் லாயக்கு என்று பொருமினார்கள்.

ஒரு உபசேனாதிபதி மெல்ல வாலாட்ட அவன் குதிரைக்கு வெறி யேற்றப்பட்டது. அவன் குதிரை தலைதெறிக்க ஓட, பின்னால் காப்பற்றுவது போல் ஓடிய பரமேஸ்வரன் அவனை வயல்வெளிகளுக்கு நடுவே நையப்புடைத்தான்.

பல இடங்களிலும் தேடிப் பார்த்துவிட்டேன். எங்கேயும் காணோம் என்று சொன்னான். நாம் போனால் முரட்டுத்தனம் காட்டுகிறோம். எனவே, வேறு யாரையேனும் அனுப்ப வேண்டுமென்று சேனாதிபதிகள் தீர்மானித்து, உத்தமசோழனை அனுப்பினார்கள். அவரிடம் போய் அங்குள்ள பெண்களைப் பற்றிச் சொன்னார்கள். வணிகச் செல்வந்தர்களும், குடந்தைப் பெண்களைப் பற்றி தூபம் போட்டார்கள்.

உத்தமசோழன் ஒரு இரவில் முக்காடிட்டு குதிரை ஏறி, வணிகரைப் போல பொன்னாலான கழல்கள் அணிந்து வந்து இறங்க, அவனுக்கு மிகப்பெரிய வரவேற்பு கொடுக்கப்பட்டது.

குடந்தைப் பெண்கள் உத்தமசோழரை ஆவலோடு சூழந்து கொண்டார்கள். சரஸம் ஆடினார்கள்.

நடுநிசியில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த உத்தமசோழரை, பரமேஸ்வரன் எழுப்பினான். உங்களோடு பேச வேண்டும் வாருங்கள் என்று அரசரின் ஆபத்துதவிகள் போல கருப்பு உடை அவருக்குக் கொடுத்து, தானும் கருப்பு உடை அணிந்து புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலுக்குப் போய் மிகப்பெரிய ஏரியை கடந்து படித்துறையில் அமர்ந்து கொண்டான்.

விடியல் நேரத்தில் பல் துலக்குவதற்குண்டான உபகரணங்களும், உணவும் மெல்லிய மதுவகைகளும் உத்தமசோழனுக்கு வந்தன.

"என்ன இவ்வளவு ஏற்பாடு செய்திருக்கிறாயே. நீ யார். நீ மட்டுமா அல்லது உன்னிடம் மிகப்பெரிய கூட்டம் இருக்கிறதா" என்று சந்தேகத்துடன் உத்தமசோழன் வினவினார்.

"ஓரளவு கெட்டிக்காரர்தான் நீங்கள்.நான் எதிர்பார்த்ததை விட புத்திசாலியாக இருக்கின்றீர்கள். எனவே என் விஷயமும் உங்களுக்கு எளிதாகப் புரியும்.நான் சேரதேசத்தைச் சேர்ந்தவன். காந்தளூர்ச்சாலை கடிகையிலிருந்து வருகிறேன். இடையில் ஏற்பட்ட பிரிவால், பாண்டிய தேசம் வந்து, பாண்டிய தேசத்தில் பிழைப்பிற்காக பல்வேறு வேலைகள் செய்து, சேனாதிபதியாக வீரபாண்டியனை ஆதரித்தேன். எங்கள் அந்தணக்கூட்டமும் ஆதரித்தது. வீரபாண்டியன் அவசரக்காரன். சோழதேசத்தை தாக்கவேண்டுமென்று அவன் பலமுறை முயற்சித்த போது நான் தடுத்து நிறுத்தினேன். உனக்கு வலுவில்லை. உன்னால் போரிடமுடியாது. வெறும் உணர்ச்சி வசப்பட்டு மாட்டிக்கொள்ளாதே என்று எச்சரித்தேன். என் எச்சரிக்கையை புறக்கணித்து, பாண்டியதேசத்து மறவர்கள் பேச்சை கேட்டு

திரிச்சீரபுரத்தையும், கொடும்பாளூரையும், வீரபாண்டியன் கொள்ளையடித்தான். நாகையைத் தாக்கியதும் இம்மாதிரி முட்டாள்தனம்தான். ஆதித்தகரிகாலன் படையெடுத்து வந்த போது வீரபாண்டியனால் அதை எதிர்கொள்ள முடியவில்லை. மறவர்படை சிதறி ஓடிற்று. வீரபாண்டியனுடைய சேனாதிபதிகள் அவனுக்கு தவறான வழிகாட்டினார்கள். அந்தணர்களை விட, மற்றவர்களை அவன் அதிகம் நம்பினான். அந்தணர்கள் வேதம் ஓதத்தான் லாயக்கு என்று சொல்லிச் சொல்லி சிரிப்பான். நாங்களும் அடங்கியே இருந்தோம். அதிகம் அலட்டிக் கொள்ளாமல் இருந்தோம். பூதிவிக்கிர கேசரியின் விஷ அம்புபட்டு, அந்த வலி தாங்காமல் சிகிச்சைக்காக சேவூர் காடுகளுக்கு ஓடிப்போய் படுத்துக் கொண்டான். சோழப்படைகள் சேவூர்காட்டை முற்றுகையிட்டு வீரபாண்டியன் தலையை கொய்ததை அறிவேன். இதை நேரில் பார்த்தேன்.

வீரபாண்டியன் மரணப்படுக்கையில் இருந்தபோது, ஆதித்தகரிகாலன் கொன்று விட்டான் என்ற செய்தி மதுரை முழுவதும் பரவியிருக்கிறது. ஆதித்தகரிகாலனை எங்கு யார் கண்டாலும் கொன்றுவிட வேண்டுமென்ற திட்டம் இருக்கிறது. பல்வேறு மறவர்கள், ஆதித்தகரிகாலனை எப்படியாவது கொலைசெய்வேன் என்று சபதம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆதித்தகரிகாலன் கொன்றது பாண்டியனை அல்ல. மதுரையை... பாண்டியதேசத்து மரபை. மதுரைகுல மேன்மையை என்று சீறுகிறார்கள். ஆதித்தகரிகாலன் விரைவில் ஒழிக்கப்படுவான் என்பது உறுதி. அப்படி ஒழிக்கப்பட்டால் அதற்குப் பிறகு பட்டத்திற்கு நீங்கள் தான் வரவேண்டும். நீங்கள் பட்டத்திற்கு வருவீர்களா என்பது பற்றி ஒரு சந்தேகம் இருக்கிறது''

"ஏன் ஆதித்தகரிகாலன் இருக்கும் பொழுதே கூட நான் பட்டத்திற்கு வரலாமே"

"இல்லை... அது ஒருக்காலும் நடக்காது. உங்களை பட்டத்திற்கு வர ஆதித்தகரிகாலன் நிச்சயம்அனுமதிக்க மாட்டான்."

"அவன் என்ன அனுமதிப்பது.நான்தானே உண்மையான வாரிசு."

"உண்மையான வாரிசு என்பதில் யாருக்கு அக்கறை. யார் ஜனங்களிடையே பிரபலமானவர்கள் என்பதுதான் முக்கியம். சோழமக்கள் கவர்ச்சியில் சிக்கித் தவிப்பவர்கள். ஆதித்தகரி காலன் தலையைக் கோதிக்கொண்டு அலைவதும், முன்னும், பின்னும் நடப்பதும் எழுந்து நின்று கர்ஜிப்பதும் வீராவேசமாக வாள் உருவி வசனம் பேசுவதும் விளையாட்டுகளில் நேரிடை யாக இறங்கி மக்களிடையே பலத்த கைதட்டலை பெற்றுக் கொள்வதும், அவர்களுடைய அன்பை நிலைநாட்டிக்கொள்வ துமாக இருக்கிறான். உங்களுடைய வீரம், அந்தப்புரத்தோ டேயே முடிந்து போயிற்று என்று நினைக்கிறேன். நீங்கள் பெண் பித்தர் என்ற மாதிரிதான் சோழதேசத்திலேயே பேசிக் கொள்கிறார்கள். உத்தமசோழர் ஊர் கோவிலுக்கு வருகிறாரா, பொங்கல் நைவேத்தியம் செய்துவை என்றுகூட சொல்வ தில்லை. இரண்டு பெண்களை ஏற்பாடு செய் என்றுதான் சொல்கிறார்கள். அப்படித்தான் பெயர் வாங்கியிருக்கிறீர்கள்."

"எவன் சொன்னது?"

உத்தமசோழன் சீற பரமேஸ்வரன் அவரை அமர்த்தினான். "நாமே தீர்மானித்துக்கொள்வோம். நம்முடைய யோக்கிய தையை நாமே எடைபோட்டுக்கொள்வோம். நமக்கு என்ன வேண்டும், என்ன வேண்டாம் என்பதை இப்போது உட்கார்ந்து ஆராய்ச்சி செய்வோம். உங்களுக்குத் தேவையானது என்ன."

"அதைக்கேட்பதற்கு நீ யார்?"

"உங்களுக்கு வேண்டும் என்பதை வாங்கிக்கொடுக்க வந்திருக்கிறேன் என்று சொல்றேன்."

"எனக்கு வேண்டிய'தை நீ வாங்கிக் கொடுப்பதில் உனக்கு என்ன லாபம்?"

"உங்களுக்கு வேண்டியதை நான் வாங்கிக் கொடுத்தால் எனக்கு வேண்டியதை நீ தரமாட்டாயா என்கிற மிகச் சாதாரண கணக்குதான்."

"உனக்கு என்ன வேண்டும்?"

"நான் பாண்டியதேசத்தில் சேனாதிபதியாக இருந்துவிட் டேன். இனி சாதாரணனாக வாழ முடியாது. வாழ முடிய வில்லை. எனக்கு சோழதேசத்தின் சேனாதிபதி பட்டம் வேண்டும். அந்த மதிப்பும், மரியாதையும், செல்வமும், திமிரும் வேண்டும். எங்கள் கூட்டத்திற்கு அந்தவித உயர்வு வேண்டும்"

"பதிலுக்கு நீ என்ன செய்வாய்?"

"உங்களுக்கு என்ன வேண்டுமோ அதைச் செய்வேன்.'

"எனக்கு வேண்டியது சோழ தேசத்து சிம்மாசனம்."

"அது தான் உங்களுக்கென்று தீர்மானமாகிவிட்டது என்று சொல்கிறார்களே, பிறகு ஏன் அதைக் கேட்கிறீர்கள்."

பரமேஸ்வரன் கேலியாகக் கேட்டான்.

"என்ன இளக்காரம் இது. யாரிடம் பேசுகிறாய் என்று புரிந்து பேசு."

எழுந்து நின்று உத்தமசோழன் கத்த, இன்னும் கால்நீட்டி பரமேஸ்வரன் சாய்ந்து கொண்டான்.

"என்ன செய்வாய் உத்தமசோழா?"

பரமேஸ்வரன் இன்னும் சௌகரியமாக சாய்ந்து கொண் டான்.

"உன்னை வெட்டிப் போடுவேன்."

உத்தமசோழன் வாள் உருவினான்.

"உத்தமசோழா... என்னை சாதாரண அந்தணன் என்று நினைக்கிறாயா. காந்தளூர்ச்சாலை பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதா? நீ எங்கு பாடம் கற்றுக் கொண்டாய். எங்கு வாள் வீச பாடம் படித்தாய். உன்னுடைய வாள் என் நெஞ்சுக்குள் வருவதற்கு முன்பு, என்கால்கள் உன் கைகளை உடைத்து

விடும். நீ கையால் சண்டை போடு. நான் காலால் சண்டை போடுகிறேன். என்னை வெட்ட முடியுமா என்று பார். கத்தி யோடு போரிடு. நான் வெறுங்காலோடு போரிடுகிறேன். என்னைத் தாக்க முடியுமா என்று பார்."

உத்தமசோழன் முயற்சிக்க, விநாடி நேரத்தில் கத்தி தட்டப் பட்டு, இடுப்பில் பலமாக உதைக்கப்பட்டான். நெஞ்சில் கட்டியிருந்த கனமான சங்கிலி சட்டென்று அறுந்தது. நிலை தடுமாறி அவன் முன்னே சாய, அவன் முதுகில் இன்னொரு கால் அழுத்தி தரையோடு தரையாகத் தேய்த்தது.

உத்தமசோழன் அலறினான்.

"மன்னித்துக் கொள்ளுங்கள் சக்கரவர்த்தி."

சட்டென்று இறங்கி பரமேஸ்வரன் அவனை தூக்கி நிறுத்தி னான். தன் துண்டால் அவன் முகம் துடைத்தான். மார்பு துடைத் தான்.

"கோபமெனில் அடித்து விடுங்கள். நாங்கள் சேர தேசத்து அந்தணர்கள். கேரளத்தவர்கள். பரசுராமர் வம்சத்தினர்கள். மூன்று லட்சம் சோழவீரர்களை முப்பது வீரர்களை வைத்துக் கொண்டு, கதறக்கதற அடிக்க எங்கள் கூட்டத்தால் முடியும்."

"இதுதான் நீ எனக்கு செய்கின்ற உதவியா."

உத்தமசோழன் குரலில் இப்போது பயமிருந்தது.

"இல்லை.உத்தமசோழராகிய உங்களை சக்கரவர்த்தியாக்கு வதுதான் எங்களுடைய வேலை. இதன்மூலம் சோழதேசத்தின் மிகப்பெரிய பரப்புக்கு நானும், எங்கள் தலைவர் பானுகோபரும், எங்கள் உபதலைவர் ரவிதாஸரும் இன்னும் பிற அந்தண வீரர்களும் முக்கியமான பகுதிகளில் இருந்து மிக சிறப்பாக உங்களுக்கு ஆட்சி செய்து தருவார்கள். இதற்காக உங்களுக்கு நாங்கள் செய்ய வேண்டிய உதவிகள் பலது இருக்கின்றன. வீரபாண்டியனைக் கொன்ற ஆதித்தகரிகாலனை எவ்வளவு சீக்கிரம் கொல்ல முடியுமோ கொல்வோம். இதனால் உங் களுக்கு ஏற்பட்டிருக்கின்ற முதல் தடை நீங்கும். இரண்டாவ

தாக, ஒரு வேளை உங்களுக்கு போட்டியாக அருண்மொழி வந்தால், அந்த அருண்மொழியையும் இல்லையென்று ஆக்கு வதற்கு நாங்கள் துணிந்திருக்கிறோம்.ஆனால் அருண்மொழி யின் ஜாதகத்தை ஆராய்ந்ததில் அவன் மத்திமவயதில்தான் பட்டத்திற்கு வருவான் என்றும், அவன் சிவநெறிச் செல்வ னாகத்தான் வளர்வான் என்றும் சொல்லப்படுகிறது."

"நான் ஜாதகத்தை நம்புவதில்லை."

பரமேஸ்வரன் பேச்சுக்கு உத்தமசோழன் உரத்து பதில் சொன்னான்.

"ஆனால், நாங்கள் நம்புகின்றோம். ஒரு தேசத்தின் தலை விதியை கிரகங்கள் நிர்ணயிக்கின்றன என்று எங்களுக்கு துல்லியமாகத் தெரியும்.கிரகங்கள் மறுக்கின்ற காரியங்களை அந்தணர்கள் செய்வதில்லை. உங்களுக்கு அரசபதவி என்பது நிச்சயம் உண்டு. ஆனால், அதற்கு மிகப்பெரிய இடைஞ்சல் ஆதித்தகரிகாலன். அவனை ஒழிப்பது எங்கள் வேலை. உங்களை பதவியில் அமர்த்தி உங்களுக்குப் பாதுகாப்பாக இருப்பது எங்கள் பணி. இதைச்செய்வதற்கு நீங்கள் எங்களுக்கு உதவுங்கள். எங்களை பதவியில் அமர்த்துங்கள்."

பரமேஸ்வரன் சொல்ல, ஒரு பிற்பகல் முழுவதும் உத்தம சோழன் யோசித்தான்.

தன் தாயிடம் கலந்து பேசுவதாகச் சொன்னான்.

அவனுக்கு உண்ண உணவும் குடிநீரும் ஆட்கள் மூலம் மறுபடியும் வந்தன.

"யார் இவர்கள்" என்று கேட்க, "இவர்கள் தேரிக்காட்டு மறவர்கள். இவர்கள்தான் எங்களுக்கு ஆபத்துதவிகள். வெறும் முரட்டுக்கூட்டமாக இருந்த இந்த தேரிக்காட்டு வீரர்களை, நாங்கள் மிகப்பெரிய அமைப்பாக மாற்றினோம். ஒரே வருடத் தில் ஒழுக்கம் கற்பித்தோம். இரண்டாம் வருடத்தில் போர்ப் பயிற்சி செய்ய வைத்தோம். நான்காம் வருடத்தில் இவர்களை வைத்துக் கொண்டு மிகப்பெரிய யுத்தங்களை ஜெயித்தோம்."

"இவர்கள் இருந்துமா... வீரபாண்டியன் தோற்றுப் போனான்."

"இவர்கள் எண்ணிக்கை நானூற்று அறுபத்தைந்து. இவர்களுக்கு நடுவே மட்டும் வீரபாண்டியன் இருந்தால் இதுவரை அவனை எவரும், எதுவும் செய்திருக்க முடியாது. இவர்கள் எல்லோரும் இருக்க வீரபாண்டியன் மூன்று வீரர்களோடு தப்பித்து, சேவூர்காட்டிற்கு ஓடிப்போனான் என்பதுதான் பாண்டியதேசத்தின் மிகப்பெரிய சோகமான கதை. உங்கள் முடிவை விரைவில் சொல்லுங்கள்"

சில தினங்களில் கண்டராதித்தன் மனைவியார் செம்பியன் மாதேவியார், பரமேஸ்வரனோடு ஒரு சந்திப்பு நிகழ்த்தினாள்.

பரமேஸ்வரன் விளக்க விளக்க பரவசப்பட்டாள்.

"உன் பேச்சு உண்மைதான் என்று எனக்குச் சத்தியம் செய்" என்று சொன்னாள்.

"நான் எங்கள் கூட்டத்தில் சாதாரண ஊழியன். நான் எதற்கு சத்தியம் செய்ய வேண்டும்.எங்கள் கூட்டத்தின் உத்தமமான தலைவர் ரவிதாஸர். அவர் உங்களுக்கு சத்தியம் செய்து கொடுப்பார்."

அவன் ஒற்றர்களை அனுப்பி, ரவிதாஸனை வரச்செய்தான்.

ரவிதாஸனும், பரமேஸ்வரனும், உத்தம சோழனும், கண்டராதித்தன் மனைவியான செம்பியன்மாதேவியும், அவளது நெருங்கிய தோழியும், உத்தமசோழன் மனைவியும் அந்த ரகசியக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

"எங்கள் வழிப்பயணத்திற்கு சற்று பணம் வேண்டும்" என்று பரமேஸ்வரன் சொன்னதும், செம்பியன்மாதேவி இரண்டு செப்புக்குடங்களை கொண்டு வந்து வைத்தாள்.

என்ன என்று ஆவலாக பரமேஸ்வரன் சோதித்தபோது இரண்டு செப்புக்குடங்கள் முழுவதும் தங்கக்காசுகள் இருந்தன.

"இரண்டும் எங்களுக்கா"

"இல்லை... ஒன்றுதான். ஒரு செப்புத்தவலை பொற்காசு முழுவதும் ஆதித்தகரிகாலனை கொல்வதற்கு."

"இன்னொன்று வைத்திருக்கிறீர்களே."

"உத்தமசோழனுக்கு ஆதித்தகரிகாலன் கூட போட்டியில்லை. அருண்மொழிதான் போட்டி. அருண்மொழியை தலையெடுக்க வொட்டாமல் செய்தால், அடுத்த பொற தவலையையும் எடுத்துக் கொண்டு போகலாம். அது இங்கேயே உத்தமசோழன் கட்டிலுக்குக் கீழேயே இருக்கும். வேலையை முடித்துவிட்டு, செப்புத்தவலையை எடுத்துப்போவதில் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. மற்றபடி உத்தம சோழன் அரியணை ஏறினால் அவனுக்காக அவன் தளபதிகளாக, முக்கிய சேனாதிபதிகளாக பிரம்மராயர்களாக ரவிதாஸனும், பரமேஸ்வரனும் நியமிக்கப்படுவார்கள். இதுசத்தியம். திருவிருடைமருதூர் மகாலிங்க சுவாமியின் மீது இது சத்தியம் என்று செம்பியன்மாதேவி உரக்கச் சொல்ல, உத்தமசோழன் அதை மறுபடியும் சொன்னான். ரவிதாஸனும், பரமேஸ்வரனும் சந்தோஷமானார்கள். செப்புத்தவலையை எடுத்துக் கொண்டு சிதம்பரம் போனார்கள்.

அந்த அந்தணர்கள் சிதம்பரத்தில் ரகசியமாகக் கூடினார்கள். பாண்டியதேசத்தில் உள்ள அத்தனை தேரிக்காட்டு வீரர்களையும் வரவழைத்தார்கள். பூம்புகாருக்கு அருகேயுள்ள கீழைச் சாலை என்ற இடத்தில் விதம்விதமாக பயிற்சிகள் கொடுத்தார்கள்.

கடும் இருட்டில் வேகமாக நடக்கவும், கயிறு பிடித்து கோட்டை ஏறவும், உடும்பின் வாலில் வளையம்கட்டி, அதில் நூல்கோர்த்து வீசவும், பிறகு நூலை மடமடவென்று உருவி கயிறு தூக்கவும், கயிற்றை உடும்பின் வாலில் சுற்றி இழுத்து மேலேறவும் பயிற்சி பெற்றார்கள். நல்ல உடும்புகளுக்காக திருவக்கரையிலுள்ள பாறைகள் பக்கம்போய் உடும்புகள் எடுத்து வந்தார்கள்.

அந்தணர்களாய், வணிகர்களாய், பாணர்களாய், கூலி ஆட்களாய், குதிரை பழக்குகிறவர்களாய் என்று பல்வேறு விதமான வேடங்கள் போட்டார்கள்.

ஆதித்தகரிகாலன் போகும் இடமெல்லாம் நகர்ந்து போனார்கள்.

ஆனால், ஆதித்தகரிகாலனைச் சுற்றி மிகப்பெரிய ஒரு வளையம் இருந்தது. அதை உடைத்துக்கொண்டு ஆதித்த கரிகாலனை நெருங்குவது எளிதல்ல என்று தெரிந்தது.

குந்தவையும், அருண்மொழியும் அதிகம் பாதுகாப்பில்லாமல், கோவில் கோவிலாக சுற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிய, அருண்மொழியை தாக்கி விடலாமா என்ற எண்ணமும் எழுந்தது. அருண்மொழியைத் தாக்கினால் ஆதித்தகரிகாலன் எச்சரிகை ஆகிவிடுவான். எனவே, மறந்தும் இதைச் செய்யாதீர்கள் என்று பானுகோபர் திட்டவட்டமாகக் கூறினார்.

மாறாக ராஜராஜன் எங்கு போனாலும் அவனுக்கு மிகுந்த மரியாதை கொடுக்கவும், அவனை வாழ்த்திப் பேசவும் தயங்காதீர்கள் என்று சொன்னார்.

சிதம்பரத்திற்கு ராஜராஜன் வருகிறார் என்று செய்தி கேள்விப்பட்டு, அந்த அந்தணர்கள் வரிசையானார்கள். மிகுந்த உரத்தகுரலில் ரிக்வேதமும், யஜூர் வேதமும் சொன்னார்கள். பிறகு சாமவேதம் முழங்கினார்கள். அதர்வணவேதத்தின் ஆரம்பப் பாடம் காதால் கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லி, அதர்வணவேதத்தின் ஆரம்பப் பாடங்களும் சொன்னார்கள்.

உயரமாயும் அகலமாயும் ஒட்டின வயிறோடும், இறுக்கிய துண்டோடும், சற்று கால் அகட்டி நின்று, கையில் நீண்ட தடியூன்றி தோளில் மஞ்சள்நிற சால்வையோடு மெல்லிய சிரிப்போடு, திமிரோடு தலைவணங்காத தன்மையோடு இருக்கின்ற அந்தணர்களைப் பார்த்து அருண்மொழி ஆச்சரியப் பட்டான்.

அவன் தமக்கையை உற்றுப்பார்த்தான். தமக்கையும் அவன் எண்ணத்தைப் புரிந்து கொண்டு ஆம் என்று தலையசைத்தாள்.

வாணர் குலத்து வீரர் வந்தியத்தேவர் கூடவே வந்து கொண்டிருந்தார். வந்தியத்தேவர், குந்தவையை நேசிக்கிறார் என்றும், இதற்கு அருண்மொழி சம்மதம் தந்துவிட்டார் என்றும், பொதுமக்களிடையே பரவலாகப் பேசப்பட்டது. எல்லாக் கோயில்களிலும் வந்தியத்தேவருக்கும் மரியாதை செய்யப் பட்டது.

"இந்த அந்தணர்கள் உடம்பில் எல்லா பாகங்களிலும் தழும்புகள் இருக்கின்றன கவனித்தீரா."

வந்தியத்தேவர் அருண்மொழியின் காதில் மெல்லியதாகச் சொல்ல கூர்ந்து பார்க்கத் துவங்கினான்.

அருண்மொழி கவனிப்பதைப் பார்த்துவிட்டு குந்தவையும் கவனித்தாள்.

"நான் ஒரு சிறு விவகாரம் செய்யப் போகிறேன். இங்குள்ள தடித்த கோபமான முட்டாளான அந்தணனைத் தேர்ந்தெடுத்து, அவனோடு வம்பு சண்டைக்கு போகப் போகிறேன். அதில், இவர்கள் யார் உண்மையில் அந்தணர்கள்தானா என்பது தெரிந்துவிடும்." அவ்விதமே வந்தியத்தேவர் வம்புக்கு இழுக்க, தன்னுடைய வாளை உருவிக் கொண்டு மிக வேகமாக அந்த முரட்டு அந்தணன் வந்தியத்தேவரின் மீது பாய, வந்தியத்தேவர் தன்னுடைய வாளால் வெகுவேகமாக அவனைத் தாக்கத் துவங்கினார்.

அந்தணர்கள் பதறி வந்தியத்தேவனை சமாதானப் படுத்தினார்கள்.

"அந்தணருக்கு வாள் எதற்கு, அதுவும் சோழதேசத்தில்" என்று வந்தியத்தேவர் வினவ, "ஒரு பாதுகாப்புக்குத்தான். நாங்கள் ஊர்விட்டு ஊர் போகும்போது மரங்களை வெட்டவும், கூடாரங்கள் அமைத்துக் கொள்ளவும்" இந்த வாட்களை உப

யோகப்படுத்திக் கொள்கிறோம்" என்று காரணம் சொல்லப் பட்டது.

சிதம்பரத்துக் கோவிலில் எல்லா மூலைமுடுக்குகளிலும் நின்று நின்று அருண்மொழி விசாரித்தான்.

"ஏன் இங்கே பெருமாள் சிலை" என்று கேள்வி கேட்க அந்தணர்கள் சொன்ன சமாதானத்தை அவன் ஏற்கவில்லை.

இங்கு தேவார, திருவாசகங்கள் இருக்கின்றனவாமே என்று அருண்மொழி விசாரிக்க, அந்தணர்கள் ஒன்றுமில்லை என்று சொல்லி விட்டார்கள். அப்படி இருக்கின்ற இடம் எதுவும் தெரியாது என்று சொல்லிவிட்டார்கள்.

இங்குள்ள எல்லா அறைகளையும் திறந்து பார்க்க வேண்டும் என்று விரும்பியபோது, சுந்தரசோழர் இருக்கின்ற காஞ்சியிலிருந்து, ஆதித்தகரிகாலன் குடந்தையை நோக்கி வருகிறான் என்று கேள்விப்பட்டு, இப்போது ஆதித்தகரிகாலன் முக்கியம் என்று சொல்லி, குதிரை ஏறி வந்தியத்தேவரும், அருண்மொழியும் சிதம்பரத்திலிருந்து, திருநாரையூர் போனார்கள். அங்கு நம்பியாண்டார்நம்பியிடம் எப்படியாவது தேவார, திருவாசகம் இருக்கின்ற அறையை கண்டுபிடித்து விடுங்கள். ஏதாவது கையூட்டு கொடுத்து, என்ன நடக்கிறது சிதம்பரத்தில் என்று கண்காணிக்கத் துவங்குங்கள்.தவறாக ஏதும் நடந்தால், உடனடியாக எங்களுக்கு தகவல் கொடுங்கள். தேவார, திருவாசகத்தை எவரும் ஒருபோதும் அழித்து விடலாகாது என்பதில் கவனமாக இருங்கள் என்று சொல்லிவிட்டுப் போனார்கள்.

சிதம்பரம் சரியில்லை. சிதம்பரத்தில் உள்ள அந்தணர்கள் சரியில்லை என்று பழுவூர் அரசர்களான பழுவேட்டரையர்களுக்கும், காஞ்சிபுரத்திலுள்ள சுந்தரசோழரின் தளபதிகளுக்கும் பழையாறையிலுள்ள சேனாதிபதிகளுக்கும், கொடும்பாளூர் பூதிவிக்கிரமகேசரிக்கும் தகவல் அனுப்பினார்கள். மிக மோசமான ஒரு சூழ்நிலை சோழதேசத்தில் உருவாகிக் கொண்டிருக்கிறது. எச்சரிக்கையாக இருங்கள் என்று சொன்னார்கள்.

ஆதித்தகரிகாலன் ரகசியமாகப் பயணப்பட்டுக் கொண்டிருந்ததால், சில ஆட்களோடு இடம் மாறிக்கொண்டேயிருந்ததால், ஆதித்தகரிகாலனுக்கு மட்டும் அவர்கள் எந்தத் தகவலும் சொல்ல முடியவில்லை.

காஞ்சிபுரத்திலிருந்து, எண்ணாயிரம் வந்து, எண்ணாயிரத்திலிருந்தது திருவக்கரை வந்து, திருவக்கரையிலிருந்து மீன்சுருட்டி வந்து, மீன்சுருட்டியிலிருந்து கொள்ளிடக்கரைக்கு வந்து, கொள்ளிடக்கரையிலிருந்து, ஆதித்தகரிகாலனும் அவன் ஆபத்துதவி படைகளும், கடம்பூருக்குள் பிரவேசித்தார்கள். ஆதித்தகரிகாலனைப்பற்றி படைவீரர்களுக்குத் தெரிந்திருந்தது. ஆனால், பொதுமக்களுக்குத் தெரியவில்லை. விடியற்காலை நேரம் கடம்பூருக்குள் நுழைந்த ஆதித்தகரிகாலனை யாரோ புதுத்தளபதி என்று நினைத்துக்கொண்டு பொதுமக்கள் மௌனமாக இருந்தார்கள். யாரோ ஒருவர் மட்டும் எங்கிருந்து வருகிறீர்கள் என்று உரத்த குரலில் கேட்க, ஆதித்தகரிகாலன் வீரர்கள் பதில் சொல்லாது போனார்கள்.

"சோழதேசத்தில் யாரும் யாருக்கும் மரியாதை செலுத்துவதில்லையென்று கங்கணம் கட்டிக்கொண்டார்கள் போலிருக்கிறது. கேட்டால் பதில் சொல்லக் கூடாதா? வீரபாண்டியன் தலையை தஞ்சைக் கோட்டையில் வெட்டி சொருகி விட்டால் என்ன. இவர்களுக்கு நிகர் யாருமே இல்லையென்று எண்ணமா. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு."

ஒரு உழவன் விடியற்காலையில் பழமொழி சொன்னான்.

ஆதித்தகரிகாலனுக்குக் கோபம் வந்தது. கடம்பூர் கோட்டைக்குள் நுழைய இருந்த குதிரை, சட்டென்று திரும்பியது. உரக்கச் சொன்ன உழவனை நோக்கி வந்தது.

"சோழவீரனுக்கு ரோசம் வந்து விட்டதய்யா. விடியல் வேளையில் கோபப்படுகிறவன் விளங்காதவன் என்று அவனுக்குத் தெரியவில்லை" இதையும் காவிரிக்கரை குசும்பாக அவன் சொல்ல, ஆதித்தகரிகாலன் தன்குதிரையில் அவனைச்சுற்றி வந்தான். அவன் ஆபத்துதவிகள் அவனை சமாதானம் செய்ய

முற்பட்டார்கள். ஆனால், ஆதித்தகரிகாலன் அதை சட்டை செய்யவேயில்லை. மெல்ல இருள் அவிழ்ந்து வெளிச்சம் படருகின்ற நேரத்தில் ஆதித்தகரிகாலன் சரக்கென்று இடுப்பில் இருக்கின்ற கத்தியை உருவி அந்த சோழக்குடியானவன் மூக்கையும், காதையும் விருட்டென்று அறுத்தான். அலறி உழவன் முகம் பொத்திக் கொள்ள, அந்தக் குதிரைகள் நிதானமாக கடம்பூர் அரண்மனைக்குள் சென்றான்.

இந்தச் செய்தி சூரிய வெளிச்சம் நன்றாகப் பரவும் போது அதைச்சுற்றியுள்ள கிராமங்களில் பரவியது.யார் அந்த வீரர்கள் என்று கேட்ட போது, ரகசியமாக, 'ஆதித்தகரிகாலனாக இருக்கலாம்' என்று சொல்லப்பட்டது அப்படிச் சொல்லப்பட்டச் செய்தி வெகுவிரைவாக ரவிதாஸனை எட்டியது.

ரவிதாஸன் பல குதிரைகள் மாறி, இரவு பகலாக பயணப்பட்டு-கடம்பூர் வந்தடைந்தான்.

வீரநாரயணச்சதுர்வேதிமங்கலத்து உடையார் குடியில், அருண்மொழி தன் மனைவிகளின் வற்புறுத்தலின் பேரில் இளைப்பாறினான். சிறிது நாள் ஓய்வுக்குப்பிறகு, எங்கேனும் போகலாம் என்று அவர்கள் வற்புறுத்த சரி என்று தலையசைத்தான். எதனாலோ அவனால் எங்கும் நிலைகொண்டு இருக்க முடியவில்லை. மனம் தவித்தது. உடையார்குடி சிவன் கோயிலுக்குப் போய் உட்கார்ந்து கொண்டான்.

சிதம்பரத்தில் அந்தணர்கள் நடவடிக்கைகளும் சரியில்லை. உத்தமசோழனின் நடவடிக்கைகளும் சரியில்லை. தமையனார் ஆதித்தகரிகாலனுடைய போக்கும் விசித்திரமாக இருக்கிறது. நானும் குந்தவையும் என்ன செய்ய முடியும். சக்ரவர்த்தி சுந்தரசோழர் பல்வேறு மன வருத்தங்களால் காஞ்சியில் போய் சுருண்டு படுத்து விட்டார்.

சோழதேசம் பாதுகாப்பாக இல்லாமல் இருக்கிறதோ என்று தோன்றுகிறது என்று வந்தியத்தேவரிடம் புலம்பிக் கொண்டிருந்தான்.

வந்தியத்தேவர் அவனை சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார்.

சிறுபடையோடு போய் அந்த அந்தணர்களை அப்புறப் படுத்தினால் என்ன என்று கேட்டான்.

"இல்லை. அது பிரச்சினையாகும்.அந்தணர்களை சோழ தேசம் இழிவுபடுத்துகிறது என்று சொல்வார்கள். அவர்கள் வேதம் சொல்லும் அழகை கவனித்தாயா. சோழதேச அந்தணர்களெல்லாம் சோற்றுத் துருத்தியாக இருக்க, அவர்கள் எத்தனை கற்றோர்களாக இருக்கிறார்கள். அவர்களில் சிலர் எது கேட்டாலும் தமிழில் பேச மறுத்து வடமொழியிலேயே பேசுகிறார்கள் கவனித்தாயா."

"என்ன ஜாதிவெறி. என்ன இனப்பற்று. என்ன மொழிப்பற்று. இந்தப் பற்று சோழதேசத்திலுள்ள மக்களுக்கு வரவில்லை. தேவார திருவாசகங்கள் எங்கே இருக்கிறது என்று கேட்டால் ஒரு அந்தணனும் வாய்திறக்கவில்லையே. நாடெல்லாம் எரிகிறதே வந்தியத்தேவரே."

"எனக்கு இன்னொரு செய்தியும் வந்தது."

"என்ன அது."

"சிதம்பரத்துக்கு நேர்கிழக்காக பூம்புகார்."

"ஆமாம்."

"பூம்புகாரிலிருந்து சற்று தொலைவில் கீ[illegible] என்று ஒரு கிராமத்தை நிறுவி, அதில் பல குடிசைகள் எழுப்பப்பட்டு மணற்பாங்கான அந்த நிலத்தில் வீரர்களுக்கு பயிற்சி அளிக்கிறார்கள். யார் யாருக்கு என்று தெரியவில்லை. மூங்கில் தடுப்புக்கு நடுவே வாட்கள் மோதும் ஒலியும் சண்டைபோடும் சத்தமும் கேட்டுக் கொண்டிருக்கிறது என்று ஒற்றர்கள் சொல்கிறார்கள். யார் அவர்கள் என்று கேட்டால் பரதவர்கள் என்று பதில் வந்ததாம். பரதவர்களுக்கு களரிப்பயிற்சி எதற்கு."

"அப்படியா... எனக்குத் தெரியவில்லையே.ஏன் இதை முன்னமே சொல்லவில்லை."

37683
5470117

"சற்றுமுன் நாம் இருவரும் உடையார்குடி கோவிலுக்கு வருவதற்கு முன் வந்த செய்தி இது."

"இதையும் கவனிக்க வேண்டுமே."

"இல்லை. இது செய்தியாகத்தான் இருக்கிறது. தீர ஆராய்வ தற்கு நான்கு ஒற்றர்களை, நான்கு விதமான உடைகளில் அனுப்பி விட்டேன். இரண்டுபேர் கருமார்களாகவும், இரண்டு பேர் நாவாய்கள் செலுத்துகிறதில் வல்லவர்களாவும் சொல்லிக் கொண்டு போயிருக்கிறார்கள். கூடிய விரைவிலேயே வேறு வீரர்கள் மூலம் நமக்குத் தகவல் அனுப்புவார்கள்."

"ஆனாலும் மனம் சஞ்சலமாகவே இருக்கிறது. வந்தியத் தேவரே."

அருண்மொழி சொல்ல வந்தியத்தேவர் மெல்லியதாகச் சிரித்தார்.

"நீங்கள் அந்த அந்தணர்களைப் பார்த்துவிட்டு அதிகம் கவலைப்பட்டு விட்டீர்கள். அவர்களை கவனிக்க வேண்டிய விதத்தில் நாம் கவனிப்போம். கவலை வேண்டாம். இப் பொழுது அமைதியாக இருங்கள். இன்னும் இரண்டு நாள் கழித்து ஆதித்தகரிகாலனைச் சந்தித்து பயணப்படுவோம். அமைதியாக இருங்கள்" என்று அருண்மொழி முதுகு தடவி விட்டார்.

"வந்தியத்தேவரே நீங்கள் இருப்பது எவ்வளவு பெரிய பலம் தெரியுமா."

அருண்மொழி நெகிழ்ச்சியான குரலில் கூறினான்.

"இது என் பாக்கியம். சோழதேசத்தின் மிகப்பெரிய சக்ரவர்த் திக்கு நான் அருகே இருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும்."

"எனக்கு அரசபதவியில் நாட்டமில்லை வந்தியத்தேவரே."

"எனக்கு இருக்கிறது. உங்களை சக்ரவர்த்தி ஆக்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. உங்களுடைய

அதிகாரத்தின் கீழ் சோழதேசம் விரிவடைய வேண்டுமென்ற பேரவா எனக்கு இருக்கிறது."

"அதற்குத்தான் ஆட்கள் இருக்கிறார்களே வந்தியத் தேவரே."

"இல்லை. ஆதித்தகரிகாலனுக்கு நேரம் சரியில்லை. மற்ற படி அவர் போக்கும் சரியில்லை. ஆதித்தகரிகாலனையாவது வீரன் என்று ஒத்துக் கொள்ளலாம். இந்த உத்தமசோழன் இருக்கிறாரே, இவரை துரோகி என்று அழைப்பதற்கே நான் விரும்புகின்றேன். செம்பியன் மாதேவியின் மீது கூட வருத்தங் கள் அதிகம் உண்டு. இன்னொரு சமயம் இதுபற்றி விரிவாகச் சொல்கிறேன். அரண்மனையிலிருந்து ஆட்கள் வந்துவிட்டார் கள். உங்கள் துணைவியார் கூப்பிடுகிறார் என்று நினைக் கிறேன். அவர்களோடு இருப்பது உங்கள் கவலையைக் குறைக்கும். எனக்கு வேறு சில வேலைகள் இருக்கின்றன."

வந்தியத்தேவர் எழ இரண்டுபேரும் குதிரையில் ஏறினார் கள்.

உடையார்குடி கோவில் வாசலில் பிரிந்தார்கள்.

கடம்பூரில் இரவோடு இரவாக உடும்பு வீசி, கயிறு இழுத்து தேரிக்காட்டுவீரர்கள் கோட்டைக்கு உள்ளே நுழைந்தார்கள்.

ஆதித்தகரிகாலன் ஆபத்துதவிகள் என்று சொல்லிக் கொண்டு சற்றுநேரம் கோட்டை வாசலில் நின்றார்கள். காவலர் களோடு மெல்லியதாகப் பேசினார்கள். வதக்கிய கோழிக்கறி யில் மயக்க உணவு கலந்து அதை அவர்கள் சாப்பிடத்தயா ரானவர்கள் போல் நின்று அதை ஆசையாக காவல்வீரர்கள் பார்த்ததும் அவர்களுக்கு பெருந்துண்டுகளைக் கொடுத்தார் கள். அவர்கள் உண்ண தங்கள் இலையில் உள்ளதை உண்ணா மல் நகர்ந்தார்கள்.

கோட்டை தாண்டி உள்ளுக்குள் அரண்மனைக்குள் போக முடியவில்லை. அங்கு யார் போனாலும் விசாரிப்பாக இருந்தது. மறுபடியும் உடும்பு வீசினார்கள். அரண்மனை சுவர்மேலேறி,

எகிறி குதித்தார்கள். அரண்மனை முற்றத்தில் தீப்பந்தங்களுக்கு நடுவே ஆதித்தகரிகாலன் நடமாடிக் கொண்டிருப்பதைக் கண்டுவிட்டு ஆந்தை போல கூவினார்கள்.

வெளியிலிருந்த ரவிதாஸனும், பரமேஸ்வரனும் சட்டென்று கோட்டைக்குள் ஏறி குதித்தார்கள். மயங்கிக்கிடந்த காவலர்களை புரட்டிப் பார்த்தார்கள். அவர்களது உடைகளை வேகமாகப் பிரித்து அணிந்து கொண்டார்கள்.

அரண்மனை உச்சியில் நின்றிருந்த தேரிக்காட்டு வீரர்களைப் பார்த்தார்கள். கயிறு தொங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்தார்கள். சரசரவென்று அவர்களும் ஏறினார்கள். அந்தக் கயிற்றை அப்படியே எடுத்து அரண்மனைக்குள்ளே போட்டார்கள்.

முதலில் பரமேஸ்வரன் இறங்க, பிறகு ரவிதாஸன் இறங்க, தேரிக்காட்டு வீரர்கள் அரண்மனை உச்சியில் வில்லும் அம்புமாய் காத்திருந்தார்கள். அந்த அம்பின் நுனியில், விஷம் தடவப்பட்டிருந்தது. ரவிதாஸனும், பரமேஸ்வரனும் அரண்மனைச் சுவரோடு சுவராக இருட்டோடு இருட்டாக ஒட்டிக் கொண்டு நகர்ந்தார்கள்.

உடையார்குடியில் அருண்மொழிக்கு திடீரென்று தூக்கி வாரிப்போட்டது. கை கால்கள் புரண்டு அடித்தன. எந்தக் காரணமுமில்லாமல் வயிறு பிசைந்தது.

வேட்டியை உருவி எறிந்துவிட்டு இடுப்பில் துண்டு கட்டிக் கொண்டு தீப்பந்தத்தோடு அவர் கொல்லைப்புறம் போனார். வயிறு லேசாகியது. ஈரக்கைகளோடு கூடத்திற்கு வந்தார். வந்தியத்தேவர் எங்கே என்று கேட்டான்.

அவர் அரண்மனையின் வேறொரு பக்கம் இருக்கிறார் என்று சொல்லப்பட்டது.

"உடனே பார்க்க வேண்டும் அழைத்து வா" என்று சொன்னான்.

வேட்டி உடுத்திக் கொண்டார். இடுப்பில் துண்டு கட்டிக் கொண்டான். மேலே போர்வை போர்த்திக் கொண்டார்.

"வெளியே கிளம்பி விட்டீர்களா" என்று மனைவி கேட்க 'ஆமாம்' என்று சொன்னார்.

உடைவாளும், சிறிய கூர்வாளும் அவருக்குத் தரப்பட்டன.

"ஏன், பதட்டமாகவே இருக்கிறீர்கள்" என்று கேட்டதற்கு, "தெரியவில்லை" என்று அருண்மொழி பதில் சொன்னார்.

வந்தியத்தேவர் விரைந்து வர, "உடனே கடம்பூர் நோக்கி பயணப்படலாம் என்று தோன்றுகிறது. அங்கே இந்நேரம் ஆதித்தகரிகாலன் வந்திருக்கலாம்.வருவார் என்று சொல்லப்பட்டதல்லவா. நாம் போய் காத்திருந்தால் என்ன" என்று வேகமாகப் பேசினார்.

"உங்கள் விருப்பம் அதுவாயின் சரி" என்று இருவரும் தாவி ஏறிக் கொண்டார்கள்.

ரவிதாஸன் மிக சாமர்த்தியமாக ஒரு சிறிய பலகணி வழியாக உடம்பை குறுக்கிக் கொண்டு ஏறி அரண்மனையின் வேறொரு பகுதியை அடைந்தான். அந்த அறையைத் தாண்டி வேறொரு இடத்தில் ஆதித்தகரிகாலன் இருப்பது தெரிந்தது. ஆதித்தகரிகாலன் அந்த விளக்கொளியில் சாளரத்தின் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். அறைக்கதவு வெளியே தாழிடப்பட்டிருக்கிறது. ஜாக்கிரதை கருதி அவனுடைய ஆபத்துதவிகள் அப்படிச் செய்திருந்தார்கள்.

பரமேஸ்வரன் பலகணி வழியே முழுபலமும் கொண்டு அந்த விளக்கை குறி வைத்து வேகமாக ஊத, பளிச்சென்று அந்த விளக்கு அணைந்து போயிற்று.

சகோதரனின் சாமர்த்தியம் கண்டு ரவிதாஸன் வியந்து போனான்.

இத்தனை தொலைவில் இருக்கின்ற ஒருவிளக்கை ஒரே மூச்சுக்காற்றில் ஊதவேண்டுமென்றால் எத்தனை வலுவிருக்க

வேண்டும் என்று வியந்தான். அந்த உயர்ந்த பலகணி வழியே இரண்டு பேரும் தரையில் குதித்தார்கள்.மெல்ல கதவுதட்டி விளக்கு வேண்டுமென்று ஆதித்த கரிகாலன் கேட்டு, குரல் கொடுப்பது காதில் விழுந்தது.

"இளவரசே இதோ கொண்டு வருகிறேன்" குரல் மாற்றி ரவிதாஸன் பேசினான்.

"யாரது. எங்கிருந்து பேசுகிறாய்."

ஆதித்தகரிகாலன் குரல் கொடுத்தான். ரவிதாஸன் கட்டாரியை உருவிக் கொள்ள, குத்தீட்டியை இறுக்கி, பரமேஸ்வரன் பிடித்துக் கொள்ள, ஜன்னலிலிருந்து வந்த வெளிச்சத்தினூடே ஆதித்தகரிகாலன் நிற்பதை அவர்களால் உணர முடிந்தது. ஆனால் கருவியோடு இருக்கின்ற அந்த இரண்டு பேரையும் ஆதித்தகரிகாலனால் உணர முடியவில்லை.

"எங்கே விளக்கு" என்று உரத்தக்குரலில் ஆதித்தகரிகாலன் அதட்ட, "இனி விளக்கு உன்னிடத்தில் வராது. நீ இப்பொழுது இருப்பது போலவே எப்பொழுதும் இருட்டில் இருப்பாய்."

ரவிதாஸன் தன் குரலில் பேசினான்.

"யார் நீ? என்ன பேசுகிறாய்." என்று ஆதித்தகரிகாலன் அதட்ட, வாள் தேடி முன்னும், பின்னும் அலைய, அவனை நெஞ்சில் அடித்து ரவிதாஸன் கீழே தள்ளினான்.

ஆதித்தகரிகாலன் எழ முற்படுகிற போது, மறுபடியும் தாக்கினான்.

"எதற்காக இருட்டில் வந்து என்னை அடிக்கிறீர்கள். யார் நீங்கள். ஆண்பிள்ளைகளாக இருந்தால், வாள் உருவி பட்டப்பகலில் போரிடுங்கள்" என்று சொன்னான்.

"ஹா...ஆண் பிள்ளையாக நீ ஒரு காரியமாவது செய்திருக்கிறாயா, நோயுற்றவனை... ஜுரத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவனை... ஆயுதமே இல்லாமல் தள்ளாடி நிற்பவனை சிரம் கொய்தவனல்லவா நீ. உனக்கு வீரமான சாவு வேண்டும் என்று ஆசைப்படுகிறாயே. அது எப்படி."

"யார் நீங்கள்... யார் நீங்கள்...?"

ஆதித்தகரிகாலன் உரத்துக் கத்தினான்.

"நாங்கள்... பாண்டியனின் ஆபத்துதவிகள். அவன் சேனாதிபதிகள். என் பெயர் ரவிதாஸன்.எனக்கு அருகே இருப்பவன் பரமேஸ்வரன். எங்கள் பின்னே மிகப்பெரிய பெருங்கூட்டம் இருக்கிறது. அந்தக் கூட்டம் உன்னைப் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறது. வீரபாண்டியனின் தலை தஞ்சைக் கோட்டையின் அருகே இருப்பது போல, உன் உடம்பும் இந்தக் கடம்பூர் அரண்மனையில் உருக்குலைந்து கிடக்கும். இதைத் திறக்க முடியாதபடி, நாங்கள் இறுக பூட்டி விட்டுத்தான் போவோம்" என்று ரவிதாஸன் சொல்ல மிக வேகமாக ஆதித்தகரிகாலன் குரல்வந்த திக்கில் பாய்ந்தான். ரவிதாஸன் நீட்டிய கட்டாரி அவன் வயிற்றைக் கிழித்தது. ரத்தம் வழியும் கட்டாரியை உருவிய ரவிதாஸன் மறுபடியும் முழு பலத்தோடு அவனது நெஞ்சில் பாய்ச்சினான். அலறி ஆதித்த கரிகாலன் விழ தன் ஈட்டியினால் அவன் கழுத்தில் பரமேஸ்வரன் குத்தினான். மிகப் பெரிய விக்கலோடு, ஆதித்தகரிகாலன் குரல் கர்ணகொடூரமாக வெளியே வந்தது. சட்டென்று அடங்கிப் போயிற்று.

அவர்கள் சிறிது நேரம் காத்திருந்தார்கள். பிறகு மெல்ல ஆதித்தகரிகாலனை உலுக்கினார்கள். மூக்குநுனியை தொட்டுப் பார்த்தார்கள். கழுத்திலும், நெஞ்சிலும் ரத்தம் பொங்கிப் பரவுவதை உணர்ந்தார்கள். மறுபடியும் கால்வைத்து பலகணியில் ஏறி அரண்மனையின் உச்சிக்குப் போய் அங்கிருந்து கோட்டைக்குத்தாவி, கோட்டையிலிருந்து கயிறு பிடித்து கீழிறங்கினார்கள்.தேரிக்காட்டு வீரர்களும் இறங்க, மெல்ல வயல்வெளிகள் தாண்டி காடுகள் பக்கம் போனார்கள். அங்கு கட்டிவைத்திருந்த குதிரைகளை அவிழ்த்து ஏறிக்கொண்டார்கள். மிகவேகமாக சிதம்பரம் நோக்கிப் பயணப்பட்டார்கள்.

விடிந்து வெகு நேரத்திற்குப்பிறகுதான் ஆதித்தகரிகாலன் இறந்தது தெரியவந்தது. சிதம்பரத்திற்குப் போனதும் தன்னோடு

வந்த தேரிக்காட்டு வீரர்களை ரவிதாஸனும், பரமேஸ்வரனும் வெவ்வேறு ஊர்களுக்கு நிறைய காசு கொடுத்து அனுப்பி விட்டார்கள்.

ஒரு மூன்றுபேர் காஞ்சி மாநகரத்திற்கும், இன்னொருவன் பழையாறையிலும், இன்னொருவன் கொடும்பாளூரிலும் இருக்க வேண்டும் என்ற கட்டளை கொடுக்கப்பட்டது.

சிதம்பரத்திற்குள் நுழைந்ததும் பானுகோபரிடம் ரவிதாஸன் நடந்ததைச் சொன்னான்.

பானுகோபர் அவனைத் தழுவிக் கொண்டார்.

"நான் போய் உத்தமசோழனை பார்த்து வருகிறேன்" என்று தருமதாஸரோடும், நீலகண்ட உபாத்யாயரோடும் அவர் பயணப்பட்டார். ரவிதாஸன் சிதம்பரத்தில் இலை போட்டு விருந்துண்டான். நிம்மதியாகத் தூங்கினான். பரமேஸ்வரன் இடையறாது ஜபம் செய்ய உட்கார்ந்தான்.

சோழதேசம் ஆதித்தகரிகாலன் மரணம் கேட்டு வாய்விட்டு அலறியது. ஊர் ஊராக துக்கம் கொண்டாடினார்கள். அடுத்தது யார், அடுத்தது யார் என்று கேட்டார்கள்.

உத்தமசோழனைச் சுற்றி தேரிக்காட்டு வீரர்கள் இருப்பதும், அந்தணர்கள் இருப்பதும் ராஜராஜனுக்குத் தெரியவர, அவன் அமைதியானான்.

நியாயப்படி உத்தமசோழர்தானே ஆளவேண்டும்.அவரே ஆளட்டும். அவருக்கு ஆளுவதில் ஆசை இருக்கிறது என்று சொல்லி தனக்கு சிவபூஜை செய்வதே விருப்பம் என்று சொல்லி மெல்ல நகர்ந்து போனான்.

உத்தமசோழனும் பதவியேற்க அவருக்கு எல்லா விதத்திலும் உறுதுணையாய் இருப்பதாய் வாக்குக்கொடுத்தான்.

காஞ்சிபுரத்திற்கு சேதி போயிற்று. ஏற்கனவே நோயுற்ற சுந்தரசோழர் இன்னும் நோய்வாய்ப்பட்டார்.

மகள் மூலம் "எப்படியாவது சிறிதுகாலம் அருண்மொழியை அமைதியாக இருக்க வை. இப்பொழுது அருண்மொழி வேகப் பட்டால் காரியங்கள் சிதைந்து விடும். உத்தமசோழனே ஆட்சி செய்யட்டும்.நான் ஒரு மகனை இழந்துவிட்டேன். இன்னொரு மகனையும் இழக்க விரும்பவில்லை என்று சொல்" என்று ஓலை கொடுத்து அனுப்ப, அருண்மொழி அதைப்படித்துவிட்டு மௌனமானான்.

தந்தை சொல்மிக்க மந்திரமில்லையென்று அமைதி யானான்.

ரவிதாஸனும், பரமேஸ்வரனும் இருமுடிச்சோழ பிரம்ம ராயர்களானார்கள்.

பாண்டியதேசத்திற்கும், சோழதேசத்திற்கும் அவர்களே சேனாதிபதிகள் என்று பிரகடனப்படுத்தப்பட்டார்கள்.

பானுகோபரும், தருமதாஸரும், நீலகண்டரும் அவரது வீட்டுப் பெண்களும் அவர்களது குடியிருப்பை வீரநாராயண சதுர்வேதி மங்கலத்து உடையார்குடிக்கு அருகே மாற்றிக் கொண்டார்கள். அங்கிருந்த ராஜராஜசோழன் மெல்ல நகர்ந்து குடும்பத்தோடு சிவத்தலங்களை நோக்கி பயணப்பட்டார். முகம் சோர்ந்து போயிருந்தார்.

உத்தமசோழர் காலத்தில் அந்தணர்களுடைய செல்வாக்கு உச்சியில் இருந்தது. பூம்புகாருக்கு அருகேயுள்ள கீழைச்சாலை யில் மதில்சுவர் எழுப்பி மிகப் பெரிய பயிற்சிக்களம் ஒன்று துவங்கப்பட்டது. கீழைச்சாலை கடிகை என்று அதற்குப் பெயரிடப்பட்டது.

சிதம்பரம் கோவில் அந்தணர்கள் கோட்டையாக மாறியது. அவர்கள் வைத்ததே அங்கு சட்டமாக இருந்தது. ஒருவருடம் எல்லாவித ஏற்பாடுகளையும் பானுகோபர் முன் நின்று நடத்தி விட்டு தன்னுடைய எண்பத்து மூன்றாவது வயதில் பூம்புகார் கடற்கரையில் வந்து அமர்ந்து கொண்டார். கடல் நோக்கிப் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

"எனக்கு சோழதேசம் பிடிக்கவில்லை. போதும்... போதும்... என்றாகிவிட்டது. பாண்டியதேசம் எப்படி அலுப்பை ஏற்படுத்தியதோ... அதே அலுப்பை சோழதேசமும் எனக்கு ஏற்படுத்துகிறது. நான் இன்னும் கிழக்கே போக விரும்புகிறேன்" என்று உரக்கச் சொன்னார்.

"கிழக்கே பெருங்கடலல்லவா இருக்கிறது."

"இந்தக் கடலைத் தாண்டுவதுதான் சாதனை."

"ஐயா, உங்களுக்கு வயதாகிவிட்டதே" நீலகண்ட உபாத்யாயர்" ஆதரவாகச் சொன்னார்.

"இல்லை. எண்பத்துமூன்று வயது ஒருவயதே அல்ல. நான், நூற்றுமூன்று வயதுவரை உயிரோடிருப்பேன். என்னால் இன்னும் அமைதியாக மகாமகா உபாத்யாயனாக இருக்க முடியவில்லை. நான் போர்வீரனாக இருக்க விரும்புகின்றேன். என் வித்தையை இன்னும் பலருக்கு சொல்லித்தர விரும்புகின்றேன். இங்கு மகா உபாத்யாயர்களாக, பிரம்மராயர்களாக, பெரிய சேனாதிபதிகளாக, ஊர்த்தலைவர்களாக, கேரளத்திலிருந்து வந்த நம்முடைய அந்தணர்கள் இருக்கிறார்கள். எனக்கு இது போதும்.கடிகையிலிருந்து ஓடிவந்த நான், என் கூட்டத்தை நிமிர்த்தி விட்டேன். மிக உயர்ந்த இடத்தில் உட்கார வைத்துவிட்டேன். என் வேலை இப்பொழுது பயணப்படுவது. நீங்கள் அனைவரும் நன்றாக இருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரிந்துவிட்டது. இங்கேயே இருக்க எனக்கு விருப்பமில்லை. எனக்கு மேலும் சாதனைகள் செய்ய வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. இப்பொழுது யவனக்கப்பல் வருகின்ற காலம், எந்த யவனக்கப்பல் வந்தாலும் அதைப் பிடித்து அந்த யவனர்கள் துணையோடு நான் கடாரம் போகப் போகிறேன். கடாரம் தாண்டி, சீனப்பக்கம் போகிறேன். அந்த மஞ்சள் நிறத்து சிறிய கண்களுள்ள ஆட்களோடு பேசப்போகிறேன்.நம்முடைய வித்தையை அங்கே பரப்பப் போகிறேன்.

ஒருவேளை உங்களுக்கு இந்த தேசம் அலுப்பு தட்டினால்... இதுபோதும் என்று நினைத்தால்... நீங்களும் சீனத்திற்கு வந்துவிடுங்கள்."

"ஏன் இப்படிப்போகவேண்டும்?"

"என் வித்தை பாண்டியதேசத்தில் அங்கீகரிக்கப்பட்டது. நான் சந்தோஷமானேன். என்வித்தை சோழதேசத்தில் அங்கீகரிக்கப்பட்டது. நான் மறுபடியும் மலர்ந்தேன். என் வித்தை உலகமெங்கும் அங்கீகரிக்கப்பட வேண்டும்.இந்த உலகம் எத்தகையது என்று நான் தெரிந்து கொள்ள வேண்டும். எல்லாவிடத்திலும் தொடர்ந்து அங்கீகரிக்கப்பட வேண்டும். எனக்கு இன்னும் சீடர்கள் வேண்டும். எனக்கு மொழியோ, தேசமோ, தெய்வமோ, மதமோ முக்கியமில்லை. என்வித்தைதான் எனக்கு தெய்வம். என் வித்தைதான் எனக்கு மொழி. என் வித்தைதான் என் மதம். இவை எங்கு அங்கீகரிக்கப்படுகின்றதோ, எங்கு கொண்டாடப்புடுகின்றதோ அங்கு நான் இருப்பேன்.

"சோழ தேசத்தில் கொண்டாடுகிறார்களே."

"கொண்டாடி முடித்து விட்டார்கள். இனி எனக்கு சோழ தேசத்தில் என்ன வேலை. இன்னும் கொண்டாடக்கூடிய இடங்கள் என்ன என்று பரப்புவதுதானே ஒரு ஆச்சார்யன் வேலை. என்னிடம் வித்தை இருக்கிறது. நான் எங்கு போனாலும் பிழைத்துக் கொள்வேன். எனவே, கவலைப்படாதீர்கள். ஒருவேளை உங்களுக்குத் தோன்றினால் நீங்களும் வாருங்கள். நூற்றுமூன்று வயது வரை, இந்த உலகத்தில் ஏதேனும் ஒரு பாகத்தில் நான் உயிர்வாழ்ந்து கொண்டிருப்பேன். என்னைத் தேடி நீங்கள் அங்கு வரலாம்."

அவர் சொன்னபடியே, யவனமரக்கலம் ஒன்று குதிரைகளோடு வர, அவர் குதிரைகளை கீழே இறக்கிவிட்டு யவன மரக்கலத்தை கைப்பற்றிக் கொண்டார். அந்த யவனர்களை அடிமையாக்கினார். அவர்களின் துணையோடு வடக்கு நோக்கி காற்று வீசுகின்ற ஒரு சுகமான காலத்தில் அவர் பயணம் துவக்

கினார். அவரோடு எழு அந்தணர்களும், பதினோரு தேரிக் காட்டு வீரர்களும் பயணப்பட்டார்கள்.

காம்போஜமும், கடாரமும் வா வா... என்று அவர்களை வரவேற்றன.

சோழதேசத்தில் இந்த அந்தணர்கள் கொடி, பதினாறு வருடங்கள் பட்டொளிவீசிப் பறந்தது. அதன் சிறப்பை மேலும் பரப்ப, பானுகோபர் கொஞ்சம் கூட பயமின்றி, கடலிலுள்ள அலைகளைத் தாண்டித் தாண்டி, தன் மரக்கலத்தை செலுத்திக் கொண்டிருந்தார்.

அவருக்கு கடாரத்தில் ஒரு கடிகையும், சீனதேசத்தில் ஒரு கடிகையும் ஆரம்பித்து மிக உன்னதமான இந்த போர்க் கலையை அங்கு சொல்லித்தர வேண்டுமென்ற பெருங்கனவு இருந்தது. அந்தக் கனவு நனவாகும் காலத்தை எண்ணியபடியே அவர் கிழக்கு நோக்கி மரக்கலத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்.

மரக்கலம் தொடர்ந்து தொடர்ந்து இடையறாது போய்க் கொண்டிருந்தது. விடியல் நேரம் சுக்ரன் உதிக்க கப்பல் தளத்திலிருந்தபடி கிழவர் பானுகோபர் கை கூப்பினார்.

சுக்ரனே உனக்கு நமஸ்காரம். உன் வெண்மையான ஒளி என்னை மயக்குகிறது. உன் வேகம் என்னை வியக்க வைக்கிறது.

அவர் தொடர்ந்து பிரார்த்தனை சொல்ல, அவருடன் இருந்த அந்தணர்களும் உரக்கச் சொன்னார்கள்.

சுக்ரனே உனக்கு நமஸ்காரம்.

மாவட்ட கிளை
37683
5270117

பின் குறிப்பு

இந்தக் களறிப் பயிற்சிதான்
பிற்பாடு சீன மண்ணில் பெரும்
தற்காப்பு பாடமாய் வளர்ந்தது
என்று சொல்லப்படுகிறது.

சோழர்கால வரைபடம் அடுத்த பக்கத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.


இடைதுறை நாடு
கீழைச் சாளுக்கியர்
இரட்டபாடி ஏழரை இலக்கம்
துளம்ப பாடி
பொந்திபி நாடு
கங்கநாடு
நுளம்பப் பாடி
குடமலை நாடு
பெரும்பாணப்பாடி
காஞ்சிபுரம்
உத்திரமேரூர்
திருமலை
திருவண்ணாமலை
தில்லை
கருவூர்
கங்கை கொண்ட சோழபுரம்
பழையாறு
திருவரங்கம்
காரைக்கால்
உறையூர்
கொடும்பாளூர்
நாகை
கோடியக்கரை
திருவஞ்சிக்களம்
மதுரை
தொண்டி
தேவிபட்டணம்
வேணாடு
கன்யாகுமரி